# 50

# எழுத்து ஆளுமைகள்

பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 50 எழுத்து ஆளுமைகள்

- பாலமுனை பாறூக் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் பெயர் | : ஐம்பது எழுத்து ஆளுமைகள் |
| நூலாசிரியர் | : பாலமுனை பாறூக் |
| முகவரி | : 14, பர்ஹானா மன்ஸில் - பாலமுனை - 03 (32354) |
| தொலைபேசி | : 0775367712 |
| பதிப்பு | : அக்டோபர் 2023 |
| வெளியீடு | : பர்ஹாத் பதிப்பகம் |
| பக்கங்கள் | : XIV+166 |
| தள வடிவமைப்பு | : எம்.ஐ. பிர்னாஸ் |
| அட்டை | : எழுகவி ஜெலீல் |
| அச்சுப்பதிப்பு | : நியு செலக்ஷன் அச்சகம், அக்கரைப்பற்று |
| விலை | : 1650.00 |

| | |
|---|---|
| Book Title | : Aimpathu Eluththu Aalumigal |
| Author | : Palamunai Farook |
| Address | : 14, Farhana Manzil, Palamunai - 03 (32354) |
| First Edition | : October - 2023 |
| Published by | : Farhath Publication |
| Page | : XIV+166 |
| Book Layout | : M.I. Firnas |
| Cover Design | : Elukavi Jaleel |
| Printed | : New Selection Offset Printers, Akkaraipattu |
| Price | : 1650/- |
| ISBN | : 975-955-99311-7-1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமுனை பாறூக்கின்

# பேனாமுனை

திரு. பாலமுனை பாறூக் "ஆளுமைகளின் அடையாளம்" என்ற தொடரை வாரா வாரம் எழுதப்போகிறார் என்று "தமிழ் முரசு" சஞ்சிகையின் ஆசிரியர் ஜீவா என்னிடம் கூறியதும் ,"எப்போது முதல் ?" என்று நான் கேட்ட நினைவு இப்போதும் என்னுள் வருகிறது.

கலைஞர், எழுத்தாளர் உட்பட்ட துறை விற்பன்னர்கள் பற்றிய விபரங்களை அவ்வப்போது நிகழ்வுகளில் சொல்லக் கேட்டிருக்கின்றேன். பத்திரிகை, நூல்களிலும் அவர்கள் பற்றிய சுருக்கக் குறிப்புகளைப் படித்திருக்கின்றேன். ஆனால் அவர்கள் கடந்துவந்த பாதை கலை இலக்கிய வாழ்க்கை, நூல்கள், பணிகள்,சாதனைகள் என்று பல விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு மனம் விரும்பி இருந்தது. அதனால் பாறூக், அவ்வாறு கலை, இலக்கிய, ஊடகவியலாளர்கள் பற்றிய விபரங்களை விவரித்து தமிழ்முரசு இணைப்பில் எழுதி வந்ததை நான் விரும்பியது மட்டு மல்லாமல் அவரின் அந்தப் பகுதியின் வாசகரும், இரசிகருமானேன்.

பிற நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் என்பதற்காகவோ எங்கள் கொள்கைகளுடன் உடன்படாதவர்கள் என்பதற்காகவோ அல்லது வேறெந்தக் காரணங்களுக்காகவோ நாங்கள் பாறூக்கின் எழுத்துகளைத் தணிக்கை செய்ததில்லை அதேபோல, அவரும் பாகுபாடின்றி எழுத்தாளர்களுக்கு இடமளித்தார். இன ,பிரதேச பாகுபாடுகளை அவர் ஆக்கங்களில் நான் காணவில்லை. இத்தனைக்கும் இந்தக் குறிப்பை நான் எழுதும்வரை அவரின் ஆக்கங்களில் எந்தத் தலையீடுகளையும் நாங்கள் செய்யவில்லை. அந்தளவுக்கு அவர் அந்த ஆக்கங்களைச் செவ்வனே செய்து நிறைவேற்றினார்.

தமிழன், தமிழ் முரசு சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட 50 மூத்த, முக்கிய எழுத்தாளர்களை ஆவணப்படுத்தும் எண்ணம் அவருக்கு ஆரம்பத்தில் இருந்திருக்காது. ஆனால் அந்த யோசனை வந்தமைக்காக நன்றி கூறவேண்டும்.இது ஒரு பொக்கிஷம். அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.அதனால்தான் அக் குறிப்புகளை நூலாக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜீவா என்னிடம் கூறியபோது வாழ்த்தையும் தெரிவித்தேன்.

பாலமுனை பாறூக் தமிழன் பத்திரிகைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பை நான் இந்த இடத்தில் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். எழுத்துலக ஜாம்பவான்கள் , கலைஞர்களுக்கு அப்பால் இலை மறை காயாக இருப்போரையும் வெளியே கொண்டுவர அவர் அடுத்த கட்டப் பாய்ச்சலை மேற்கொள்ள வேண்டும்.
வாழ்த்துகள் பாறூக் .

*சிவா இராமசாமி*
ஆசிரியர் - தமிழன் பத்திரிகை

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய உலகில் தடம் பதிக்கும்

# ஐம்பது எழுத்து ஆளுமைகள்

"தமிழன்" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலப்பகுதியில் அதனுடன், இணைந்து நான்கு பக்கங்களைக் கொண்ட 'கலை இலக்கிய'ப் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. அக் கலை இலக்கியப் பகுதி வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றதையடுத்து,தனியான இணைப்பிதழாக வாராந்தம் பிரசுரிக்க எண்ணி "தமிழ்முரசு" உருவானது. வாரந்தோறும் ஞாயிறு தமிழன் பத்திரிகையுடன் இணைந்து வெளிவரத் தொடங்கிய "தமிழ் முரசு" இன்று நூறாவது வாரத்தைக் கடந்து வெளிவந்து கலை இலக்கியத்துக்கான தொடர் களமாக இருந்து வருவது மகிழ்ச்சி.

நெருக்கடி மிக்க கொரோனா பரவிய முடக்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல சவால்களுக்கு மத்தியில் அச்சு வடிவிலும் , மின்னிதழ் வடிவிலும் வாசகர்களிடம் சென்றடைந்து இன்று பொருளாதார நெருக்கடியிலும் வாசகர்களுக்காக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படும் இணைப்பிதழ் என்ற பெருமையை தமிழ்முரசு பெறுகின்றது.

இந்த இணைப்பிதழ் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் எழுத்தாளர் கணபதி சர்வானந்தாவினால் தொடர்ச்சியாக எழுதப்பட்டு வந்த "இடர்கால இலக்கியம்' நூறு வாரம் வெளிவந்தது. எழுத்தாளர் பலரின் விபரங்கள் உட்பட இடர்காலத்தில் வெளியான நூல்கள், அறிமுகம், வெளியீடு எனப் பல விடயங்கள் இதில் பிரசுரிக்கப்பட்டன.

இலத்திரனியல் ஊடகத்தில் தடம் பதித்து வரும் இளம் ஆளுமைகளின் அனுபவம் மற்றும் அவர்களது சாதனைப்பயணம் குறித்து சுயபகிர்வாக "தமிழ்அலை" எனும் தொடர் 25 வாரமாக வெளி வந்தது.

அதனுடன் இணைந்ததாக கலை, இலக்கியத்துறை சார் ஆளுமைகள் பற்றிய நேர்காணல்கள், ஆக்கங்கள், நூல் வெளியீடுகள் குறுந்திரைப்படங்கள் என பலதரப்பட்ட அம்சங்களையும் உள்ளடக்கி, தனித்துவமான முறையில், வாசகர்களின் மனதைக் கவரும் வண்ணமாகவும் ஒவ்வொருவரும் விரும்பி வாசிக்கக் கூடிய வண்ணமாகவும் வடிவமைக்கப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சியாக, தமிழ்முரசு பொறுப்பாசிரியர் என்ற வகையில் உள்ளூர், புலம்பெயர் ஆளுமைகள் பலரது நேர்காணல்கள் மற்றும் அவர்களுடனான உரையாடல்களை நானும் பதிவு செய்து வந்தேன்.

இந்நிலையில் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட ,கிழக்கிலங்கையின் முக்கிய மூத்த எழுத்தாளரான பாலமுனை பாறுக்கின் இலக்கியப் பொன்விழா 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி இடம்பெற ஏற்பாடாகியிருந்ததை அறிந்து,அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரத்தில், நேர்காணலொன்றை பிரசுரிக்க வேண்டும் என எண்ணி தொடர் பிலக்கத்தை ஒருவாறு தேடி எடுத்து, அவருடன் உரையாடி, நேர்காணலையும், தமிழ்முரசு முன்னட்டையில் அவரது புகைப்படத்தையும் பதிவு செய்து அவருக்கான கௌரவத்தை வழங்கினேன். இதுவே அவருடனான தொடர்பு ஏற்படக் காரணமானது.

அவருடன் ஏற்பட்ட தொடர்பில் "தமிழ்முரசு" இதழில் மேலும் சில ஆளுமைகள் பற்றிய குறிப்பை எழுதுவதற்கு பாலமுனை பாறூக் முன் வந்தார். நாமும் சம்மதம் தரவே, வாராந்தம் ஆளுமைகள் பற்றி எழுத ஆரம்பித்தார். "ஆளுமைகளின் அடையாளம்" எனும் தலைப்பின் கீழ் அவற்றைப் பிரசுரித்தோம். 50 ஆளுமைகளைப் பதிவு செய்தார். அதுவே இன்று நூலுருப் பெறுகின்றது.

"ஆளுமைகளின் அடையாளத்தை தொடர்ச்சியான இலக்கியப் பத்தி என்றும் குறிப்பிடலாம். ஏனெனில் வாராந்தம் ஒவ்வொரு ஆளுமைகளையும் தனது பிரதேசத்தை மாத்திரம் மட்டுப்படுத்தாமல் நாடளாவிய ரீதியில் உள்ள மூத்த ஆளுமைகள் இரு பாலாரையும் பதிவு செய்தார்.

வாராந்தம் தனது கட்டுரையை எவ்வித தாமதமும் இன்றி நேர்த்தியாக, முழுமையான தேடலுடன் எடுத்து அதனை தொகுத்து அவர் எழுதியிருக்கும் விதம் அவரது ஐம்பதாண்டுகால இலக்கிய அனுபவத்தை தெளிவாக புலப்படுத்தவதாக இருக்கும். எவ்வித மயக்கமும் இன்றி பதிவு செய்ய வேண்டிய விடயத்தை கிரமமாக குறிப்பிட்டிருப்பது கட்டுரையை தொடர்ச்சியாக எவ்வித சலனமும் இன்றி பதிவிடுவதற்கு இலகுவாக இருந்தது.

ஓர் ஆளுமை அதுவும் இலக்கிய உலகில் பொன்விழாக் கண்ட ஒருவர், இன்னொருவரைப்பற்றி எழுதுவதற்கு முன்வந்தமை வியத்தகு விடயமாகவே கருத வேண்டியுள்ளது. அதற்காக அவருக்கு முதற்கண் நன்றியையும் பதிவு செய்கின்றேன். இந்நூலில் பதிவு செய்யப்பட்ட ஐம்பது ஆளுமைகளில் மூவர் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டமை கவலைக்குரியதே.

எத்தனையோ இலக்கிய ஆளுமைகள் வாழ்ந்து மறைந்துள்ளனர். அவர்கள் அனைவர் தொடர்பிலும் பதிவுகள் இருக்கின்றதா என எண்ணிப் பார்த்தால் மிகக் குறைவானதாகவே இருக்கின்றது எனலாம் . அந்தவகையில், வாழும் போது வாழ்த்துவோம் என்பதற்கிணங்க ஆளுமைகள் பலரை பதிவு செய்தமை 'தமிழ்முரசு' க்கும் பெருமை.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலும் எந்த இலக்கை நோக்கி இந்தத் தொடரை எழுத ஆரம்பித்தாரோ அதனை இன்று நூலாக்கி நிறை வேற்றியிருப்பது மனதுக்கு நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது.

எழுத்தாளர் பலராலும் சமகால விடயங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் அவை நூலுருப் பெறாதிருக்கின்றமையினால் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள் தொடர்பில் தேடலுக்கு பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. தான் வாழ்ந்த காலத்தில், வாழ்ந்த ஆளுமைகள் பற்றி எதிர்கால சந்ததியும் அறிந்து ,தெரிந்து கொள்ள வேண்டும் என்பதுடன் இப்படியான ஆளுமைகளும் வாழ்ந்து மறைந்துள்ளார்கள் என்பது பற்றி புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் பாலமுனை பாறுக் இக்கட்டுரைகளை தொகுப்பாக்கி நூலுருப் பெறச் செய்தமைக்கு முதலில் வாழ்த்துகளைப் பதிவு செய்கின்றேன்.

சில ஆளுமைகளைப் பதிவு செய்ய வேண்டும் என அவரிடம் கோரும் போது நிச்சயமாக அடுத்தடுத்த வாரங்களில் பிரசுரிப்போம் எனும் அவரது வார்த்தை எம்மை இன்னும் ஊக்குவித்தது. தான் எழுதிய கட்டுரை வாராந்தம் வெளியானவுடன் அதன் போட்டோ பிரதியை உடனடியாக முகப்புத்தகத்தில் பதிவிட்டு, இலக்கிய உலகிற்கு குறித்த ஆளுமையை அறிமுகப்படுத்துபவராகவும் அவர் செயற்பட்டார்.

இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஐம்பது ஆளுமைகளும் இலங்கை எழுத்துலக வரலாற்றில் முதன்மையானவர்கள், முக்கியமானவர்கள். எதிர்கால சந்ததியினரின் தேடலுக்கான விருந்தாக இந்நூல் அமையும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பொன்விழா கண்ட எழுத்தாளர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்கு களம் கொடுத்ததும் எமக்கு மகிழ்ச்சியே.

பல விருதுகள் கௌரவங்களைப் பெற்ற பாலமுனை பாறூக் "தமிழன்" பத்திரிகையின் ஆண்டுவிழாவின் போது 'தமிழன் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

"அரசியல் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கான அரசியல் ஆட்சி அதிகாரங்கள் பற்றியே பக்கம் பக்கமாக ஏடு நிரப்பும் பத்திரிகைச் சூழலில் மக்களுக்கேயான இலக்கியம் படைத்தளிக்கும் எழுத்தாளர்கள் பற்றி மக்களை அறவழிப்படுத்தும் இலக்கியச் செயற்பாடுகள் பற்றி பக்கம் பக்கமாகப் பேசி நிற்கும் "தமிழ்முரசின் பணிகள் பாராட்டுககுரியவை" என சாகித்ய ரத்னா தெளிவத்தை ஜோஸப் குறிப்பிடுவார்.

"தமிழ்முரசு" தனது கலை இலக்கிய பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கும்.

பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கியம் பயணம் தொடர வாழ்த்துகின்றேன்.

'தமிழ்முரசு' சார்பாக.
***ஜீவா சதாசிவம்***
பொறுப்பாசிரியர்
***29.09.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலங்கை பெற்ற

# இலக்கியப் புதல்வன்

குறும்பாக்கள் மூலம் தமிழ் நெஞ்சங்களைக் குதூகலிக்க வைத்த குறுநகைக் கவிஞன்,வங்கிக் கடன் சேகரிக்க வீடு வீடாகச் சென்று கவிதைகள் வாங்கி வந்து காவியங்கள் பாடி வைத்த பைந்தமிழ்ப் பாவலன். கவிதை காவியங்கள் தாண்டி ஆளுமைகளைத் தேடி எடுத்து ஆராய்ந்து எழுதி வரும் நல்ல கட்டுரையாளன் தமிழ் மொழியின் எல்லாப் பரிணாமங்களிலிருந்தும் எட்டிப் பார்க்கும் அற்புதப் படைப்பாளி பாலமுனை பாறூக்.

பதம் (1987 )சந்தனப் பொய்கை (2009), கொந்தளிப்பு (2010), தோட்டுப் பாய் மூத்தம்மா (2011), எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு (2012),பாலமுனை பாறூக் குறும்பாக்கள்(2013) வலைக்குள் மலர்ந்த வனப்பு(2017), மீளப் பறக்கும் நங்கணங்கள்(2020), பாலமுனை பாறூக்கின் மூன்று காவியங்கள் (2020), பாவேந்தல் பாடல்கள்(2023), என கவிதைகளும் காவியங்களும் நர்த்தனமாடும் இவரின் எழுத்துலகத்துக்குள் எழில் சேர்க்கப் புறப்பட்டு வருகிறது “ஐம்பது எழுத்து ஆளுமைகள்” எனும் ஆய்வு நூல். வயது போகப் போக வனப்பும் செழிப்பும் விடை பெற்றுப் போகும் என்பார்கள். ஆனால் வருடங்கள் தோறும் விடாது எழுதிக் கொண்டிருக்கும் எங்கள் பாலமுனையாருக்கு எழுத்துக்கள் தாமே புது ரத்தம் பாய்ச்ச, எழுதுகோல் சுமந்து இளைஞராகவே இலக்கிய உலகில் உற்சாகத்தோடு பயணிக்கிறார் அவர்.

இத்தனை புத்தகங்கள் தந்தவருக்குப் பாராட்டும் பரிசுகளும் எத்தனையும் தகும்.கலாபூசணம், வித்தகர் விருது, சுவதம் விருது, அரச சாகித்திய மண்டல விருதுகள்,கொடகே சாஹித்ய விருது, சிரேஷ்ட கவிஞர் விருது, வென்மேரி அறக்கட்டளை வாழ்நாள் சாதனையாளர் விருது, (2022)தமிழன் பத்திரிகையின் இலக்கிய விருது(2023),) கவிப்புனல், கவிஞர் திலகம்,பாவேந்தல் என இவர் எழுத்துக்களை துரத்தி துரத்தி வருகிறது விருதுகளின் படையெடுப்பு. விருதும் வியப்பும் வெள்ளமென வந்தாலும் கொந்தளிக்காத கடலாய் ”பாவேந்தல்” எனும் நாமத்துடன் பந்தா ஏதுமின்றி இலக்கிய உலகில் பயணிக்கும் இவரிடம் படிக்கலாம் பல நூறு பாடம். பாவேந்தலின் இலக்கியப் பயணத்தில், சிந்தாமணி ஆசிரியர் எஸ். டி .சிவநாயகம் ஐயாவின் பாராட்டைப் பெற்ற சிவப்புக்கோடு கவிதையைத் தன் எழுத்துலக வாழ்வுக்கு சிக்னல் போட்ட கவிதையெனச் சிலாகித்துப் பேசுவார் அவர்.

விடிந்து விட்டது வெளிக்கிட வேண்டுமே!

இல்லத் தரசியே இங்கு வா இப்படி
பிள்ளையைக் கொண்டு வா முத்தம் கொடுத்திட!
கன்னம் இங்கே காத்திருக்கின்றது
இன்னுமொரு முத்தம் எனக்கிடு இச்சென..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்கென்று நான் வெளிக்கிடப் போகிறேன்
போருக் கென்று புறப்படல் போலது!

அடையாள அட்டை அதனையும் கொண்டு வா
தடைகள் பற்பல தாண்டிட வேண்டுமே!

கொண்டு வா இப்படி கோப்பியைக் குடிக்கிறேன்
சென்று முடிக்குமோ செல்கிற வாகனம்..?

செல்லும் வழியில் அதிரடி எதிரடி,
எதிரெதிர் கொள்ளுமோ?
அதிலெதில் பட்டு நான்
இறையடி செல்வதோ..?

சாதனை புரிந்த வீரனாய்
நானும்
காரியா லயம் போய் அடைவேனோ?
காரியாலயப் படிகளைத் தாண்ட
நேரம் ஒன்பதைத் தாண்டி அங்கும்
"சிவப்புக் கோடு " சிக்னல் செய்யுமோ?

ஐம்பது வருட இலக்கிய வாழ்வுக்கு வெளிச்சம் வைத்த கவிதைப் பயணத்தோடு, இன்று எம் கைகளில் தவழும் கட்டுரை நூல் ஐம்பது மூத்த இலக்கிய ஆளுமைகளைத் தேடி அடையாளம் கண்டு இளைய தலைமுறையிடம் சேர்க்கும் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிறது. கல்வி கலை இலக்கியம், வானொலி பத்திரிகை ஊடகங்கள் சார்ந்த பல்வேறு அனுபவங்களையும் ஆற்றல்களையும் கொண்ட மூத்த படைப்பாளர்கள் பற்றிய கட்டுரைகள், தமிழன் பத்திரிகையின் இணைப்பான தமிழ் முரசின் பொறுப்பாசிரியை ஜீவா சதாசிவம் அவர்களின் உந்துதலால் பத்திரிகை வலம் வர, அதுவே இன்று நூலாகிப் பிரசுரம் கண்டிருக்கிறது.

நூலாக வெளிவரும் முன்பே பல்வேறு ஆய்வு மாணவர்கள் கைகளுக்கு மூலாதார மாகவும் போய்ச் சேர்ந்து விட்ட பெருமையைப் பெற்றிருப்பவை ஆளுமைகள் பற்றிய அவரின் இத்தேடல்கள்.

பொன்விழாக் கண்ட கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் வானொலி மேடைக் கவியரங்குகளிலும் தலைமை யேற்றுச் சிறப்பிப்பவர்..அவரின் தலைமையில் ஹஜ்ஜூக் கவிதை பாடிய நினைவுகள் எனக்கும் பசுமையானவை. அவர் இன்னும் பல நூல்கள் தந்து மகிழ வாழ்த்துகள்.

அன்புடன்,
வரலாற்று ஆய்வாளர்
***மாத்தளை ஜெஸீமா ஹமீட்***
B.A(Hons), M.A.(History)PGDE, DIP IN OFFICE MANAGEMENT

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பது எழுத்து
# ஆளுமைகள்

கவிதை,நவீன காவியங்கள், குறும்பாக்கள், ஹைக்கூக்கள்,இசைப் பாடல்கள் என்று எழுதி வருகின்ற எனது எழுத்தாக்கப் பணியின் தொடர்ச்சியாக விரிகின்றது- "ஐம்பது எழுத்து ஆளுமைகள்" என்ற இந் நூல்.

"தமிழன்" தேசியத் தினசரியின் ஞாயிறு பதிப்போடு இணைப்பிதழாக வெளி வரும் "தமிழ்முரசு" தந்த ஆதரவில், 18-09-2022 முதல் 10-09-2023 வரை, வாராவாரம் நான் எழுதி வந்த ஈழத்தின் மூத்த, முக்கிய எழுத்தாளுமைகளின் விபரங்களைப் பதிவு செய்து ஆவணப்படுத்தும் முயற்சியாகவே இந்நூல் விரிகின்றது.

**2**

ஈழத்தில் எழுத்து, இலக்கிய கர்த்தாக்களைப் பதிவு செய்யும் முயற்சிக்கு வித்திட்டவராகப் புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்த சைமன்-காசிச் செட்டி என்ற அறிஞரை எழுத்துலகம் குறிப்பிடும். அவர் ஆங்கிலத்தில் எழுதிய, 202 புலவர்களின் சுருக்க வரலாறு அடங்கிய - THE TAMIL PLUTARCH(1859)- தமிழக, ஈழத்துப் புலவர் வரலாறு தொடர்பாக ஈழத்தில் எழுந்த முதல் நூலாகவும், அந்த நூலைத் தழுவியும் புதுக்கியும், விரித்தும் யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்த அறிஞர் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் எழுதிய 411 தமிழக, ஈழத்துப் புலவர்களின் வரலாற்று நூல் - பாவலர் சரித்திர தீபகம்(1886) ஈழத்தில் தமிழில் வெளிவந்த முதலாவது புலவர் வரலாற்று நூலாகவும் குறிப்பிடப்படுகின்றது.பேராசிரியர் பெ. பூலோக சிங்கத்தின் ஆய்வுக் குறிப்புகளுடன் இரண்டு பாகங்களாக இந்நூலைக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் மறுபதிப்பாக வெளியிட்டது. 1975ல் முதலாம் பாகமும்,1979ல் 2ம் பாகமும் வெளிவந்தன.

தமிழில் எழுத்தாளுமைகளைப் பதிவுசெய்யும் முயற்சி தொடர்ந்தது. 1916ல் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் "தமிழ்ப் புலவர் சரித்திரம்" என்ற நூலை வெளியிட்டார்.

1939ல் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீ.கணேசையர் "ஈழநாட்டுப் புலவர் சரிதத்தை" வெளியிட்டார். ,முழுவதுமாக ஈழத்துப் புலவர்களின் வரலாற்றை ஆவணப்படுத்திய முதல் நூல் என்ற தனித்துவ அடையாளம் இந்த நூலுக்குண்டு.

ஈழத்தின் எழுத்திலக்கிய ஆளுமைகளைப் பதிவுசெய்து ஆவணப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டதன் பிரதிபலிப்பாக, இலங்கை சாஹித்ய மண்டலம், ஈழத்துப் பூதன்றேவனார் காலம் முதல் கலாநிதி நடேசபிள்ளை காலம் வரை இலங்கையில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப் புலவர்களின் கவிதைகளையும் வரலாற்றையும் "ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" (தொகுப்பாசிரியர் கலாநிதி ஆ.சதாசிவம் 311 பக்கங்கள்) என்ற பெயரில் 1966ல் வெளியிட்டது. இதன் புதுக்கிய பதிப்பை ஈழத்துப் பூதந்தேவனார் முதல் 20ம் நூற்றாண்டு வரையான 297கவிஞர்களை உள்ளடக்கிய நூலாக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 993 பக்கங்களில் 2017ல் வெளியிட்டு வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களை அடையாளப்படுத்தி ஆவணப்படுத்திய இதுபோன்ற இன்னும்பல நூல்கள் ஈழத்தில் அவ்வப்போது வெளிவந்தன.

- ஈழத்து முஸ்லிம் புலவர்கள் (1962) - (ஏ.ஆர்.எம். சலீம்)
- ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள்(1967) - தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை
- அட்டைப்பட ஓவியங்கள்(1986)
- மல்லிகை முகங்கள்(1996)
- அட்டைப் படங்கள்(2002)
- முன்முகங்கள்(2007)

  ( மல்லிகைப் பந்தல் வெளியீடுகள்)
- இலக்கியப் பூக்கள் -1 (43 மறைந்த எழுத்தாளுமைகள்) 2008,
- இலக்கியப்பூக்கள்-2 (56 மறைந்த எழுத்தாளுமைகள்) (தொகுப்பாசிரியர் முல்லை அமுதன்)
- எழுவான் கதிர்கள் (1986) 1970 க்குப் பின்னர் எழுத ஆரம்பித்த 24 கல்முனைப் பிரதேச முஸ்லிம் கவிஞர்களின் குறிப்பும் கவிதைகளும் (தொகுப்பாசிரியர்கள் அன்பு முகையதீன், பாலமுனை பாறூக்)
- பைந்தமிழ் வளர்த்த ஈழத்துப் பாவலர்கள்(2005) - (த.துரைசிங்கம் )
- இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், விபரத் திரட்டு (2007) (புன்னியாமீன்)
- மலையக இலக்கிய கர்த்தாக்கள்( 2007) - (என். செல்வராஜா,)
- ஈழத்து எழுத்தாளர்கள் - ஒரு விரிவான பார்வை(2009) - கே.எஸ்.சிவகுமாரன்
- 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு முதலாம், இரண்டாம் பாகம் (2007 - 2008) - (சீ.அப்புத்துரை)
- மின்னும் தாரகைகள்(2018) இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் (நூருல் அய்ன் நஜ்முல் ஹுஸைன்)
- ஒளிரும் நட்சத்திரங்கள் (2019) 20 கலை, இலக்கிய ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள் - (பரணீதரன்)
- ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் (2023) (தி. ஞானசேகரன்)
- கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்(2023) (கோவிலூர் செல்வராஜன்) ,
- ஊர்சார்பாக புலவர்கள்,கவிஞர்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள் முதலியன.

## 3

பத்திரிகையில் "ஆளுமைகளின் அடையாளம்" என்ற பகுதியில் நா ன் எழுதும்போது ஐம்பது வருட எழுத்திலக்கிய அனுபவம் மிக்க, எழுத்தாளர்களை, அவர்கள் வாழும் பொழுதே எழுதிப் பதிவுசெய்வதே எனது பிரதான நோக்கமாகவிருந்தது. அதன்படி ஈழத்தின் சமகால நவீன இலக்கிய வாதிகள், கலைஞர்கள் ஊடக வியலாளர்களை ஒரு விரிந்த பார்வையில், அவர்களின் எழுத்து, ஆற்றல், அனுபவம், துறைசார்ந்த தேர்ச்சி , நூல்கள், கலை இலக்கிய சாதனைகள், வாழ்வு, கல்வி, குடும்ப விபரங்கள் என்பன வெளித்தெரியும் வகையில், வண்ணப் படங்களோடு பதிவு செய்தேன். இன்று அவை நூலுருப் பெறுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாத காரணங்களினால், (விபரங்களை தேடியெடுப்பதில் ஏற்பட்ட தாமதம், பத்திரிகைக் கேற்றபடியான முழுமையான தகவல்கள், படங்கள் என்பவற்றை பெற்றுக் கொள்வதில் இருந்த தாமதம், ஐம்பது ஆளுமைகளோடு தொடர் நிறைவுக்கு வரவேண்டிய கட்டாய நிலைமை) முக்கியமான சிலர் விடுபட்டுள்ளனர். இன்னுமொரு சந்தரப்பம் கிடைக்கும் போது அவர்களையும் எழுதிவிட வேண்டும் என்ற விருப்பமே நெஞ்சில் நிறைந்திருக்கின்றது.

தவிர, மூத்த முக்கிய ஆளுமைகள் பதிவு செய்யப்பட்டுள்ள இந்நூலில், எழுத்தாளுமைகள் எழுத்துலகப் பிரவேச காலத்தை முன்வைத்தே வரிசைப்படுத்தப் பட்டுள்ளனர். ஆளுமைகளுக்கு நமது வாழ்த்துகள். மறைந்த ஆளுமைகளுக்காக நமது பிரார்த்தனைகள்.

**4**

"தமிழன்" பத்திரிகையில் எழுத்து ஆளுமைகள் பற்றி எழுதுவதற்கு வாய்ப்பளித்ததோடு, இந்நூலுக்கு வாழ்த்துரைகள் வழங்கியும் மதிப்பளித்த, தமிழன் ஆசிரியர் சிவா ராமசாமி, "தமிழ்முரசு" பொறுப்பாசிரியை ஜீவா சதாசிவம், குறிப்புரை வழங்கிய வரலாற்று ஆய்வாளர் மாத்தளை ஜெஸீமா ஹமீட், பின்அட்டைக் குறிப்புக்களை வழங்கிய தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். அப்துல் ரஸாக், அட்டைப் படம், அச்சுப் பணிகளில் முன்நிற்கும் நண்பர் எழுகவி ஜெலீல் ஆகியோருக்கும் நூல் வெளிவருவதில் உதவும் அனைவருக்கும் என் மனமுவந்த நன்றி.

என்றும்போல் வாசக நெஞ்சங்களின் அன்பும் ஆதரவும் இந் நூலுக்கும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அன்புடன்,
**பாலமுனை பாறூக்.**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆளுமைகள் | அடையாளம் |
|---|---|


01. யோனகபுர ஹம்ஸா - 01
02. மாறன். யூ செயின் - 04
03. கலைவாதி கலீல் - 07
04. எஸ். முத்துமீரான் - 10
05. மு. சடாட்சரன் - 12
06. எஸ்.எல்.எம். ஹனீபா - 14
07. பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் - 17
08. பேராசிரியர் செ. யோகராசா - 22
09. இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் - 25
10. அல் அசூமத் - 29
11. சாரணா கையூம் - 33
12. யோகா யோகேந்திரன் - 37
13. சாந்தி முகையதீன் - 40
14. டாக்டர் தி. ஞான சேகரன் - 43
15. உடுவை எஸ். தில்லை நடராஜா - 46
16. எஸ்.ஐ. நாகூர்கனி - 50
17. குப்பிழான் ஐ. சண்முகன் - 54
18. டாக்டர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன் - 58
19. மௌலவி எம்.எச்.எம். புகாரி - 62
20. அ. யேசுராசா - 66
21. செங்கதிரோன் த. கோபால கிருஷ்ணன் - 69
22. கலையன்பன் அப்துல் அஸீஸ் - 72
23. அன்பு ஜவஹர்ஷா - 75
24. ஜவாத் மரைக்கார் - 79
25. திக்குவல்லைக் கமால் - 83
26. "பாடும்மீன்" ஸ்ரீஸ்கந்தராஜா - 86
27. மஹ்தி ஹஸன் இப்றாஹீம் - 89
28. முல்லை வீரக்குட்டி - 92
29. அன்புடீன் - 95
30. மூதூர் முகைதீன் - 97





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. எம்.ஏ.எம். நிலாம் - 101
32. பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் - 103
33. என். நஜ்முல் ஹுசைன் - 106
34. அக்கரையூர் அப்துல் குத்தூஸ் - 109
35. மேமன்கவி - 112
36. என்.எம். அமீன் - 115
37. அ. கௌரி தாஸன் - 119
38. கோவிலூர் செல்வராஜன் - 121
39. மௌலவி காத்தான்குடி பௌஸ் - 124
40. நூறுல் அயின் நஜ்முல் ஹுசைன் - 128
41. பீ.ரீ. அஸீஸ் - 132
42. உ. நிசார் - 134
43. அஷ்ரஃப் சிஹாப்தீன் - 138
44. ஜெகதீஸ்வரி நாதன் - 142
45. தீரன். ஆர்.எம். நௌசாத் - 145
46. மருதூர் ஜமால்தீன் - 149
47. கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ - 152
48. ஜரீனா முஸ்தபா - 156
49. எழுகவி ஜெலீல் - 159
50. அலெக்ஸ் பரந்தாமன் - 164




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திக்குவல்லைக் கலை இலக்கிய வளர்ச்சியில்
தீவிரமாக முன்னிற்கும்

## யோனகபுர ஹம்ஸா

ஈழத்தில் புகழ்பூத்த எழுத்தாளர்களைக் கொண்டிலங்கும் ஊர்களை அடையாளப் படுத்துபவர்கள் திக்குவல்லையைத் தவறவிடுவதில்லை. தென்னிலங்கையில், சிங்கள மொழிபேசும் பெரும்பான்மை மக்களோடு வாழ்ந்து கொண்டு தமிழ் வளர்ப்பவர்களாகவும், தமிழ்- சிங்கள நல்லுறவைப் பேணிக் காத்து வருபவர்களாகவும் திக்குவல்லை எழுத்தாளர்கள் திகழ்வதினை இலக்கிய உலகம் பேசும். ஐம்பதுகளில் எழுத்துலகப் பிரவேசம் பெற்ற எம்.ஏ. முஹம்மது, அறுபதுகளில் எழுத்துலகுக்கு வந்த எம்.ஐ.எம் அலி, யோனகபுர ஹம்ஸா, எம்.எச்.எம்.ஷம்ஸ் ஆகியோர் திக்குவல்லையின் மூத்த இலக்கிய வாதிகளாக மிளிர்ந்தனர்.

எழுபதுக்குப் பின்னர் திக்குவல்லையின் கலை இலக்கியம் துரித வளர்ச்சி கண்டது. புதிய படைப்பாளர்களின் வருகை அதிகரித்தது,எஸ்.ஐ.எம்.ஹம்ஸா, நீள்கரை நம்பி, திக்குவல்லைக் கமால், செந்தீரன் சத்தார்,எம் ஏ. இனாயத்துல்லாஹ், திக்குவல்லை ஸப்வான், திக்குவல்லை ஸும்ரி (1980).....என்று தொடரும் ஒரு புதிய தலைமுறையினர் திக்குவல்லையின் நாமத்தைப் பல்துறையிலும் துலங்கச் செய்தனர். பத்திரிகை, சஞ்சிகைகளிலும் வானொலியிலும் திக்குவல்லை எழுத்தாளர்களின் படைப்புகள் நிறையவே இடம்பெற்றன. ஈழத்தின் முற்போக்கு கலை இலக்கிய சஞ்சிகையான “மல்லிகை”, திக்குவல்லையின் எழுத்து முயற்சிகளை இனம்கண்டு ஒருமாத இதழை திக்குவல்லை இலக்கியச் சிறப்பிதழாகவே வெளியிட்டது .

இவ்வாறு புகழ்பதித்த திக்குவல்லையில், எழுபதுக்குப் பின்னர் ஏற்பட்ட கலை இலக்கிய எழுச்சிக்கு, திக்குவல்லை எழுத்தாளர் சங்கத்தின் உதயமும் அதன் செயற்பாடுகளும் உறுதுணை புரிந்ததை இலக்கிய வரலாறு எடுத்தியம்பும். திக்குவல்லை எழுத்தாளர் சங்கத்தை உருவாக்குவதில் மறைந்த பல் துறை ஆளுமை எம். எச் எம் ஷம்ஸ் அவர்களோடு சேர்ந்து முக்கிய பங்களிப்புச் செய்தவராகக் கண்ணியம் பெற்றிருப்பவர் யோனகபுர ஹம்ஸா. 1968ல் திக்குவல்லை எழுத்தாளர் சங்கத்தை ஆரம்பித்ததோடு நின்றுவிடாமல், இன்றும் அதன் தலைவராக இருந்து கலை இலக்கியப் பணி புரிபவர் அவர்.

திக்குவல்லையில் 1939ல் பிறந்து,மண்ணின் பெருமை காத்துக் கொண்டு அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கும் ஹம்ஸா சமூக மேம்பாடு, கலை இலக்கிய வளர்ச்சி என்று அக்கறை செலுத்துபவர். அறுபது வருடங்களுக்கும் மேற்பட்ட கலை இலக்கிய அனுபவமுடையவர். பிரதேச மக்களின் நல்லபிப்பிராயத்தையும், இன்றுள்ள பிரபலம் பெற்ற எழுத்தாளர்களின் நன்மதிப்பையும் பெற்றிருப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை,சிறுகதை,நாடகம் சிறுவர் இலக்கியம்,வரலாற்று ஆய்வு,பேச்சு,கயிற்றுக் கோலாட்டம்,களிகம்பு என்று பல்துறையிலும் ஈடுபடுபவர். புதியவர்களுக்கு வழிகாட்டுவதோடு கிராமியக் கலை வடிவங்களையும் பயிற்றுவிப்பவர்.

1958ல் ஆசிரியராக நியமனம் பெற்ற அவர்,அர்ப்பணிப்போடு பணியாற்றியவர். மாணவர்களின் கல்வி உயர்ச்சியில் மட்டுமன்றி கலை, இலக்கிய விருத்தியிலும் கரிசனை செலுத்தியவர். வாசிப்பதற்குப் பொதுப் பத்திரிகை கூட இல்லாத காலத்தில், 1960ல் ஈழச்சுடர் என்ற இலக்கிய வட்டத்தை ஏற்படுத்தி மாணவர்களுக்கு கலை இலக்கிய இரசனையை ஏற்படுத்தியவர். இக்பால் கலை மன்றத்தை உருவாக்கி அதனூடாக கல்கி, ஈழச்சுடர்,மரகதம், நிலா,இளம்பிறை போன்ற நூல்களைத் தருவித்து வாசிப்பில் மாணவர்களை ஈடுபடச் செய்தவர் .

ஆயினும், தனது சொந்த ஆக்கங்களை நூலாக்கித் தருவதில் அவர் அதிக கரிசனை செலுத்தியதாகத் தெரியவில்லை. இற்றைவரை அவரின் நான்கு நூல்களே தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைத்துள்ளன.

1. வானவில் (சிறுவர் கவிதை)
2. புன்னகைச் சுடர்(சிறுவர் கதைகள்)
3. மங்காச் சுடர் எம் ஸீ எம் நிஸார் (தொகுப்பு)
4. நெஞ்சத்தில் நிறைந்தவர் (வரலாற்று ஆய்வு) என்பன அவை.

அவருடைய வானவில் ( சிறுவர் கவிதை) இலங்கை அரச சாஹித்ய மண்டல விருதை 2007ல் பெற்றுக் கொண்டது.புன்னகைச்சுடர்(சிறுவர் கதை ) பாடசாலை நூலகப் புத்தகமாக தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது. நெஞ்சத்தில் நிறைந்தவர் என்று கைரு லெப்பை அப்பா பற்றி எழுதிய வரலாற்று ஆய்வுநூல் பல தகவல்களை உள்ளடக்கி இருப்பதாகவும்,பல வருட தகவல் சேகரிப்பில் மலர்ந்துள்ளதாவும், கைருலெப்பை அப்பா பற்றியதாக மட்டுமல்லாது, திக்குவல்லையின் வரலாறு முழுமையாக எழுதப்படாத குறைபாட்டினைக்கூட ஓரளவு தீர்த்துவைக்க இந்நூலின் வரவு உதவுவதாகவும் இந்நூல் பற்றிக் குறிப் பெழுதிய அதிபர் அஷ்ஷெய்க் எம் .ஐ.எம் மசாயிர் குறிப்பிடுவார்.

வானொலி தொலைக்காட்சி கவியரங்குகளில் பங்குகொண்டும் சிறப்பிப்பவர் யோனகபுர ஹம்ஸா. அவருடைய இலக்கிய ஆசிரியப்பணிக்காக பல விருதுகளையும் பரிசுகளையும் அவர் பெற்றிருக்கின்றார்.

இலங்கை அரசின் கலாசார அமைச்சு 2002ல் அவரைக் கலாபூஷண விருதளித்துக் கௌரவித்தது. திக்குவல்லைத் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் மன்றம், நல்லாசான் யோனகபுர ஹம்சா வை, "கலைப் பொக்கிஷம்" என்று பட்டமளித்துக் கௌரவித்து மகிழ்ந்தது.

"தென்மதி" கலாசாலைக் கையெழுத்துச் சஞ்சிகையில் எழுத ஆரம்பித்து,தினகரன் புதன் மலரில் தொடர்ந்து,வீரகேசரியில் கவிஞராகத் தன்னை ஸ்திரப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர் யோனகபுர ஹம்ஸா. இன்ஸானில் சமூக விமர்சனக் கட்டுரைகளை அவர் எழுதினார்.

“யோனகபுர ஹம்ஸா, பேச்சு நடையை பாவமைதிக்குள் அடக்கி வெற்றி கண்டவர்” என்று அவரின் கவிதை விலாசத்தை விதந்துரைப்பார் “பூ” இதழுக்கு விமர்சனக் குறிப்பெழுதிய பிரபல எழுத்தாளர் அ. ஸ.அப்துஸ் ஸமது.

யோனகபுர ஹம்ஸா என்ற முஹம்மது ஹம்ஸா முஹம்மது, ஹபீப் மரிக்கார் முஹம்மது ஹம்ஸா-முஹம்மது தாஹீர் பாத்தும்மா தம்பதியின் மகனாகப் பிறந்தவர். எம்.எச். சித்திஹலீமா என்பவரைத் திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாக இலங்குபவர்.

நல்லாசானாக ஹம்பாந்தோட்டை,காலி,தங்காலை,, மீயல்ல,திக்குவல்லை ஆகிய இடங்களில் கடமையாற்றிச் சிறந்த மாணவர்களை உருவாக்கிய திருப்தியோடு வாழந்து கொண்டிருப்பவர் அவர். கலாபூஷணம், கலைப்பொக்கிஷம் யோனகபுர ஹம்ஸா தனது 84 அகவையிலும் ஊர், சமூகம் கல்வி கலை இலக்கியம் என்று வாழ்பவர்.

அவர் தேகநலத்தோடும்,உளச்சுகத்தோடும் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும். அவரின் பணி தொடர வேண்டும் புதிய படைப்பாளர்களின் வரவுக்கு அவர் மேலும் துணை புரிய வேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
***16.04.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மாந்துறைப் பிரதேசத்தின் கலை இலக்கிய முதுசொம்

## கவிஞர் மாறன். யூ செயின்

*0772174119*



இலங்கையில் ,தென்கிழக்குப் பிரதேசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாக சம்மாந்துறை விளங்குகின்றது. அவ்வாறே, அரசியல், கல்வி, கலை கலாசாரம் என்பவற்றிலே தனிச் சிறப்பினை பெற்ற நகரமாகவும் சம்மாந்துறை முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

முஸ்லிம் சமூக அரசியலில் விழிப்புணர்வை ஊட்டிய பெருமகன் எம்.எச்.எம். அஷ்ரப் பிறந்த மண்ணாக அரசியலிலும், பல்கலைக் கழக பீடம், தொழில் நுட்பக் கல்லூரிகள், பிரபலமான பாடசாலைகள், பெயர்பெற்ற மதரஸாக்கள் என்பன அமைந்த மண்ணாகக் கல்வியிலும், ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளர்களைப் பெற்ற, செழிப்பு மிக்க மண்ணாக கலை கலாசார விடயங்களிலும் சம்மாந்துறை நகரம் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அந்த வகையில், அறிஞர் அண்ணாத்துரை அவர்களால் "ஈழமேகம்" எனப் புகழ்ந்துரைக்கப்பட்ட நாவன்மை மிக்க கலைஞர் பக்கீர்த்தம்பி, புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை அவர்களால் பாவலர் எனப் பெயரிடப்பட்ட அழகியற் கவிஞர் பஸீல் காரியப்பர், சர்வதேச கவிதைப் போட்டிகளில் மரபுக் கவிதை எழுதிப் பெயர் பெற்ற கலாபூஷணம் ஏஸி. இஸ்மாலெவ்வை என்பவர்கள் வரிசையில் இன்னுமொருவராக மதிக்கப் பெறும் மூத்த இலக்கிய ஆளுமை கவிஞர் மாறன் யூ. செயின். ஏழு தசாப்த காலமாக இலக்கிய உலகில் தளராது செயற்படுகின்ற அவர், **1954** ல் "கன்னத்தில் முத்தம்" என்ற கிராமியச் சித்திரத்தை சுதந்திரனில் எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் கால் பதித்தவர். பல் வேறுபட்ட சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் எழுதியவர். கட்டுரை, நாடகம், வில்லுப்பாட்டு, சிறுகதை, என்று பல துறைகளில் ஜொலித்தவர்.

சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழகம், தேசிய கலைக்குன்றம், சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசிய கலை இலக்கியத் தேனகம் என்பவற்றின் தோற்றத்தின் காரணராக இருந்த தோடு ,தலைவர் செயலாளர் போன்ற பதவிகளையும் வகித்தவர். இச்சங்கங்களினூடாக புதிய இலக்கிய வாதிகளின் வருகைக்கு வித்திட்டவர். சம்மாந்துறையில் "தமிழ்" என்று கூறுகின்ற போது இவரின் சகோதரர் முஸ்தபா ஆசிரியரின் பெயர் நினைவில் நிற்பதைப்போல இவரின் பெயரும் நினைவில் நிற்பதை மாணவர்கள் பெருமையோடு எடுத்துக் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழோடும்,திராவிட இயக்கங்கங்களோடும் பற்றுமிக்கவராக,தமிழ்த்தொண்டராகத் திகழ்ந்தவர் உதுமா லெவ்வை செயின் என்ற இயற்பெயர் கொண்ட மாறன் யூ செயின். கலை வேள்,புரட்சி மாறன்,சம்மாந்துறைவன் என்ற புனைபெயர்களிலும் இவரின் ஆக்கங்கள் மலர்ந்தன.

அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கம்,சம்மாந்துறைப் பிரதேச செயலக கலாசார அதிகார சபை,சம்மாந்துறைப் பிரதேச கலாசாரப் பேரவை என்பவற்றின் தலைவராக- துணைத் தலைவராக இருந்து இலக்கிய விழாக்கள்,மலர் வெளியீடுகள்,ஆவணக் காப்பு முயற்சிகள்,எழுத்தாளர்களின் நூல் வெளியீடுகள் என்பனவற்றைச் செய்வதில் முன்னின்றவர்.

“இனிக்கும் தமிழ் இலக்கணம்” மாணவர்களுக்காக இவர் வெளியிட்ட இரண்டு பாகங்களைக் கொண்ட நூல். கலையம்சம், தேன்மலர் வெண்முத்து, அல்-முனீறா கலாபாசம், முல்லை, நிலா, கலைக் குரல், கொள்கை என்ற சஞ்சிகைகளின் ஆசிரியரா கவும் இவர் செயற்பட்டார். அழகிய கையெழுத்தில் சமூக மறுமலர்ச்சி, சீதன ஒழிப்பு என்பவற்றை நோக்கமாகக் கொண்டு 1973 முதல் வெளிவந்த புரட்சிகர சஞ்சிகையாகக் “கொள்கை” அமைந்திருந்ததை அதன் வாசகர்கள் இன்றும் நினைவு கூருவர்.

மாறன் யூ செயின் அவர்கள் பலரின் நூல்களை,சஞ்சிகைகளை வெளியீடு செய்வதில் அதிக அக்கறை காட்டியவர். ஆனால் அந்த அக்கறையை , தனது ஆக்க இலக்கிய நூல்களை வெளியீடு செய்வதில் அவர் காட்டவில்லை அதனாலேதான்,அவருடைய முதலாவது கவிதைத் தொகுதி “இரத்த நரம்புகள் (2016) காலம் பிந்தி வெளி வந்தது.சம்மாந்துறைப் பிரதேச கலாசார அதிகாரசபையின் வெளியீடாக 50 கவிதைகளோடு மலர்ந்தது அந்நூல். 60,70 காலக் கவிதைப் போக்கின் செழிப்பு, படிமச்சிறப்பு ,ஓசை உருவம், பொருளுருவம்,என்பவற்றை எடுத்துக் காட்ட அவருடைய கவிதைகள் உதவும்.

“இருள் நிறத்தைக் குழைத்து
எறும்பாகச் செதுக்கி விட்ட
அருள் வடிவோ அந்த
ஆணுருவம்? தான் பிறந்த
பொருள் விளங்கும் பாங்கே
புரியாமல்,விலையாகித்
தெரு முழுதும் தன்னைத்
தியாகம் செய்கிறது!

தன் உடலை அந்தத்
தரங்கெட்ட நரிகளுக்குப்
புண்ணாக்கித் தின்னப்
போட்டவைகள் போதாதா?
கண்விற்றுப் படைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கற்பனைச் சித்திரத்தில்*
*என்னவரம் கேட்டோ*
*எலும்புகளை ஒடிக்கிறது!"*

*உழைப்பாளி பற்றிய- அவனின் உழைப்பு சிதைவது பற்றிய கவிதை அது.மாறன் அவர்களின் கவிதை நேர்த்திக்கு ஒரு சிறுசான்றும் அது.*

*சம்மாந்துறை மண்ணில் நாடகக் கலையில் முதன் முதல் அடியெடுத்து வைத்து கல்லூரி நாடகங்கள், திறந்தவெளி நாடகங்கள் என 116 நாடகங்களை மேடையேற்றியவர். வில்லிசைப் பாடல்கள் பலவற்றை அரங்கேற்றியவர். பிரதேச, மாவட்ட, சாஹித்திய விருதுகள், மாகாண முதலமைச்சர் விருது, தேசிய கலாபூஷண விருது உட்பட பல இலக்கிய விருதுகளைப் பெற்றவர்.*

*மாறன் யூ. செயின் சம்மாந்துறையில் 1940ல் பிறந்தவர். மட்/ சம்மாந்துறை அரசினர் கலவன் பாடசாலை, காரைதீவு விபுலானந்தர் வித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்றவர். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று,1961 ல் ஆசிரியராக நியமனம் பெற்றவர்.*

*முதலாந்தர அதிபராகக் கடமையாற்றி 1998ல் ஓய்வு பெற்றவர். ஆனாலும் நாட்டு வைத்தியராக, இலக்கியச் செயற்பாட்டாளராக அவரின் பணி இன்றும் தொடர்கின்றது.*

*இலக்கியத்துறையில் ஓய்வின்றி இயங்கிக் கொண்டிருக்கும் மாறன் யூ செயின் கொண்டாடப்படவேண்டிய கவிஞர். நினைவில் நிற்கும் அவருடைய கலை இலக்கியப் பணிகள் ஆவணப் படுத்தப் படவேண்டும், அவரின் வில்லுப் பாட்டு, நாடகங்கள் என்பன மீளுருவாக்கம் செய்யப்படவேண்டும். அவரின் கையெழுத்துப் பிரதிகளாக உள்ள நூல்கள் யாவும் அச்சுருப் பெறவேண்டும். அதற்கான முயற்சிகளை அவரும் சம்மாந்துறை வாழ் இலக்கிய நெஞ்சங்களும் கலை இலக்கிய மன்றங்களும் செய்ய முன்வரவேண்டும்.*

*82 அகவையில் வாழும் கவிஞர் மாறன் யூ செயின் அவர்களின் தேக நலனுக்காகவும்,, அவரின் இலக்கியச் செயற்பாடுகள் சிறப்படையவும் வாழ்த்துகின்றோம்.*

*தமிழன் பத்திரிகை*
*18.12.2023*

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள விழாக் கண்ட பல்துறைக் கலைஞன்

## கலைவாதி கலீல்



பல்துறைக் கலைஞராக இலங்கைக் கலை இலக்கியப் பரப்பில் மதிப்புப் பெற்றிருப்பவர் கலைவாதி கலீல். இலங்கையில் எங்கு இலக்கியக் கூட்டங்கள் நடை பெற்றாலும்,அக்கூட்டங்களில், அழைப்பை யேற்றுத் தவறாது பங்கேற்கும் இலக்கிய வாதி அவர்.

கவிஞர்,பேச்சாளர்,பாடகர்,நாடகாசிரியர்,சிறுகதையாளர்,பத்தி எழுத்தாளர், விமர்சகர், பக்கத் தயாரிப்பாளர், பத்திரிகைகளின் ஆசிரியர் என்பதோடு பலாலி ஆசிரியர் கல்லூரிப் பயிற்சி பெற்ற சிறந்த ஓவியர், கூடார்த்த சித்திரக்காரர் என்று பல் துறையிலும் பேசப்படுபவர்.

கலைஞர் மாநாடு,கவிஞர் நூற்றாண்டு விழாக்கள், சித்திரக் கண்காட்சிகள்,நாடகங்கள், கலை விழாக்கள் என்பன நடாத்திப் பல புதிய தலைமுறை கலை,இலக்கிய வாதிகளை ஊக்குவித்த மூத்த படைப்பாளி .

அல்ஹாஜ் ஏ.எச்.எம் அஸ்வர் அவர்கள் முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சராக இருந்த போது இலக்கியவாதிகளுக்கு, அமைச்சின் சார்பில் “வாழ்வோரை வாழ்த்துவோம்” நிகழ்ச்சியில் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டது. தேசிய ரீதியில் மீலாது விழாக்களும் கொண்டாடப் பட்டன. அந்த நிகழ்ச்சிகளில் துணை நின்று, அவ்விழாக்களின் போது வெளியிட்ட மலர்களின் வடிவமை ப்பாளராக, அட்டைப்பட ஓவியராகப் பங்களித்தவர் அவர்.

வானொலி, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் எழுத்துப்பிரதிகளாலும்,குரல் வளத்தாலும் உச்சரிப்பாலும் பிரகாசித்தவர் கலைவாதி. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் அவர் தயாரித்து வழங்கிய “இலக்கிய மஞ்சரி”, இலை மறைகாயாக இருந்த இளைய தலைமுறைப் படைப்பாளர்களுக்கு வெளிச்சமிட்டதை இலக்கிய உலகம் பேசும். தொலைக் காட்சிகளில் அவர் படைத்த கவியரங்குகள்,ஏனைய மேடை, வானொலி நிகழ்ச்சிகள் என்பன இன்றும் சிலாகித்துக் கூறப்படுபவை.

புரட்சிக் கவிஞன் கே, மன்னாரான்,மன்னிநகர்க் கலீல்,புரட்சி தாசன், சர்தார், தீட்சண்யன், பஸீரா மணாளன் என்ற புனை பெயர்களில் எழுதிக் குவித்த கலைவாதி, ஒரு வெள்ளி ரூபாய் (சிறு கதை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையிலிருந்து கல்லறைக்கு( கவிதை)
ஓ..பாலஸ்தீனமே..!(கவிதை)
உலகை மாற்றிய உத்தமர்( இயல் இசைச் சித்திரம்)
றோணியோக்கள் வாழுமா?(ஆய்வு)
என் வில்பத்து டயறி( கட்டுரை)
வவுனியா முஸ்லிம்களின் வரலாறு
மன்னார் முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும்
என்ற படைப்புக்களைத் தந்து இலக்கிய உலகில் நிமிர்ந்து நிற்பவர்.

கலாபூஷண விருது
வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனர் விருது
தாஜுல் உலூம்(பல்கலை வேந்தன்)
காவ்யாபிமானி ,
தீன் தமிழ்ச்செல்வன்
பல்கலைக்குரிசில் என்பன அவரின் இலக்கியப் பங்களிப்புக்காக அரசினராலும், மாகாண சபையினாலும் மக்களாலும் அவருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள்-விருதுகளாகும்.

இன்ஸான் இலக்கியப் பண்ணைப் படைப்பாளராக அடையாளம் பெறும் கலைவாதியின் படைப்புகள், யதார்த்த வாழ்வை, அன்றாடப்பிரச்சினைகளைச் சொல்வன. சமூக மறுலர்ச்சியை நாடி நிற்பன. சவூதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்ட மூதூரைச்சேர்ந்த சிறுமி றிஸானா பற்றிய அவரின் சிறுகதை, அமெரிக்காவில் இயங்கும் இலக்கியத்திற்கான சர்வதேச இணையத்தில் பிரசுரம் பெற்றுப் பெருமை பெற்றதை இலக்கிய வாசகர்கள் நன்கறிவர்.

கவித்துவ வீச்சும்,வீரியமும் நிறைந்த கவிதைகளைத் தருபவராக ஆய்வாளர்களால் குறித்துரைக்கப்படுபவர் கலைவாதி.

“ஒருகரம் ஓயும்போது
மறுகரம் கல்லை மாற்றும்
ஒரு உயிர் சாயும் போது
மறுஉயிர் கல்லை ஏந்தும்

பச்சிளம் கரங்க ளுக்கும்
பாரிய வலிமை யுண்டே
நிச்சயம் அல் அக்ஸா
நிச்சயம் பாலஸ்தீனம்” என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ..பாலஸ்தீனமே! என்ற கவிதை நூல் தந்திருக்கின்ற கவிவரிகள் அவரின் கவிதை வீச்சை, வீரியத்தை நிரூபிக்கப் போதுமானவை யெனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர்.

மன்னாரில் மதாறு முகையதீன்-மீரா உம்மா தம்பதியின் மகனாகப் பிறந்த(**1943**) முஹம்மது கலீல், "லட்டு" என்ற மாசிகையில் "மறைந்த இருள்" என்ற படைப்பின் மூலம் **1956**ல் இலக்கியப் பிரவேசம் பெற்றவர்.

**1963**ல் ஆசிரியராக நியமனம் பெற்ற கலைவாதி,பலாலி ஆசிரியர் கலாசாலையில் விசேட பயிற்சி பெற்றவர்.இலங்கைக் கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரதி அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர்.

**65** வருடங்களுக்கு மேற்பட்ட கலை இலக்கிய அனுபவமுடைய கலைவாதி பவளவிழாக் கண்ட கலைஞர். பத்திரிகை, இலக்கியத்துறைகளில் தொடர்ந்து இலங்கியவர் அவர். உடல்நலக் குறைவு காரணமாக அவரின் செயற்பாடுகள் சிலமாதங்களாக தடைப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

பல்கலை வேந்தன், இலக்கிய ஆளுமை கலைவாதி கலீல் அவர்கள் பூரண நலம்பெற்று, பத்திரிகை ,கலை இலக்கியத்துறையில் தொடர்ந்து பிரகாசிக்க வேண்டுமென இலக்கிய நெஞ்சங்கள் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

தமிழன் பத்திரிகை
**25.12.2022**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

kல்முனைப் பிரதேசத்தில் வாழும் மூத்த படைப்பாளி

# பல்துறை ஆளுமை எஸ். முத்துமீரான்

*0768150869*



கல்முனைப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த கலை இலக்கிய ஆளுமை எஸ். முத்துமீரான். இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட பல்துறைப் படைப்பாளி ,

1957ல் தனது 16 வது வயதில் இலங்கை வானொலியில் நாடக ஆசிரியராக கலையுலகப் பிரவேசம் பெற்றவர்,

ஐந்து சிறுகதை நூல்கள்,ஆறு நாட்டாரியல் தொகுப்பு,ஆய்வு நூல்கள், மூன்று கவிதை நூல்கள், இரண்டு உருவகைக் கதை நூல்கள்,ஒரு நாடகத் தொகுப்பு என்பவை உள்ளடங்கலாக 20 நூல்களை இன்று வரை இலக்கிய உலகத்திற்குத் தந்திருப்பவர்,

தன்னை ஒரு கிராமத்தான்,நாட்டுப்புறத்தான் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்பட்டுக் கொள்ளும் முத்துமீரான் கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பட்டதாரியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமாவார்.

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலான கலை இலக்கியப் பரிச்சயமுடைய இவர், ஈழத்துப் படைப்பாளர்களில் தனித்துவ அடையாளம் பெற்றிருப்பவர். அன்றாடம் நாம் காணும் காட்சிகள், பழகும் மாந்தர்கள் நமது வாழ்வு என்பவற்றை தனது படைப்புகளில் கச்சிதமாகக் கொண்டு வருபவர்,

கிராமிய மண் வளம்,பேச்சுமொழி என்பவற்றை அப்பி வருபவை அவரின் படைப்புக்கள். நமது பண்பாட்டுக் கோலங்களை அவரின் சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், என்பவற்றில் நாம் தரிசிக்கலாம். அவரின் படைப்புகள் யதார்த்தத்திற்கு மிக நெருக்கமானவை.

ஏனைய எழுத்தாளர்களிடமிருந்து முத்துமீரானை வேறுபடுத்திக் காட்டுவது, அவருடைய நாட்டாரியல் செயற்பாடுகள்தான்.

எஸ். முத்துமீரான்
கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியக் கவியமுதம்
கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள்
இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பழமொழிகள்
இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள்
இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் வாய் மொழிக் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கை கிராமத்து முஸ்லிம்களின் பூர்வீகமும் - வாழ்வும் வாழ்வாதாரங்களும் என்ற நாட்டாரியல் ஆய்வுகள் மூலம் தமிழ் நாட்டிலும் பிரபலம் பெற்றிருக்கிறார். அங்கு, அவருடைய நூல்கள் பல்கலைக் கழகங்களில் உஷாத் துணை நூல்களாகப் பயன்படுகின்றன. தமிழ்நாட்டிலும் பேராசிரியர்கள், கவிஞர்களோடு நட்புறவைப் பேணி வருகின்றார். இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கின்றார்- மாநாட்டு நிகழ்ச்சிகளில் தலைமை ஏற்கின்றார்.

அவருடைய சிறுகதைத் தொகுப்புகள் கூட அவரின் நாட்டாரியல் ஈடுபாட்டை நிரூபிக்கும். கக்கக் கனிய, என்னடா குலமும் கோத்திரமும், முதியன் கண்டு தயிரு, சட்டத்துர கொதறத்த என்னெண்டு செல்ற,பேத்த மீன் போன்ற சிறுகதைத் தலைப்புகள் அவரின் நாட்டாரியல் பிரக்ஞையை தெளிவுபடுத்தும்.

ஊடக வசதிகள் குறைந்திருந்த அந்தக் காலத்தில், முத்துமீரானின் வானொலி நாடகங்கள் கிராமியப் பேச்சுமொழிக்காகவும், தொனிக்கும் கிராமிய வாழ்வியலுக்காகவும் நேயர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததை திறனாய்வாளர்கள் எடுத்துக் காட்டுவர்.

கிழக்கு மாகாணம் அம்பாரை மாவட்டத்தின் நிந்தவூர் மண்ணின் மைந்தனான முத்துமீரான்,கலை இலக்கியப் பணிக்காக பரிசுகள் பட்டங்கள் என்று நிறையவே பெற்றிருக்கின்றார்.

- கலாபூஷண விருது,
- கலாசார அமைச்சின் இலக்கிய வேந்தன் விருது
- கொடகே சாஹித்ய வாழ்நாள் சாதனையாளர் விருது
- வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் நூல்களுக்கான சாஹித்ய விருது

என்பன அவற்றுள் சில.

மண்வளச் சொற்கள், கிராமியம் குறித்துப் பேசுபவர்கள் முத்து மீரானைத் தவிர்த்துவிட்டுப் பேச முடியாதவாறு இலக்கிய உலகில் சாதனைகளைப் புரிந்திருப்பவர் அவர்.

மண்ணும் மக்களும் கொண்டாடத் தக்க மூத்த கலைஞர் முத்துமீரான் சென்ற **31-05** ல் **83** அகவையை நிறைவு செய்தார். இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்துடன் அவர் வாழ்ந்து கலை இலக்கியப் பணிபுரிய வேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
**02.10.2022**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் நவீன கவிதை முன்னோடிகளில் முக்கியமானவர்

## மூத்த கவிஞர் மு. சடாட்சரன்

0771341055



ஈழத்துக் கவிஞர்களில் முக்கிய மானவராகவும்,கல்முனைப் பிரதேச கவிதை வளர்ச்சிக்கு வழிகோலியாகவும் பார்க்கப்படுபவர் கவிஞர் நீலாவணன் . கல்முனைப் பிரதேசத்தின் கவிதைப் பட்டாளத்தின் தளபதியாக அவர் பார்க்கப்பட்டார்.1950 களில் இலக்கியப் பிரவேசம் பெற்ற அவருடைய இலக்கியப் பண்ணையில் வளர்ந்தவர்கள் பலர்.

மருதூர்க் கொத்தன்,சண்முகம் சிவலிங்கம், மருதுர்க்கனி,பாண்டியூரன், எம்.ஏ. நுஃமான், ஜீவா ஜீவரெத்தினம்...........,என்று அந்தப் பட்டியல் நீளும்.

அந்த இலக்கியப் பண்ணையில் நீலாவணனோடு மிக நெருங்கியவராக இணைந்திருந்து செயற்பட்டதனூடாகத் தன்னையும் வளர்த்துக் கொண்டவர் கவிஞர் மு. சடாட்சரன்.

1959 ல் இலக்கிய உலகில் நுழைந்து கவிதை,சிறுகதை,பேச்சு,நாடகம், நடிப்பு என்று பல்வேறு துறைகளிலும் ஒரு தனித்துவப் பாணியில் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவர்.

கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்தின் செயலாளராக இருந்து கிழக்கிலங்கையின் முதலாவது இலக்கியச் சஞ்சிகையாக "பாடும் மீனை"க் கொண்டு வருவதில் முன்னின்றவர். (அப்போது,கழகத்தின் தலைவர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம். சஞ்சிகை ஆசிரியர் கவிஞர் நீலாவணன்.)

அறுபது ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய அனுபவம், மரபுசார் இலக்கியப் புலமை, புதிய வடிவங்களின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு செப்பமாகக் கையாளத் தக்க ஆற்றல், ஆளுமை என்பன வாய்க்கப் பெற்றவர் .

"மேட்டு நிலம்"(2009)சிறு கதைத் தொகுதி,
பாதை புதிது(2012) கவிதைத் தொகுதி
என்பவற்றை இலக்கிய உலகிற்கு தந்திருப்பவர் .

- அரச சாஹித்ய மண்டல விருது,
- கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின இலக்கிய நூல் விருது
- கொடகே நிறுவனத்தின் சாஹித்ய விருது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கம்பன் கழகத்தின் மகரந்தச் சிறகு விருது,
- அரசு வழங்கும் கலை இலக்கிய உயர்விருதான கலாபூஷணம் விருது

என்று பல விருதுகளைப் பெற்றிருப்பவர்,

தனது படைப்புக்களில் வாழ்வியலை,சமூக மறுமலர்ச்சியை,மானுட நேயத்தை, ஒருமைப்பாட்டை, போரியல் சூழலை கலைநயத்தோடு தருபவர். இவருடைய கவிதைகள் குறியீட்டுப் பாங்கில், படிமச் செழிப்போடு அமைந்து வருபவை யெனத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுவர்.இயல்பான மொழிநடை அவருடையது. கலைமகளில் வெளிவந்த "பாதை புதிது" என்ற தலைப்பில் அமைந்த

"போகின்றேன் பாதை புதிது
வழியெங்கும் வாகை மலர்கள்...
வளைந்த கதிர்வயல்கள்..
தாகம் அகற்றும் தனி இன்பத் தேன் கனிகள்..
வேகம்.."

என்று தொடரும் கவிதை அவருடைய கவிதைச் செல் நெறியை வெளிச்சமிடும் கவிதையாக குறியீட்டுக் கவிதைக்கு உதாரணமாகக் காட்டப் படுவதுண்டு.

மு.சடாட்சரன் மூத்த கவிஞர் மட்டுமல்ல நல்ல மனிதர். ஆர்ப்பாட்டமில்லாதவர். திறமைகளை மதிப்பவர். இளைய தலைமுறை எழுத்தாளர்களை வழிப்படுத்துவதிலும் உற்சாகம் வழங்குவதிலும் தயக்கம் காட்டாதவர் அவருடைய இலக்கிய உரைகளும் கம்பீரக் குரலும் இலக்கிய நேசர்களை ஆகர்ஷிப்பவை. இப்பிரதேசத்தில் வெளியிடப்படும் நூல்களுக்கு மதிப்புரைகள் அணிந்துரைகள் வழங்கி அவற்றுக்கு கனதியைத் தருபவர்.

இலங்கையின் அம்பாரை மாவட்டத்தில் கல்முனையில் முருகேசு- கனகம்மா தம்பதியினரின் புத்திரனாக **06-05-1940**ல் பிறந்த கலாபூஷணம் சடாட்சரன் அவர்கள்,பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றி,பின்னர் கல்வி நிர்வாக சேவைப் பரீடசையில் சித்தியடைந்து உதவிக் கல்விப் பணிப்பாளராகக் தரமுயர்ந்து ஓய்வு பெற்றவர்.

பெரிய நீலாவணையில் வாழ்ந்து வரும் கல்வியியலாளர்,மக்கள் கவிஞர் சடாட்சரன் அவர்களின் அமைதியானதும் காத்திரமானதுமான இலக்கியப்பயணம் இன்னும் பல்லாண்டுகள் தொடரவேண்டும் இறைவன் அவருக்கான உடல்,உள சௌக்கியத்தையும், வளங்களையும் வழங்கவேண்டுமென்பதே கலை,இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
**09.10.2022**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் நவீன கதை சொல்லி

## எஸ்.எல்.எம். ஹனீபா

0772529899



ஈழத்துச் சிறுகதை உலகில் மக்கத்துச் சால்வையோடு நின்று மணம் பரப்புபவர், கலைப் பெறுமதி மிக்க சிறந்த கதைகளைத் தந்து மதிப்புப் பெற்றிருப்பவர், இலக்கிய உலகின் நவீன கதை சொல்லியாக எடுத்துக் காட்டப்படுபவர்,

"எஸ் .பொ" என்ற ஈழத்தின் மூத்த சிறுகதை ஆளுமை எஸ். பொன்னுத்துரையின் இலக்கிய வாரிசாக, எழுத்து வட்டாரத்தால் குறித்துரைக்கப்படுபவர் -எஸ்.எல்.எம். ஹனீபா.

எஸ் எல் எம் மோடு பேசிக் கொண்டிருப்பதே ஒரு தனிச் சுகம். அங்கதச் சுவையோடு பேசுபவர், வயது வித்தியாசமின்றி மூத்த -இளைய தலை முறை எழுத்தாளர்களோடு நட்புறவைப் பேணுபவர்.. அவரின் தீவிர வாசிப்பும், எழுத்துலக அனுபவமும் அவருடைய உரையாடல்களில் பளிச்சிடும். இயற்கையை இரசிப்பவர் .மண்ணை நேசித்து, ஒரு கிராமத்தானாக, கிராமிய மொழிவளச் சொற்களில் உரையாடி மகிழ்பவர். அவரை ஒரு நவீன சிறுகதை எழுத்தாளர் என்பதைவிட,ஒரு "நவீன கதை சொல்லி" என்பதே மிகப் பொருத்தம் என்பர். ஏனெனில் அவர் எழுதிய கதைகளை விட அவ்வப்போது சொல்கின்ற கதைகள் அதிகம். அதனாலேயே அவரைச்சுற்றி ஒரு இரசிகர் கூட்டம் எப்போதும் இருக்கும்.

மனித நேயம், வறுமை, சுரண்டல், பாலியல், அரசியல், சமூக சீர்திருத்தம்,தனிமனித பண்புகள் குறித்த மையப்பொருட்களில் கதையாடல்களை எள்ளலோடு நகர்த்திக் செல்பவர் அவர்.

"ராதா" என்ற சினிமா சார்ந்த பத்திரிகையில் "நெஞ்சின் நினைவினிலே" என்ற சிறுகதை மூலம் **1960** களின் பிற்பகுதியில் எழுத்துலகப் பிரவேசம் பெற்றவர். எனினும், "இன்ஸான்" பண்ணை எழுத்தாளராகவே எஸ்.எல்.எம். பார்க்கப்படு கின்றார். சிலர் அவரை "இளம்பிறை" யில் வளர்ந்தவராகக் கூறுவதுமுண்டு.

"தினபதி"யின் தினம் ஒரு சிறுகதைத் திட்டத்திலும் அவர் எழுதினார். அத்திட்டத்தின் முதல் மாதத்தில் இரண்டு சிறுகதைகளை எழுதியவர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

ஓடையூர் எஸ். ஹனீபா என்ற புனை பெயரிலும் எழுதிய எஸ் எல்.எம் ஹனீபாவின் ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி,சுதந்திரன்,சிந்தாமணி,சுடர், பாமிஸ், பூரணி, சரிநிகர்,தாரகை,தென்றல் போன்ற இதழ்களிலும் வெளிவந்தன ஆறு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அவரின் எழுத்து ஊழியத்தில் மூன்று நூல்களே இலக்கிய உலகுக்கு கிட்டின.

1. மக்கத்துச் சால்வை -சிறுகதை (1992)
2. அவளும் ஒரு பாற்கடல் சிறு கதை(2007) காலச் சுவடு வெளியீடு
3. எண்டெ சீவியத்திலிருந்து.- அனுபவக் குறிப்புகள் (2023) கஸல் பதிப்பக வெளியீடு.

அவர் வழங்கியுள்ள இரண்டு சிறுகதைத் தொகுதிகளிலும் எண்ணிக்கையில் குறைவான 24 சிறுகதைகளே உள்ளன.

"அதிக வாசிப்பே என்னை அதிகம் எழுதுவதை விட்டும் தூரமாக்கியது. நல்ல படைப்பை வியந்து வியந்தே எனது காலமும் போய்விட்டது. ஒரு சிறந்த நூலைப் படித்த கையோடு அது பற்றி உரையாடுவதற்கும் நண்பர்கள் இல்லாத சூழலில் வாழ்வதும் கொடுமை" என்று குறிப்பிடுவார் ஹனிபா .

"ஹனிபா அதிகம் எழுதா விட்டாலும் இலக்கியத்தைத் தன்னுள் எப்போதும் சுமந்து திரிபவர். விரிவான வாசகர்,ஒரு தேர்ந்த கலைஞர். ஹனீபாவுடன் பழகிய யாரும் அவரை இலகுவில் மறக்க மாட்டார்கள். வயது வேறுபாடின்றி,எல்லோருடனும் அன்பாகப் பழகக் கூடியவர். சுவையான உரையாடி.கல்மிஷம் இல்லாமல் எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் தன் மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசக்கூடியவர். கேட்பவருக்குச் சங்கடமாக இருந்தாலும் அது பற்றி அவர் கவலைப்படுவதில்லை. இந்த வெளிப்படைத்தன்மை அவருக்குப் பல நண்பர்களையும் சில எதிரிகளையும் பெற்றுத் தந்திருக்கின்றது .

குறைவாக எழுதிய போதிலும் வாழைச்சேனைப் பிரதேசத்து முஸ்லிம் சமூகத்தின் ஒரு வெட்டு முகத்தோற்றத்தை அவரின் கதைகளில் தரிசிக்க கூடியதாக இருக்கும். கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்வை புனைவு இலக்கியத்துள், கொண்டு வந்த மிகச்சில படைப்பாளிகளில் ஹனீபா முக்கிய இடம்பெறுகிறார். "என்று அவருடைய எழுத்தாற்றல் பற்றிக் குறிப்பிடுவார் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்.

"தள்ளம்பாடாத" ஒரு நிதான வெறி ஹனிபாவின் கதைகளில் மண்டிக் கிடக்கிறது. மட்டக்களப்பு மாநிலத்தின் வாழ்க்கையை முழுமையாக அல்லாவிட்டாலும் வலு நேர்மையாகத் தரிசிக்க விழையும் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுதான். தனித்தனி மனிதனில் பொதிந்துள்ள மானுஷத்தின் தேடலிலே இலக்கியம் அவாவும் சமத்துவத்தை தரிசிக்கலாம் என்கிற பிரக்ஞையுடன் அமைந்துள்ள வார்ப்புகளும் இதில் உண்டு. இந்த ஆரோக்கியமான பிரக்ஞையுடன் அமைந்துள்ள ஹனிபாவின் எழுத்து ஆற்றலின் Plus Point .ஈழத்து தமிழ் சிறுகதை வளம் முஸ்லிம் கலைஞருடைய பங்களிப்பையும் உள்ளடக்கியதுதான் என்கிற உண்மையை உரத்து ஒலிப்பதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கத்துச் சால்வை நிகர்த்த ஒரு சிறுகதைத் தொகுதி இதுவரை வெளிவந்திலது உண்மை: வெறும் புகழ்ச்சி அல்ல". என்று ஹனீபாவின் மக்கத்துச் சால்வை குறித்து சான்றுரைப்பார் மூத்த எழுத்தாளர் எஸ்.பொ.

தனது படைப்புகளுக்காக விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருப்பவர் எஸ் எல் எம்.

- அரச சாஹித்ய விருது(**1992**)
- லில்லி தேவ சிகாமணி விருது(**1992**)
- மாவட்ட இலக்கிய விழா விருது.
- தோப்பு இலக்கியவட்ட மொழி விருது
- வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது
  என்பன அவற்றில் முக்கியமானவை.

ஜீவநதி, எஸ்.எல் எம் ஹனீபா சிறப்பிதழை,( மாசி **2023**)வெளியிட்டு அவரைக் கௌரவித்துள்ளது. அவரின் இலக்கிய நண்பர்கள் "மக்கத்துச் சால்வை மண்ணும் மணமும்" என்ற பெயரில் அவரின் பணிகளை ஆவணப்படுத்தி மலர் வெளியிட்டு ள்ளனர். அவருடைய சிறு கதைகளை நிலார் என் காசீம் சிங்கள மொழியிலும் தந்துள்ளார்

தமிழகத்திலும் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலரை நண்பர்களாகப் பெற்றுள்ளார் எஸ்எல்எம்.அவர்களோடு நெருக்கமானஉறவைப் பேணுகிறார். சுந்தரராமசாமி, ஜெய மோகன், எஸ்.ரா போன்ற பலர் அவரின் கலை இலக்கியத் தொடர்பு நண்பர்கள்.

எழுத்தாளராக, அரசியல் வாதியாக,விளையாட்டு வீரராக கீர்த்தி பெற்றிருப்பவர் எஸ்எல்.எம். ஹனீபா. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக வடக்கு- கிழக்கு மாகாண சபைப் பிரதிநிதியாக இருந்து மக்கள் தொண்டாற்றியவர் .தடகள விளையாட்டு வீரராக பல மாவட்டப் போட்டிகளில் வெற்றிக் கனிகளைச் சுவைத்தவர்.

எஸ்எல்எம் ஹனீபா வாழைச்சேனை மீராவோடையில் **1946**ல் பிறந்தவர். தந்தை - தம்பிசாய்வு சின்னலெவ்வை, தாய்- முகைதீன் பாவா கலந்தர் உம்மா, தொழில்- கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் மனைவி- முகம்மது உசைன் முகம்மது பாத்து. அவருக்கு 3 பிள்ளைகள்.

பவள விழாக் கண்ட எஸ்எல்எம் உடல் நலம் பெற்று இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும். அவர் சொல்லும் யானை பிடிக்கும் கதையை நாவலாக்கித் தரவேண்டும் அமுத விழா, நூற்றாண்டு விழாக் கண்டு அவர் தொடரவேண்டு மென்பதே எங்கள் பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
**25.06.2023**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடறிந்த தமிழ்ப் புலமை, நவீன இலக்கிய ஆளுமை

## பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்

*0774233163*



தமிழ் அறிஞர், இலக்கிய வித்தகர், இலக்கண விற்பன்னர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், கதைஞர், வெளியீட்டாளர் என்று தமிழ் கூறும் நல்லுல கெங்கும் அறியப்பட்டிருப்பவர், கல்வியியலாளர்கள் , மாணவர்கள், படைப் பாளர்கள், வாசகர்கள் என்ற பல தரத்தாராலும் மதிக்கப்படுபவர்,

முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்க அவரின் கவிதை, நெடுங்கவிதை, கட்டுரை, மொழி பெயர்ப்பு என்பவற்றினூடாகவும், ஆய்வுகளினூடாகவும், அவரோடு நேரடித் தொடர்பு இல்லாதோராலும் இலக்கிய வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பவர், தனது மொழிபெயர்ப்புக் கவிதைகளினூடாக உலகப் புரட்சிகரக் கவிதைகளையும், கவிஞர்களையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தி வந்திருப்பவர்,

மொழிபெயர்ப்புக் கவிதைகளை வெறும் மொழிபெயர்ப்பாகவன்றி, மூலக் கவிதைகளின் கவித்துவம் சிதைவு படாதவாறு வழங்கியதன் மூலம் கவிதை வாசகர்களைப் பெரிதும் ஈர்த்திருப்பவர், வெளியீட்டுத் துறையிலும் புதிய வரலாறு படைத்திருப்பவர்.கவிஞன் என்ற சஞ்சிகை வெளியீட்டால் நவீன இலக்கிய சிந்தனையை விதைத்திருப்பவர்,முன்னோடிக் கவிஞர்களின் (மஹாகவி போன்ற) நூல்களை வெளியிட்டு, அவர்களின் இலக்கிய அந்தஸ்தை இனம்காட்டி வருபவர்,

கவிதை,கவியரங்கு தொடர்பாக புதிய திருப்பங்களை ( கவிதையை பேச்சோசைப் பண்புக்கு மாற்றுவதிலும், கவியரங்குக்குப் பதிலாக கவிதா நிகழ்வு) ஏற்படுத்துவதில் முன்னிற்பவர்- பேராசிரியர் எம்.ஏ.நுஃமான். இலங்கையில் கலை இலக்கியத் துறையில் தனித்துவ முத்திரை பதித்திருக்கும் கல்முனைப் பிரதேசத்தில் பிறந்தவர் அவர். தமிழ் கலை இலக்கிய முயற்சியில் நீலாவணன் தலைமையில் 1960 களில் இயங்கிய, மருதூர்க் கொத்தன், பாண்டியூரன், மு.சடாட்சரன், மருதூர்க்கனி ,சண்முகம் சிவலிங்கம் போன்ற இலக்கியவாதிகளை உறுப்பினர்களாகக் கொண்டிருந்த கல்முனைத் தமிழ்ச் சங்கத்தோடு இணைந்திருந்து இலக்கியம் படைத்தவர். கவிஞர் நீலாவணனை இலக்கிய வழிகாட்டியாகக் கொள்பவர்,

“உன்னிடம் வருகையில்
நான் ஒரு சிறுவன்
கண் விடுக்காத
பூனைக்குட்டி போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் அறியா
ஒரு பாலகனாய்
உன்னிடம் வந்தேன்".

என்று தன் இலக்கிய வாழ்வின் தொடக்கப்புள்ளியை,நீலாவணன் என்ற இலக்கிய வழிகாட்டியால், தான் புடமிடப்பட்டதை எடுத்துச் சொல்வார் எம்.ஏ.நுஃமான்.

பேராசிரியராக ஆய்வாளராக இன்று பெருமதிப்புப் பெற்றிருக்கும் அவர், கவிஞராக கதைஞராக- படைப்பிலக்கியவாதியாக அறியப்பட்டிருந்தவர். பேச்சோசைப் பண்பும்,கவித்துவ அழகியலும் கருத்துச் செறிவும் மிக்க நல்ல கவிதைகளின் சொந்தக்காரராகத் திகழ்ந்தவர். அவரை, **1960,1970** களில் நவீன கவிதை வளர்ச்சியில் முன்னிலை வகித்த கவிஞர்களில் முக்கியமானவராக அடையாளப்படுத்துவார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.ஏ.நுஃமான் என்று ஆய்வுலகம் வரிசைப்படுத்திப் பார்க்கின்ற விமர்சகர்களில் ஒருவர் அவர். முற்போக்கு மார்க்ஸிய சிந்தனை இலக்கிய ஆய்வாளராக அவரை இலக்கிய உலகம் அடையாளப் படுத்தும். ஆயினும், ஒரு மார்க்சிய விமர்சகன் என்பதைவிட நடுநிலையான விமர்சகன் என்ற அடையாளத்தையே விரும்புபவர் எம்.ஏ. நுஃமான்.

"என்னை மார்க்சிய விமர்சகன் என்பதைவிட, ஒரு நடுநிலையான விமர்சகன் என்ற அடையாளத்தையே நான் பெரிதும் விரும்புவேன். மார்க்சிய விமர்சனத்தில் மேலோங்கி இருந்த வரட்டுப்போக்கை நான் தீவிரமாக விமர்சித்திருக்கிறேன். 'மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்' என்ற எனது நூல் அதன் விளைவுதான். இலக்கியம் பற்றிய விமர்சனப் பார்வைகளும், கொள்கைகளும் பல. அதில் ஒன்றுதான் மார்க்சியப் பார்வை. இலக்கியத்தின் சமூக வேர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததில், இலக்கியத்தை ஒரு உன்னத நிகழ்வாக அன்றி ஒரு சமூக உற்பத்தியாக (Social product) நிறுவியதில் மார்க்சியத்தின் பங்கு முக்கியமானது. ஆயினும் இலக்கியத்தில் எல்லா அம்சங்களையும் அதனால் விளக்கிவிட முடியும் என்று நான் நம்பவில்லை". என்று கூறுவார் அவர்.

படைப்பிலக்கிய வாதியாக இருந்த எம்.ஏ.நுஃமான் பிற்காலத்தில் ஆய்வு ,விமர்சனம் என்பவற்றிலேயே அதிக கரிசனை செலுத்தினார். அவருடைய ஆய்வுத் தேடல்களால் தமிழ் இலக்கிய உலகம் பிரகாசித்த போதும்,ஒரு சிறந்த படைப்பிலக்கிய வாதியை இழந்தே, ஒரு விமர்சகனை உருவாக்க முடிந்திருப்பதாக நுஃமானின் படைப் பிலக்கியத்தை நேசிப்பவர்கள் வருத்தப்படுவதுண்டு. இந்த வருத்தம் பேராசிரிய ருக்கும் இருந்ததை அவரின் நேர்காணல்களில் இருந்து அறிய முடியும். எழுத்தாளன் அல்லது படைப்பாளியாக இருப்பதையே அவர் பெரிதும் விரும்பினார்.

"எழுத்தாளன் அல்லது படைப்பாளி என்ற அடையாளத்தையே எல்லாவற்றிலும் முக்கியமானதாக நான் கருதுகின்றேன். கவிஞன், சிறுகதை ஆசிரியன் என்ற வகையில்தான் நான் எழுத்துத்துறைக்கு அறிமுகமானேன். **1960, 70**-களில் ஈழத்துக் கவிதைத் துறையில் நானும் குறிப்பிடத்தக்க சில படைப்புகளைச் செய்திருக்கின்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் இல்லையென்றாலும் சில சிறுகதைகளை எழுதியிருக்கிறேன். ஆனால் 1980-களில் ஆராய்ச்சி, விமர்சனத் துறைகளில் எனது ஈடுபாடு படைப்பாளி என்ற அடையாளத்தை மெல்ல விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அது எனக்குக் கவலைதரும் ஒரு விடயம்தான்" என்பார் பேராசிரியர் எம். ஏ. நுஃமான். எனினும், ஒருபடைப்பிலக்கிய வாதியாக அவர் தந்திருக்கின்ற கவிதை நூல்கள் நவீன கவிதை,பேச்சோசைப் பண்பு என்பவற்றை எடுத்துக் காட்டுவனவாக இலக்கிய உலகில் தடம் பதித்திருப்பதை திறனாய்வாளர்கள் எடுத்துரைப்பர்.

இலக்கிய வல்லுநராக மதிப்புப் பெற்றிருக்கும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான், கவிதை, ஆய்வு, இலக்கணம், மொழிபெயர்ப்பு, இலக்கிய வரலாறு கலாசாரம் ,என்று பல்வேறு துறைகளில் நூல்களைத் தந்திருக்கின்றார். ஆங்கிலத்திலும் அவரின் மிக முக்கிய நூல்கள் வெளிவந்துள்ளன.

**கவிதை**

- மழைநாட்கள் வரும், (அன்னம்,சிவகங்கை 1983)
- அழியா நிழல்கள், நர்மதா, 1982
- தாத்தாமாரும் பேரர்களும் - நெடுங்கவிதைகள், கல்முனை,1977
- பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், க்ரியா, 1984

**மொழிபெயர்ப்புக் கவிதைகள்**

- பாலஸ்தீனக்கவிதைகள், முப்பது கவிஞர்களின் 109 கவிதைகள், அடையாளம், 2008,
- மஹ்மூத் தர்விஸ் கவிதைகள், அடையாளம், 2008
- பாலஸ்தீனக் கவிதைகள், 15 கவிஞர்களின் 71 கவிதைகள், மூன்றாவது மனிதன் வெளியீடு,2000,
- காற்றில் மிதக்கும் சொற்கள் ( மலாய் மொழி கவிதைகள்)
- இரவின் குரல் ( இந்தோனேசிய மொழிக் கவிதைகள் )

**மொழிபெயர்ப்புக் கட்டுரை நூல்கள்**

- கடப்பாடு அல்லது சுயாதீனம், இஸ்லாமியப் பெண்கள் பற்றிய சட்டப் பிரச்சினைகள், கொழும்பு, 2004
- இனமுரண்பாடும் வரலாற்றியலும் கொழும்பு, 2000
- முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத்துவமும், முஸ்லிம் பெண்கள் ஆய்வு மற்றும் செயல்பாட்டு அமைப்பு, கொழும்பு, 1999

**இலக்கியவிமர்சனம்**

- மொழியும் இலக்கியமும் (காலச்சுவடு,2006)
- திறனாய்வுக் கட்டுரைகள் (அன்னம்,சிவகங்கை 1986)
- சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும்
- பாரதியின் மொழிச்சிந்தனைகள்: சௌத் விஷன்,சென்னை,1999
- மொழியும் இலக்கியமும்
- மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் (அன்னம்,சிவகங்கை,1987)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கண நூல்கள்**

- *இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம், இணைப்பதிப்பாசிரியர், 1979*
- *ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ் மொழி கற்பித்தல்*

**இலக்கியவரலாறு**

- *இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம், இணைப்பதிப்பாசிரியர், 1979*

**தொகுப்பாசிரியர்**

- *மஹாகவி கவிதைகள், (தொகுப்பாசிரியர், அன்னம், 1984 )*
- *மஹாகவியின் வீடும் வெளியும், கல்முனை வாசகர் வட்டம், 1973*
- *மஹாகவியின் கோடை, கல்முனை வாசகர் வட்டம், 1970.*

**ஆங்கிலம்**

- A Contrastive Grammar of Tamil and Sinhala Noun Phrase
- Sri Lankan Muslims - Ethnic Identity within Cultural Diversity
- Understanding Sri Lankan Muslim Identity.

மொழியியலாளராக, இலக்கியவாதியாக அவரின் பார்வை வித்தியாசமனது. புதிய கருத்துரு வாக்கங்களைத் இலக்கியப் பரப்புக்குத் தருபவர் அவர். மொழிபற்றிய பார்வை அறிவு சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பதும் உணர்ச்சி சார்ந்தததாக அமையக்கூடாது என்பதும் அவரின் கருத்து. அவ்வாறே, இலக்கியம் என்பது தனித்து தனிமனித அனுபவம் என்பதையோ, சமூகசீர்திருத்தம் கருதியது என்பதையோ, வெறும் புனைவு என்பதையோ ஏற்காதவர் அவர்.

"அனுபவம் மட்டுமே இலக்கியப் படைப்புக்கு உரியது என்னும் போது, அது தனிமனித அனுபவத்தையே பிரதானப்படுத்தி சமூக அனுபவத்தைப் புறக்கணித்துவிடுகின்றது. இங்கு இலக்கியம் சமூகப் பிரச்சனைகளில் இருந்து விடுபட்ட ஒன்றாகிவிடுகின்றது. பதிலாக, சமூகச் சீர்திருத்தத்துக்காகவே படைப்பு என்று கூறும்போது இலக்கியம் மனித வாழ்வின் ஏனைய அம்சங்களை விட்டும் விலகிவிடுகின்றது. மறுபுறத்தில் படைப்பை ஒரு புனைவாக மட்டுமே அணுகுவோர் இலக்கியத்தை ஒரு சொல்வித்தையாகவே மாற்றிவிடுகின்றனர். கோணங்கியின் பிற்கால எழுத்துக்கள் இத்தகைய சொல்வித்தைக்குச் சிறந்த உதாரணம் என்பேன். இலக்கியம் பற்றிய இத்தகைய பிளவுண்ட அணுகுமுறைகளில் எனக்கு உடன்பாடு இல்லை. இலக்கியத்தை வெறும் புனைவாக, சொல்வித்தையாக நான் கருதவில்லை. என்னைப் பொறுத்தவரை தனி மனித அனுபவத்தையும் சமூக அனுபவத்தையும் பிரித்து நோக்க முடியாது. படைப்பாளி சமூக வேர்களை அறுத்துக் கொண்டு புனைவு என்னும் வித்தையுள் புதையுண்டு போகக் கூடாது. ஒரு படைப்பு, வாழ்க்கை பற்றிய - மனித அனுபவத்தின் அர்த்தம் பற்றிய கண்டுபிடிப்பாக, வாழ்க்கைபற்றிய நமது புரிதலை வளப்படுத்துவதாக அமைய வேண்டும். இத்தகைய படைப்புகளே சிறந்த படைப்புகள் என்பேன்" என்று அவர் தெரிவித்துள்ள கருத்துகள் இலக்கியம் பற்றிய விசாலமான பார்வையைத் தருபவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு தசாப்தங்களுக்கு மேலான இலக்கிய அனுபவமும்,எழுத்து, மொழி சார்ந்த ஆழமான அறிவும், ஆற்றலும் நிறைந்துள்ளவர் பேராசிரியர் நுஃமான். இலக்கிய உலகில் சாதனை புரிந்தவராக அவர் பார்க்கப்படுகின்ற போதும்,அவற்றிற்காக விருதுகளைப் பெற்றுக்கொள்ள விரும்பாதவர்.தனது இலக்கியப் பங்களிப்புக்காக "விளக்கு விருது" தவிர வேறெந்த விருதுகளையும் அவர் பெற்றுக் கொள்ளவில்லை யென்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே. விருதுகள் பற்றிய நல்லெண்ணம் அவருக்கு இல்லையென்பதை 2011ல் விளக்கு விருது விழாவில் அவர் ஆற்றிய உரை எடுத்துக் கூறும்.

பேராசிரியர் நுஃமான் ஆகஸ்ட் 10, 1944-ல் மக்புல் ஆலிமுக்கும் சுலைஹா உம்மாவிற்கும் மகனாக கல்முனைக்குடியில் பிறந்தவர். கல்முனைக்குடி அரசினர் ஆண்கள் பாடசாலை, கல்முனை உவெசுலி உயர்தரப் பாடசாலை என்பவற்றில் கற்றவர். அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்று 15 ஆண்டுகள் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்பு,யாழ்ப்பாண வளாகங்களில் இளங்கலை மொழியியல்,(1973). முதுகலைத் தமிழ் இலக்கியப் பாடம்(1982) பயின்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் முனைவர் பட்ட ஆய்வைப் பேராசிரியர் குமாரசாமி இராசா அவர்களின் மேற்பார்வையில் மூன்றாண்டுகள் தொடர்ந்து நிறைவு செய்தவர்.

தமிழ் விரிவுரையாளராகவும்(1976-1982), மொழியியல் விரிவுரையாளராகவும யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி,1991ல் முதுநிலை விரிவுரை யாளராகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியேற்று 2001ல் பேராசிரியர் நிலைக்கு உயர்ந்தவர்.

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகவும் ஓராண்டுப் பணிபுரிந்தவர் (1988). இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,(1999-2000), மலேயாப் பல்கலைக்கழகம் (2007-2008) என்பவற்றில் வருகை தரு விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர்.

இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பில் பல்துறையிலும் தலைமை தாங்கக் கூடியவராக மதிப்புப் பெற்றிருப்பவர் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான். அண்மையில் அவர் தனது 79 வது அகவையை நிறைவு செய்துள்ளார். தமிழ் இலக்கிய நெஞ்சங்கள் சார்பாக அவருக்கு நமது வாழ்த்துகள்.இன்னும் பல்லாண்டு காலம் தேக நலத்தோடு அவர் வாழவேண்டும், இலக்கிய நெஞ்சங்கள் பயன் பெறத் தக்கதாய் இன்னும் பல நூல்களை அவர் தரவேண்டு மென்பதே எமது பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
27.08.2023

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து தமிழ் இலக்கிய ஆய்வுகளில் பெரும் பங்காற்றி வரும்

## பேராசிரியர் செ. யோகராசா

0772343896



ஈழத்து இலக்கியப் பரப்பில் "கருணை யோகன்" என்ற புனை பெயரில் புகழ் பெற்றிருந்தவர் யாழ்ப்பாணம் கரணவாய் மண்ணின் மைந்தர் செல்லையா யோகராசா. **1960-1972** வரை அந்தப் புனைபெயரில் இயங்கிக் கவிதை கதைகளை எழுதி வந்த அவர், பின்னர் ஆய்வுத்துறையைத் தேர்ந்து கொண்டு தன் சொந்தப் பெயரில் எழுதத் தொடங்கினார். . நவீன தமிழ் இலக்கியம்,தமிழியல் ஆய்வு, ஈழத்து இலக்கியம், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், நாட்டாரியல், கல்வி என்று பலதுறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர் அவர்.

ஈழத்தில் ஆய்வுத் துறையில் பிரபலம் பெற்றுள்ள க.கைலசபதி, கா.சிவத்தம்பி ,எம்.ஏ. நுஃமான் ஆகியோர் வரிசையில் வைத்துப் பார்க்கப்படும் அவரின் ஆய்வுகள் படைப்பாளர்களாலும் மாணவர்களாலும் பெரிதும் மதிக்கப்படுபவை. வாசிப்பும் தேடலும், கல்வியும், "தகவற் களஞ்சியம்" என்ற புகழ் நாமத்தை அவருக்கு ஈட்டிக் கொடுத்துள்ளன. இலங்கையின் பலபாகங்களிலும் நடைபெறும் இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொண்டு,ஆய்வுரை செய்பவர், எழுத்தாளர்களின் நூல்களுக்குத் தனது முன்னுரைகளால் கவன ஈர்ப்பை ஏற்படுத்துபவர்.குறிப்புக்களை வழங்குபவர்.

சுறுசுறுப்பாக இயங்கும் இலக்கியத் தேனியாக இலங்கையின் பல பாகங்களையும் இலக்கியச் செயற்பாடுகளுக்காகச் சுற்றிவருபவர். பிரதேசவாதம்,சாதிமத வேறுபாடு என்பவை இம்மியும் சேராத,படைப் பு கருதிய-அதன் ஆழ அகலம் குறித்துப் பேசுகிற, காத்திரமான விமர்சகராகப் பார்க்கப்படுபவர். சர்வதேச இலக்கிய மாநாடுகளில் கலந்து கொண்டு,ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிப்பவர் .

அந்த வகையில் சிங்கப்பூர்,மலேசியா,இலண்டன் ,சுவிற்சலாந்து,பிரான்ஸ்,தமிழ்நாடு ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகளில் அவர் வாசித்த ஆய்வுக் கட்டுரைகள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன. அவருடைய வாசிப்பு ,இலக்கிய இயக்கம், ஆய்வு குறித்து அறிஞர்கள் பலரும் சிலாகித்துக் கூறுவர். "எங்காவது ஒருபுத்தகக் கடையில் புத்தகங்களை அளந்தபடி, அவற்றைத் தட்டிப் பார்த்தபடி ஒரு ஆள் நிற்கும் அவர்தான் யோகராசா" என்று பேராசிரியர் கைலாசபதியும்,

அவர் ஒரு புத்தகக் காவலர். ஓய்வு பெற்ற பின்பும் அவரின் ஆய்வுப்பணி தொடர்கிறது" என்று பேராசிரியர் சி. மௌனகுருவும், "பல்வேறு இலக்கிய முற்சிகளில் ஈடுபட்டு, கேட்டவுடன் தகவல்களைக் கரவாது தருபவர்" என்று பேராசிரியர் சி.தில்லை நாதனும், "நண்பர் யோகராசாவின் இலக்கிய ஆர்வம் பன்முகப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தின் மூலம் மூலை முடுக்குகளையெல்லாம் சளைக்காமல் துழாவுபவர். அறியப்படாதவற்றை அறிமுகப்படுத்துவதிலும் கவனிக்கப்படாதவற்றைக் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும் பெரிய ஆளுமைகளை விட புதிய இளைஞர்களின் ஆக்கங்களைக் கவனப்படுத்துவதிலும் அவர் அதிகம் அக்கறை காட்டுகின்றார். இவ்வகையில் அவருடைய பணி மிகுந்த முக்கியத்துவம் உடையது." என்று பேராசிரியர் எம்.ஏ. நுஃமானும்....., இன்னும் பல பேராசான்களும் அவருடைய எழுத்துப்பணி பற்றிச் சிலாகித்துக் கூறுவர்.

தமிழ் இலக்கிய ஆய்வுத்துறைக்கு செ.யோகராசா ஆற்றிய தொண்டு அளப்பரியது. இதுவரைக் கண்ணுக்கெட்டாத அல்லது பெரும்பாலும் ஆராயப்படாத விடயங்களைத் தேடிப் பிடித்து எழுதுபவர் செ.யோகராசா" என்று பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் குறிப்பிடுவார். செழிப்பு மிக்க பல நூல்களை அவர் நமக்குத் தந்துள்ளார். அவற்றில்,

1. ஈழத்து இலக்கியமும்,இதழியலும்
2. இலக்கியத் தேட்டம், ஈழத்து நவீன இலக்கியம்
3. ஈழத்து தமிழ் நாவல்
4. ஈழத்து முச்சந்தி இலக்கியம்
5. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
6. ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு
7. ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கலும்,பெண் ஆளுமைகளும்,
8. ஈழத்து நவீன கவிதை
9. இன்றைய இலக்கியங்களில்
   இதிகாசப் பெண் பாத்திரங்கள்,
10. ஈழத்துத் தமிழியல் சார் தமிழ் ஆய்விதழ்கள்
11. ஈழத்து நவீன இலக்கியங்கள்- படைப்பாளர்கள்- தடங்கள்(76 நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளின் தொகுப்பு) என்பன முக்கிய நூல்களாக அறிஞர் பெருமக்களால் எடுத்துக் காட்டப்படுவன.

பதிப்பாசிரியராகவும் தொகுப்பாசிரியராகவும் செயற்பட்டு இன்னும் சில நூல்களைத் தந்திருக்கின்றார் அவர்.

1. மாற்று நோக்கில் சில கருத்துக்களும் ,நிகழ்வுகளும்
2. ஈழத்து சிறுவர் பாடல்கள் களஞ்சியம்
3. ஈழத்து சிறுவர் இலக்கிய களஞ்சியம்
4. சங்க காலம் முதல் சமகாலம் வரை, என்பனவும்,மீள்பதிவு செய்யப்பட்ட அவர்தந்த அசன்பே சரித்திரம், காலங்கள் சாவதில்லை(நாவல்) என்ற நூல்களும் இலக்கிய நேசர்களால் பெரிதும் வரவேற்கப்படுபவை.

ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பாக கிழக்கிலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தன் ஆய்வுகள் மூலம் பெரும் பங்காற்றிவரும் செ.யோகராசா தனது ஆய்வுப் பணிக்காக விருதுகள் பல வென்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதிப்பட்ட ஆய்விற்காகப் பெற்ற சு.வித்தியானந்தன் விருது,பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நூலுக்குக் கிடைத்த இலக்கியப் பேரவை விருது,ஈழத்து நவீன கவிதை : புதிய உள்ளடக்கங்கள்,புதிய தகவல்கள்,புதிய தரவுகள் நூலுக்குக் கிடைத்த அரச சாஹித்ய விருது, ஈழத்து நாவல், ஈழத்து இதழியலும், இலக்கியமும் என்ற நூல்களுக்குக் கிடைத்த வடமாகாண சபை விருது,கலை வாருதி விருது, தேனக கலைச்சுடர் விருது என்பன அவற்றுள் சில.

ஈழத்தின் கலை இலக்கிய சஞ்சிகைகளான மல்லிகை,ஞானம் என்பவை அட்டைப்படங்களில் அவரைத் தாங்கிக் கௌரவித்துள்ளன .தென் கிழக்கு, கிழக்கு பல்கலைக் கழகங்களில் அவர் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் றசாக், "கிழக்கிலங்கை தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி, பார்வையும் -மதிப்பீடும் எ ன்று ஆறு திறனாய்வாளர்கள் ( ஏனையோர் சுவாமி விபுலானந்தர், கே.எஸ். சிவகுமாரன், எம். ஏ. நுஃமான்,சிவசேகரம், றமீஸ் அப்துல்லாஹ்) குறித்து எழுதியுள்ள நூலில் செ.யோகராசாவின் திறனாய்வு முறைமை,கிழக்கிலங்கை திறனாய்வு வளர்ச்சியில் அவரின் வகிபாகம் என்பவை குறித்தும் ஆய்வு செய்துள்ளார். உயிர்ப்பு என்ற நூலில் வெளிவந்த அவரின் சிறுகதை இப்னு அசூமத்தால் சிங்கள மொழிமாற்றம் பெற்றுச் சிறப்புச் சேர்த்துள்ளது.

கிழக்கிலங்கையில் -மட்டக்களப்பில் **2016** ல் அவருக்கு வெகு விமர்சையாக எடுக்கப்பட்ட பணிநயப்பு விழா வில் வெளியிடப்பட்ட "கருணையோகம்"மலர் அவரின் ஆய்வுப்பணி குறித்த ஆவணமாகப் பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் கரணவாய் என்னும் ஊரில் செல்லையா- இலட்சுமி தம்பதியின் மகனாக**1949**ல் பிறந்தவர்-செ.யோகராசா.ஆரம்பக் கல்வியை யாழ் கரணவாய் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றவர்.

கலைமாணி தமிழ் சிறப்பு, இளந்தத்துவமாணி,முது கலைமாணி,கல்வி டிப்ளோமா, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்.இவை தவிர, பிரவேச பண்டிதர் பரீட்சை, சைவப்புலவர் பரீட்சை என்பவற்றிலும் தகைமை பெற்றிருப்பவர். அஞ்சல் அதிபராக,பாடசாலை ஆசிரியராக,கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராக, தமிழ்த்துறைத் தலைவராக, பேராசிரியராக கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

ஓய்வு பெற்ற பின்பும்,ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தனது ஆய்வுப் பணிகளால் தொடர்ந்து பங்களிப்பு செய்து வரும் பேராசிரியர் செ.யோகராசா, இன்னும் பல்லாண்டு தேக நலத்துடன் வாழவேண்டும் மேலும் பல ஆக்க பூர்வமான ஆய்வுகளை தமிழ் இலக்கிய உலகிற்கு அவர் தர வேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
**22.01.2023**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கும் புகழ் பரப்பும் இலங்கையின்
ஆளுமை மிக்க பெண் படைப்பாளி

## இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

+447535768042



இலங்கையின் கலை இலக்கியப் பெறுமானத்தையும், பெருமையையும் உலகறியச் செய்யும் உன்னத படைப்பாளி, இலங்கை, இந்தியா, கனடா, பிரான்ஸ், நோர்வே, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, நெதர்லாந்து, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வெளிவரும் காத்திரமான சஞ்சிகைகள்,பத்திரிகைகளில் தனது படைப்புகளைத் தந்ததன் மூலம் சர்வதேசமெங்கும் பிரபலம் பெற்றிருக்கும் முக்கிய எழுத்தாளர்,

ஆறு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட ,படைப்பிலக்கிய அனுபவமும் ஆற்றலும் நிறைந்த மூத்த பெண் ஆளுமை, எழுத்தாளர்,பத்திரிகையாளர்,ஆய்வாளர், மனித உரிமைப் பிரச்சாரகர், சமூக சேவகர் சுதந்திரத் திரைப்படத் தயாரிப்பாளர் என்று பல் துறைகளிலும் இயங்குபவர், அகதிகள், குழந்தைகள்,பெண்கள், மனித உரிமை, வரதட்சணைக் கொடுமை, சாதீய ஒடுக்கு முறை,இனத்துவ அடக்கு முறை என்பவற்றைக் கருப் பொருட்களாகக் கொண்ட பல படைப்புகளைத் தந்திருப்பவர், தமிழ்ச் சமூகத்தின் சமகால அரசியல், சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக அவதானித்து, சமூகப் போராளியாகச் செயற்பட்டு , அரசியல், சமூக மாற்றம் வேண்டி, எழுதுபவராக இலக்கிய விமர்சகர்களால் எடுத்துக் காட்டப்படுபவர் - இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்.

அவர் வடக்கு இலண்டனில் வாழ்கின்ற இலங்கை மண்தந்த படைப்பாளி.கிழக்கு மாகாணத்தில், அம்பாரை மாவட்டத்தில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கோளாவில் என்ற ஊரில் குழந்தை வேலு-மாரிமுத்து தம்பதியின் மகளாகப் பிறந்தவர். பெண்கள் கல்வி கற்பதையோ, வெளியே வருவதையோ விரும்பாத ஒரு சமூகக் கட்டமைப்பபில் இருந்து எழுத்துலகிற்கு வந்தவர்.

“பழைமை தழுவிய பண்பாடு கலாச்சாரங்களில் பின்னிப் பிணைந்து கிடந்த கிராம வாழ்க்கைப் பண்பாட்டை அடித்தளமாக் கொண்டிருந்த கிராமத்திலிருக்கும் அத்தனை முரண்பாடுகளும் அங்கிருந்தன. ஆண் அதிகாரஆளுமையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட சமூகக்கோட்பாடுகளும், பெண்களுக்கெதிரான பல தரப்பட்ட ஒடுக்கு முறைகளும் இளம் வயதிலேயே பல கேள்விகளை என் மனதில் உண்டாக்கிய காரணிகளாகவிருந்தன. ஒரு பெண் ‘பெரிய பிள்ளையான’ பின் (சாமர்த்தியப் படுவது) வெளியில் தனியே செல்ல அனுமதியில்லை. அதிலும் இருட்டில் போவது முற்று முழுதாகத் தடை செய்யப் பட்டிருந்தது. படிப்பைத் தொடர முடியாது. சிறு பெண் பிள்ளைகள்கூட மரத்தில் ஏறி விளையாட முடியாது. எனது மூன்று தம்பிகளுடன் மரமேறியும் ஆறு குளங்களில் நீச்சலடித்தும் விளையாடிப் பெத்தாவிடம் பல தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி வாங்கியிருக்கிறேன்." என்று நினைவில் வரும்1952-1962 கால கோளாவில் என்ற அவரின் ஊர் பற்றிக் குறிப்பிடும் அவர்,தந்தை எழுதி வைத்திருந்த நாட்டுக் கூத்துக்களை பிரதி பண்ணியதால் ஏற்பட்ட உந்துதலாலும்,தந்தை வாங்கி வைத்திருந்த கல்கி,கலைமகள்,கற்கண்டு,குமுதம் போன்ற சஞ்சிகைகளை வாசித்ததில் ஏற்பட்ட ஆர்வத்தாலும் எழுத்துலகுக்கு வந்தவர்.

பாடசாலைக்காலத்தில் கட்டுரைப்போட்டிகளில் பங்குபற்றி பரிசுபெற்ற அவரின் எழுத்துலகப பிரவேசம் 1958 -1959 காலப்பகுதியில் இடம்பெற்றது. "ஐம்பதாம்" ஆண்டுகளின் கடைசிப் பகுதியில்,மாதமொருதரம் 'சிறி லங்கா' என்றொரு பத்திரிகை அரச தகவல் நடுவத்தால் பிரசுரிக்கப்பட்டது.1958ம் அல்லது 59ம்ஆண்டில் நான் எழுதிய "எங்கள் ஊர்க்கோயில் வரலாறு" பற்றிய கட்டுரை வெளிவந்தது. அதைப்படித்த ஆசிரியர்களும் அப்பாவும் எனது எழுத்துத் திறமையைப் பாராட்டினார்கள். அதன்பின் யாழ்ப்பாணம் போக முதலான கால கட்டத்தில் ஏதோ ஒரு சில சிறுகதைகள் வீரகேசரியில் பிரசுரமாயின.

யாழ்ப்பாணம் போனதும் எனது பல கதைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்தன. 'வசந்தம்' பத்திரிகையில்' சித்திரத்தில் பெண்ணெழுதி' என்ற கதை வந்தது போல், 'மல்லிகையிலும்' எழுதினேன்.அப்போது எழில்நந்தி என்ற புனைப் பெயரில் எழுதினேன். பெரும்பாலான கதைகள் சாதிக்கொடுமைகள், பெண்களுக்கான ஒடுக்கு முறைகளைத் தொடுபவையாகும்." என்று தனது எழுத்துலக வரலாற்றின் ஆரம்பப்பகுதியைக் குறிப்பிடுவார் எழுத்தாளர் இராஜேஸ்வரி. தாதியர் பாடசாலையில் கற்பதற்காக இளம் வயதில் யாழ்ப்பாணம் சென்ற அவர், பயிற்றப்பட்ட தாதியாக 1970 ல் இலண்டனுக்கு கணவர் பாலசுப்ர மணியத்தோடு புலம் பெயர்ந்தார். அங்கு தனது கல்வியை மேம்படுத்திக் கொண்டு,இலக்கியம் சமூக நடவடிக்கைகளில் தொடர்ந்து இயங்குபவராகத் திகழ்கின்றார்.

மருத்துவ மானுடவியல் துறையில் முதுமாணிப் பட்டமும்(1996),திரைப்படத் துறையில் கலைமாணி ( சிறப்பு) பட்டமும் (1988)பெற்றிருப்பவர் அவர். இலண்டனில் மருத்துவ மானுடவியலில் முதுமாணி பட்டம் பெற்ற முலாவது ஆசியப் பெண்மணி என்ற பெருமையும் அங்கு திரைப்படத் துறையில் பட்டம் பெற்ற முதலாவது ஆசியப் பெண்மணி என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

இலக்கிய உலகில் தனித்துவம் மிக்க படைப்பாளராக மிளிர்பவர் எழுத்தாளர் இராஜேஸ்வரி. நாவல்கள் சிறுகதைத் தொகுப்புக்கள் உட்பட ஆய்வுகள், மானுடவியல், மருத்துவத் துறை என்பன சார்ந்து 18 நூல்களைத் தந்திருப்பவர். அவரின் அநேக நூல்களைத் தமிழகத்தின் வெளியீட்டு நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன.பலநூல்கள் மீள் பிரசுரம் கண்டவை. சில நூல்கள்ஆங்கில சிங்கள மொழிக்கு மாற்றம் பெற்றவை.

- ஒருகோடை விடுமுறை (நாவல்) அலைவெளியீடு, இலங்கை 1982,
- தில்லை ஆற்றங்கரையில் (நாவல் ) பாரி பிரசுரம் இந்தியா 1957,
- தேம்ஸ் நதிக்கரையில் (நாவல்) 1993, 1998—மணிமேகலைப் பிரசுரம்,இந்தியா,.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பனி பெய்யும் இரவுகள் (நாவல்)
- நாளைய மனிதர்கள்(நாவல்) - பாரி வெளியீட்டகம் ,இந்தியா.
- உலகமெல்லாம் வியாபாரிகள் ( நாவல்) - பாரி வெளியீட்டகம் இந்தியா.
- அம்மா என்றொரு பெண்,(3 குறுநாவல்கள் 3 சிறு கதைகளின் தொகுப்பு,)
- ஏக்கம் (சிறுகதை தொகுப்பு)
- வசந்தம் வந்து போய்விட்டது( சிறுகதை தொகுப்பு)
- சித்திரத்தில் பெண்ணெழுதி சிறுகதை தொகுப்பு)
- அரைகுறை அடிமைகள் (சிறுகதை தொகுப்பு)
- அவனும் சில வருடங்களும். (சிறு கதை தொகுப்பு)
- இலையுதிர் காலத்து மாலை நேரம்(சிறுகதை தொகுப்பு)
- தாயும் சேயும் (மருத்துவம்)
- உங்கள் உடல்,உளம், பாலியல்,நலம் பற்றி( மருத்துவம்)
- தமிழ் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்(மானுடவியல் ஆய்வு)
- இலண்டன்1995

என்பன அவரின் நூல்களில் சில.

“The banks of river Thillai“ என்ற பெயரில் தில்லை ஆற்றங்கரையில் என்ற நூலும், “ஹிம வெஸி றாத்திரிய” என்ற பெயரில் பனிபெய்யும் இரவுகள் என்ற நூலும் முறையே ஆங்கில, சிங்கள மொழிகளில் மாற்றம் பெற்றுள்ளன. இலங்கை ,இந்தியப் பல்கலைக்கழகங்களில் 10க்கு மேற்பட்டவர்களால் முதுமாணி பட்டத்திற்காக அவரின் நூல்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அவரின் தில்லை ஆற்றங்கரையில் நாவல் கோளாவில் பிரதேச மக்களின் கலாசார,வரலாற்று ஆவணமாக அறிஞர் பெருமக்களால் பார்க்கப்படுகின்றது.

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் வீடியோ படங்களின் மூலமாகவும் மக்கள் கவனத்தை ஈர்த்திருப்பவர். தமிழ் அகதிகளை அடிப்படையாக வைத்து அவர் படைத்தளித்த Escape from genocide (இனப்படு கொலையில் இருந்து தப்பிக்க) என்ற வீடியோவும்,திருமணத்தில் கற்பழிப்பு தொடர்பான பிரச்சனைகளைப் பற்றிய 16mm படமான The Private place (தனிப்பட்ட இடம்) ம் முக்கியத்துவம் பெற்றவை. கலை,கலாசார செயற்பாடுகளோடு சமூக நடவடிக்கைகளில் அதிக அக்கறை செலுத்தியவர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம். தமிழ் அகதிகள் வீட்டுவசதி சங்கத்தின் நிறுவனராகவும் தலைவியுமாக இருந்து பணியாற்றியவர் (1985-1987),

- தமிழ் அகதிகள் நடவடிக்கை குழுவின் நிறுவனர்(1985-1987) மற்றும் தலைவியாகச் சேவை புரிந்தவர்.
- 2005ல் இலண்டனில் பெண்கள் சந்திப்பு ஏற்பாடு செய்தவர்,
- இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவராக இலண்டனில் 2006ல் இலக்கியச் சந்திப்பு நடத்தியவர்,
- சமூக சேவகர்களுக்காக கோளாவில் என்ற அவரின் ஊரில் ராஜேஸ்வரி மணி மண்டபம் அமைத்தவர்,
- தமிழ் பெண்கள் கழகத்தின் நிறுவனரும் தலைவியும் என்ற பொறுப்பில்1982 முதல் பணிபுரிபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்தியா,கோயம்புத்தூரில் பெண்கள் சிறுகதைப்போட்டி நடை பெறுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதியுதவி புரிபவர்.(200 கதாசிரியர்கள் இப்போட்டியின் மூலம்அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்).
- இலங்கை யாழ் தாதியர் பாடசாலையின் தாதியர் இதழின் ஆசிரியராக(1967) இருந்தவர்,
- தமிழ் சமாதான அமைப்பின் உறுப்பினர் (2005 முதல்),
- இலங்கை டயஸ்போரா உறுப்பினர்(2006 முதல்),

**கலை இலக்கியப் பணிக்காக அவர் பெற்ற விருதுகள் பல.**

- "இலங்கை சுதந்திர எழுத்தாளர் விருது ("தேம்ஸ் நதிக் கரையில்"1993 )
- இந்திய சுபமங்களா இதழ் விருது "யாத்ரா" சிறுகதை1994
- ஸ்ரீலங்கா சாகித்திய விருது - "பனி பெய்யும் இரவுகள்" 1994 தேவசிகாமணி விருது
- "இன்னும் சில அரங்கேற்றம்" 1995 இலங்கை சுதந்திர எழுத்தாளர் விருது
- "வசந்தம் வந்து போய்விட்டது" 1995 - லில்லி தேவ சிகாமணி விருது
- "அரை குறை அடிமைகள்"1999 - திருப்பூர் தமிழ்ச்சங்க விருது
- "நாளைய மனிதர்கள்"2005 - யாழ் .வென்மேரி அறக்கட்டளையின் "கோகிலம் சுப்பையா ஞாபகார்த்த விருது- 2023"(பரிஸில் அண்மையில் இடம் பெற்ற விழாவில்) என்பன அவற்றில் முக்கியமானவை.

"இலக்கியப் பிரவேசமும் படைப்புக்களும், மனித நேயத்தை முன்னேடுப்பவை. பல தரப்பட்ட மக்களின் பல தரப்பட்ட பிரச்சினைகளை, போராட்டங்களை, இயலாமையை, ஏக்கங்களை, சந்தோசங்களை யதார்த்த மாகக் காட்டுபவை. கற்பனை இலக்கியம் படைக்க என்னால் முடியாது. யதார்த்த இலக்கியம் படைக்க வேண்டும் என்ற எனது கொள்கையால் பல தடவை பல தரபட்டவர்களால் பல விதமாக விமர்சிக்கப்பட்டிருக்கிறேன். நேர்மை எனது அடிப்படைத் தத்துவம். ஆதலால்,, பல தரப்பட்ட பின்னணியிலிருந்து வரும் விமர்சனங்களுக்கும் முகம் கொடுக்கிறேன்." என்று தனது இலக்கியப் பிரவேசம், பயணம் என்பவை பற்றிச் சொல்பவர் மூத்த எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்.

சர்வதேச மெங்கும் புகழ்பரப்பும் ,இலங்கைப் படைப்பாளி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்தோடு வாழவேண்டும்,சமூக மேம்பாடு கருதிய அவரின் கலை இலக்கிய ப் பணி தொடரவேண்டும் என்பவையே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளன.

*தமிழன் பத்தரிகை*
*13.08.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆக்க இலக்கியப் பணிபுரியும்
ஆழ்ந்த தமிழ்ப் புலமை - தமிழ்மாமணி

## அல் அசூமத்

*0774413005*

ஈழத்தின் இலக்கியப் பரப்பில் ஆழமாய் வேரூன்றி இலக்கிய நேசர்களின் நெஞ்சங்களில் நிலை பெற்றிருக்கின்ற பெயர் அல் அசூமத். பல்துறை விற்பன்னராக இலக்கிய உலகில் தடம்பதித்துள்ள அவர், தமிழறிஞராகவும், படைப்பிலக்கிய வாதியாகவும், ஆய்வாளராகவும்,மொழி பெயர்ப்பாளராகவும், ஓவியராகவும், இசைக் கலைஞராகவும் (டோலக்,டபேலா,புல்லாங் குழல் மீட்பவர்) கலை,இலக்கிய உலகில் போற்றப்படுபவர். யாப்பிலக்கணத்தைக் கற்றறிந்து, மரபில் தோய்ந்த கவிதைகளை எழுதி வருபவராக மட்டுமல்லாது, யாப்பியலை ஐயந்திரிபறக் கற்று அது தொடர்பான விளக்கங்களடங்கிய **360** பக்க நூலையும் தந்து தமிழ் மொழியிய லாளர்கள் மத்தியில் உயர்ந்து நிற்பவர்.

“கவிதைகளாலே தன் உணர்வுகளை, கருத்துகளை முன்வைக்கும் கவிஞர்களுக்கு இந்நூல் ஒரு கையேடாகும்.யாப்புப் பயில்வாரை இந்நூல் ஆற்றுப்படுத்தும். இந்நூலை யாப்பறிந்தவர் கூட மீட்டலாக,ஆய்வாகப் பயன்படுத்த வாய்ப்புண்டு”. என்று சித்தாந்தப் புலவர், பண்டிதர் , விரிவுரையாளர் திருமிகு ம.ந. கடம்பேசுவரன் M.A(Hons) (செயலாளர் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கம்)இந்நூல் பற்றி விதந்து கூறுவார். பாலபண்டிதப் பரீட்சையின் பாட நூல்களுள் ஒன்றாகவும் அந்நூல் தகைமை பெற்றிருப்பது அதன் சிறப்பினை எடுத்துக் காட்டப் போதுமானதாகும்.

அல் அசூமத்,மரபுக் கவிதைகளை மட்டுமல்லாது தமிழுக்குப் புதிதாக வந்து சேர்ந்திருக்கின்ற குறும்பா (Limerick) போன்ற வடிவங்களையும் அங்கீகரித்து இடம் தருபவர்.இலங்கைக் கவிஞர் மஹாகவி உருத்திரமூர்த்தி அயர்லாந்துக் கவிதை வடிவமான Limerick ஐ குறும்பாவாகத் தமிழுக்குக் கொண்டு வந்தார். அவரின் பின்னர்,எம்.எச்.எம்.ஷம்ஸ், கலைவாதி கலீல்,ஜவாத் மரைக்கார் போன்றோர் குறும்பாவில் முயற்சிகள் செய்திருந்த போதிலும் குறும்பாவில் தொடர்ந்து இயங்கியவராகவும், அதுபற்றிய பரிசோதனை முயற்சிகளை “பூபாள“த்தில் செய்தவராகவும், யாப்பியலுரை என்ற அவரின் நூலில் குறும்பாவுக்கென ஒரு தனி அதிகாரத்தை எழுதி விளக்கியவராகவும் மதிப்புப் பெற்றிருப்பவர் அவர். **1959**ல் எழுத்துலக நுழைவு பெற்றவர்.

பொன். வேலாயுதம், சுடுகந்தை வேலாயுதம், சுடு வேலன், சுவே, வாணியன், மாத்தளையான், எல் அசோமட், அசோமட்டெல்க்கோவ், மொ. அ. அப்துல் அஸீஸ், சாத்தன், அபூ முனாஃப், ராமபுத்திரன், பொன்மாரி, அ. பாவேந்தி என்று பல புனை பெயர்களில் ஆக்கங்களை வழங்கி வருபவர். அல் அஸூமத் என்பதுவும் அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைப்பெயரே. ஆனாலும் அதனை தன் சொந்தப் பெயராகப் பதிவு செய்து கொண்டவர், நாவல், சிறுகதை,கட்டுரை, கவிதை, மொழி பெயர்ப்பு என்று பல்துறை நூல்களை நமக்குத் தந்திருக்கின்றார் தமிழ்மாமணி அல் அசூமத்.

1. புலராத பொழுதுகள் (நெடுங்கவிதை - 1982. முஸ்லிம் எழுத்தாளர் தேசிய கவுன்சில் பரிசுபெற்றது)
2. மலைக்குயில் (கவிதைத் தொகுப்பு - 1987).
3. பிலால் (மொழிபெயர்ப்பு-உரைநடை, 1988.)
   மறுபதிப்புகள் - 1995 இலங்கை, 2006, 2010 மெல்லினம் பதிப்பகம், தமிழ்நாடு, 2018 இலங்கை
4. கவிதைச் சரம் (1996. 483 கவிஞர்களின் 568 வானொலிக் கவிதைகள்)
5. வெள்ளைமரம் (சிறுகதைத் தொகுப்பு - 2001 அரச தேசிய சாகித்திய மண்டலப் பரிசும் சிரித்திரன் சுந்தர் நினைவுப் பரிசும் பெற்றது).
6. குரல்வழிக் கவிதைகள் 2009. (யாழ். இலக்கிய வட்டப் பரிசு பெற்றது.)
7. அறுவடைக் கனவுகள் (நாவல் - 2010. தமிழியல் விருது பெற்றது).
8. ஆயன்னையம்மாதாய் (சிறுகதைகள் - 2012). (:கொடகே தேசிய சாஹித்திய விருது பெற்றது).
9. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்.) அவர்களது காலத்தில் பெண் விடுதலை - மொழிபெயர்ப்பு ) - 2015
10. யாப்பியலுரை - ஆய்வுக் கட்டுரை - 2000, 2016
11. அவள் பெய்கிறாள் - மலையாள மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் - 2016 (அரச இலக்கிய விருது பெற்றது)
12. வரவுக்கவிதைகள் வளமுற - ஆய்வுடனான ஒரு விளக்கம் - 2016
13. இஸ்லாமிய வரலாறு (மூன்று பாகங்கள்) - 2017 (சென்னை ரஹ்மத் அறக்கட்டளை)
16. உலகின் பேரொளி முஹம்மத் (ஸல்.) - சென்னை ரஹ்மத் அறக்கட்டளை நடத்திய உலகளாவிய கட்டுரைப் போட்டியில் இந்திய மதிப்பில் ரூபா ஓரிலட்சம் பரிசு பெற்றது. - 2018
17. அமார்க்கவாசம் - நாவல் - 2020 (அரச இலக்கிய விருது பெற்றது)
18. பிலால் காவியம் - 2020.

   அல் அசூமத், கலை இலக்கியப் பயணத்தில் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் விருதுகள் பலவற்றைப் பெற்றிருப்பவர். 1992இல் இலங்கை முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நஜ்முஸ் ஸூஆரா விருது, 2006இல் இலங்கைக் கலாச்சார அலுவல்கள் திணக்களத்தால் கலாபூஷண விருது, 2009இல் இலங்கை முஸ்லிம் கலைஞர் முன்னணியால் இலக்கிய சாகரம் விருது, 2011 இல் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தால் தமிழ்நாடு - காயல் பட்டினத்தில் தமிழ் மாமணி விருது,

என்பவற்றோடு, இலங்கை வானொலி - கொடகே சகோதரர்கள் இணைந்த குழுவினராலும் கம்பன் கழகத்தினராலும் உதயணன் இலக்கிய விருதுக் குழுவினராலும் தமிழியல் விருதுக் குழுவினராலும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் பல வழங்கிக் கௌரவப்படுத்தப்பட்டுள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள்,தொகுப்புக்கள் என்பவற்றுக்குக் கிடைத்த விருதுகள் ,பரிசுகள் என்பவற்றிற்கும் மேலதிகமாக தனிக் கவிதைகள் ,சிறுகதைகளுக்கும் பரிசுகள் பலவற்றை பெற்றிருப்பவர் கவிமாமணி அல் அஸூமத்.

1) **1982.** பாரதியும் பைந்தமிழும் (தனிக்கவிதை). உலகளாவிய நிலையில் பாரிஸில் நடத்தப்பட்ட பாரதியார் நூற்றாண்டுக் கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு. "அல் அஸூமத் கவிதைகள்" தொகுப்பில் உள்ளது.

2) **1982.** இஸ்லாமிய சட்டங்கள் சுட்டெரிக்கும் பாலையல்ல, சுகம் தரும் சோலை (தனிக்கவிதை). தமிழ்நாட்டுக் குர்ஆனின் குரல் வெளியீட்ட கத்தாரால் நடத்தப்பட்ட போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது. "அல் அஸூமத் கவிதைகள்" தொகுப்பில் உள்ளது.

3) **1989.** முதுகச் சொறியுங்கோ (சிறுகதை). "திசை" வாராந்தரி நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது ரூபா 250. (வெள்ளைமரம் தொகுதியில் உள்ளது.)

4) **1989.** வம்சத்துவம்சம் (சிறுகதை). "திசை" வாராந்தரியில் வெளிவந்த இக் கதை, 1989இன் இரண்டாம் காலாண்டில் வெளிவந்த கதைகளின் தேர்வில், இரண்டாம் பரிசுக்குரியதாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுத் "தகவம்" அமைப்பினால் பரிசளிக்கப்பட்டது. ரூபா 250. (வெள்ளைமரம் தொகுதியில் உள்ளது.)

5) **1993.** குடும்பப் பொய் (சிறுகதை). சுற்றாடல் வெகுஜனத் தொடர்பாளர் பேரவை நடத்திய சிறுகதைப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துக் கதைகளுள் ஒன்று. ரூபா 1,000 பரிசு. (சிரிபாலபுர மாத்தையா தொகுதியிலும் வெள்ளைமரம் தொகுதியிலும் உள்ளது.)

சஞ்சிகைகளின் ஆசிரியராக, வானொலியில் கவிதைத் தொகுப்பாளராக இலக்கியப் பணி புரிந்த அல்அஸூமத், கவிதைகளுக்கான காலாண்டுச் சஞ்சிகை ஒன்றை 1982 - 1983ல் கவின் கமலின் துணையுடன் நடத்தி வந்தார். பூபாளம் என்று அவர் நடத்திய அச் சஞ்சிகை, கவிதையின் பலவேறு வகைமைகளையும் வெளிக் காட்டியதோடு புதிய வரவுகளுக்கும் இடமளித்தது. அதன் பின்னர் பௌர்ணமி எனும் பெயரில் ஒரு ரோணியோ சஞ்சிகையையும் முகில் எனும் பெயரில் அச்சில் இன்னுமொரு சஞ்சிகையையும் நடத்தினார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் சேவையில் இலக்கிய மஞ்சரி, இளைஞர் இதயம், கவிதைச்சரம் (தொடர்ந்து நான்காண்டுகள்) ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றார். ரூபவாஹினி, நேத்ரா, ஐரீயென், டான், பிறை போன்ற தொலைக் காட்சிகளிலும் பல கவியரங்குகள், பேட்டிகள் என்பவற்றிற் பங்கெடுத் துள்ளார். இலங்கை கலாசாரத் திணைக்களம் முஸ்லிம் சமய பண்பாட்டுத் திணைக்களம் என்பவை நடத்திய கவியரங்குகளுக்கு தலைமை தாங்கி உள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட மேடைக் கவியரங்குகளில் கவிதை பாடிய சிறப்பு அவருக்கு உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை எனும் நகருக்கு இரு கி. மீ. அண்மையில் திக்கிரியா எனும் ரப்பர்த் தோட்டத்தில் **1942**,ல் பிறந்தவர் அவர். தந்தை:- ராமன் நாயர் எனப்பட்ட பொன்னையா. கேரளத்தில் நெய்யாற்றிங் கரையைச் சேர்ந்தவர்.

தாய்:- தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முத்தையாத் தேவருக்கும் சந்தனத்துக்கும் பிறந்த மாரியாயி. மாரியாயி இலங்கையிற் பிறந்தவர்.

அல் அசூமத்தின் இயற் பெயர்:- வேலாயுதம்.

ஆரம்பக் கல்வி - மந்தண்டாவளை ஆட்டுப்பட்டிப் பாடசாலை (அரசினர் தமிழ்க் கலவன் கனிஷ்ட பாடசாலை), நிக்கக் கொட்டுவைத் தோட்டப் பாடசாலை, இறத்தோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (**1952** வரையில்). பின்னர் மாத்தளை, கந்தசாமி சைவத் தமிழ்ப் பாடசாலை இப்போதைய தேசிய இந்துக் கல்லூரி.

கல்வித் தகைமை:- சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (S.S.C.), **1959.** கல்வி மொழி - தமிழ்.

செய்தொழில்கள்:- ஆசிரியம், தேயிலைத் தோட்டத்து சூப்பர்வைசர், ஓட்டல், விசைச்சுருளி (springs) செய்தல், அச்சுக் கூடம்.

அல்அசூமத் தேர்ந்த கதை சொல்லி, ஈழத்தின் முக்கியமான கவிஞராகவும், ஆய்வாளராகவும் மதிப்புப் பெற்றிருப்பவர் .ஆறு தசாப்த கால இலக்கிய அனுபவம் வாய்க்கப் பெற்றவர். அவர் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்துடன் வாழவேண்டும்.

கையிலிருப்பவையான அவரின் சுய தொகுப்புக்களான

- பெருங் காவியம் **1**,
- குறுங்காவியங்கள் **8**,
- சிறுகதைகள் **32**,
- நாவல் **1**,
- கவிதைகள் சில நூறு, நபிக்குறள், (**2020** குறள்கள் எழுதப்பட்டுள்ளன).
- கவலைப்படாதீர்கள் (மொழிபெயர்ப்பு),
- நடைப்பா,
- குறு நாவல்கள் **2**,

என்பவற்றோடு "பிஞ்சிய"மும் (பிறப்புமுதல் கொண்டு **10** ம் வகுப்பு வரையிலான அவரின் சுயசரிதைக் காவியம்) விரைவில் நூலாக்கம் பெற்று வெளிவரவேண்டும். என்பனவே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளன.

தமிழன் பத்திரிகை
***28.05.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சிறுவர் பாரதி" யெனப் போற்றப்படும் குழந்தைக் கவிஞர்

## சாரணா கையூம்

055 2223844

"பாப்பா பாட்டை எழுதுவதில்
பிரியம் கொள்ளுவேன்- நான்
பிரியம் கொள்ளுவேன்

பாப்பா மாரைக் கண்டவுடன்
பார்த்து மகிழுவேன் -நான்
பார்த்து மகிழுவேன்

பூனை எலி பாட்டுப்பாடி
புதுமை காட்டுவேன் -நான்
புதுமை காட்டுவேன்

வண்ணத் தமிழ் பாட்டெழுதி
வீர மூட்டுவேன் -நான்
வீர மூட்டுவேன்"

என்று சிறுவர் பாடல்கள் எழுதி "குழந்தைக் கவிஞர்" என்று 1974 களிலேயே சிறப்புப் பட்டம் பெற்றவர் இலங்கை, ஊவா மாகாணம், பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் சாரணாகையூம், கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை அவர்களின் மாணவர் என்பதில் பெருமைப்படுபவர் .1960ல் எழுத்துலகுக்கு வந்துவிட்ட அவரது படைப்புக்கள் வீரகேசரி, தினகரன், சுதந்திரன், தினபதி, சிந்தாமணி, ஈழநாடு முதலிய இலங்கைப் பத்திரிகைகளில் மாத்திரமல்லாது தமிழ் நாட்டிலிருந்து வெளியாகிய மணிவிளக்கு, முஸ்லிம் முரசு, நல்வழி, தீபம் ஆகிய சஞ்சிகைகளிலும் பிரசுரம் பெற்றுப் பராட்டுப் பெற்றவை.

குழந்தைக் கவிதை எழுதுவது இலகுவானதல்ல. குழந்தைகளுக்குப் பரிச்சயமான எளியசொற்கள், மனதில் நிற்கக் கூடிய -அதேவேளை மீண்டும் பாடத்தூண்டக் கூடிய சந்தம் என்பன அமையப் பெறுதல்வேண்டும். குழந்தைக் கவிதைகளைப் பாடும்போது கவிஞர்கள் குழந்தைகளாகவே மாறிவிட வேண்டும். குழந்தைகளின் உளவியலை நன்கு உள்வாங்கிக்கொண்டு கவிதை பாடியவர்களே மக்கள் நினைவில் நிற்பர் . அந்த வகையில் பாப்பா பாட்டுப் பாடிய மகாகவி பாரதியின் பின்னர்,சிறுவர் கவிதை முன்னோடிகளாக உடனடியாக நினைவுக்கு வருபவர்கள் சிலரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை அழ.வள்ளியப்பா, கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, வேந்தனார், சோமசுந்தரப்புலவர், மு.நல்லதம்பி என்பவர்களோடு நினைவில் முன்னெழும் இன்னும் ஒருவராக விளங்குபவர் சாரணாகையூம்.

ஆறு தசாப்தங்தங்களுக்கு மேற்பட்ட அவரின் கலை,இலக்கியப் பயணத்தில் கவிஞராக, கட்டுரை யாளராக ,சிறுகதையாளராக,நாடகாசிரியராக,ஆய்வாளராக, சஞ்சிகை ஆசிரியராக மலர் வெளியீட்டாளராகப் பல தளங்களில் இயங்கியவர் அவர்.

- குழந்தை இலக்கியம் 1962,
- நபிகள் நாயகம் 1964,
- குர்ஆன் ஹதீஸ் 1964,
- கவிதை நெஞ்சம் 1964,
- சிறுவர் பாட்டு 1983,
- நன்னபிமாலை 1989,
- இவைகள் பேசினால் 1990 ,
- சிறுவர் கதைகள் 1991,
- விஞ்ஞான மேதைகள் 1992 என்பன அவர் நமக்களித்த நூல்கள்.

ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த மூத்த கவிஞராக மதிக்கப்படும் அவர் , பல ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்தவர்.

- "அரபுத்தமிழ் இலக்கிய வளர்ச்சி" -1979,
(நான்காவது சர்வதேச இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சமர்ப்பித்தது)
- "முற்றத்து மல்லிகை 1994," (மணி விழா மலர்)
"ஊவா மாகாண முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பு 1994" என்பன அவற்றில் குறித்துரைக்கப்பட வேண்டியவை.

மகாகவி இக்பால் பற்றிய மலரொன்றை 1964லேயே தொகுத்தளித்த பெருமைக் குரியவர் சாரணா கையூம். 1972ல் சிறுவர் பாரதி என்ற சஞ்சிகையை வெளியிட்டவர் அவர். சிறுவர் இலக்கியம் வளர்ச்சியுறாத அன்றைய எழுபது காலப்பகுதியில் சிறுவர்களையும் வாசிப்புப் பழக்கத்திற்கு உள்ளீர்க்கும் முயற்சியில் முன்னின்றவராக சாரணாகையூம் அறிஞர் பெருமக்களால் பார்க்கப்பட்டார்.

சிறுவர்களைக் கவர்ந்த, "செட்டியார் காத்த புதையல்", "சீப்பு வியாபாரி" போன்ற சிறுகதைகளைச் சிந்தாமணியில் எழுதிச் சிறுவர் கதைகளின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவராகவும் அவர் பெருமை பெற்றிருந்தார். நாடகத் துறையில் அவரின் ஈடுபாடு குறித்தும் சிலாகிக்கப் படுவதுண்டு. ஊவா மாகாண சாஹித்ய விழாக்களில் பரிசு வென்ற நல்ல நாடகங்களை எழுதியவராக அவர் கௌரவம் பெற்றிருந்தார். "ஆண்டவன் கட்டளை ", "ஜான்ஸி ராணி" என்ற அவரின் இரண்டு நாடகங்கள் 1963-1964 காலப் பகுதியில் ஊவா மாகாண கலை இலக்கிய மேடைகளில் பெயர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதித்தவை. ஊவா மாகாணத்தின் கலைப் பொக்கிஷமாகவும் ஈழத்தின் "சிறுவர் பாரதி"யாகவும் கீர்த்தி பெற்றிருக்கும் சாரணாகையூம் கலை இலக்கியப் பயணத்தில் பல பட்டங்களையும் விருதுகளையும் வென்றிருக்கின்றார்.

1. கீழக்கரையில் (இந்தியா) இடம்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய சர்வதேச மாநாட்டில் குழந்தைக் கவிஞர் (1974)என்ற பட்டம் அவருக்கு வழங்கப் பட்டது.
2. மலேசியா கவிதை மாலை இயக்கத்தினால் இலக்கிய மாமணி (1994) என்ற பட்டமும்
3. இந்து கலாச்சார அமைப்பினால் இலக்கியச்சுடர் (1989), கவிமணி (1991) பட்டங்களும்,
4. இலங்கைக் கலாசார அமைச்சினால் கலாபூஷணம் (1996) பட்டமும்,
5. முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சினால் நஜூமுஸ் ஸூரா பட்டமும்(1992 ) இலக்கிய வாரிதி விருதும் அவருக்கு வழங்கப்பட்டன.
6. ஈழத்தின் இலக்கிய மாத சஞ்சிகையாக வெளிவந்த மல்லிகை அதன் முகப்பு அட்டை அதிதியாக 2012 மார்ச்சில் அவரைக் கௌரவித்தது.

சிறுவர்களின் மனங்களில் நல்விதைகளைத் தூவி, உன்னத சமூக மொன்றை உருவாக்க வேண்டுமென்பதில் உறுதியாக நின்று உழைத்தவராக தனது கவிதைகள் மூலம் அடையாளம் பெற்றிருப்பவர் அவர்.

"நல்ல தம்பி என்றால்
நாடு உன்னைப் போற்றும்,
கள்ளன் கபடன் என்றால்,
கண்ணால் ஆரும் பாரார்.

சொல்லில் உண்மை யென்றால்,
சோற்றுப் பஞ்சம் இல்லை
எள்ளி வாழ நினைத்தால்,
எச்சில் கூட இல்லை.

அறிஞர் உறவு என்றால்,
அல்லும் பகலும் இன்பம்
சிறியோர் உறவு என்றால்,
சொல்லும் செயலும் துன்பம்.

"என்றவாறு சிறுவர்களுக்கு அறிவுரை கூறுபவர் அவர்.
ஈழப் பெருங்கவி கலாநிதி நாவற்குழியூர் நடராஜன்,சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் மா.இராசமாணிக்கனார், கல்ஹின்ன தமிழ்மன்றத் தலைவர் எஸ்.எம். ஹனிபா போன்ற தமிழ் அறிஞர்கள் சாரணாகையூமின் கவிதை ஆற்றல் குறித்து விதந்து கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணா கையூம், நெருங்கீரன், புஷ்பதாஸன், அப்த்- அல்-கையூம் என்ற புனை பெயர்களில் எழுதிவந்த நூர் சாலிம் அப்துல் கையூம்,1938ல் பிறந்தவர். 1957ல் சிரேஸ்ட தராதரப் பத்திரம் சித்தி பெற்றவர்.1958ல் பயிற்றப்பட்ட முதலாம் தர ஆசிரியராக நியமனம் பெற்ற அவர்,1991-1996 வரை தொலைக்கல்விப் போதனாசிரியராகக் கடமையாற்றினார்.

மாணவர்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்துள்ள மூத்த ஆசான் கையூம், சமூக நலப் பொதுப்பணிகளிலும் ஈடுபாட்டோடு இயங்கியவர்.

அரபுக் கலாசாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக, மலையக முஸ்லிம் எழுத்தாளர் சங்கத் தலைவராக,பொது நூலக ஆலோசனைச் சபை உறுப்பினராகப் பல சமூகப் பணிகளில் தொண்டாற்றியவர் அவர்.

23-05-2023ல் தனது 85 அகவையை நிறைவு செய்திருக்கும் சாரணாகையூம் என்ற மூத்த இலக்கிய ஆளுமைக்கு எமது வாழ்த்துகள்.

இன்னும் அவர் பல்லாண்டு தேக நலத்துடன் வாழவேண்டும்.அவரின் தமிழ் இலக்கியப் பணிகளும், சமூக நலப் பணிகளும் நூற்றாண்டு விழாவையும கண்டு தொடர வேண்டுமென்பதே நமது பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
18.06.2023

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோவில் பிரதேசத்தின் மூத்த இலக்கிய ஆளுமை

## திருமதி யோகா யோகேந்திரன்

0672265068



ஈழத்துப் புனைகதை இலக்கியத்தில் அம்பாரை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்திற்கு முக்கிய இடமுண்டு. அந்த முக்கியத்துவத்தைப் பெற்றுத் தந்திருப்பவர் அப்பிரதேசத்தைச் சேர்ந்த த. உவில்லியம்பிள்ளை அவர்கள். கிறீன்துரை என்ற ஆங்கிலப் பெருமகனிடம் செயலாளராக இருந்த, ஆங்கிலம் நன்கு தெரிந்த உவில்லியம் பிள்ளை, அப்பிரதேசத்தில் புனைகதைத் துறை முன்னோடியாகக் கணிப்புப் பெற்றிருந்தார். அவரை, மட்டக்களப்பு கலை இலக்கியப் பெரும் பரப்பின் முதலாவது நாவலாசிரியராக அடையாளப்படுத்தும் பண்டிதர் வீ.சீ. கந்தையா அவர்கள், அதற்குச் சான்றாக "இந்திராபுரி ரகசியம்", "மஞ்சட் பூதம்" அல்லது "இழந்த செல்வம்" என்ற இரண்டு நாவல்களை அவர் 1958,1959 ஆண்டுகளிலேயே எழுதியிருந்ததை எடுத்துக் காட்டுவார் .

இவ்வாறு புகழ்பெற்றிருந்த த. உவில்லியம்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து, திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து புனை கதைத் துறையில் அக்கறை செலுத்துபவர்களாக அடையாளம் பெறுபவர்கள் பலர். அவர்களில் மூத்த இலக்கிய ஆளுமையாக, நாவல், சிறுகதை, கவிதைகள், சிறுவர் கதைகள், சிறுவர் பாடல்கள், பாடநூல்கள் என்று எழுதிப் பெருமை சேர்த்திருப்பவர் திருமதி யோகா யோகேந்திரன்.

சம்பவங்களைக் கோவைப் படுத்தி வாழ்வியல் கோலங்களைச் சிறுகதைகளாக வடிக்கும் கைதேர்ந்த படைப்பாளியாக அடையாளம் பெற்றிருக்கும் திருமதி யோகா யோகேந்திரன் அறுபதுகளில் எழுத்துலகப் பிரவேசம் பெற்றவர் .

அவருடைய முதல் சிறுகதை "ராதா" பத்திரிகையில் "அங்கத்திலே ஒரு குறையிருந் தாலும்" என்ற தலைப்பில் பிரசுரமாகிற்று. அக் கதையைப் படித்த வாசகர்கள் தந்த ஊக்கத்தால் அவரின் எழுத்துப்பணி தொடர்ந்தது. தினகரன், வீரகேசரி, மணி மேகலைப் பிரசுரம் என்பன தரம்கண்டு இவருக்குக் களம் தந்தன.

கனதியான சிறுகதைகளைத் தந்திருப்பவராக, ஈழத்துப் பெண் படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவராக சிலாகிக்கப் பெறும் அவரின் சிறுகதைகள், ஈழவரின் சிறு கதைத் தொகுப்பு, இலங்கை எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு நூல்களில் இடம் பெற்றுச் சிறப்புச் சேர்த்துள்ளன. அறுபது வருடங்களுக்கும் மேற்பட்ட கலை இலக்கிய அனுபவமும் ஆற்றலும் நிறைந்தவர் யோகா யோகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இன்னாருக்கு இன்னாரென்று சிறுகதைத் தொகுதி(2002)
- வாருங்கள் கதை படிப்போம் சிறுவர் கதைகள்(2003)
- மாணவர்க்கு மணிக் கவிதைகள் சிறுவர் பாடல்கள்(2003)
- அவள் காத்திருக்கிறாள் சிறுகதைத் தொகுதி (2004)
- புலமைக் கதம்பம்(5ம் தர புலமைப் பரிசில் வழிகாட்டி-2005)
- மீண்டும் ஒரு காதல் கதை நாவல்(2014)
- அவர்கள் அப்படித்தான் சிறுகதைத் தொகுதி(2015)
- தொலைத்து விட்டோம் எத்தனையோ! கவிதைத் தொகுதி(2015)
- பசிதீர்க்கும் உணவே நோய்தீர்க்கும் மருந்து கட்டுரை (2017) என்று

கலைப் பெறுமானம் மிகுந்த ஒன்பது நூல்களை இலக்கிய உலகிற்குத் தந்திருப்பவர். பரிசில்கள் பட்டங்கள் விருதுகள் என்று பலவற்றை தனது இலக்கியச் செயற்பாட்டுக்காகப் பெற்றிருப்பவர்.

- கலாபூஷண விருது,
- கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது,
- சுவதம் விருது,
- அவுஸ்திரேலியா விக்டோரியா தமிழ்ச்சங்க விருது ( 2 தடவைகள்)
- அவுஸ்திரேலியா வானொலி விருது,
- சிறந்த நாவலுக்கான கிழக்கு மாகாண விருது,
- சர்வதேச பெண்கள் அமைப்பின் பிரதேச எழுத்தாளர் விருது,
- அறப்போர் அரியநாயகம் விருது,
- சுதந்திர இலக்கிய விருது,
- கொழும்பு றோயல் கல்லூரியின் “விம்பம்” விருது,
- சுதந்திர இலக்கிய விழா சிருஷ்டி இலக்கிய விருது,
- திருக்கோவில் பிரதேச “சோஷியல் விஷன் விருது”

(மாகாண மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் இன்னும் பல பரிசில்களை, விருதுகளை அவர் பெற்றிருந்த போதிலும் 2004 சுனாமிப் பேரலையில் அவை அழிந்து போனமையால் அவை பற்றிய தகவல்கள் இங்கு குறிப்பிடப்பட வில்லை)

சிறுகதைகள், நாவல் என்பவற்றினூடாக பல விருதுகளைப் பெற்றுள்ள யோகா யோகேந்திரன், சிறுவர் பாடல்கள் மூலமும் பேசப்பட்டார். அவருடைய சிறுவர் பாடல் நூலிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடலொன்று இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2004ல் வெளியிட்ட 5ம் தர மாணவர்களுக்கான 460 பக்கங்கள் கொண்ட வழிகாட்டல் கைநூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதனைத் தனக்குக் கிடைத்த உயர் விருதாக மனம் நிறைவடைகிறார் அவர்.

திருக்கோவிலில் வேலுப்பிள்ளை- ராசம்மா தம்பதியின் மகளாக 1946ல் பிறந்த யோகா யோகேந்திரன், திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம், குமரா வித்தியாலயம், தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச எழுது வினைஞராக முதல் நியமனம் பெற்று, அம்பாரை மாவட்டச் செயலகம், கொழும்பு உணவுத் திணைக்களம் என்பவற்றில் கடமையாற்றியவர். 1970ல்ஆசிரியர் தொழிலை விரும்பி ஏற்று, அதிபராகத் தரம் உயர்ந்து தான் ஆரம்பக் கல்வி கற்ற குமரா வித்தியாலயத்திலேயே பல வருடங்கள் அதிபராகச் சேவையாற்றி 2006ல் ஓய்வு பெற்றவர்.

இலக்கியம் ,சமூகச் செயற்பாடுகள் என்று இயங்கிய யோகா யோகேந்திரன்,ஓய்வின் பின்னரும் 500 பெண்களைக் கொண்டிருந்த கனேடிய அரச சார்பற்ற நிறுவன மொன்றின் திட்ட முகாமையாளராகப் பணியாற்றியவர்.

திருக்கோவில் பிரதேசத்தின் மூத்த இலக்கிய ஆளுமையாகவும்,ஈழத்து பெண்படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவராகவும் மதிப்புப் பெற்றிருக்கின்ற திருமதி யோகா யோகேந்திரன் அவர்களின் இலக்கியப் பணி தொடரவேண்டும் அதற்கான தேக நலனை இறைவன் வழங்க வேண்டும் என்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
01.01.2023

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளிலும்
இடையறாது இயங்கியவர்

# பாவலர் சாந்தி முகையதீன்

0777245494



கிழக்கிலங்கை மண்ணில் பள்ளிவாசல்,மதரஸா,கட்டடங்கள், வியாபாரம், கலை இலக்கியம் பண்பாடு என்பவற்றில் தனித்துவம் பெற்றும் அழகு பெற்றும் மிளிர்கின்ற பெருநகரமாக காத்தான்குடி திகழ்கின்றது. "பாதுகாத்தான் குடியிருப்பு " என்ற வரலாற்றுப் பெருமை மிக்க நாமமே காத்தான்குடியாக சுருங்கிக் கொண்டதாக அதன்பெயர் குறித்து ஆராய்வோர் சொல்வதுண்டு.

இவ்வாறு வனப்பும்,செழிப்பும் வரலாற்றுப் பெருமையும் மிக்க, காத்தான்குடியின் கலை இலக்கிய முயற்சிகளைத் தனித்து நோக்குபவர்கள் நவீன கலை இலக்கிய முன்னோடியாக கவிஞர் அப்துல் காதர் லெப்பையை முன்வைப்பர். செய்னம்பு நாச்சியார் மான்மியம், இறசூல் சதகம் போன்ற படைப்புகளால் மேலெழுந்திருந்தவர் அவர். அவருக்குப் பின்னராக காத்தான் குடியின் கலை இலக்கிய வளர்ச்சியில் அக்கறை செலுத்தியவர்களுள் முக்கியமானவராகப் பார்க்கப்படுபவர் பாவலர் சாந்தி முகையதீன்.

சாந்திமுகையதீன், தாவூத் சா போன்றவர்கள் முன்னெடுத்த நவ இலக்கிய மன்றம் பல நல்ல பேச்சாளர்கள், படைப்பாளர்களை உருவாக்கக் காரணமாக இருந்ததை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவர். கவிஞர் மௌலவி புகாரி , பேச்சாளர் கவிஞர் மஹ்றூப் கரீம், கவிஞர் மௌலவி காத்தான்குடி பௌஸ், கலைஞர் முஸ்தபா,கவிஞர் ஸெரண்டிப் முஸ்தபா, கவிஞர் எம்ஆர்ஏ.எம் இஸ்மாயில், கவிஞர் ஜுனைதீன், கவிஞர் அமீர் அலி என்று அந்தப் பட்டியல் நீளும்..

சாந்திமுகையதீனுடைய கலை இலக்கியப் பிரவேசம் 1963 ல் வீரகேசரியில் வெண்ணிலாவே என்ற கவிதை எழுதியதின் மூலம் ஆரம்பமாகிறது. ஆறுதசாப்த கால அனுபவமும்,ஆளுமையும் நிறைந்த சாந்தி முகையதீன், இறைவனின் அருளால் இலக்கியத் துடிப்போடு இயங்கி வருகின்ற எண்பது அகவை(09-10-1942) இளைஞர். சமூக,மார்க்க,கலை இலக்கியப் பணிகளில் உற்சாகத்தோடு ஈடுபடுபவர். எழுத்துலகச் செயற்பாடுகளாலும் சமூக தொடர்பாடலாலும் இனநல்லுறவுப் பாலமாக இருப்பவர்.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகளை நிறையவே எழுதியிருப்பவர், "இலக்கிய இதழ் "ஆசிரியர்", பா கவிதை இதழின் ஆசிரியர் என்று எழுத்துலகில் இவர் சிறப்புப் பெற்றிருந்த போதிலும் இவரை அதிகம் அடையாளப் படுத்துபவை அரங்க நிகழ்ச்சிகளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம், வில்லுப்பாட்டு, களிகம்பு, பக்கீர் பைத், கிராமியக் கவிகள் போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் பிரபலம் பெற்றிருப்பவர் சாந்தி முகையதீன்.

நிம்மதி எங்கே,நீதியே நீ கேள்,பரிகாரியார் வீட்டிலே,எனக்கும் உனக்கும், அந்த நாள் ஞாபகம், கோடு கச்சேரி போன்ற நாடகங்கள் இவரின் நடிப்பினாலும் இயக்கத்தி னாலும் புகழீட்டின.

வில்லுப் பாட்டு என்ற கலை வடிவத்தை முஸ்லிம் பிரதேசத்திற்குக்குக் கொண்டு வந்து, முஸ்லிம் சமய கலாசார விழுமியங்களை எடுத்துச் சொல்ல முன்னின்றவர்.சமுதாயச் சீர்கேடுகளைச் சாடியவர்.தரகர் தம்பிலெவ்வை,காவன்னா மூவன்னா, பத்றுப் போர்,பால்க்காரப் பொன்னையா என்ற வில்லுப் பாட்டுகளை அரங்கேற்றம் செய்து மக்கள் கலைஞராக அங்கீகாரம் பெற்றவர் சாந்தி முகையதீன்.

முஸ்லிம்களின் பாரம்பரிய கலை வடிவமான கோலாட்டம் (களிகம்பு,பொல்லடி) அருகி வருவதை எண்ணி வருந்திய அவர், அதனை முறையாகக் கற்றுக் கொண்டு, நுட்பங்களைப் புரிந்து கொண்டு புதியவர்களை ஊக்குவித்துப் பயிற்சி வழங்கி செயலூக்கம் தருபவர்.

இவற்றிற்கும் மேலதிகமாக,இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஈடுபாடு, மஸ்அலா, கிஸ்ஸா, கஸீதா ஆகியவற்றின் மீதான தேடல் முயற்சிகள், உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் தொடர்ந்தேர்ச்சியான பங்களிப்பு, ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பது மாநாட்டு நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவது இலங்கையில் இடம் பெறும் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளை ஏற்பாடு செய்வதில் துணை நிற்பது, மாநாட்டில் வெளியிடப்படும் நூல்களை செவ்வை பார்ப்பது அவற்றிற்கு அணிந்துரைகள் வழங்குவது (15 நூல்களுக்கு மேல் ) என்பவற்றினால் உலகளவில் இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பரப்பிலும் நன்கு அறியப் பட்டிருப்பவர் சாந்திமுகையதீன்.

முஹம்மது மீராசாஹிப்- கதீசா உம்மா தம்பதியின் புதல்வராகக் காத்தான்குடியில் பிறந்த சாந்திமுகையதீன் வியாபாரத்தை தொழிலாகக் கொண்டிருந்தவர்.தொழில் நிமித்தம் ஏறாவூரில் இருந்த போது அங்கும் பல எழுத்தாளர்கள் உருவாகக் களம் அமைத்தவர் சாந்தி முகையதீன்.

காத்தான்குடிக் கவிராயர், ஷா,சா- அதி என்ற புனை பெயர்களோடு கலை இலக்கிய உலகில் பயணித்த அவர் தனது கலை இலக்கியப் பணிக்காக பல விருதுகளை வென்றார். அவற்றில் கலாபூசண விருது,வடக்கு - கிழக்குமாகாண ஆளுநர் விருது,வாழ்நாள் சாதனையாளர் விருது, இலக்கியஜோதி, இலக்கியச்சுடர், கலாஜோதி, இலக்கிய வித்தகர், பாவலர் போன்ற விருதுகள் குறிப்பிடத்தக்கன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*62 வருட வரலாறு கொண்ட நவ இலக்கிய மன்றத்தின் தலைவராக இருந்து 32 க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர் சாந்தி முகையதீன். 20க்கு மேற்பட்ட கலை இலக்கிய வாதிகளை கௌரவித்தவர், 50 க்கு மேற்பட்ட கவியரங்குகள், பட்டி மன்றங்களை நடத்தியவர், தலைமை தாங்கியவர்.*

*மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை செயலாளராகக் கடமை புரிந்தவர், பாவலர் பண்ணையின் காவலனாக இருந்தவர். ஆயினும், அவருடைய நூல்கள் எதுவும் அச்சேறவில்லை என்பது நமது துர்ப்பாக்கியமாகும். இத்தனைக்கும், இரங்கலும் அரங்கமும், பதச்சோறு உரையிடையிட்ட கவிதை, காரணக் குரிசில், அறநெறியமுதம், இஸ்லாமிய ஆய்வுக் கட்டுரைகள், இஸ்லாமிய நுண் கலைகள் என்ற ஏழு நூல்கள் அவரின் கைவசம் நூலுருப் பெறத் தயாரான நிலையில் இருந்தன.*

*கலை இலக்கிய முயற்சிகளினாலும் செயற்பாடுகளாலும் பல நூல்கள் வெளிவரத் துணை நின்ற சாந்தி முகையதீன் அவர்களின் கலைப்பணி தொடரவேண்டும், அவரின் தயார் நிலையில் உள்ள அனைத்து நூல்களும் விரைவில் வெளிவரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.*

*தமிழன் பத்திரிகை*
***13.11.2022***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் மூத்த, முக்கிய படைப்பாளர், இயல் முனைவர்

## சாஹித்திய ரத்னா டாக்டர் தி. ஞான சேகரன்

*0777306506*

ஈழத்து இலக்கியப் பெருவெளியில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக முனைப்போடு இயங்கி வரும் மூத்த இலக்கிய ஆளுமை, நாவல், சிறுகதை,பத்தி எழுத்து, பயணக்கட்டுரைகள், எழுதுபவராக மட்டுமல்லாது சஞ்சிகை ஆசிரியராகவும் எழுத்தின் பல்வேறு தளங்களில் இலங்கும் குறிப்பிடத்தக்க படைப்பாளி,

இலக்கியத் துறையில் உச்ச விருதுகளைப் பெற்றிருந்த போதும் அத்தோடு நின்று விடாமல் தொடர்ந்தும் ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுவதில் அக்கறை செலுத்துகின்ற காத்திரமான- கனதியான எழுத்தாளர் - டாக்டர்.தி .ஞானசேகரன். இலங்கையர்கோன், சம்பந்தர், சி.வைத்திலிங்கம் போன்ற இலங்கையின் முன்னோடி எழுத்தாளர்களின் அடுத்த கட்டத் தொடர்ச்சியாகப் பார்க்கப்படுபவர்,

1964ல் பிழைப்பு என்ற சிறுகதையை, "கலைச்செல்வி"யில் (இலங்கையில் ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து வெளிவந்த சிற்பி என்ற பிரபலம் பெற்ற மூத்த எழுத்தாளரை ஆசிரியராகக் கொண்டிருந்த காத்திரமான இலக்கிய இதழ்) எழுதியதன் மூலம் இலக்கியப் பிரவேசம் பெற்றவர், செம்பியன் செல்வன்,செ.யோகநாதன்,செங்கை ஆழியான் போன்ற முக்கிய படைப்பாளர்கள் வரிசையில் முக்கியத்துவம் பெற்ற படைப்பாளியாகத் திகழ்பவர், தமிழ்கூறும் நல்லுல கெங்கும் கனதியான இலக்கிய இதழாக அங்கீகாரம் பெற்றிருந்த இந்திய இதழான "கலைமகளி"ல் எழுதியதன் மூலமாக பரந்த தமிழ் இலக்கிய வாசகர்களின்அபிமானத்தை வென்றிருப்பவர்- டாக்டர் தி. ஞானசேகரன். இற்றைவரை 23 நூல்களை அவர் இலக்கிய உலகுக்குத் தந்திருக்கின்றார்.

- வட இந்தியப் பயண அனுபவங்கள் - 2013
- எனது இலக்கியத் தடம் முதலாம் பாகம் 2013
- கா. சிவத்தம்பி - இலக்கியமும் வாழ்க்கையும் (நேர்காணல்) - 2005
- ஞானசேகரன் சிறுகதைகள் (சிறுகதைகள்) - 2005
- அவுஸ்த்திரேலியப் பயணக்கதை (பயண இலக்கியம்)- 1999
- புரிதலும் பகிர்தலும் (நேர்காணல்) - 1999
- அல்ஷேசனும் ஒரு பூனைக்குட்டியும் (சிறுகதைகள்)- 1998
- கவ்வாத்து (குறும் புதினம்) - 1996
- லயத்துச் சிறைகள் (புதினம்) - 1994
- குருதிமலை (புதினம்) - 1979
- புதிய சுவடுகள் (புதினம்) - 1977
- காலதரிசனம் (சிறுகதை)-1973, என்று அந்நூல்களின் பட்டியல் நீளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் என்ற மாதாந்த இலக்கிய இதழை 23 வருடங்களுக்கும் மேலாக இடையறாது நடத்தி வருபவர் அவர்.ஜூலை 2023 வரை 278 இதழ்களை ஞானம் விரித்துள்ளது.

புதிய சுவடுகள், எரிமலை, குருதி மலை, லயத்துச் சிறைகள், கவ்வாத்து என்று , ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்த ஐந்து நாவல்களை டாக்டர் தி.ஞான்சேகரன் தந்திருக்கின்றார். புதிய சுவடுகள், சாதியத்துக்கு எதிரான நாவல் என்ற வகையிலும் யாழ்ப்பாண கிராமிய மண்வாசனையைச் சிறப்பாகக் கொண்டு வந்த நாவல் என்ற வகையிலும் முக்கியத்துவம் பெற்றது. எரிமலை, ஈழப் போராட்டம் பற்றிப் பேசுகின்ற நாவல். "இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகின்ற நாவல் இது. இனப்பிரச்சினை தொடர்பாக முழுமையான பார்வையினை இந் நாவல் தருகின்றது" என்று பேராசிரியர் துரைமனோகரன் இந்நாவல் பற்றிக் குறிப்பிடுவார்..

மலையகத்தில் நீண்ட காலம் வாழ்ந்து, அனுபவித்து அவர் எழுதிய குருதிமலை, கவ்வாத்து, லயத்துச் சிறைகள் என்ற நாவல்கள் மலையக மக்களின் வாழ்வை, தொழில் ரீதியான சுரண்டலை, அரசியலை எடுத்துக்காட்டுவன. மலையக நாவல் இலக்கியத்தின் சிகரமாக அவை போற்றப்படுவதோடு மலையகத்தின் வரலாற்று ஆவணங்களாகவும் பார்க்கப்படுகின்றன. இவற்றில்,குருதி மலை ,புதிய சுவடுகள் என்ற, நாவல்கள் தேசிய சாஹித்ய மண்டலப் பரிசு பெற்றவை. குருதிமலை, கொடகே நிறுவத்தினரால் "தலென யகட" என்ற பெயரில் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப் பட்டது. மதுரை அமெரிக்க மிஷன் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்புக்கு பாடநூலாகவும் வைக்கப்பட்டிருந்த (1992-1993)பெருமையும் இந் நாவலுக்கு உண்டு.

லயத்துச் சிறைகள், கவ்வாத்து என்ற நாவல்கள் மத்திய மாகாண சாஹித்ய விருது பெற்றவை. எரிமலை, கொடகே சாஹித்ய விருதையும்,தமிழ்நாட்டு கரிகாற் சோழன் விருதையும் பெற்றது. இந்நாவல், கொடகே நிறுவத்தினரால் சிங்கள, ஆங்கில மொழிகளிலும் வெளியிடப்பட்டது.

நாவலைப் போலவே சிறுகதைத் துறையிலும் சிறந்து விளங்குபவர் தி. ஞான சேகரன். கனமான கருவுள்ள படைப்புகளைத் தருபவராகவும்,கருவைச் சிதைய விடாது கதையை நகர்த்திச் செல்லும் லாவண்யம் உடையவராகவும்,பல்வேறுபட்ட உத்திகளைத் தனது படைப்புகளில் கையாள்பவராகவும் சிறுகதை உலகில் மதிப்புப் பெற்றிருப்பவர் அவர். காலதரிசனம்,அல்சேஷனும் பூனைக்குட்டியும், ஞானசேகரன் சிறு கதைகள் என்பன அவரின் சிறுகதை நூல்கள். அல்சேஷனும் பூனைக் குட்டியும் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் கலைமாணி பட்டப் படிப்புக்கான பாடநூலாக இருந்து வருகிறது. இவரின் தேர்வு செய்யப்பட்ட 10 சிறுகதைகளை சிங்கள மொழிக்கு மாற்றி "பரதேசி" எனும் பெயரில் கொடகே நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஞானம் இதழினூடாகவும் ஞானம் பதிப்பகம் ஊடாகவும் அவர் ஆற்றியுள்ள தமிழ் இலக்கியப் பணிகள் அறிஞர் பெருமக்களின் நல்லபிப்பிராயத்தைப் பெற்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

600பக்கங்களைக் கொண்ட ஈழத்துப் போர் இலக்கியம் என்ற நூல்,976 பக்க புலம்பெயர் இலக்கிய நூல், 60 இலங்கை எழுத்தாளர்களின் நேர்காணலை உள்ளடக்கிய 1000 பக்கங்களைக் கொண்ட ஈழத்தமிழர் இலக்கிய வெளி என்ற நூல் என்பன ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய வகைமையையும், சஞ்சிகை வரலாற்றில் புதிய உத்வேகத்தையும்,பாய்ச்சலையும் ஏற்படுத்தியவை. இவற்றோடு நில்லாது அவர் ஆற்றிய சஞ்சிகை, பதிப்பக அரும்பணிகளால் 35 க்கு மேற்பட்ட புதிய எழுத்தாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். சான்றோர் கௌரவிப்பு, இலக்கிய விழாக்கள். நூல்கள் வெளியீடு என்பன இடம்பெறுகின்றன.

டாகடர் தி ஞானசேகரன், அவரின் வட இந்திய, அவுஸ்திரேலிய, லண்டன் ஐரோப்பிய, கனடா, பயணங்களை ஒட்டியதாக இலக்கியச் சுவை மிகுந்த ஐந்து பயணக் கட்டுரை நூல்களை தந்திருக்கின்றார் . பல்துறை எழுத்தாளர் டாக்டர் ஞான சேகரனின் நாவல், சிறுகதை, பயண இலக்கியம்,இதழியல்,பத்தி எழுத்து,பதிப்பக முயற்சி என்பவை தனித்தனியாகப் பிரித்து, முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டியவை. இலக்கிய உலகில் அவர் பெற்றிருக்கின்ற விருதுகள் பட்டங்கள் அநேகம். கலா பூஷணம், சாகித்திய ரத்னா, இயல் முனைவர் என்ற இலங்கையின் உச்ச விருதுகளோடு 35க்கும் மேற்பட்ட விருதுகளையும் பட்டங்களையும் அவர் பெற்றிருக்கின்றார். கொழும்பு தமிழச்சங்கம்,இலங்கை கலாசாரத் திணைக்களம், தேசிய சாஹித்ய மண்டலம் போன்றவை அவரைக் கௌரவித்து உயர் விருகளையும் பட்டங்களையும் வழங்கியுள்ளன. மல்லிகை, கொழுந்து, படிகள், அகமதி, மண், ஏழைதாசன் போன்ற சஞ்சிகைகள் அவரைக் கௌரவித்து , முகப்பட்டையில் அவரின் படத்தைப் பிசுரித்துள்ளன.

சாஹித்ய ரத்னா டாக்டர் தி. ஞானசேகரன், யாழ் புன்னாலைக் கட்டுவனில் து.தியாகராசா ஐயர்- பாலாம்பிகை தம்பதியின் மகனாக 1941ல் பிறந்தவர். யாழ்புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்ப் பாடசாலை,புன்னாலைக் கட்டுவன் மெதடிஸ்த ஆங்கில பாடசாலை,உரும்பராய் இந்துக் கல்லூரி,இலங்கை மருத்துவக் கல்லூரி,பேராதனைப் பல்கலைக் கழகம் என்பவற்றில் கல்விகற்றவர். மலையகத்தில் மருத்துவராக நீண்ட காலம் கடமையாற்றியவர். பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பட்டதாரி பட்டமும் பெற்றவர்.அகில இலங்கை சமாதான நீதிபதி. மனைவி- எழுத்தாளர் ஞானம் ஞானசேகரன். மகன்- ஞானம் நிர்வாக ஆசிரியர் ஞா. பாலச்சந்திரன். அமுத விழாக்கண்ட ஈழத்தின் தமிழ் இலக்கிய அடையாளம்,சாஹித்ய ரத்னா ,இயல் முனைவர் டாக்டர் தி. ஞான சேகரன் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்தோடு வாழ்ந்து தமிழ் இலக்கியப் பணி புரிய வேண்டும், அவர் நூற்றாண்டு விழாவும் கண்டு மகிழ்ந்து தொடர வேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
**16.07.2023**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலும் அனுபவமும் நிறைந்த மூத்த
கலை இலக்கிய ஆளுமை, நிர்வாகி

## உடுவை எஸ். தில்லை நடராஜா

*0718676498*



இலங்கையின் ஆற்றல் மிக்க மூத்த எழுத்தாளராகவும், இலங்கை நிர்வாக சேவையின் மதிப்புமிகு மேலதிகாரியாகவும் தனது ஆளுமைகளை அடையாளப் படுத்திப் பெருமை சேர்த்திருப்பவர் உடுவை எஸ். தில்லை நடராஜா. ஆறு தசாப்தங்களுக்கு மேற்பட்ட எழுத்துலகப் பரிச்சய முடைய மனிதாபிமானப் படைப்பாளியாகவும், இலங்கை நிர்வாக சேவையில் மூன்று தசாப்த காலம் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் தியாகவுணர்வோடு மக்கள் சேவகனாகப் பணியாற்றிய மேலதிகாரியாகவும் மதிப்புப் பெற்றிருப்பவர் அவர்.

"படிக்காத அப்பா படிப்பித்த பாடங்களால்" மனித நேயம் கற்றுக் கொண்ட மைந்தன், மாவட்ட அரசாங்க அதிபர்,அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்,பணிப்பாளர் என்று உயர்ந்த பதவி அந்தஸ்துகளைப் பெற்றிருந்த போதும் சாதாரணனாய் வாழ்வதில் மகிழ்ந்த பண்பாளன்- உடுவை எஸ் தில்லை நடராஜா.

யாழ்ப்பாண நகரிலிருந்து 22 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் உடுப்பிட்டி என்ற கிராமத்தில் சிங்காரம்பிள்ளை - இராசாம்பாள் தம்பதியின் மகனாக 1947ல் பிறந்தவர். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி என்பவற்றில் கற்றவர். கல்லூரிக் காலத்தில் இருந்தே நாடகம்,எழுத்து என்பவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தவர். சுதந்திரன், ராதா, ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் சிறுவர் தொடர்கதைகள் எழுதி எழுத்துலகப் பிரவேசம் பெற்றவர்.1967ல் இலங்கை வானொலியில். எஸ்.கே. பரராஜசிங்கம் தயாரித்தளித்த ஒலிமஞ்சரியில் "நிர்வாணம்" என்ற அவரின் சிறுகதை ஒலிபரப்பாகிற்று. சாஹித்ய ரத்னா கே.எஸ் சிவகுமாரனால் வாசிக்கப்பட்ட அச் சிறுகதையின் மூலம் சிறுகதை உலகில் தனித்துவமான ஒரு இடத்தைப்பெற்றுக் கொண்டு தொடர்ந்தவர் அவர். தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகைகள் அவரின் சிறுகதைகளை விரும்பிப் பிரசுரித்தன.

உடுவை தில்லை நடராஜா, நிஜ உலகை மறந்து கற்பனை உலகில் மிதந்து கருக்களைத் தேடிக் கதைகள் படைப்பவரல்ல. மனித வாழ்வியல் கோலங்களை, அனுபவத்தை கண்முன் நடப்பவற்றைக் கதையாகத் தருபவர். யதார்த்தத்திற்கு நெருக்கமாக எழுதுகின்ற படைப்பாளியாக இலக்கிய உலகில் பெயர் பதித்திருப்பவர். 1991 ல் அவருடைய 12சிறுகதைகளைத் தாகம் நிறுவனம் "நிர்வாணம்" என்ற பெயரில் தொகுத்து வெளியிட்ட போது, இந்திய இலக்கிய அமைப்பு, உலக சிறுகதைகளோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடக் கூடிய சிறுகதைகளைத் தருபவராக அவரைப் பாராட்டிப் பரிசளித்ததையும் அந்நூல் பல தடவைகள் மீள்பிரசுரம் செய்யப்பட்டதையும் அவரின் புனைகதை ஆற்றலுக்குச் சான்றாக இலக்கிய மதிப்பீட்டாளர்கள் எடுத்துரைப்பர்.

25க்கும் மேற்பட்ட நூல்களை இலக்கிய உலகத்திற்கு வழங்கிச் சிறப்புச் சேர்த்துள்ளவர் மூத்த எழுத்தாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா. கடற் கன்னி, மந்திரக் கண்ணாடி, நம்பிக்கையுடன் நிம்மதி நாடும் யாழ்ப்பாணம், கல்யாணம் முடித்துப் பார், புதிய கதையின் ஆரம்பம், அப்பக் கடை நடக்கிறது, பேசும் பேனா, நல்ல நல்ல கதைகள், நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம், நல்லை நகர் நாவலர் சைவத்தின் காவலர், நிர்வாணம், அப்பா, முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் என்று நூல்களின் பட்டியல் நீளும்.

அவற்றில் சில ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. சில நூல்கள் மீள்பதிப்புக்கள் கண்டுள்ளன. பட்டங்கள் விருதுகள், என்று நிறையவே பெற்றிருப்பவர் அவர். கலை இலக்கியச் செல்வர், உடுவை வித்தகர், நிறைதமிழ், தமிழியல், தமிழ்மணி, கலைமணி என்று பல பட்டங்கள் பலநாடுகளில் இருந்தும் அவருக்குக் கிடைத்துள்ளன. இலங்கையில் ஜனாதிபதியின் கலாகீர்த்தி விருது உட்பட பல முக்கிய இலக்கிய விருதுகள் அவரை நாடிவந்துள்ளன.

உலகெல்லாம் பரந்து வாழும் தமிழ் வாசகர்களின் அழைப்பை யேற்று 20 நாடுகளுக்கு மேல் கலை இலக்கியப் பயணம் சென்றிருப்பவர் .அங்கு, கனடா உதயன் பத்திரிகை, உலக புத்தக தினக் கொண்டாட்டத்தில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட அவருக்கு சர்வதேச விருது வழங்கியது. லண்டன் பூபாளராகம் ,5 வருடங்கள் தொடர்ந்து விருந்தினராக அழைத்து சர்வதேச விருது வழங்கியது. இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம், அவரின் அப்பா நூலில் வரும் "படிக்காதவர் படிப்பித்த பாடங்" களைப் பார்த்துவிட்டுப் பாராட்டிக் கடிதம் அனுப்பி இருந்தார்.

இவ்வாறெல்லாம் பல புகழாரங்களையும் பட்டங்களையும் பெற்றிருந்த போதிலும் "தில்லை" என்று அழைப்பதையே அதிகம் விரும்புபவர் மூத்த எழுத்தாளர் தில்லை நடராஜா. மேடை நாடக நடிகராகவும் எழுத்தாளராகவும் புகழ் பூத்திருந்த அவர், படித்த பாடசாலைக்காகவும், வவுனியா குருமன்காடு கலைமகள் சனசமூக நிலையத்திற்காகவும், இறம்பைக்குளம் கிறிஸ்தவ தேவாலயத்துக்காகவும், நண்பர்களோடு சேர்ந்து நாடகம் நடித்து பல லட்ச ரூபாய் சேர்த்துக் கொடுத்ததையும் ,கடற்கன்னி என்ற தனது சிறுவர் கதைகளை நூலாக்கி வெளியீடு செய்து, விழா மேடையில் கிடைத்த நாலரை இலட்சரூபா பணத்தை இறம்பை மகளிர் கல்லூரிக்குக் கொடுத்ததையும் தனது கலை, இலக்கிய வாழ்வின் மகிழ்ச்சி தரும் நிகழ்வுகளாக நினைவு கூர்கிறார்.

கலை இலக்கியத் துறையில் மட்டுமல்லாது அவருடைய ஆற்றல்களும் ஆளுமையும் பல் துறையிலும் விதந்துரைக்கப்படுவதுண்டு. அரச ஊழியராகவும், அரச நிர்வாகத்துறையிலும் இலங்கியவர் அவர். பொது முகாமைத்துவ உதவியாளராகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிப்பரீட்சை மூலம் 1967ல் அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்டு,பொலிஸ் தலைமையகத்திலும், கல்கிசை, வவுனியா,யாழ்ப்பாணம் , நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்த பொலிஸ் காரியாலயங்களிலும் கடமையாற்றியவர். 1978 ல் போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்று இலங்கை நிர்வாக சேவையில் (SLAS), நியமனம் பெற்று ,ஆரம்பத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளராக மட்டக் களப்பில் பணியாற்றி பின்னர் மன்னாரில் பணியாற்றி தொடர்ந்து வவுனியாவில் பணியாற்றும்போது, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பணியாற்றும் படி பணிக்கப்பட்ட போதும் எதுவித மறுப்பும் இல்லாமல் மூன்று மாவட்டங்களிலும் கடமையாற்றியவர்.

1983ன் நடுப்பகுதியில் ஏற்பட்ட நாட்டு நிலைமை காரணமாக பல உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமூகமளிக்காத போது தில்லைநடராசா, கூட்டுறவு உதவி ஆணையாளராக மாத்திரமன்றி உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, சமூக சேவைகள் உதவிப்பணிப்பாளர் வறுமை நிவாரண உதவி ஆணையாளர் அவசரகால புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டப் பணிப்பாளர் முதலிய பல பதவிகளையும் ஏக காலத்தில் வகித்தவர்.

1992 இல் வவுனியா அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட அவர்,ஆற்றிய பணிகள் மக்களினதும் அரச ஊழியர்களினதும் நன்மதிப்பைப் பெற்றவை.

வவுனியாவில் ஆயிரம் வீடுகளை அமைத்து தேவையானோருக்கு வழங்கியமை., தாண்டிக்குளம் ,புகையிரத நிலையம்,அஞ்சல் அலுவலகம் என்பவற்றைப் புதிதாக நிர்மாணம் செய்து இயங்கச் செய்தமை, செட்டிக்குளம் பிரதேச செயலகம்,விடுதி என்ப வற்றைப் புதிதாக நிர்மாணம் செய்து கையளித்தமை. யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து இந்தியாவில் பிள்ளைகளும் பெற்று வாழ்ந்த 81 தம்பதியரை வரவழைத்து ஒரே நாளில் பதிவுத் திருமணம் செய்து வைத்தமை என்பன அப்பணிகளில் சிலவாகும்.

கிளிநொச்சி அரச அதிபராக அவர் இருந்தபோது,யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாக அவர் BBC தமிழோசைக்கு வழங்கிய நேர்காணல் பலருடைய நெஞ்சங்களையும் கசிய வைத்ததை இன்றும் அப்பகுதி மக்கள் ஞாபகப்படுத்துவர்.

வடக்கு கிழக்கு மாகாண கடற்றொழில் பணிப்பாளராக கடமையாற்றிய வேளையில், கண்ணாடிப் படகு,கரைவலை போன்றவற்றை திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மீனவர்கள் பயன்பெறுமாறு வழங்கியவர், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக இருந்தபோது,முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்அவர்கள் நினைவாக தமிழ்த் தின விழாக்களை வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் நடத்தியவர், கொழும்பில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக இருந்தபோது எழுத்தாளர்களின் நூல்களில் 500 பிரதிகளை அமைச்சின் மூலம் கொள்வனவு செய்து எழுத்தாளர்களை ஊக்குவித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கடமைகளுக்கு மேலதிகமாக, திரைப்பட தணிக்கை சபை உறுப்பினர், அரும்பொருட் காட்சியகக் குழு உறுப்பினர், பாடநூல் வெளியீட்டுக் குழு உறுப்பினர், கலைக்கழக நாடகக் குழுத் தலைவர், தேசிய நூலக ஆவணவாக்கல் குழு உறுப்பினர், தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு சபை உறுப்பினர் என்று பல முக்கிய சபைகளில அங்கம் வகித்துச் சேவையாற்றியவர் .

பதவிகளின் மூலம் தமக்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு சிறந்த சேவையாற்றுபவராகவும் பதவிகளைத் தன்பணிகளால் அலங்கரிப்பவராகவும் கண்ணியம் பெற்றிருப்பவர் அனுபவம் மிக்க மூத்த நிர்வாகி, உடுவை எஸ் தில்லைநடராஜா. அரச பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், தற்போது Trasparancy international integrity யின் நடுவர் குழு உறுப்பினராக பணியாற்றி வருகின்றார்.

நிறைநலத்தோடு இன்னும் பல்லாண்டு அவர் வாழவேண்டும் அவருடைய கலை,இலக்கிய அனுபவங்கள், பயண அனுபவங்கள், நிர்வாக சேவை அனுபவங்கள் என்பன புதியவர்களும், பயன்பெறும் வகையில் எழுத்துருப்பெற வேண்டும் என்பவையே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக இருக்கின்றன.

*தமிழன் பத்திரிகை*
***30.07.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துலகம் மதிக்கும் "இதயக் கனி"



## எஸ்.ஐ. நாகூர்கனி

*0770803634*

ஈழத்துப் பத்திரிகை வரலாற்றில் எஸ. டீ. சிவநாயகம் என்ற பெயர் பிரபலம் மிக்கது. தினபதி, சிந்தாமணி சூடாமணி போன்ற பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகக் கோலோச்சிய எஸ் டீ சிவநாயகம் ஆற்றிய பணி இலக்கிய உலகிலும் பத்திரிகை உலகிலும் இன்றும் அதிகம் பேசப்படுகின்றது. ஈழத்தின் பத்திரிகை ஜாம்பவானாகக் கருதப்பட்ட அவர், பத்திரிகை உலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்த பத்திரிகையா ளர்களையும் கதைஞர்களையும்,காப்பியக்கோக்களையும் வளர்த் தெடுத்தார் என்பது வரலாறு. அந்த ஜாம்பவானின் இதயக்கனியாக வளர்த்தெடுக்கப் பட்ட ஒருவர் எஸ்.ஐ. நாகூர்கனி.

நாகூர் கனி கதைஞர் ,கட்டுரையாளர் , கவிஞர் நாடகாசிரியர், பத்திரிகையாளர், வானொலி, தொலைக் காட்சி மேடைக் கலைஞர் -பல் துறை விற்பன்னர். ஆயினும் ஒரு பத்திரிகையாளனாக எஸ். ஐ. நாகூர்கனியின் பங்களிப்புப் பலராலும் விதந்துரைக்கப் படுவதுண்டு.

ஈழத்தில் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டிராத துப்பாய்வு (Investigative journalist), துருவாய்வு (Probe journalist) பத்திரிகையாளராக இருந்து முஸாபிர் என்ற பெயரில் கட்டுரைகளைத் தந்தவர் எஸ்.ஐ.நாகூர்கனி.

"இவ்விருவகை கட்டுரைகளையும் தருவதற்கு கட்டுரையாளருக்கு மிக மிக துணிவு வேண்டும் யாரையும் பகைத்துக் கொள்வோமே என்ற அச்சம் சற்றும் இல்லாத, உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் ,அதன் மூலம் மக்கள் சரியான வழியில் நடக்கத் துணை புரிய வேண்டும். முசாபிர் என்ற பத்திரிகை எழுத்தாளனுக்கு அத்தகைய ஆணித்தரமான எழுத்தாற்றலும் நேர்மையும் அசகாய துணிச்சலும் இருந்ததனால் தான் அவர் மூன்றாண்டுகளாக சிந்தாமணியில் புதுமையான துறையில் எழுதிய சமுதாய கட்டுரைகள் அனைவருடைய கவனத்தையும் கவர்ந்ததோடு படிப்போரின் அபிமானத்தையும் பெற்றன" என்று எஸ்.ஐ. நாகூர்கனியை சிலாகித்துக் கூறுவார் தினபதி சிந்தாமணி பத்திரிகை ஆசிரியர் எஸ்.டீ சிவநாயகம்.

நாகூர் கனி 1963ல் தினகரன் பாலர்கழகம் பகுதியில் "கல்வி கற்றல்"எனும் தலைப்பிலான மரபுக் கவிதை எழுதியதன் மூலம் எழுத்துலகில் நுழைந்தார். தமிழ்ச்செல்வன், முஸாபிர், முஸல்மான், அமுதன், இதயக்கனி, இப்னு இஸ்மாயில், நிஹார் மணாளன்,சதுர்ச் செல்வன் என்ற புனை பெயர்களில் எழுதிய அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்கள் தினகரன், வீரகேசரி தினபதி, சிந்தாமணி, சூடாமணி நவமணி, தினக்குரல், காங்கிரஸ், செய்தி, சுதந்திரன் தொழிலாளி முஸ்லிம் குரல்,சுடரொளி போன்ற ஈழத்து பத்திரிகைகளிலும்,திருமுகம் ,மல்லிகை,மாணிக்கம்,அல்மதீனா தாரகை, இளம்பிறை,பூபாளம் போன்ற ஈழத்து சஞ்சிகைகளிலும் ஆனந்த விகடன்,தினமணி,மதிநா,மணிச்சுடர்,தமிழ்நேசன் போன்ற வெளிநாட்டு ஏடுகளிலும் வெளிவந்து அவரின் படைப்பிலக்கிய ஆற்றலைப் பறை சாற்றின.

ஆறு தசாப்தங்களுக்கும் மேலான அவருடைய எழுத்துப் பணியில் பின்வரும் நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

1. தூரத்து பூபாளம் (சிறுகதை தொகுதி -1983 )
2. அவள் நெஞ்சுக்குத் தெரியும் (நாவல் -1986 நவ எழுத்தாளர் தேசிய கவுன்சிலின் பரிசு பெற்ற நாவல்)
3. எஸ்.ஐ. நாகூர் கனி ஒரு வெள்ளிவிழாப் பார்வை (எழுத்தாக்க தொகுப்பு நூல் 1989)
4. காலத்தின் சுவடுகள் (சமூக விமர்சனத் தொகுப்பு நூல் 1993 )
5. நன்றி மறப்போம்( பயின்ற பாடசாலையின் பெயர் மாற்ற வரலாறு)

பத்திரிகை, இலக்கியத்துறை சாதனைக்காகப் பல விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளவர் எஸ்.ஐ. நாகூர்கனி.

1. சத்திய எழுத்தாளர் ( Katib -ul-haq)- 1991இல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள ராஜாங்க அமைச்சு நடத்திய முதலாவது வாழ்வோரை வாழ்த்துவோம் நிகழ்வில் இப் பட்டம் வழங்கப்பட்டது
2. சமுதாய எழுத்தாளர் -1994 இல் தமிழ்நாடு தஞ்சை மாவட்டம் அய்யம் பேட்டையில் ரஹீம் டிரஸ்ட் நடத்திய 15-ஆவது திருக்குர்ஆன் மாநாட்டில் இப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது
3. சமுதாய காவலர் - 1996 இல் இரத்தினபுரியில் உள்ள அகில இலங்கை நல்லுறவு ஒன்றியம் நடத்திய கலை இலக்கிய சமூகப் பணியாளர் பட்டமளிப்பு விழாவில் இப் பட்டம் வழங்கப்பட்டது
4. 2007 இல் கலாசார அமைச்சு கலாபூஷணம் பட்டம் வழங்கிக் கௌரவித்தது..

உண்மையில், நாகூர் கனியின் பத்திரிகை, வானொலி தொலைக் காட்சி இலக்கியப் பணிகள் தனித்தனியாக ஆய்வுக்குட்படுத்தப் படவேண்டியவை.

1. தினபதி சிந்தாமணி பண்ணையின் பத்தி எழுத்தாளனாக 1966 முதல் 1990 வரை அவர் ஆற்றிய பணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. டைம் ஆப் சிலோன் நிறுவனத்தின் தமிழர் தினசரி ஈழமணியின் ஆரம்ப முதல் முடிவு வரை பத்தி எழுத்தாளனாகவும் தொடர்ந்து சில மாதங்கள் வெளியான சுமதி வாராந்திரியில் இப்னு இஸ்மாயில் என்ற பெயரில் முஸ்லிம் பகுதி பொறுப்பாசிரியராகவும் அவர் ஆற்றிய பணி.

3. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்ட அதன் கொள்கை பரப்பு இரு வாராந்தரியான காங்கிரஸ் ஏட்டின் செயல்பாட்டு ஆசிரியராக 1989 முதல் 1998 வரை அவர் ஆற்றிய பணி .

4. குணசேன நியூஸ் பேப்பர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் வாராந்தரி ஏடான சூடாமணியில் 1995 முதல்1997 வரை கட்டுரையாசிரியராக அவர் ஆற்றிய பணி

5. பிரீலங்கா நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் வார ஏடான நவமணியில்1999 முதல் 2000 வரை பத்தி எழுத்தாளராக முஸல்மான் என்ற பெயரில் அவர் ஆற்றிய பணி.

6. முஸ்லிம் குரல் சமூக வார இதழில் முல்லா என்னும் புனை பெயரில் அவர் சமூகப் பிரச்சினைகளைத் தொட்டு எழுதிய கட்டுரைப் பணி.

7. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் இரண்டரை வருடங்கள் தொடர்ச்சியாக "ஊடுருவல்" என்ற சமூகச் சித்திரத்தைச் செய்து புரிந்த சாதனை.

8. இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் "கதவோரம்" சமூக நாடக நிகழ்வினை மாதாந்தம் பிரதி ஆக்கம் செய்து 8 மாதங்கள் பங்களித்து ஆற்றிய பணி.

இவற்றோடு

1. இலங்கையில் தலைநகரில் கவிதை அமைப்பேதும் இல்லாத 1981ல் கவிதை அமைப்பொன்றை நான்கு அமைப்பாளர்களோடு சேர்ந்து வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) என்ற பெயரில் அமைத்தது.

2. "இப்போ எல்லாம் சகளுங்க" என்ற அவரின் முதல் நாடகம் தேசிய நாடக விழாவில் 2005ல் முதல் பரிசு பெற்று,பலதடவை அரங்கேற்றப்பட்ட நிகழ்வுகள் என்பனவும் குறித்துரைக்கப்பட வேண்டியவை.

தலைநகரில் தமிழ் வளர்த்த மண்ணாகப் பெயர் பெற்றிருப்பது வாழைத்தோட்டம் (குணசிங்கபுர). இலங்கையின் முதல் செய்திப் பத்திரிகையான தினத் தபால்(1928), உட்பட தோழன் ,முஸ்லிம் லங்கா, இஸ்லாமிய தாரகை, இன முழக்கம் , ராதா, தினபதி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகள் இங்கிருந்துதான் வெளிவந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்.எம்.பீ. முகையதீன் என்ற புகழ்பூத்த முற்போக்கு எழுத்தாளர் உட்பட பல நாடகக் கலைஞர்கள், பாடகர்கள், எழுத்தாளர்கள் பிறந்து வாழ்ந்த மண்ணிது. செய்யது இஸ்மாயில் நாகூர்கனி என்ற முழுப்பெயர் கொண்ட எஸ் ஐ. நாகூர்கனியும் தமிழ்வளர்த்த இஸ்லாமியர்கள் வாழும் வாழைத்தோட்டத்திலேயே பிறந்தார்.அவர் கொழும்பு ஸாகிறா கல்லூரியின் பழைய மாணவர்..இலங்கைப் பல்கலைக் கழக கொழும்பு வளாகத்தில் Diploma in journalism *(1998)* சித்தியடைந்தவர். திருமணமாகி நான்கு பிள்ளைகளின் தந்தை. நாகூர்கனி ஈழத்தின் பிரபலம் மிக்க மூத்த எழுத்தாளர். கலைஞர்களை நேசிப்பவர். சமூக நலன் விரும்புகின்ற படைப்பாளி. அவரின் நற்குணத்தை பலரும் வியந்துரைப்பர்.பிற படைப்பாளர்களின் எழுச்சியிலும் உதவுபவர் அவர்.

“துரோணரென எனக்கமைந்த தமிழின் மேதை எஸ்டி சிவ நாயகரை கண்ணால் காணக் கருவானார் நம்பி நாகூர் கனியென் வாழ்வில் கடைசி வரை மறக்க வொண்ணா நன்றிக் கானோன். உரிமை கொண்டார் என்னுயர்வில் மறுக்க லாகா” என்று நாகூர்கனியைப் போற்றுவார் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன்.

“கனியிலா வாழ்வினைக் கற்பனை செயின்நான் துணியிலா மனிதனாய் துடித்தலே காண்கிறேன் மகிழ்வுடன் இன்றெலாம் மக்களின் வளமொடும் நிலமிதில் வாழ்வதை நினைப்பதோர் ஆண்மையே எழுத்திலும் உரையிலும் இழுக்கிலா வாழ்விலும் பிறர்க்குறு துணையிலும் பேணுதல் மிக்கவன் வாழ்தலே வாழ்வென வரித்ததாற் பல்லாண்டு வாழுவன், வாழுவன் வாழ்கவே,வாழ்கவே! ” என்று அவரை வாழ்த்துவார் தமிழ்மாமணி அல் அசூமத். தேக நலம் பெற்று இன்னும் பல்லாண்டு அவர் வாழ்ந்து பவள விழா , நூற்றாண்டு விழாக்களைக் கண்டு களிக்க வேண்டுமென நாமும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

தமிழன் பத்திரிகை
***04.06.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியலை முன்னிலைப்படுத்தும் அனுபவமிக்க படைப்பாளி

# குப்பிழான் ஐ. சண்முகன்

*0776158894*



அனுபவம் மிக்க எழுத்தாளராக, மூத்த இலக்கிய ஆளுமையாக ஈழத்தின் இலக்கியப் பெருவெளியில் முக்கியத்துவம் பெற்றிருப்பவர் குப்பிழான் ஐ. சண்முகன். அழகியல் சார்ந்த படைப்புகளை, கலைத்துவ நுட்பத்தோடு தருகின்ற தனித்துவமான படைப்பாளியென்ற அடையாளம் அவருக்கு உண்டு.

**1965**ல் க.பொ.த உயர்தரம் கற்கும் காலத்தில் இருந்தே எழுத்துலகில் நுழைந்த அவர், கலாபூர்வமான கதைசொல்லியாக,யாப்பறிந்த பாவலராக, ஆன்மீகச் சொற் பொழிவாளராக, திறனாய் வாளராக, பத்தி எழுத்தாளராக, நாடக, ,திரைப்பட விமர்சகராக நன்கு அறியப்பட்டிருப்பவர். ஆரம்ப காலத்தில் ,யாழ் கலை இலக்கிய நண்பர் கழகத்தின் உறுப்பினராக இருந்து கலை இலக்கிய ஆற்றலைப் புடம் போட்டுக் கொண்டவர்.

பிற்காலத்தில் சிறந்த கலை,இலக்கிய வாதிகளாகப் பிரகாசித்த , மாவை நித்தியானந்தன், ஆ.மகாதேவன், வே.தேவதாசன்,சிவஞான சுந்தரம்,சிலோன் விஜயேந்திரன், பூ.செல்லத்துரை என்பவர்களை நண்பர்களாகக் கொண்டிருந்தவர். அவர்களோடு இணைந்திருந்து இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்தவர் "இலக்கிய இன்பம்" என்ற கையெழுத்து சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து **12** இதழ்களை வெளியிட்டவர்.

ஈழத்தின் இலக்கிய முதுசங்களாகப் பெயர் பதித்திருந்த கனக செந்தி நாதன், கவிஞர் அம்பி,டொமினிக் ஜீவா,நாவேந்தன், இ.நாகராஜன் போன்றவர்களோடு ஏற்படுத்திக் கொண்ட இலக்கியச் சந்திப்புகள், பேராசிரியர் கா.சிவத்தம்பி,கவிஞர் முருகையன், கே.எஸ். சிவகுமாரன் போன்றவர்களோடு நடந்த இலக்கியக் கலந்துரையாடல்கள் என்பன தனது இலக்கிய முயற்சிகளுக்கு உத்வேகமளித்ததாக நன்றியோடு நினைவு கூருபவர்.

ஆறு தசாப்த கால இலக்கியப் பயணத்தில் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் சஞ்சி கைகளிலும் ஆக்கங்களை தந்திருப்பவர் அவர். செய்நேர்த்தி மிக்க படைப்புகளுக்கு எடுத்துக் காட்டாக அவரின் படைப்புகளை இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். சிறுகதைகள், கவிதைகள், பத்தி எழுத்துகள் என்று பல்துறை சார்ந்தும் ஏழு நூல்களை அவர் படைத்தளித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கோடுகளும் கோலங்களும்- சிறுகதை.அலை வெளியீடு1975
2. சாதாரணங்களும்,அசாதாரணங்களும் -சிறுகதை. நர்மதா வெளியீடு (இந்தியா)1984.
3. அறிமுகங்கள், விமர்சனங்கள்,குறிப்புகள்- பத்தி எழுத்து. நிகரி வெளியீடு.2003
4. உதிரிகளும்........... - சிறுகதை.புதிய தரிசனம் வெளியீடு.2005.
5. பிரபஞ்ச சுருதி- கவிதை.சித்தம் அழகியார் வெளியீடு.2014.
6. ஒரு பாதையின் கதை- சிறுகதை. காலச்சுவடு வெளியீடு(இந்தியா)2012.
7. ஒரு தோட்டத்தின் கதை- சிறு கதை.ஜீவநதி வெளியீடு.2018

கலை, இலக்கிய ஆத்மீகப் பணிகளுக்காக அவர் பெற்றிருக்கின்ற விருதுகள் பல.

அரச கலை இலக்கிய உயர் விருதான "கலாபூஷண" விருது, பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம் வழங்கிய "சங்கச் சான்றோன்"விருது, வடமாராட்சி வலய கல்வித் திணைக்களம் வழங்கிய "கலை வாரிதி" விருது, குப்பிழான்- சிங்கப்பூர் திரு. கந்தையா கிருஷ்ணன் நல்லுறவு மன்றம் வழங்கிய "சமூக திலகம்" விருது, குப்பிழான் சிவபூமி அறக்கட்டளை வழங்கிய "இலக்கிய ஞான ஜோதி"விருது என்பன அவற்றுட் சில.

கொழும்பில் கடமையாற்றிய காலத்தில், கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தில் அங்கம் வகித்ததோடு, மாவை நித்தியானந்தன், அ.யேசுராசா, நெல்லை க.பேரன்,தில்லைக்கூத்தன், ஐ.சாந்தன், ஸ்ரீரீரத சர்மா, இராஜி இராச கோபாலன், இராசேந்திரம் போன்ற நண்பர்களோடு இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர் குப்பிழான் ஐ.சண்முகன். "அலை" என்ற மாற்று இலக்கிய சஞ்சிகையை நண்பர்க ளோடு சேர்ந்து வெளியிட்டதோடு, அதன் இணை ஆசிரியர்களில் ஒருவராகவும் 12 இதழ்கள் வரை இயங்கியவர்.

"புறச் சூழலையும்,நிகழ்வுகளையும் தனது படைப்புகளில் நுட்பமாகப் பதிவு செய்பவராயினும் அடிப்படையில் அவர் ஓர் அகமியவாதி.ஆத்மீக நம்பிக்கைகளும், மெல்லுணர்வுகளும், இரசனைத் திளைப்பும் கொண்டவர்.இலக்கியவாதிகளிடையே பரவலாகக் காணப்படும் "ஹீரோத்தன" மேட்டிமைத் தன்மைகள் இல்லாதவர். அடக்கமும், ஒதுங்கும் தன்மையும் கொண்டவர்" என்று எழுத்தாளர் அ.யேசுராசா, குப்பிழான் ஐ சண்முகன் பற்றிக் குறிப்பிடுவார்.

அவருடைய கதைகள் குறித்த பார்வைகள் இலங்கையின் பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. "மொழிக்கும்,வடிவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து அழகியலை முன்னிலைப்படுத்திய படைப்பாளர்களில் ஒருவராக குப்பிழான் ஐ.சண்முகன் இருக்கிறார். தனிமனித உறவுகளையும்,உறவுச் சிக்கல்களையும்,அக உலகையும் பேசுவதிலும்,அதற்கான மொழி நடையைக் கையாண்டு,அழகியல் ரீதியான ஒரு இலக்கியச் செல்நெறியை உருவாக்கிய இலக்கியமுன்னோடிகளில் ஒருவராகவும் அவர் திகழ்கிறார்"என்று ஜீவநதியில் அருண்மொழி வர்மனும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழத்தின் மூத்த கதை சொல்லிகளில் ஒருவரான குப்பிழான் ஐ.சண்முகன்,திரைமொழி ,ஒளிப்பதிவு பற்றிய பிரக்ஞை உள்ளவர். அவரின் அநேகமான கதைகளில் அவர் காட்சிகளை தேர்ந்த ஒளிப்பதிவாளன் போன்று நகர்த்தி இருப்பதை அவதானிக்க இயலும்" என்று இணைய சஞ்சிகையில் அனோஜன் பாலகிருஷ்ணனும் குறிப்பிடுவர்.

குப்பிழான் ஐ. சண்முகன் கவிதைகளாலும் இலக்கிய உலகில் பேசப்படுபவர். "குப்பிழான் ஐ.சண்முகனின் கவிதைகள் எல்லாமே யாப்பமைதிக்குட்பட்ட மரபு வழி வந்தவை. அனுபவங்களைக் கவிதையாக்குபவர் அவர். நித்திரையை ஒரு பெண்ணாக உருவகித்துப் பாடுகிறார். கனவில் பூம்புகாரில் உலா வருகின்றார். அவருக்குச் சேவையாற்றிய தாதிகளைப் பாடுகின்றார். பேராதனை முருகனுக்கு ஆற்றுப்படை படிக்கின்றார்." என்று "பிரபஞ்ச சுருதி" என்ற அவரின் கவிதை நூல் குறித்து, கருத்துக் கூறிய கவிஞர் த..ஜெயசீலன் குறிப்பிடுகின்றார்.

குப்பிழான் சண்முகன் சிறந்த சொற்பொழிவாராகவும் நன்மதிப்புப் பெற்றிருப்பவர். ஆச்சிரமங்களிலும், கோயில்களிலும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துபவர். நூல் அறிமுகக் கூட்டங்களில் உரையாற்றுபவர் இரசனைக் குறிப்புகள் தருபவர். திரைப்பட, நாடக விமர்சனங்களை வழங்குபவர். வானொலியில் இலக்கியக் கலந்துரையாடல்களில் ஈடுபடுபவர்.

ஐயாத்துரை சண்முகலிங்கம் என்ற இயற்பெயரை உடைய அவர், குப்பிழானில் தம்பையா ஐயாத்துரை- இரத்தினம்மா ஐயாத்துரை தம்பதியின் மகனாக1946ல் பிறந்தவர். குப்பிழான் விக்கினேஸ்வரா வித்தியாலயம், புன்னாலைக் கட்டுவன் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி என்பவற்றில் கற்றவர். இலங்கைப் பல்கலைக் கழக( கொழும்பு,கண்டி) கலைப்பட்டதாரி, யாழ் பல்கலைக் கழக கல்வி டிப்ளோமா. பட்டதாரி ஆசிரியை புனிதவதி மயில்வாகனம் அவரின் மனைவியாவார்.

1968 முதல் எழுது வினைஞராக பரீட்சைத் திணைக்களம்,கல்வித் திணைக்களம் என்பவற்றில் கடமையாற்றிப் பின்னர், 1984 ல் ஆசிரிய சேவையில் இணைந்து நெல்லியடி மத்திய வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி 2006 ல் ஓய்வு பெற்றவர். இருபத்திரண்டு வருட ஆசிரிய சேவையில் காத்திரமான மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமை அவருக்குண்டு.

அண்மையில் நாடு திரும்பியிருந்த பாவலர் பொலிகையூர்க் கோகிலா, (குப்பிழான் ஐ.சண்முகனின் மாணவி)தனது நூல்வெளியீட்டு விழாவுக்கு ஆசான் குப்பிழான் ஐ.சண்முகனை அழைத்து மரியாதை செலுத்தி, வாழ்த்தி இருந்ததை அவரின் முகநூல் (26-02-2023) பக்கத்தில் "தமிழ் இமயம் வாழ்க!" என்ற தலைப்பில் பதிவு செய்திருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அமிழ்தாம் மொழியின் உயர்வைத்தான்
....அறிவாய் ஊட்டும் நல்லாசான்..!
தமிழை நன்றே கற்பித்தார்..!
...தரணி போற்றும் சண்முகனார் ..
நிமிர்ந்தார் இமயம் என்றேதான்..
..நிலைக்கும் நாவல் பலதந்தார்..!
தமிழின் சேவை மனங்கொண்டார்
...தாளைப் போற்றி வாழ்த்துகிறேன் ..!

மதிப்பில் உயர்ந்த நெல்லியடி
...மத்தி யவித்தி யாலயத்தில்
பதிந்த எங்கள் பாதங்கள்
...பாதை காண நடைபோட்டோம்
இதிகா சங்கள் இலக்கணங்கள்
...இனிய தமிழின் வளமெல்லாம்
முதிச மென்றே எமக்களித்த
மூன்று தமிழை வாழ்த்துகிறேன்!”

அனுபவம் மிக்க எழுத்தாளர், நல்லாசான் குப்பிழான் ஐ. சண்முகனை ,அவரின் மாணவி கோகிலாவோடு சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம். தேக நலத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ்க! கலை, இலக்கிய ஆன்மீகப் பணி தொடர்க! வாழ்த்துகள்!

தமிழன் பத்திரிகை
***19.03.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காப்பியக்கோ" நாமம் பெற்ற மூத்த இலக்கிய ஆளுமை

## டாக்டர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன்

*0772721244*



தமிழ்ப்பணியாலும் தனது படைப்புகளாலும் இலங்கையில் மாத்திரமல்லாது, உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும் மூத்த இலக்கிய ஆளுமை டாக்டர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன்.

மரபு வழிப் பாவலர், புதுக் கவிஞர்,நாவலாசிரியர், சிறுகதையாளர், சிறுவர் இலக்கிய காரர்,மொழிமாற்றுக் கவிதையாளர், என்று பல்துறைக் கலைஞராக உயர்ந்து நிற்கும் இலக்கிய கர்த்தா, பாவகைகளை இலாவகமாகக் கையாளத் தகுந்த ஆற்றலும் யாப்பிலக்கணப் பயிற்சியும், தேர்ச்சியும் கற்பனை வளமும், செழிப்பும், அனுபவமும் வாய்க்கப் பெற்று, அறுபது வருடங்களாக இடையறாது, கவிப் புலத்தில் தொடர்ந்தியங்கும் இலக்கிய வேந்தர்-

இலங்கையில் 11 கனதியான- காத்திரமான காவியங்களைப் படைத்திருப்பவர். "காப்பியக் கோ" என்று புகழ் நாமம் பெற்றிருப்பவர் டாக்டர் ஜின்னாஹ்.

**1989** - முத்துநகை, **1989** - பாலையில் வசந்தம்,**1995** - பனிமலையின் பூபாளம், **2007**- திருமறையும் நபிவழியும்,**2007** -வல்லுவம்,**2021** - இறையருள்மாலை,**2021** ஜின்னாஹ்வின் குறும்பாக்கள் **550**,

என்று **07** கவிதை நூல்களையும்,

**1992** - மஹ்ஜபீன் காவியம்,**1998** - புனித பூமியிலே காவியம்,**2005** - பண்டார வன்னியன் காவியம், **2001** - ஜின்னாஹ்வின் இரு குறுங் காவியங்கள் (பிரளயம் கண்ட பிதா - தாய்க்கென வாழ்ந்த தனயன்),

**2006** - திருநபி காவியம்,**2010** - தீரன் திப்புசுல்தான் காவியம் ,**2011** - வாத்தியார் மாப்பிள்ளை காவியம், **2013** - எல்லாள காவியம்,

**2014** - நாயனொடு வசனித்த நந்நபி, **2016** - அன்னை கதீஜாவும் அண்ணலார் குடும்பமும்

**2020** - மைவண்ணன் (இராமயண காவியம்)

என்று **11** காவிய நூல்களையும்

**2003** - பெற்றமனம், **2008** - வேரறுந்தநாட்கள்

என்று **02** சிறுகதை நூல்களையும்,

**2000** - கருகாத பசுமை,**2019** - முக்காழி

என்று **02** நாவல்களையும்,

**2002** - கடலில் மிதக்கும் மாடிவீடு,**2003** அகப்பட்ட கள்வன்,**2003** - எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்,2008 - ராகுலுக்கு ஒருபுதுவண்டி,2010 - சிறுமியும் மந்திரக் கோலும் என்று 05 சிறுவர் இலக்கிய நூல்களையும்,,

2010- அன்பின் கருணையின் பேரூற்று

2011 - "கேள்வியும் பதிலும்" (மகாகவி இக்பாலின் ஷிக்வா ஜவாபே ஷிக்வா கவிதைகளின் மொழிமாற்றக் கவிதைகள்). என்று 02மொழிமாற்றக் கவிதை நூற்களையும் இற்றைவரை இலக்கிய உலகுக்குத் தந்திருப்பவர் காப்பியக் கோ டாக்டர் ஜின்னாஹ். அவருடைய நூல்கள் தமிழ் இலக்கியப் புலமையாளர்களாலும், பல்கலைக்கழக மாணவர்களாலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

மஹ்ஜபீன் காவியம்,புனித பூமியிலே காவியம் என்னும் இருகாவியங்களும் கவிமாமணி அகளங்கன் (ரி. தர்மராஜா) அவர்களால் ஆய்வுசெய்யப்பட்டு 1999ல் கவிஞர் ஜின்னாஹ்வின் "இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநட்டில் இந்தியத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.ஹம்ஸா அவர்களால் ஜின்னாஹ்வின் இருகுறுங்காவியங்கள் என்னும் தலைப்பில் அதே காவியங்கள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வரங்கக் கோவையிலும் சேர்க்கப்பட்டுள்ளது

சென்னை எஸ்.ஐ.ரி. கல்லூரி பேராசிரியை செல்வி அவர்கள் கருகாத பசுமை நாவலை ஆய்வு செய்து ஆறாவது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

வேலூர் மாவட்ட மேல்விசாரம் அப்துல் அக்கீம் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். முகம்மது அலி அவர்கள் "ஈழக் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் 2006ம் ஆண்டில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கின்றார்.

2005ல் பேராதனைப் பல்கலைக் கழக மாணவி செல்வி எஸ்.எச்.நௌமியாபேகம் அவர்கள் "ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் காவியங்கள் ஒரு மதிப்பிடு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சிறப்புக் கலைமானிப் பட்டம் பெற்றுள்ளார்.

2007ல் சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவி செல்வி பர்மிலா அவர்கள் "ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் காவியங்கள் ஒரு ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்றார்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழக மாணவர் எஸ்.சையத் அலி அவர்கள் தனது முனைவர் பட்டத்துக்கான ஆய்வினை "ஜின்னாஹ் ஷரிபுத்தீன் காவியங்கள்"என்னும் தலைப்பில் செய்து 2011ல் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இருபது இந்திய தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் பல்வேறு தலைப்புக்களில் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் பல்வேறு படைப்புக்களையும் ஆய்வு செய்து அவர் பற்றிய சிறப்பு மலருக்காகக் கட்டுரைகள் வழங்கியுள்ளனர்.

காப்பியக்கோ, இலக்கிய உலகில் பரிசில்கள், பதக்கங்கள் பட்டங்கள் விருதுகள் என்று நிறையவே பெற்றிருப்பவர்.. அரச சாஹித்ய விருது, வடக்கு கிழக்குமாகாண சாஹித்ய விருது என்பவற்றோடு இன்னும் பல பெறுமதியான கௌரவங்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுப் பெருமை சேர்த்தவர் அவர்.

1992 சென்னை தமிழ் இலக்கியப் பேரவை மூலம் கவிஞர் வைரமுத்து, நாவலாசிரியர் ஹஸன் ஆகியோரால் வழங்கப்பட்ட கௌரவம்,

- 1994 இலங்கை கலாசாரஅமைச்சு வழங்கிய "ஷம்ஸுல் ஸுஹாரா" (கவிக்கதிரோன்) பட்டம்,
- 1997 சென்னை தமிழகக் கவிஞர் கலைமன்றம் 1997ல் நடத்திய நான்காவது கவிஞர்கள் மாநாட்டில் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் வழங்கிய "நற்கவிஞர்" பட்டயம் , 1999 ஆண்டு புதுச்சேரி கோட்டைக் குப்பத்தில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்ட"தமிழ் மாமணி "விருது, 2005 ஆண்டுக்கான இலங்கைக் கலாசார அமைச்சின் "கலாபூஷணம்" விருது, 2007 ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி வழங்கிய "காப்பியக்கோ" விருது,

- 2008 நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம் அதன் பவளவிழா நிறைவில் அளித்த "காவியக் கவிமணி" விருது,
- 2008 துபாய் சங்கமம் தொலைக் காட்சி நிறுவனம் சார்பாக அளிக்கப்பட்ட "கவிச்சக்கரவர்த்தி" விருது,
- 2010 தமிழ்நாடு பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம் அளித்த "காப்பியக்கோ" விருது,
- 2010 மன்னார் தமிழ்ச் சங்கம் அளித்த "தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார் விருது",
- 2010 மேல்மாகாண தமிழ் சாகித்ய அமைப்பின் "கவியமிர்தன்" விருது,
- 2010 யாழ்ப்பாணம் திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அளித்த "புலவர்மணி" விருது,
- 2013 கம்பன் கழக "மகரந்தச் சிறகு விருது",
- 2013 உமறுப் புலவர் ஞாபகார்த்த விருது (இந்தியா),
- 2013 இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம் வழங்கிய "சங்கச்சான்றோன்" விருது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♦ *2014 பாண்டிச்சேரி (இந்தியா) தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கிய "செம்பணிச் சிகரம்" விருது,*
- ♦ *2017 , தமிழ்நாடு பன்னாட்டு இஸ்லாமிய இலக்கியக் கழகம் அளித்த "வாழ்நாள் சாதனையாளர்" விருது.*
- ♦ *2017 தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கம் அளித்த "காவியப் பெரும்புலவர்" விருது,. என்பன அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை.*

*காப்பியக்கோ, கொழும்பு தமிழ்ச்சங்கம்,கம்பன் கழகம், இலங்கை இஸ்லாமிய இலக்கிய நிறுவகம், இந்திய இஸ்லாமிய இலக்கியக் கழகம் என்பவற்றில் அங்கம் வகிப்பவர். இலக்கியச் செயற்பாட்டாளனாகவும் அவரின் பணி விரிந்தது. இலக்கிய மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள்,யாப்பிலக்கண வகுப்புகள் என்பன நடத்தி புதிய தலைமுறைக் கவிஞர்களை உருவாக்குவதில் முன்னிற்பவர்.*

*ஜின்னாஹ் ஷெரிபுத்தீன்,கிழக்கிலங்கையில் கலை இலக்கிய வளம் மிக்க மருதமுனை மண்ணில், புலவர்மணி ஆ.மு ஷரிபுத்தீன் -ஆயிஷா உம்மா தம்பதியின் மகனாகப் பிறந்தவர். இலங்கை சுதேச மருத்துவ நிறுவகத்தில் பட்டம் பெற்று மருத்துவராகத் தொழில் புரிந்தவர்.*

*1965 ல், எழுத்துலகுக்கு வந்தவர்.. தினபதி- சிந்தாமணிப் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய பத்திரிகை ஜாம்பவான் எஸ். டீ. சிவநாயகம் அவர்கள் தந்த ஊக்கத்தில் வளர்ந்தவர். அவரைத் தனது ஞானத் தந்தையாக வரித்துக் கொண்டவர்.*

*தமிழ் இலக்கியம், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்பவற்றில் தீராக் காதல் கொண்டவர் காப்பியக்கோ, இன்னும் பல்லாண்டு அவர் தேக நலத்துடன் வாழ்ந்து, மேலும் பல நூல்களை இயற்றித் தர வேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாகும்.*

*தமிழன் பத்திரிகை*
*15.01.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த இலக்கிய ஆளுமை

# காத்தான்குடி கவிமணி எம்.எச்.எம். புகாரி

0772686159



"இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ,
முஸ்லிம் சேவை,
நிகழ்ச்சியின் நிறைவாக
வரலாற்றில் ஓர் ஏடும் குறிப்பும் ஸலவாத்தும் "

என்று சொன்னவுடன் கருத்துச் செறிவான வரலாற்றுக் குறிப்பொன்று தினமும் இனிமையான குரலில் வானொலியில் ஒலிபரப்பப் பட்டுவந்ததை நேயர்கள் அறிவார்கள். இந்த "வரலாற்றில் ஏடு புகழ்" மார்க்க அறிஞர்களாக ஒரே நாமத்தைக் கொண்ட இருவர் திகழ்ந்தனர் என்பது வரலாறு. ஒருவர் சம்மாந்துறையைச் சேர்ந்த மௌலவி ஏ.ஸி.எம்.புஹாரி மற்றவர் காத்தான் குடியைச் சேர்ந்த மௌலவி எம்.எச்.எம். புகாரி. ஆளுமைகளின் அடையாளத்தில் இன்று இடம் பெறுபவர் காத்தான்குடிக் கவிமணி மௌலவி எம்.எச் எம் புகாரி.

இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டிருப்பவர். மரபுக் கவிஞராக, ஆய்வாளராக, விமர்சகராக, பேச்சாளராகப் பிரபலம் பெற்றிருப்பவர் . இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான நிறைந்த தேடலும்,ஆழ்ந்த புலமையும் கொண்ட கவிமணி எம்.எச்.எம். புகாரி அறுபது ஆண்டு கால எழுத்தனுபவம் கொண்டவர். கவியரங் குகளிலும், மேடைகளிலும் பிரகாசிப்பவர். இலக்கிய மாநாடுகள், ஆய்வரங்குகள் என்பவற்றில் கலந்து கொண்டு சிறப்பிப்பவர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் அவர் படித்த ஆய்வுக்கட்டுரைகள் இலங்கை மற்றும் தமிழக இஸ்லாமிய இலக்கியப் பேராசிரியர்களின் பாராட்டுக்களைப் பெற்றவை.

காயல்பட்டணத்தில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் “காயல் பட்டணத்து அறபுக்கவிஞர்கள்” என்ற தலைப்பில் அவர்படித்த ஆய்வுக்கட்டுரை, கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் “தமிழ்ப் பேசும் அறபுக் கவிஞரின் தனிப்பெருந் தொண்டு” என்ற மகுடத்தில் அவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை என்பன அவரின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆளுமையைப் புலப்படுத்துபவை.

கவியரங்குகளைத் தலைமை தாங்கி வழிநடத்துவதிலும் முத்திரை பதித்தவர் கவிமணி எம்.எச்.எம். புகாரி. கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் விசேட கவியரங்கிற்குத் தலைமை வகித்துப் பன்னாட்டுப் பிரதிநிதிகளின் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை,வரலாறு,சிறுவர் பாடல்கள்,பாமாலைகள்,மொழிபெயர்ப்பு,உரைநடைத் தொகுப்பு என்று பல்துறை நூல்களைத் தந்து இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்துக் கொண்டவர் கவிமணி புகாரி. அவரின் 19 நூல்கள் இற்றை வரை வெளி வந்துள்ளன.

1. புனித றமழான் புகழ் பாடல்கள்: தென் இந்தியா அதிராம்பட்டினம் அல்லாமா அப்துல் காதிர் ஆலிம் (மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அவர்களின் பாட்டனார்) அவர்களால் அறபியில் எழுதப்பட்ட அறபுப் பாடல்களின் தமிழ்க் கவிதைகள். வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி மாணவர் மன்றம்.1972
2. நபி மொழி நாற்பது: 40 ஹதீஸ்களும் பொருளும் தமிழ்ப் பாடல்களும் வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி
3. நாயகப் புகழாரம்: 300 ஸலவாத் பாடல்கள் வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி
4. முத்தாரம்: கவிதைத் தொகுதி வெளியீடு: அல்ஹாஜ் எஸ்.எம்.ஹனீபா தமிழ் மன்றம் கல்ஹின்னை.
5. முழுமதி: கவிதைத் தொகுப்பு வெளியீடு: நவ இலக்கிய மன்றம் காத்தான்குடி. 1985
6. வரலாற்றில் ஓர் ஏடு: (முதலாம் பாகம்) வெளியீடு: முதலியார் சின்ன லெப்பை கல்வி நிறுவனம்.
7. வரலாற்றில் ஓர் ஏடு: (இரண்டாம் பாகம்) வெளியீடு: ஸலாமத் பதிப்பகம். சென்னை 1995
8. வல்ல அல்லாஹ்வை வணங்கி வாழ்க (உரை நூல்) வெளியீடு: காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் இஸ்லாமிய நூல் நிலையம் 1996
9. கனீமதுல் இஸ்லாம் பீ நிழாமில் அஹ்காம்: அக்கரைப்பற்று முகம்மது யூசுப் ஆலிம் புலவர் இயற்றிய இஸ்லாமிய சட்டக் களஞ்சியம் கவிதை நூலின் பழைய ஏட்டுப் பிரதியை மீள எழுதியது. வெளியீடு: உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு. இலங்கை 2002
10. காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம். (எழுத்தாளர் குழுவில் இடம்பெற்று எழுதியது) வெளியீடு: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் 2004
11. அதிரை அப்துர்ரஹ்மான் ஹாஜியார் அந்தாதி (சங்கைக்குரிய ஷெய்குல் பலாஹ் அவர்களின் சகோதரர் எழுத்தாளர் அப்துர்றஹ்மான் ஹாஜியார் பற்றியது) வெளியீடு: காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி 1998
12. இலக்கிய வானில் இலங்கிடும் தாரகை (காத்தான்குடி நவ இலக்கிய மன்றப் பொன்விழாப் புகழாரம்) வெளியீடு: நவ இலக்கிய மன்றம் காத்தான்குடி.2010
13. செழிக்குஞ் செல்வம் (சிறுவர் பாடல்கள்) வெளியீடு: டொட் பிரிண்ட்ஸ் கொழும்பு 1995
14. தேன் துளிகள் (இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான வரலாற்றில் ஓர் ஏடு நிகழ்ச்சித் தொகுதி )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: காத்தான்குடி 5ஆம் குறிச்சி மர்ஹூம் O.E.M. முஸ்தபா அவர்களது நினைவு வெளியீடு 2010

15. நன்னெறி கூறும் நபிமொழி நூறு (ஸலவாத் பாடல்கள்) 2015
16. அஷ்ஷஹீத் அஹ்மத் லெப்பை ஹாஜியார் வாழ்வும் பணியும் வெளியீடு: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம். காத்தான்குடி. 2014
17. அண்ணல் நபியின் அமுத மொழிகள் (500 ஸலவாத் பாடல்கள்) வெளியீடு: பைத்துல் பறகத் பதிப்பகம் காத்தான்குடி 2022
18. பலாஹீகள் பாமாலை - கவிதை (காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹில் பயின்று வெளியான பலாஹீ மௌலவிகளின் விபரம் - கையெழுத்தில்
19. அறிவுச் சுரங்கம் -அரபுப் பழமொழிகளும் அறிவுரைகளும் தமிழாக்கம்.

இலக்கியப் பணிக்காகவும், மார்க்கப் பணிக்காகவும் பல பரிசுகளையும் விருது களையும் பெற்றிருப்பவர் மௌலவி எம்.எச்.எம். புகாரி. அவற்றுள்,

- கவிமணி: காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.
- கவித்திலகம்: காரிகை கலை இலக்கியக் கழகம் காத்தான்குடி. (2022)
- மறைநெறிக் கவிஞர்: காத்தான்குடி பிரதேச சாகித்திய விழா (2006)
- இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகமும் தினக்குரல் பத்திரிகையும் இணைந்து 2009இல் நடத்திய சர்வதேச மரபுக் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு.
- வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் 21 வருட நிறைவின் நினைவாக யாழ் முஸ்லிம் இணையம் jaffnamuslim.com நடத்திய கவிதைப் போட்டியில் பாராட்டுப் பரிசு.
- கலாபூஷண விருது - 1996
- கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது - 2012
- ஆரத்தி விருது - 1995
- கௌரவித்துச் செய்யும் கைம்மாறு விருது - 2006 (அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா)
- அல்குர்ஆன் மாநாட்டு விருது - 2017 (ஹாபிஸ் போரம்)
- அஷ்ஷஹீத் அஹமத்லெப்பை ஹாஜியாா ஞாபகார்த்த விருது 2022 - காத்தான்குடி பள்ளியாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.
- காத்தான்குடி நகர சபை விருது - 2006
- கலாசாரப் பேரவை விருது - பிரதேச செயலகம் காத்தான்குடி. என்பன குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன.

தாய்மொழியான தமிழை வளர்ப்பதிலும், இஸ்லாமிய கலைப் பொக்கிஷங்களைத் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலும் இலங்கை முஸ்லிம் படைப்பாளர்கள் காத்திரமான பங்களிப்பினைச் செய்து வருவதை இலக்கிய உலகம் பேசும். அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அறபு மொழி இலக்கியங்களையும்,ஹதீஸ்களையும் கவித்துவம் குன்றாத வகையில் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்ப்பவர்களில் முக்கியமான மார்க்க அறிஞராகவும் கவிஞராகவும் கண்ணியம் பெற்றிருப்பவர் கவிமணி மௌலவி எம்எச்எம்.புகாரி.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி மண்ணில் முஹம்மது ஹனீபா ஆலிம் -கதீஜா உம்மா தம்பதியின் மகனாக 1947ல் பிறந்த அவர், ஆரம்பக் கல்வியை காத்தான்குடி அல்ஹிறா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மத்திய மகா வித்தியாலயத்திலும், மார்க்கக் கல்வியை ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியிலும் கற்றவர். காத்தான் குடியைச் சேர்ந்த எம்.ஏ. ஆயிஷா என்பவரைத் திருமணம் செய்து

அஷ்ஷெய்க் எம்.பீ.எம்.பிர்தெளஸ் (நளீமி) (தவிசாளார் பிஸ்மி நிறுவனம்)
அல்ஹாபிழ் மௌலவி எம்.பீ.எம்.பாஹிம் (பலாஹி)
(அலுவலகப் பொறுப்பாளார் ஜாமிஅதுல் பலாஹ்)
ஜனாப் எம்.பீ.எம்.பைறூஸ் (பிரதம ஆசிரியர், விடிவெள்ளி)
எம்.பீ.பாத்திமா அஸ்ஹறா (பட்டதாரி ஆசிரியை)

ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றிருப்பவர்.

ஜாமியதுல் பலாஹ் அரபிக் கல்லூரியில் மௌலவிப் பட்டம் பெற்ற கவிமணி, அங்கேயே விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். 1977 ல் ஆசிரிய நியமனம் பெற்று காத்தான்குடி மீரா பாலிகா வித்தியாலயத்தில் கற்பித்தவர். பின்னர் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராக இருந்து ஓய்வு பெற்றவர்.

ஓய்வு பெற்ற பின்னரும் அவரின் மார்க்கப் பணியும் இலக்கியப் பணியும் தொடர்கின்றது. இன்றும் ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் சபையின் செயலாளராகவும், இலக்கிய மன்றங்களின் ஆலோசகராகவும் அவர் செயற்படுகின்றார்.

இன்னும் பல்லாண்டு காலம் தேக நலத்துடன் அவர் வாழ்ந்து பணி தொடர வேண்டும், மேலும், "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும்", கலை இலக்கியப் பொக்கிசங்களையும் தமிழுக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.

*தமிழன் பத்திரிகை*
***14.05.223***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணி சேர்ந்து இலக்கியம் படைக்க விரும்பாத
மாற்றுச் சிந்தனைவாதி

## அ. யேசுராசா

*0777678257*



ஈழத்து இலக்கியப் பரப்பில் காத்திரமான கனதியான படைப்புகளால் பெயர் பதித்திருக்கும் மூத்த இலக்கிய ஆளுமை, அணி சேர்ந்து முற்போக்கு,நற் போக்கு,மெய்யுள் என்று இலக்கிய உலகில் பயணிக்க விரும்பாத மறுத்தோடி,

"கலை உண்மையைப் பேசவேண்டும் கலைஞனும் உண்மையின் பக்கத்திலேயே நிற்க வேண்டும் " என்ற கருத்தோடு இலக்கிய உலகில் இயங்கும் படைப்பாளி, அனுபவ வெளிப்பாடாக,அழகியல் நிறைந்ததாக கலை இலக்கியம் அமைய வேண்டும், அறம் சார்ந்த நிலைப்பாடு பேணப்பட வேண்டும் என்ற உறுதியோடு செயற்படும் இலக்கியவாதி- அ.யேசுராசா.

1968 ல் இலக்கிய உலகப் பிரவேசம் பெற்றவர். சிறுகதையாசிரியர், விமர்சகர், கவிஞர், சிற்றிதழாசிரியர், பத்தி எழுத்தாளர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிமாற்றுக் கவிதைக்காரர் என்று பன்முக அடையாளம் பெற்றிருப்பவர் அவர்.

யேசுராசா தனது அறுபது வருட கால இலக்கிய வாழ்வில்,

- தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் (சிறுகதை, மார்கழி 1974. மார்கழி 1989),
- அறியப்படாதவர்கள் நினைவாக (கவிதை, 1984),
- தூவானம் - (பத்தி, 2001),
- பனிமழை - (மொழிபெயர்ப்புக் கவிதைகள், 2002),
- பதிவுகள் (பத்தி, 2003), குறிப்பேட்டிலிருந்து" (நவீன இலக்கியக் கட்டுரைகள் 2007),
- திரையும் அரங்கும்:
- கலைவெளியில் ஒரு பயணம் (திரைப்படம் ,நாடகம் பற்றிய கட்டுரைகள் 2013)
- நினைவுக் குறிப்புகள்( கலை ,இலக்கியக் கட்டுரைகள் 2016)
- நிழல்கள்(பல்மொழித் திரைப்படக் கட்டுரைகள் 2018)
- அங்குமிங்குமாய்..( பல்துறைக் கட்டுரைகள்2021)

என்ற நூல்களை இலக்கிய உலகுக்குத் தந்திருப்பவர். அவருடைய படைப்புகள் அவருடைய இலக்கியச் செல்நெறியை எடுத்துக் காட்டுவனவாகவும், வாசகர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசீகரிப்பனவாகவும் புகழ் பெற்றிருப்பவை. இவை தவிர , சிற்றிதழ்கள், தொகுப்புக்கள் மூலமாகவும் அதிகம் பேசப்படுபவர் அ. யேசுராசா. அலை ,கவிதை, தெரிதல் என்ற சிற்றிதழ்களை அவர் வெளியிட்டார். . 35 இதழ்களை விரித்த அலை(1975-1990) ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பினைச் செய்ததை ஆய்வாளர்கள் எடுத்துரைப்பர்.

பிறநாட்டு நவீன படைப்புக்களை இங்கு அறிமுகம் செய்யும் இதழாகவும், கலைத்துவம், அழகியல் என்பவற்றில் கரிசனை செலுத்தும் இதழாகவும், அதுவரை ஈழத்தில் இருந்து வந்த இலக்கியப் போக்கிலிருந்து மாறுபட்ட போக்கினைப் பிரதிபலிக்கும் இதழாகவும் அலை அமைந்ததை இலக்கிய உலகம் பேசும்.. 1975-1985 வரைஅதன் நிர்வாக ஆசிரியராகவும், 1985-1990 வரை அதன் ஆசிரியராகவும் அ.யேசுராசா செயற்பட்டார் .

“கவிதை” இளங்கவிஞர்களை வளப்படுத்தும் நோக்கில் 1994ல் இருதிங்கள் இதழாக மலர்ந்தது.. இளங்கவிஞர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளையும் நடத்திய ”கவிதை”, 9 இதழ்களை விரித்தது. இவ்விதழில் கவிதை எழுதிய பலர் இன்று ஈழத்தின் முக்கிய கவிஞர்களாகப் பரிணமித்துள்ளதைப் படைப்புலகம் குறிப்பிடும்.

“தெரிதல்”இளையவர்களுக்கு இலக்கியம் சார்ந்த தகவல்களைத் தெரிவிக்கும் வகையில் அ.யேசுராசா வெளியிட்ட இதழ்.2003ல் அதன் முதல் இதழ் வெளி வந்தது.

ஈழத்தில் வெளிவந்து,அதிர்வலைகளை ஏற்படுத்திய சிறந்த தொகுப்பு நூல்களான பதினொரு ஈழத்துக் கவிஞர் (கவிதை 1984)மரணத்துள் வாழ்வோம் (கவிதை1985), தேடலும் படைப்புலகமும்( ஓவியம்,சிற்பம் 1987) என்பவற்றின் தொகுப்பாசிரியர்களில் ஒருவராகவும், காலம் எழுதிய வரிகள் (கவிதை1994) நூலின் தொகுப்பாசிரியராகவும் திசை(1989-1990) வாரவெளியீட்டின் ,துணை ஆசிரியராகவும் இலக்கியத்தில் பல்வேறு தளங்களில் வேகமாகச் செயற்பட்டவர் அ.யேசுராசா.

நேர்காணல்கள்,கட்டுரைகள் மூலமும் இலக்கியப் பரப்பில் அறியப்பட் டிருந்தவர் அவர். அவரின் இலக்கியப் போக்கு, கருத்தியல் குறித்து விமர்சனங்கள் வைக்கப்பட்ட போதிலும் அவருடைய ஆற்றல்,இலக்கியத் தேடல் என்பவற்றின் மூலம் மதிப்புப் பெற்றிருந்தவர் அவர்.

இவருடைய மற்றுமொரு கலைப் பணியாகச் சொல்லப்படுவது திரைப்படம் சார்ந்த அவரின் பங்களிப்பாகும். ஏ.ஜே. கனகரெட்னாவை தலைவராகக் கொண்ட “யாழ். திரைப்பட வட்டம்’ என்ற அமைப்பின்மூலம், நல்ல பிறமொழிப் படங்களை யாழ்ப்பாணத்தில் திரையிடுவதில் ஆர்வத்துடன் இயங்கிவர் அ.யேசுராசா. 1998 - 2006 வரையான ஆண்டுகளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், பேராசிரியர் இரா. சிவச்சந்திரனுடன் இணைந்து, ஒவ்வொரு கிழமையும் பிறமொழிப் படங்களையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத் தகுந்த தமிழ்ப் படங்களையும் விடியோவில் காட்டுவதற்கு முன்னின்றவர். கலந்துரையாடல்கள் நடத்தியவர். நல்ல திரைப்படங்கள் பற்றி அவ்வப்போது சிற்றிதழ்களில் எழுதியவர் என்று அவரின் கலைப்பணி விசாலிக்கும்..

கலைஇலக்கியப் பணிக்காக பலவிருதுகளைப் பெற்றிருப்பவர் அவர்.

- சிறந்த சிறுகதை நூலுக்கான (தொலைவும் இருப்பும்)இலங்கை சாஹித்ய மண்டல விருது- 1974
- பல்துறை இலக்கியத்திற்கான (தூவானம்) வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாஹித்ய விருது-2001
- சிறந்த மொழிபெயர்ப்பு கவிதை நூலுக்கான (பனிமழை)வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாஹித்ய விருது -2002
- யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத் திரைப்பட விழாவில் கிடைத்த வாழ்நாள் சாதனையாளர் விருது-2015
- கனடாத் தமிழ்த்திரைப்பட மேம்பாட்டு அமையம் வழங்கிய "கலைக்குரிசில் கே.எஸ். பாலச் சந்திரன் விருது"-2015
- குருநகர் சமூக சேவை மன்றம் கனடா- அமெரிக்கா, வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது -2016 என்பன அவர் பெற்ற விருதுகளில் முக்கியமானவை.

யாழ்ப்பாணம் குருநகரில் அத்தனாஸ்- அ.செபஸ்தியானா(நல்லம்மா) தம்பதியின் மகனாக 1946ல் பிறந்தவர் அ.யேசுராசா. ஆரம்பம் முதல் க.பொ.த. சா/த வரை குருநகர் சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலும் க.பொத. உயர் தரத்தை ,யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றவர். அஞ்சல் அதிபர் தந்தியாளராக (1967-1987) பதவி வகித்து ஓய்வு பெற்றவர். (காலஞ்சென்ற) மேசி ஜெயறோசா (சிறப்புப் பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியர்) இவரின் மனைவி.

இலக்கிய உலகில் தனித்துவமான செயற்பாடுகளின் மூலம் தடம்பதித்திருக்கும் அ.யேசுராசா இன்னும் பல்லாண்டு வாழ்ந்து திறனாய்வு ,விமர்சனம் படைப் பிலக்கியம் என்பவற்றில் தொடர்ந்து பயணிக்க வேண்டும் அதனூடாக இளைய தலைமுறைப் படைப்பாளர்களும் உத்வேகம் பெறவேண்டுமென்பதே நமது அவாவாகும்.

தமிழன் பத்திரிகை
19.02.2023

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி கலை இலக்கியக் கூடல் அமைப்பினூடாகவும்
காத்திரமான கலை இலக்கியப் பணிபுரிபவர்

## கவிஞர் செங்கதிரோன் த. கோபால கிருஷ்ணன்

065 2227876



தமிழ் கூறும் நல்லுலகில் தனது படைப்புக்களாலும், இலக்கியச் செயற்பாடுகளாலும், அரசியல் செயற்பாடுகளாலும் நன்கு அறியப் பட்டிருக்கின்ற பெயர் செங்கதிரோன். "செங்கதிர்"சஞ்சிகையின் ஆசிரியராக,கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் "ஓலை "இதழின் ஸ்தாபக ஆசிரியராக, கவிஞராக, கதைஞராக, திறனாய்வாளராக,"கண்ணகி கலை இலக்கியக் கூடல்" அமைப்பின் தலைவராக,அரசியல் செயற்பாட்டாளராக இவர் அறியப்பட்டிருக்கின்றார்.

மட்டக்களப்பி லிருந்து அன்பு மணி இரா.நாகலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "மலர்"(1970-1972) என்ற இலக்கியச் சஞ்சிகை, ஈழத்து இலக்கியப் பரப்பில் தடம்பதித்து, எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்தது போல, 2008 முதல் மட்டக்களப்பிலிருந்து "செங்கதிர்" என்ற மாதாந்த இலக்கிய சஞ்சிகையைத் தந்து எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்தவர் செங்கதிரோன். அவருடைய சஞ்சிகை இந்திய இலக்கிய சஞ்சிகைகளிலிருந்து வேறுபட்டு, இலங்கையின் தனித்துவ கலை இலக்கிய அடையாளத்தை நிறுவிய பல்சுவை மாத இதழாகப் பார்க்கப்பட்டது.

எவ்விதப் பக்கச் சார்பு மின்றி,முற்போக்கு,நற்போக்கு என்ற பிரிவினைக்கு இடம் தராமல், திறமைக்கு மட்டுமே இடமளித்த செங்கதிர் 61 இதழ்களைப் பிரசவித்தது. சஞ்சிகைக்கான அவரது அயராத உழைப்போடு, மாதாந்தம் ரூபா 25000 க்கும் மேற்பட்ட தொகையை இழந்து செங்கதிரைத் தந்தவர் அவர்.

"கண்ணகி கலைக் கூடல்" அமைப்பின் தலைவராக இருந்து அவர் ஆற்றிவருகின்ற கலை,இலக்கியப் பணி பலராலும் விதந்துரைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வமைப்பின் மூலம் 2011ல் இருந்து இற்றைவரை ஒன்பது பெரு விழாக்களை அவர் நடத்தி இருக்கின்றார். விழாக்கள் ஒவ்வொன்றும் பட்டிமன்றம், ஆய்வரங்கு, கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய கலை வடிவங்கள், கவியரங்கு என்பன கொண்டதாக ஒரு நாள்- இருநாள் நிகழ்ச்சிகளாக நடந்தேறியிருக்கின்றன. காத்திரமான,கனதியான 8 விழா மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

"கண்ணகி விழா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாகும். உலகத் தமிழர் சிந்திக்காத ஓர் ஆழ்ந்த சிந்தனை தங்களிடத்துத் தோன்றியமையும்,ஓர் உன்னத விழா முகிழ்த்தெழுந்துள்ளமையும் உளமாரப் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி என்ற எண்ணக் கரு சிலப்பதிகாரத்தையும் கடந்த தொன்மையான மானிடவியலை அடியொற்றிய வீரமங்கை தொடர்பான தொன்மத்துடன் இணைந்தது.கிழக்கிலங்கையில் நிகழும் வழிபாட்டு மரபுகள் அந்தப் புலக் காட்சியை நன்கு வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான,ஆழ்ந்த சிந்தனைகளுக்கு தங்கள் விழா களம் அமைத்துள்ளமையை எண்ணி மகிழ்கின்றேன்" என்று கண்ணகி விழா பற்றியும், அதற்கான செங்கதிரோனின் செயற்பாடு குறித்தும் தமிழறிஞர் பேராசிரியர் சபாஜெயராசா அவர்கள் குறிப்பிடுவார்.

செங்கதிரோன் தனது **11**வது வயதில் எழுதத் தொடங்கியவர். ஆயினும்,"அருவி "என்ற சஞ்சிகையில் **1969**ல் எழுதிய "நற்கவிதை வேண்டும் "என்ற தலைப்பிலான கவிதையே பிரசுரம் பெற்ற முதலாவது கவிதையாகும் .இதனைத் தொடர்ந்து சுதந்திரன் பத்திரிகையில் இவரின் கவிதைகள் நிறையவே வெளியாகின.

செங்கதிரோன் ஒரு மரபுக் கவிஞராக அறியப்பட்டிருந்த போதிலும் இவரின் கவிதை வீச்சை,விலாசத்தை அடையாளப் படுத்திய நூலாக "விளைச்சல்" என்ற காவியநூல் ஆய்வாளர்களால் குறித்துரைக்கப்படுகின்றது. ஈழத்தின் கவிதை முன்னோடிகளில் ஒருவரான கவிஞர் நீலாவணனின் "வேளாண்மை" காவியத்தை நிறைவு செய்து வைப்பதாக விளைச்சல் என்ற காவியத்தை அவர் எழுத முன்வந்தமையை ஆய்வாளர்கள் பாராட்டுவர். கற்பனை வளம்,தொய்வுபடாமல் கதையை நகர்த்திச் செல்லும் ஆற்றல், மொழிவளம் என்பவை செங்கதிரோனுக்குக் கைகூடி இருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிப்பர்.

விண்ணப்பித்து விருது பெறுவதை விரும்பாதவர் செங்கதிரோன். எனினும், பெறுமதி மிக்க பல விருதுகள் அவரைத் தேடி வந்திருக்கின்றன. அவற்றில், விளைச்சல் காவிய நூலுக்கு இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கிய

- "இரா உதயணன் இலக்கிய விருது,"
- மன்னார் தமிழ்ச் சங்கம் வழங்கிய "எழுத்துச் சுடர் விருது"
- மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் "தேனகச் சுடர் விருது"
- அவுஸ்திரேலிய சிட்னி நகரில் வழங்கப்பட் கௌரவம்,
- கொழும்புத் தமிழ்ச்சங்கம் ,"சிலப்பதிகாரச் செய்திகள்" என்னும் தலைப்பில் ஆய்வேடு அளிக்கை செய்தமைக்காக வழங்கிய பாராட்டு,
- தலைவராக,பேராளர்களாகப் பங்கு கொண்டமைக்காகக் கொழும்பு தமிழ்ச் சங்கம் வழங்கிய பாராட்டுச் சான்றிதழ்
- கலை இலக்கியப் பணியைப் பாராட்டி, புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் பத்மஸ்ரீ பாரதிராஜா அவர்களால் வழங்கப்பட்ட "கலைஞர் கௌரவம்"

என்பன குறிப்பிடத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலை சஞ்சிகை வெளியீடு, செங்கதிர் சஞ்சிகை வெளியீடு,சிறப்பு மலர்கள் வெளியீடு என்பவற்றில் அதிக அக்கறை செலுத்தியிருப்பவர் செங்கதிரோன்.ஆனாலும் சொந்த நூல்களை வெளியிடுவதில் அவர் அதிக கவனஞ் செலுத்தவில்லை. இற்றைவரை மூன்று நூல்களே வெளிவந்திருப்பதாகத் தெரிகிறது.

- *தமிழ் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்(2016)*
- *விளைச்சல்-(குறுங் காவியம்-2017)*
- *சமம்- (உருவகக் கதைகள்-2022)*

வெளிவரவிருப்பவையாகப் பின்வருவபை அட்டவனைப்படுத்தப் பட்டுள்ளன.

- *பொழிவு(சொற்பொழிவுகள்)*
- *உரைகல்(நூல் நயவுரைகள்)*
- *சொல்லத் துணிந்தேன்( அரசியல் பத்தி எழுத்து)*
- *அம்பாரை மாவட்டத் தமிழர்கள்(ஓர் அரசியல் வெட்டுமுகம்)*

கிழக்கிலங்கையில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த புகழ்பூத்த காரைதீவு மண்ணில், தம்பியப்பா- கனகம்மா தம்பதியின் மகனாக 1950ல் பிறந்தவர் த. கோபாலகிருஷ்ணன் என்ற இயற்பெயரையுடைய செங்கதிரோன்.

குழந்தைப் பருவத்திலேயே பெற்றாரோடு பொத்துவிலுக்கு இடம் பெயர்ந்த அவர், ஆரம்பக் கல்வியை பொத்துவில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கற்று,புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து , இடைநிலைக் கல்வி உயர்தரக் கல்வி என்பவற்றை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கற்றவர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் (1971-1994 ) தொழில் நுட்ப உத்தியோகத்தராக, Unops நிறுவனத்தின் (2005-2008)பிரதேச பொறியியலாளராக, கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியகத்தின் (2010-2013)மட்டக்களப்பு மாவட்ட செயற்பாட்டுப் பணிப்பாளராக கடமையாற்றியவர்.

இலக்கியச் செயற்பாடுகள்,அரசியற் செயற்பாடுகள் என்பவற்றில் தற்போதும் ஈடுபாட்டோடு இயங்கிவரும் செங்கதிரோனின் தமிழ்த் தொண்டு, இலக்கியச் செயற்பாடு, அரசியற் செயற்பாடு என்பவை இன்னும் சிறக்க, அவரை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

*தமிழன் பத்திரிகை*
***04.12.2022***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்துவில் மண்ணின் மூத்த கலை, இலக்கிய ஆளுமை

## கலையன்பன் அப்துல் அஸீஸ்

*0774331731*



ஈழத்து இலக்கிய வரலாற்றில் பொத்துவில் மண் நீங்கா இடம்பிடித்திருப்பதை இலக்கிய உலகம் பேசும். கிராமியக்கவி,கவிதை, புதுக் கவிதை, சிறுகதை , நாடகம், நடிப்பு, சினிமாப் பாடல்கள், என்று பல்துறையிலும் ஆற்றல் மிக்கவர்களாக அம் மண்ணின் புத்திரர்கள் புகழ் பூத்துள்ளனர்.

மரபு, புதுமை, நவீனத்துவ,பின் நவீனத்துவ கலை இலக்கியப் போக்குகளிலும் பொத்துவில் மண்ணின் இளைய தலைமுறை எழுத்தாளர்கள் கவனஞ் செலுத்தி வருவதை அவதானிக்க முடியும். யுவன்,முதல்வனார்,ஆஸாத் மௌலானா,ஜௌபர் மௌலானா,கவிவாணன் அப்துல் அஸீஸ்,பொத்துவில் மஜீத்,எம்ஏ முஹம்மத், வில்லூரான் பாரதி, பொத்துவில் அஸ்மின் ,கிராமத்தான் கலீபா,கோ.நாதன், அஹ்மத் பைஷல்....... என்று தொடர்கின்ற பொத்துவில் மண்ணின் இலக்கியப் பரம்பரையின் முக்கிய மூத்த கவிஞர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்படுபவர் கலையன்பன் அப்துல் அஸீஸ்.

அறுபது ஆண்டுகளுக்கும் மேலான எழுத்துலகப் பரிச்சயம் உடையவர் அவர். இலங்கை வானொலியில் ஆஸாத் மௌலான முஸ்லிம் சேவைத் தயாரிப்பாளராக இருந்த காலத்தில், கலையன்பனின் கவிதைகள், கட்டுரைகள்,இஸ்லாமிய நற்சிந்தனைகள் நிறையவே ஒலிபரப்பாகின. வானொலிப் பேச்சாளனாகவும்,மேடைப் பேச்சாளனாகவும் தனது கம்பீரக் குரலால் நிமிர்ந்து நின்றவர் கலையன்பன் அப்துல் அஸீஸ். “முஸ்லிம் செய்திச்சரம்“ தொகுப்பாளராகவும் அச் செய்தி வாசிப்பாளராகவும் வானொலியில் அவர் செயற்பட்டார்.

கவிஞர் யுவன் என்ற உணர்ச்சிக் கவிஞனை குருவாக வரித்துக் கொண்டு அவரோடு சேர்ந்து இயங்கியவர் கலையன்பன். பொத்துவிலின் தலைமைக் கவிஞனாக பெயர் பெற்றிருந்த யுவனின் சாற்றுகவியோடு வெளிவந்த முச்சுடரின் ஒரு சுடர் கலையன்பன் அப்துல் அஸீஸ். (மற்றிரு சுடர்கள் ஜௌபர் மௌலானா,கவிவாணன் அப்துல் அஸீஸ்)

”நாற்றம் அகற்றுங்கள்
நரம்புகளில் சுய உணர்வை
ஏற்றுங்கள் எதிர்கால
ஏடுகளில் இடமெடுங்கள்
ஓடுங்கள் தொண்டு செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர்குலமாய் மக்களெல்லாம்
கூடுங்கள் குவலயத்தில்
குறைபோக்கி நிறைவுறவே! "

என்று 1969ல் கவிஞர் மன்ற வெளியீடாக வந்த முச்சுடரில் மரபுக் கவிதை மூலம் அறைகூவல் விடுத்திருப்பார் கலையன்பன். பொத்தூர் ஆரியன்,பொத்துவிலூர் புல்புல்,பொத்துவிலூரான்,ஈழமதி போன்ற புனை பெயர்களில் எழுதியவர் அவர்.எனினும், "கலையன்பன்" என்று தனது குரு கவிஞர் யுவன் வைத்த புனைபெயரையே தனது பெயராக ஏற்றுக் கொண்டு தொடர்ந்தார்.

மேடை நாடகங்கள், பட்டிமன்றங்கள் என்பவற்றில் தனது தனித்துவ நடிப்பினாலும், முகபாவம்,குரல் வளம் போன்றவற்றாலும் முத்திரை பதித்தவர் அவர். மாணவப் பருவத்திலேயே கலை,இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த கலையன்பன், "கலைச்சுடர்" என்ற கையெழுத்துப் பத்திரிகையை வெளியிட்டார்.

கலை இலக்கியப் பணிக்காக பட்டங்கள், விருதுகளை நிறையவே பெற்றிருப்பவர் அவர்.

- 1999ல் பொத்துவில் பிரதேச செயலகம் நடத்திய பிரதேச சாஹித்ய விழாவில்பொன்னாடை போர்த்தி, பட்டயம் வழங்கி அளிக்கப்பட்ட கௌரவம்,
- 2003ல் அக்கரைப்பற்று மண்ணின் விருதான "கருங்கொடி விருது",.
- 2007ல் அம்பாரை மாவட்ட சாஹித்ய கலைப் பெருவிழாவில் அளிக்கப்பட்ட விருது,
- 2015ல் பொத்துவில் Mind up நிறுவனம் வழங்கிய "வாழ்நாள் சாதனையாளர் விருது",
- 2016ல் பொத்துவில் பிரதேச கலாசார அதிகார சபையும்,பொத்துவில் கலைஇலக்கியப் பேரவையும் இணைந்து வழங்கிய "கவிமணி" பட்டம் ,
- 2016ல் இலங்கை கலாசார அமைச்சு வழங்கிய கலாபூசண விருது ,
- 2017ல் அக்கரைப்பற்று பிரதேச கலாசார மத்திய நிலையம் வழங்கிய "முதிர் கலைஞர் விருது"
- 2018ல் இலங்கை கலாசார அமைச்சு வழங்கிய கலைஞர் சுவதம்,
- 2019ல் வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சு இணைந்து வழங்கிய "கலாயாத்ரா விருது " என்பன அவர் பெற்ற விருதுகள்- பரிசுகளில் சில.

பாலம் கலை இலக்கிய மன்றத்தை அமைத்து, அதன் மூலம் மூத்த ,புதிய எழுத்தாளர்களின் நூல்கள் வெளிவர ஒத்துழைப்பு வழங்கியவர் கலையன்பன். ஆயினும் அவரின் சொந்த நூல்களை வெளியிடுவதில் அவர் அதிகம் ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் விடியவில்லை" என்ற அவரின் ஒரு கவிதைத் தொகுப்பு மட்டுமே 2018ல் வெளியானது. அத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகள் காத்திரமானவையாகவும் சொல்லாட்சி மிக்கனவாகவும் அமைந்திருந்ததை விமர்சகர்கள் சிலாகித்தனர்.

"என் நெஞ்சுக்குள்
ஆயிரம் அவஸ்தைகள்
படையெடுக் கின்றன.
நான் சொன்ன தெல்லாம்
கொஞ்சந் தான்.

இந்த வேடன்
வலை விரிப்பது
புறாக்களைப் பிடித்துக் கொல்வதற்கல்ல,
ஒரு புதுயுகத்தைச்
சிக்க வைக்கத் தான்
எம் இருப்புக்களைத்
தக்க வைக்கத் தான்!"

"மதியினைக் கூராக்கு
ஒரு
விதி செய்ய வேண்டும்!

நீ..கர்ஜிக்க வேண்டும்
அது யுகாந்திர இடியாக
ஒலிக்க வேண்டும்!
உன் துடிப்புகள்
மடிப்புச் சால்வைக ளல்ல.
தூக்குக் கயிறுகள்
துணிந்தெழு தோழா
ஒரு சரித்திரம் படைப்போம்!"

என்றெல்லாம் அவர் எழுதுவார். தான் சொல்ல வந்ததை எந்தக் கவி வடிவத்திலும் சிறப்பாகச் சொல்பவர் கலையன்பன். அவர் பொத்துவிலில் 1945ல் சேகுமுகையதீன் வைத்தியர்- றாபிஆ தம்பதியின் மகனாகப் பிறந்தவர். பொத்துவில் ஆண்கள் பாடசாலை,பொத்துவில் மத்திய மகாவித்தியாலயம் என்பற்றில் சிரேஷ்ட தராதரம் (H.S.C) கற்றவர். அக்கரைப்பற்றில் திருமணம் செய்து வாழ்பவர்.

பொத்துவில் மண்ணின் மூத்த இலக்கிய ஆளுமை கலையன்பன் அப்துல் அஸீஸ், தேகநலத் தோடு இன்னும் பல்லாண்டு வாழவேண்டும. அவரின் கலை,இலக்கியப் பணி தொடர வேண்டுமென்பதே எமது பிரார்த்தனையாகும்.

*தமிழன் பத்திரிகை*
***18.06.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுர மாவட்டக் கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சியில்

அரும்பணி புரியும்

## அன்பு ஜவஹர்ஷா

0719997845



அன்பு ஜவஹர் ஷா என்ற பெயர் ஈழத்து இலக்கிய உலகிலும், கல்விச் சமூகத்திலும் - குறிப்பாக ஆசிரியர்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்றிருக்கின்ற பெயர். புதுக் கவிஞராக,கதைஞராக, சஞ்சிகை ஆசிரியராகப் பெயர் பதித்திருக்கும் அவர், தொழிற் சங்க வாதியாகவும், அதிபர் திலக மாகவும், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு, விடுமுறை விபரம்,கொடுப்பனவுகள், சுற்றுநிருப விளக்கங்கள் தரும் ஒரு சிறந்த வளவாளராகவும் மதிக்கப்படுகின்றார். எவ்வித பிரதியுபகாரமும் கருதாத இவ்விதமான நற்பணி மூலமாக இலங்கை முழுவதிலும் நன்மதிப்பைப் பெற்றிருப்பவர் அன்பு ஜவஹர்ஷா. சம்பளமில்லாச் "சம்பள" (ம் பற்றி எழுதும்) எழுத்தாளராகவும் இவரைச் சொல்வர்.

அன்பு ஜவஹர்ஷா வின் கலை இலக்கியப் பயணம் 1965 களில் ஆரம்பிக்கின்றது. பாடசாலைக் காலத்தில் "மாணவர்குரல்" சஞ்சிகையின் ஆசிரியராக ஆரம்பித்த அவரின் எழுத்துலகப் பயணம், இலங்கையில் வெளிவந்த பிரபல பத்திரிகைகள், சஞ்சிகைகளை நோக்கியும் விரிந்தது. சுதந்திரன், கதம்பம்,ராதா,மலர் போன்ற ஏடுகளில் அவரின் ஆரம்ப காலக் கவிதைகள் விஞ்ஞானக் கட்டுரைகள், கதைகள் என்பன பிரசுரமாகின. இலக்கியச் செயற்பாட்டாளராக, அனுராதபுர மாவட்டத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரிபவராக, புதிய தலைமுறை படைப்பாளி களுக்கு ஊக்கம் தருபவராக ,வழிகாட்டுனராகக் கண்ணியம் பெற்றிருப்பவர் அவர்.

அனுராதபுரத்திலிருந்து வெளிவந்த "தமிழ்ச்சுடர்" இதழின் ஆசிரியராகவும், அங்கிருந்து வெளிவந்த இன்னும் பல சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும் இருந்ததோடு, பாடசாலை ஆசிரியராக இருந்த போது மன்னார் தாராபுரம் அல் மினா பாடசாலையிலிருந்து "மினா"(12இதழ்கள்)சஞ்சிகையையும்,அனுராதபுரம் ஸாஹிறாவிலிருந்து "பிறையொளி" (36 இதழ்கள்)சஞ்சிகையையும் வெளியிட்டார். பலாலி ஆசிரியர் கல்லூரியில் வெளியிடப் பட்ட யாழ்பிறையின்(1975) ஆசிரியராக திக்குவல்லை கமாலும் செயலாசிரியராக அன்பு ஜவஹர்ஷா வும் செயற்பட்டிருந்தனர். வித்தியாசமான, கனதியான இதழாக அவ்விதழ் இருந்ததைத் திறனாய்வாளர்கள் உறுதி செய்வர்.ஸாஹிரா கலை விழாமலர்(1976),அதன் வெள்ளிவிழா மலர்(1994) என்பவற்றையும் முன்னின்று வெளியிட்ட பெருமைக் குரியவர் அவர். அனுராதபுரக் கலை இலக்கிய வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய கலைச்சங்கத்தை 1970 களில் ஆரம்பித்தவர் ஜவஹர்ஷா. "களம்" என்ற மும்மாத இதழை வெளியிட்டதோடு, கவியரங்குகள், கலையரங்குகள் ,விமர்சன அரங்குகள் என்பவற்றையும் அச்சங்கத்தின் மூலம் நடத்தியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு ஜவஹர்ஷா,அநுஷா, பிர்தவ்ஸி,தமிழ் வேந்தன்,வன்னிக் குமரன்,மாணிக்க ராசன்,திரையன்பன் ,ஞானா போன்ற பல புனைபெயர்களிலும் எழுதியவர். மாணிக்க ராசன் என்ற பெயரில் "மல்லிகை"யில் மாதந்தோறும் இலக்கிய நிகழ்வுகள் குறித்தும்,திரையன்பன் என்ற புனை பெயரில் திரைவிமர்சனங்களையும் செய்தவர் . ஈழத்தில் புதுக் கவிதை வரவேற்புப் பெறத் தொடங்கிய எழுபதுகளில்,சிறந்த புதுக் கவிதையாளராக முன்னிலை அடையாளம் பெற்றிருந்தவர் .தமிழக வானம்பாடி குழுவினரோடும் நட்புறவோடிருந்து, தமிழக இலக்கியச் சிற்றிதழ்களை இங்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். தமிழகத்தில் இருந்து வெளிவந்த "ஏன்" என்ற புதுக்கவிதை ஏட்டின் இலங்கை மலரை அவ்வேட்டின் இலங்கைப் பிரதிநிதியாக இருந்து தொகுத்து இம்மண்ணின் புதுக் கவிஞர்கள் தமிழகத்திலும் அறிமுகம்பெற உதவியவர். இலங்கையின் முதலாவது புதுக் கவிதைத் தொகுப்பாக 44 இலங்கைக் கவிஞர்களின் புதுக் கவிதைகளை "பொறிகள்" என்ற பெயரில் வெளியிட்டவர். "அனுராதபுர மாவட்ட தமிழ் கலை, இலக்கிய வரலாற்றை"ப் "படி"கள் 10வது ஆண்டு மலரில் எழுதி ஆவணப்படுத்தியவர், "அனுராதபுரப் பிரதேச சிறுபான்மை மக்களது பூர்வீக வரலாற்று ஆவண" த்தை அல்ஹாஜ் எஸ் எச் முத்தலிபின் துணை கொண்டு எழுதி"முதுசொம்" என்ற பெயரில் வெளியிட்டவர்.

கவியரங்கக் கவிதைகள் காற்றோடு சென்றுவிடாதவாறு, அவற்றை ஆவணப்படுத்தித் தொகுதியாக, கவியரங்கு நடைபெறும் போது வழங்கும் புதிய முயற்சியை எழுபதுகளிலேயே அன்பு ஜவஹர்ஷா ஆரம்பித்து வைத்தவர். அவர் தொகுத்த "சிதைந்து போகும் சிறப்புக்கள்"எனற தொகுப்பும்,பேனா மனோகரனோடு இணைந்து தொகுத்த "புத்துலகம் படைப்போம்" என்ற தொகுதியும் குறிப்பிடத்தக்கன. ஆயினும், தொகுப்புக்கள், சஞ்சிகைகள், இதழ்கள் வரலாற்று ஆவண வெளியீடுகள் என்பவற்றில் அவர் காட்டிய அக்கறையை தனது தனிப்பட்ட படைப்புக்களை நூலாக்கிக் கொள்வதில் அவர் காட்டவில்லை. இற்றைவரை, "காவிகளும் ஒட்டுண்ணிகளும்"(1975) என்ற புதுக் கவிதைநூல் மாத்திரமே அவர் தந்துள்ள தனிப்பட்ட இலக்கிய நூல்.

தினகரன் இதயராகத்தில் அவர் 15 வாரங்கள் தொடர்ந்து எழுதிய " நீ நினைவுகள்" என்ற புதுக் கவிதைக் காவியம், கொழும்பு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டில் இவர் படித்த "கடந்த 20 வருடங்களில் ஈழத்துப் புதுக் கவிதை வளர்ச்சி" (ஆய்வுக் கட்டுரை) என்பன கூட நூலுருப் பெறவில்லை யென்பது துரதிஷ்டமே.

அனுராதபுர மாவட்டத்தில், கல்வி,தொழிற் சங்கம், இலக்கியம், என்று பல தளங்களிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டுவரும் அன்பு ஜவஹர்ஷா பெற்றுக் கொண்ட கௌரவங்கள், விருதுகள் அநேகம். அவற்றுள். கலாபூஷணம்(1997) தேசிய விருது, உலகாசிரிய தினவிழாவை முன்னிட்டு அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம், வடமத்திய மாகாணத்தில் சிறந்த தேசிய பாடசாலை அதிபராகப் பெரும்பான்மை இன அதிபர்களோடு போட்டியிட்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களிடமிருந்து பெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி விருது(2004), உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் பொன்னாடைக் கௌரவம், எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட பெரும்பான்மைச் சமூக அதிபர்களைக் கொண்டிருந்த அதிபர் சங்கத்தின் அகில இலங்கைத் தலைவராக 2004ல் தெரிவு செய்யப்பட்ட சிறுபான்மை சமூகப் பிரதிநிதி என்ற கௌரவம், வடமத்திய மாகாண கலாசூரி (2015) விருது என்பன குறிப்பிட்டுச் சொல்லத்தக்கன.

மல்லிகை ,ஞானம், அநு-ராகம், அல்-மதீனா, படிகள் என்ற சஞ்சிகைகள், அவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்துள்ளன. "யாத்ரா" அவரை நேர் காணல் செய்துள்ளது. இப்பிரதேச இலக்கியச் சங்கங்கள் பலவும் அவரைப் போஷகராக்கிக் கண்ணியம் தந்திருக்கின்றன.

ஈழத்தின் முக்கிய படைப்பாளிகளாகப் பரிணமித்துள்ள கெக்கிராவ ஸஹானா, கெக்கிராவ சுலைஹா, படிகள் ஆசிரியர் வஸீம் அக்ரம் போன்றோரும் தற்போது தமிழகத்தில் வாழும் பேனா மனோகரனும் அவர்களுடைய நூல்களை அன்பு ஜவஹர்ஷாவுக்குச் சமர்ப்பித்து மதிப்பளித்துள்ளனர்.

1950ல் கொழும்பு கொம்பனித் தெருவைச் சேர்ந்த அப்துல் காதர் முஹம்மது ஹனீபா (எழுத்தாளர் அன்பு தாசன்) -அனுராதபுரம் ஒட்டுப்பள்ளம் நாகூர் மீராஉம்மா தம்பதியின் மூத்த மகனாக அனுராபுரத்தில் பிறந்தவர் ஜவஹர்ஷா. (ஜவஹர்லால் நேரு அவர்கள் மீது, தந்தை அன்புதாஸன் கொண்டிருந்த பற்றுதல், எழுத்தாளர் நண்பர் பித்தன் ஷா அவர்களோடு அவருக்கிருந்த ஒட்டுறவு - நட்பு என்பன காரணமாக,அவ்விரு பெயர்களும் தொடர்ந்து உச்சரிக்கப்பட வேண்டும். என்று விரும்பிய தந்தை அன்பு தாஸன், ஜவஹர் ஷா என்ற இப்பெயரை தனது மைந்தனுக்கு வைத்து அழகு பார்த்தார் என்பதை எழுத்தாளர் பித்தன் கே.எம்.எம்.ஷா பிற்காலத்தில் ஜவஹர்ஷா வுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.1967ல் தினபதி நிருபராக ஜவஹர்ஷா வை நியமித்தபோது, அவரின் தந்தை அன்புதாஸனில் தனக்கிருந்த நட்பால் தினபதி ஆசிரியர், பத்திரிகை உலக ஜாம்பவான் எஸ்.டீ. சிவநாயகம் இவருக்கு அன்பு என்ற அடை மொழியைச் சேர்த்து அன்பு ஜவர்ஹர்ஷா என்று குறிப்பிட்டார் அதுவே அன்புஜவஹர்ஷா என்ற பெயர் வந்த வரலாறு. சிரித்திரன் ஆசிரியர் சுந்தர்,ஊர்ப் பெயரோடு சேர்த்து இவருக்கு வைத்த புனை பெயர் அநுஷா.)

அன்புஜவஹர் ஷா தனது ஆரம்பக் கல்வியை,மட்டக்களப்பு புனித மரியாள் கல்லூரியிலும், பின் அனுராதபுரம் புனித கன்னியர்மடப் பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை புனித வளனார் கல்லூரியிலும், க.பொ. த .உயர்தரக் கல்வியை அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகாவித்தியாலயத்திலும் கற்றார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், விவசாய விஞ்ஞான ஆசிரியராகவும்,மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சியையும், உலக வங்கி உதவியுடன் நடத்தப்பட்ட ஏ,பி பாடசாலை அதிபருக்கான 18 மாத பயிற்சியையும் பூர்த்தி செய்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபராக,கணக்கு எழுதுநராக ,உதவி ஆசிரியராக,பயிற்றப்பட்ட ஆசிரியராக,கல்வி வளநிலையப் பொறுப்பு அதிகாரியாக, ஆசிரிய ஆலோசகராக, முதலாம் தர அதிபராக இருந்து 2005ல் ஓய்வு பெற்றவர்.

ஓய்வு பெற்ற பின்னரும் பத்தாயிரம் அதிபர்களைப் பயிற்றுவிக்கும் வளவாளர்களில் ஒருவராக, வடமத்திய மாகாண சமாதானக் கல்வி வளக்குழு உறுப்பினராக,அல் இஸ்லாஹ் பாலர் பாடசாலையின் செயலாளராக அவரின் கல்விப்பணி தொடர்கின்றது.

இலக்கிய முயற்சிகளும் தொடர்கின்றன. படிகள் என்ற இலக்கிய சஞ்சிகை 12 வருடங்களாக அனுராதபுரத்திலிருந்து தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதற்கு பின்னணியில் நின்று உதவுபவாராக அன்புஜவஹர்ஷா இருப்பதை படிகளின் ஆசிரியர் வஸீம் அக்ரம் தனது கட்டுரையில் உறுதி செய்துள்ளார்.

அனுராதபு மாவட்டத்தில் ஆறுதசாப்தங்களாக கல்வி,கலை இலக்கியம், சமூகநலன் சார்ந்து உழைத்து வருபவர் அன்புஜவஹர்ஷா. அவருடைய கல்வி,எழுத்து,இலக்கிய இயக்கம் தொடர வேண்டும் . அதற்கான உடல் உள பலத்தை இறைவன் அவருக்கு வழங்க வேண்டுமென்பதே நமது பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
*29.01.2023*

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத் தகவற் களஞ்சியமாக இயங்கும்
மூத்த கலை இலக்கிய ஆளுமை

## ஜவாத் மரைக்கார்

*0714244387*



எழுத்து ,இலக்கியம், திறனாய்வு, வானொலி, தொலைக் காட்சி இலக்கிய நிகழ்ச்சிகள், கல்விசார் கட்டுரைகள் என்பவற்றில் கரிசனை செலுத்துபவராக, ஈழத்தில் முன்னணி வகித்து வரும் படைப்பாளி ஜவாத் மரைக்கார். சிறு வயதிலேயே இலங்கை ,இந்திய சஞ்சிகைகளை வாங்கிப் படிப்பதில் ஆர்வம் செலுத்திய அவரின் எழுத்துலகப் பிரவேசம் 1968ல் தினபதி கவிதா மண்டலத்தில் எழுதியதன் மூலம் நிகழ்ந்தது.

ஆரம்பத்தில் மரபுக் கவிதைகளை எழுதி வந்த அவர், 70 களின் தொடக்கத்திலிருந்து புதுக்கவிதைகளையும் எழுதத் தொடங்கினார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அவருக்கு கிடைத்த திக்குவல்ல கமால், அன்பு ஜவஹர்ஷா, மூதூர் முகைதீன், கலைவாதி கலீல், ஹாஃபீஸ் இஸ்ஸத்தீன், எம்.எஸ் அமானுல்லாஹ், ஓவியர் ரமணி, ரைத்தளாவள அஸீஸ் போன்ற நண்பர்களின் சகவாசத்தாலும்,உந்துதலாலும் கலை இலக்கியத் துறையில் ஆர்வம் மேலெழுந்தது.

அக்காலத்தில் தமிழகத்தில் இயங்கி வந்த வானம்பாடிக் கவிஞர் பலருடன் தொடர்பு ஏற்பட்டது. தமிழக சஞ்சிகைகளின் இறக்குமதி இலங்கையில் கட்டுப்படுத்தப் பட்டிருந்த அக்கால கட்டத்தில், இலங்கையில் பெற முடியாதிருந்த வானம்பாடி, பிரக்ஞை , சதங்கை, தேன்மழை, விவேகச்சித்தன், கணையாழி போன்ற பல்வேறு சிற்றிலக்கிய வெளியீடுகளைத் தமிழக நண்பர்களிடமிருந்து தொடர்ச்சியாகப் பெற்று வந்ததோடு, மேலதிகப் பிரதிகளை இலங்கை நண்பர்களுக்கு இலவசமாக அனுப்பியும் வைத்தார். அந்தப் பழக்கம் இன்று வரை தொடர்கின்றது.

அவருடைய வீட்டு நூலகம் பல்துறை சார்ந்த பல்லாயிரம் நூல்களால் நிரம்பியுள்ளதை அதனைத் தரிசித்தவர்கள் எடுத்துக் கூறுவர் .இலங்கை -இந்திய இலக்கிய உறவுப் பாலமாகவும் இலக்கியத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தகவற் களஞ்சியமாகவும் திகழ்பவர் அவர். யாப்பிலக்கண ,மொழி இலக்கணத் தேர்ச்சி பெற்றிருக்கும் அவர்,மரபுக் கவிதை பற்றிய அறிவோடும் ,புதுக்கவிதை நுட்பங்களைப் புரிந்துகொண்டும் எழுதுபவர்.

அச்சு ஊடகத்தில் மட்டுமல்லாமல் தொலைக் காட்சி,வானொலி, மேடை நிகழ்ச்சிகளிலும் பல்துறைகளில் இலங்கியவர். தொலைக் காட்சிகளில் கவியரங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும், தலைமை தாங்கியும், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும் புகழ் பூத்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இலக்கிய மஞ்சரி என்ற வாராந்த சஞ்சிகை நிகழ்ச்சியினை(1982-1984) இரண்டு வருடங்களும், மேலும் (1995-2000) ஐந்து வருடங்களும் திறம்பட நடத்தியதன் மூலம் இலக்கிய நேயர்களின் அபிமானத்தை வென்றவர். அவருடைய இலக்கிய மஞ்சரிப் பணியினையும், இலக்கியப் புலமையையும் பாராட்டி தமிழகத்தைச் சேர்ந்த இறையருட் கவிமணி பேராசிரியர் அப்துல் கபூர் அவர்களும், திருச்சி றசூல் அவர்களும் முஸ்லிம் சேவைக் கட்டுப் பட்டாளருக்கு அனுப்பியிருந்த கடிதம் அவரின் இலக்கியப் பணிக்குக் கிடைத்த கௌரவமாகும்.

பத்திரிகையில் மாணவர், ஆசிரியர்கள் தொடர்பாக எழுதிய பக்கங்கள் மற்றும் சமூக விமர்சனங்கள் என்பவை இன்றும் மறக்க முடியாதவை. தினகரன் நாளிதழில் புதன், வியாழன் தினங்களில் பல வருடங்கள் மாணவர்களுக்காக வித்தியாகரன் என்ற புனைபெயரில் அவர் எழுதி வெளிவந்த கல்விக் கதிர் என்ற பக்கமும், குருபீடம் என்று தனது சொந்தப் பெயரில் ஆசிரியர்களுக்காக எழுதிய பக்கமும், திக்குவல்ல-யோனகபுர (லிபிய நட்புறவு) மக்கள் கொங்ரஸினால் வெளியிடப்பட்ட "அஷ்ஷூரா" (ஆசிரியர் எம் எச் எம். ஷம்ஸ்) என்ற மாதாந்த இதழில் "கர்பலா" என்ற தலைப்பில் புத்தீட்டி என்ற புனைபெயரில் எழுதிய சமூக விமர்சனக் கண்ணோட்டமும் கல்வியியலாளர்களாலும், சமூகவியலாளர்களாலும் வரவேற்கப்பட்டவை.

கல்பிட்டி அல் அக்ஸா மகா வித்தியலயத்தில் அவர் கற்பித்த போது(1980) பாடசாலையின் வெள்ளிவிழா மலரின் ஆசிரியராக இருந்து ஆற்றிய பணி பலராலும் போற்றப்பட்டது. அச்சு வசதிகள் நவீனத்துவமடையாத அக்காலத்தில், செம்மையான அமைப்பு, உள்ளடக்கம் என்பவை கொண்டதாக மலரை அமைத்திருந்தார் ஆசிரியர் ஜவாத் மரைக்கார். (திறனாய்வாளர்களான பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் எம்.ஏ .நுஹ்மான் போன்றோரின் பாராட்டுக்களையும் அம்மலர் பெற்றுக் கொண்டது.)

அல்ஹாஜ் ஜவாத் மரைக்கார் புத்தளம் நுரைச் சோலையில் 1949 ல் பிறந்தவர். தந்தை-அபூபக்கர் மரைக்கார், தாய் அப்துல் ஹமீது நாச்சியா. புத்தளம் நுரைச்சோலை முஸ்லீம் வித்தியாலயம், கல்பிட்டி அல் அக்ஸா மஹா வித்தியாலயம், யாழ் வல்வெட்டித் துறை சிதம்பராக் கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை என்பவற்றில் கற்றவர். 1971ல் ஆசிரிய நியமனம் பெற்ற அவர், கல்விமாணி, விஞ்ஞான மாணி பட்டங்களையும் பெற்றவர்.

பள்ளிவாசல்துறை முஸ்லிம் வித்தியாலயம், பறகஹ தெனிய முஸ்லிம் மஹா வித்தியாலயம், புத்தளம் ஸாஹிறாக் கல்லூரி, கல்பிட்டி அல்அக்ஸா மகாவித்தியாலயம் என்பவற்றில் கற்பித்தவர். அவருக்கு விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் நியமனம் 1980ல் கிடைத்தது.

இப்பதவிக் காலத்தில் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்திலும் தொடர்ந்து மகரகம கல்வி நிறுவகத்திலும் விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியத்துறை, தமிழ்மொழித் துறை வளவாளராகவும் பணியாற்றி ஆசிரியர்களுக்கான பாடவழிகாட்டி நூல்களை ஆக்குவதிலும், தேசிய ரீதியில் ஆசிரிய ஆலோசர்களைப் பயிற்றுவிப்பதிலும் ஈடுபட்டுக் கல்விப் பணி புரிந்தார்.

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் போதனாசிரியராக இருந்ததோடு, அதன் பொறுப்பாளராகவும் சிரேஷ்ட போதனாசிரியராகவும் சிறப்பாகச் செயற்பட்டு மேலதிகாரிகளிடம் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டவர் அல்ஹாஜ் ஜவாத் மரைக்கார்,

இலங்கை அரச பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட (1980)இஸ்லாமிய பாட நூல் ஆக்கக் குழுவிலும் இடம் பெற்றிருந்தார். 1999ல் போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அவர், புத்தளம் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் புத்தளம் கல்வி வலயத் தமிழ்ப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 2009ல் ஓய்வு பெற்றார்.

பல்துறை ஆற்றல் மிக்க, ஆறுதசாப்தங்களுக்கு மேலான கலைத் துறை அனுபவம் கொண்ட அவருக்கு கலை,கல்வி,இலக்கிய சமூகப் பணிகளுக்காகப் பல உயர் விருதுகள் கிடைத்தன.

1. அரச கலை இலக்கிய உயர் விருதான கலாபூசணம்-1996(விண்ணப்பம், சிபார்சு என்ற தற்போதைய நடைமுறைகள் இல்லாமல் கலாசார அமைச்சின் தெரிவுக் குழுவே தெரிந்து கொடுத்த விருது)

2. அகில இலங்கை சமாதான நீதவான் -2000( வரலாற்றில் முதல் தடவையாக , விண்ணப்பம் பொலீஸ் அறிக்கை,சிபார்சு என்பன இல்லாமல், கலாசார அமைச்சு 150 கலைஞர்களை தேசியரீதியில் தெரிவுசெய்து நீதி அமைச்சின் மூலம் இப்பதவியை வழங்கி வைத்தபோது கிடைத்தது.)

3. 2002ல் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பொன்னாடை போர்த்திக் கௌரவம்.

4. 2005ல் அகில இலங்கை சமாதான நீதிபதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி, பிரதம மந்திரி ஆகியோரால் வழங்கப்பட்ட தேசகீர்த்தி விருது.

5. 2008ல்பௌத்த மத பீடங்கள் பலவற்றின் ஒன்றிணைந்த அமைப்பான "ஸ்ரீலங்கா விஷ்வ சமாதி பதனம"வின் ஏற்பாட்டில் கிடைத்த தேசபந்து விருது.

6. 2011ல் அதே சிறீ லங்கா விஷ்வ சமாதி பதனமவின் ஏற்பாட்டில் கிடைத்த தேச மானிய, லங்கா திலக, சமாஜ சுபசாதன சூரி என்ற விருதுகள்.(இவற்றில் எந்த விருதும் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக் கொண்டதோ, சிபாரிசு மூலம் தேடிப் பெற்றுக் கொள்ளப்பட்டதோ அல்ல நாடி வந்தவை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கல்வித் துறையிலும்,கலை இலக்கியத் துறையிலும் கண்ணியம் பெற்றிருக்கும் எழுத்தாளர் ஜவாத் மரைக்கார், இலங்கை கலாசார அமைச்சின் முஸ்லிம் நுண்கலைக் குழு உறுப்பினராகவும், அகில இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சம்மேளனத்தின் உப செயலாளராகவும்,அகில இலங்கை ஊடகவியலாளர் சங்கத்தின் உப தலைவராகவும் மதிப்போடு இயங்கியவர்.

இப்பொழுதும் அமைதியாக இருந்து அரும் பணியாற்றி வருபவர் மூத்த கவிஞர் ஜவாத் மரைக்கார். அணிந்துரைகள்,மதிப்புரைகளை வழங்கி புதியவர்களை ஊக்குவித்து வருகின்றார். முகநூல் தளத்தில் பயன் மிக்க இலக்கியத் தகவல்களையும், பழந்தமிழ் இலக்கியப் பாடல்களின் சொற்சுவை,பொருட் சுவை குறித்தும் உரை நிகழ்த்தி வருகின்றார்.. அண்மையில் "இப்படிப் பாடினரே" என்ற தலைப்பில் அவர் முகநூல் தளத்தில் ஆற்றிய உரை, புதியவர்களை ஈர்த்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

அவர் தேக நலத்தோடு இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும் அவரின் நூல்கள் வெளிவரவேண்டும் . அதனால் நமது இலக்கிய உலகம் பயன் பெற வேண்டும் என்பவையே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளன.

*தமிழன் பத்திரிகை*
***20.08.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் - சிங்கள எழுத்துறவுப் பாலம்

# திக்குவல்லைக் கமால்



*0716386955*

திக்குவல்லைக் கமால் தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமல்ல சிங்கள மொழி பேசும் மக்களிடத்திலும் பிரபலம் பெற்றிருக்கின்ற படைப்பாளி. சிறுகதை, நாவல், கவிதை, சிறுவர்கதைகள், நாடகம், மொழிபெயர்ப்பு இலக்கியம் என்று பல்துறைகளிலும் ஆழமாகப் பெயர் பதித்த முன்னணி எழுத்தாளன். தென்னிலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் பேச்சுமொழியை புனைகதைகளுக்குள் வாழவைத்துப் புகழ் பூத்த கதைஞன்.

விளிம்புநிலை மக்களின் வாழ்வை, அவர்களின் பிரச்சினைகளை, உணர்ச்சி வெளிப்பாட்டை தன் படைப்புகளுக்குள் காட்சிப் படுத்திய மூத்த இலக்கிய ஆளுமை.

திக்குவல்லைக் கமாலின் படைப்புகள் வெளிவராத பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலங்கையில் இல்லை என்று சொல்லும் விதமாக நிறையவே எழுதிக் குவித்தவர் கமால்.

சிங்களப் பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டு தமிழ் வளர்த்த எழுத்தாளர்கள் வரிசையில் முக்கிய இடம் அவருக்குண்டு. தமிழ்- சிங்கள இலக்கியப் படைப்பாளர்களின் நட்புறவுப் பாலமாகத் திகழ்ந்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், திக்குவல்லை எழுத்தாளர் சங்கம், மல்லிகைப் பந்தல் என்பவற்றோடு இணைந்திருந்து எழுத்தூழியம் புரிந்தவர். அவரின் எழுத்து முயற்சியில் விளைந்த நூற்கள் பல. 70க்கு மேற்பட்ட நூற்களைத் தந்து சாதித்திருப்பவர் அவர்.

10 சிறுகதை நூல்கள், 8நாவல்கள், 03 கவிதை நூல்கள், 03 சிறுவர்இலக்கிய நூல்கள், 02 நாடக நூல்கள், 01 கட்டுரை நூல், 15 மொழிபெயர்ப்பு நாவல்கள், 05மொழிபெயர்ப்புச் சிறு கதைகள், 10 மொழிபெயர்ப்பு சிறுவர் இலக்கியம், 05ஏனைய மொழிபெயர்ப்புகள், 05 சிங்களத்திற்கு ,03 கூட்டுமுற்சியாக என்று நீள்கிற பட்டியலின் அனைத்து நூல்களையும் தர இப்பத்தி இடம் தராது என்பதனால் அவற்றுள் சில இங்கே தரப்படுகின்றன

- எலிக்கூடு (புதுக்கவிதை, 1973)
- கோடையும் வரம்புகளை உடைக்கும் (சிறுகதைகள், 1984)
- குருட்டு வெளிச்சம் (சிறுகதைகள், 1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒளி பரவுகிறது (நாவல், இலங்கை சாகித்திய மண்டல பரிசு **1995)**
- விடுதலை (சிறுகதைகள், **1996)**
- விடை பிழைத்த கணக்கு (சிறுகதைகள், **1996)**
- புதியபாதை (சிறுகதைகள், **1997)**
- நச்சு மரமும் நறுமலர்களும் (நாவல், **1998)**
- வரண்டு போன மேகங்கள் (சிறுகதைகள், **1999)**
- பாதை தெரியாத பயணம் (நாவல், **2000)**
- புகையில் கருகிய பூ (வானொலி நாடகங்கள், **2001)**
- பிறந்த நாள் (சிறுவர் இலக்கியம், **2003)**
- மல்லிகை ஜீவா மனப்பதிவுகள் (கட்டுரை, **2004)**
- நிராசை (வானொலி நாடகங்கள், **2005)**
- உதயபுரம் (சிறுவர் இலக்கியம், இலங்கை சாகித்திய மண்டல பரிசு, **2005)**
- உதயக் கதிர்கள் (நாவல், **2006)**
- முட்டைக் கோப்பி (சிறுகதைத் தொகுப்பு, **2010**

மொழி பெயர்ப்பு

- குருதட்சணை (சிங்கள மூலம்: தெனகம ஸ்ரீவர்தன)
- தொடரும் உறவுகள் (சிங்கள மூலம்: சிட்னி மார்க்கஸ் டயஸ்)
- வெற்றியின் பங்காளிகள் (சிங்கள மூலம்: விமலதாஸ முதலிகே)
- வெற்றி மழை (புதினம், சிங்கள மூலம்: குணரத்தின ஏக்கநாயக)
- கங்கைக் கரைக் காடு (புதினம், சிங்கள மூலம்: சோமவீர சேனாநாயக்க

இவர் எழுதிய எலிக்கூடு ஈழத்தில் வெளியான முதலாவது புதுக் கவிதை நூலாகப் பிரபலம் பெற்றது குறிப்பிடத்தக்கது. ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் கணிசமான நூல்களைத் தந்த வாழ்நாள் சாதனையாளராக திக்குவல்லை கமாலைக் குறிப்பிடலாம்.

தனது நூல்களுக்காக அரச சாஹித்ய விருது,கொடகே சாஹித்ய விருது,துரைவி விருது, இரா-உதயணன் விருது,யாழ் இலக்கியப் பேரவை விருது, லங்கா பறக்கும் சிறகுகள் விருது, தமிழியல் விருது என இலங்கையில் இலக்கிய நூல்களுக்காக வழங்கப்படும் முக்கிய விருதுகள் அனைத்தையும் பெற்றிருப்பவர். கலாபூஷணம், இலக்கிய வேந்தன்,காவ்ய பிரதீபா, தேசத்தின் கண் என்று அரசினாலும், முதன்மை அமைப்புக்களாலும் வழங்கப்படும் உயர் பட்டங்களைப் பெற்றிருப்பவர், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம், தகவம் என்பவற்றால் கௌரவம் பெற்றவர் என்று இலக்கிய உலகில் புகழீட்டி இருப்பவர் திக்குவல்லைக் கமால்.

பேராதனை,சப்ரகமுவ,கிழக்கு,தென் கிழக்கு பல்கலைக்கழகங்களில் இவர் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஜீவநதி சஞ்சிகை அதன் **166**வது (மார்ச்**2022)** இதழை திக்குவல்லை கமால் சிறப்பிதழாக வெளியிட்டு கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவல்லை கமால் என்ற புனை பெயரில் ஈழத்து இலக்கிய உலகில் தடம்பதித்துள்ள முஜிதபா கமால் 1950ல், முஹம்மது ஜெலால்தீன், -ஆமினா உம்மா தம்பதியின் மகனாக திக்குவல்லையில் பிறந்தவர். திக்குவல்லை தமிழ்க்கலவன் பாடசாலை, வெலிகம அறபா மகா வித்தியாலயம், தர்ஹாநகர் அல்ஹம்றா,தர்ஹா நகர் ஸாஹிறா கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பவற்றில் கல்விகற்றவர். ஆசிரியராக, இலங்கைக் கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக,உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

"சுவை" என்ற தட்டச்சு இதழ் மூலம் 1968ல் எழுத்துலகிற்கு வந்த கமால், எழுத்துலகில் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து இலங்குகின்ற படைப்பாளி. புனைகதைத் துறையில் அவரின் பங்களிப்பு விசாலமானது.

மணிவிழாக் கண்டவர் திக்குவல்லைக் கமால், பவள விழா, நூற்றாண்டு விழா என்பவற்றையும் அவர் கண்டு களிக்க வேண்டும் ,வாழ்நாள் சாதனையாளராகவும் அவர் கொண்டாடப்படவேண்டு மென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்த னையாகும்.

*தமிழன் பத்திரிகை*
***08.01.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புத் தமிழகம் தந்த மனித நேயப் படைப்பாளி

## "பாடும்மீன்" ஸ்ரீஸ்கந்தராஜா

+61478060366



மீன் பாடும் தேன்நாடு என்று புகழ்பூத்திருக்கும் மட்டக்களப்புத் தமிழகத்தில் களுவாஞ்சிக் குடியில் சுப்பையாபிள்ளை - சின்னம்மா தம்பதியின் புதல்வராகப் பிறந்து, சமூகத் தொண்டாலும்,தமிழ்த்தொண்டாலும்,கலை இலக்கியப் பணிகளாலும் உள்நாட்டிலும்,புலம்பெயர் நாடுகளிலு,ம் மக்கள் மனங்களை வென்றிருப்பவர் பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராஜா. நாடகம், நடிப்பு, சிறுகதை, கட்டுரைகள், மரபுக் கவிதைகள், பேச்சு ,பட்டி மன்றங்கள் வில்லுப் பாட்டு என்று பல்துறைகளிலும் பிரகாசிப்பவர்.

அவரின் கலை இலக்கியப் பிரவேசம் 1968ல் தொடங்கிற்று. "உயிர்ப்பு" என்ற பாடசாலை சஞ்சிகையின் ஆசிரியராகத் தனது 14 வயதிலேயே இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தவர் அவர். எழுபதுகளிலிருந்து அவரின் சிறுகதைகள் தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளிலே வெளிவரலாயிற்று.

தனது உயிரியல் பாட ஆசிரியரான மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்களே தன் எழுத்துலக வழிகாட்டி யெனப் பெருமையாகக் கூறிக் கொள்ளும் இவர், சுதந்திரனில் அவரை எழுதச் சொன்னதையும் நிருபராக அவரைத் திரு .நடேசன் அவர்கள் சேர்த்து விட்டதையும் நினைவு கூர்கிறார்.அரசியல் ,சமூகம் சார்ந்த கட்டுரைகளை "திருமுருகிறை", "திருமுருகரசன்", "பாடும் மீன் " என்ற புனை பெயர்களில் நிறையவே எழுதினார் .

இளமையில் இருந்தே சமூக சேவையில் ஈடுபடுவதிலும்,தமிழ்த் தொண்டு புரிவதிலும் துடிப்போடு இயங்கிய அவர், தான் பிறந்த மண்ணில் நூல் நிலையம் இல்லாத குறையினைத் தீர்த்து வைப்பதற்காக நண்பர்களோடு சேர்ந்து "எம்.ஜி.ஆர். மன்றமொன்றை" ஆரம்பித்து,வீடு வீடாகச் சென்று தென்னங் கிடுகுகள் சேகரித்து நூல் நிலையம்" அமைத்து ஆற்றிய பணி காலத்தால் அழியாததாகும்.

பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராஜாவின் நாடகத்துறை எழுச்சி குறிப்பிட்டுச் சொல்லப்படத் தக்கது. பள்ளித் தோழர்களை இணைத்துக் கொண்டு "இளம் நாடக மன்றம்" அமைத்து, ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி ,இயக்கி நடித்து பாராட்டும் பரிசுகளும் பெற்றவர் அவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் பௌர்ணமி தினங்களில் ஏற்பாடு செய்யப்படும் நாடக அரங்குகள் அனைத்திலும் பெரும் பாலும் பாடும் மீனின் நாடகம் தவறாமல் இடம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய கலை வடிவங்களான,நாட்டுக் கூத்து, நாட்டார் கவி, வசந்தன் கும்மி, கோலாட்டம் என்பவற்றிலும் அதிக அக்கறை செலுத்தியவர். இக்கலைகள்அழியாது பாதுகாப்பதற்காக பட்டிருப்புத் தொகுதி கலைஞர்களை இணைத்து,"பட்டிருப்பு கலைஞர் ஒன்றியம்" அமைத்துச் செயற்பட்டவர். கலைஞர்களின் நலன் பேணி, ஊக்குவித்துக் கருமமாற்றியவர். இளங்கலைஞர்களுக்கான பயிற்சிகளையும் வாய்ப்புக்களையும் வழங்குவதில் முன்னின்றவர்.

தமிழுணர்வோடும் கலை இலக்கிய ஈடுபாட்டோடும் மக்கள்பணி புரிந்த பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராஜா பட்டிருப்பு மத்தியமகா வித்தியாலயம், மட்டக்களப்பு அரசினர் கல்லூரி என்பவற்றில் கல்விகற்றவர்.

13 வருடங்கள் அரசாங்க எழுதுவினைஞராகத் தொழில் புரிந்துவிட்டு, கொழும்பு பல்கலைக் கழகம், மெல்போன்பல்கலைக் கழகம் இலங்கை சட்டக் கல்லூரி என்பவற்றில் பயின்று சிறந்த முன்னணி சட்டத்தரணியாக மட்டக்களப்பு, கல்முனை நீதிமன்றங்களில் திகழ்ந்தவர்,

இலங்கையில் கலைஇலக்கியம் கல்வி, தொழில் என்பவற்றால் கண்ணியம் பெற்றிருந்த அவர் 1991ல் அவுஸ்திரெலியாவுக்குப் புலம்பெயர்ந்த போதும் அவருடைய கலை இலக்கியப் பணி ஓயவில்லை.

அங்கு 1992 முதல் அவருடைய கலைப்பணி தொடர்ந்தது."மாவீரன் எல்லாளன்" வரலாற்று நாடகம், "மெல்போன்கந்தையா" நகைச்சுவை நாடகம்,"கன்னிமனம்" நாடகம்,"அப்படியே சங்கதி" தாளலய நாடகம் என்பவற்றை எழுதி இயக்கி நடித்த தோடு, எஸ். பொ.வின் "வலை "நாடகத்தையும் இயக்கி நடித்து அவுஸ்திரேலிய தமிழ்நாடக இரசிகர்களின் தாகத்தைத் தீர்த்து வைத்தவர் அவர்.

விக்ரோறியா மாநில பல்கலைக் கழக புகுமுக வகுப்புத் தேர்வுக்காக 12ம் வகுப்பில் தமிழும் ஒருபாடமாகச் சேர்க்கப்படவேண்டுமென்று முயற்சித்து வெற்றி பெற்றவர்களில் ஒருவராகக் கணிப்புப் பெற்றவர், ஈழத்துத் தமிழ்ச் சங்கத் தலைவராக அவுஸ்திரேலியாவில் இருந்து, மாணவர்களின் பேச்சுக் கலையை ஊக்குவிப்பவர். பயிற்சிகளை வழங்குபவர். பழந்தமிழ் இலக்கியம், ஐம்பெரும் காப்பியங்கள் என்பன தொடர்பில் தொடர்ந்தும் வானொலியில் உரையாற்றி தமிழின்பத்தை அள்ளித் தருபவர் என்று பெருமதிப்புப் பெற்றிருப்பவர் திரு ஸ்ரீஸ்கந்தராஜா.

புலம் பெயர்ந்தவர்களிடையே இலக்கியப் போட்டிகளை நடத்தி பரிசளித்து கௌரவித்தவர். அவ்வாறு கிடைத்த சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து "புலம்பெயர் பூக்கள்" என்ற சிறுகதை நூலினை வெளியிட்டவர்.

"தமிழ் உலகம் "இருமொழிப் பத்திரிகையின் ஆசிரியராக இயங்கியவர். வானமுதம் ஒலிபரப்பினை நடத்திவரும் விற்றல்சீயின் ஆரம்பிப்பாளர்களில் ஒருவராக கண்ணியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் என்று கலை இலக்கிய உலகில் புகழ்பூத்திருப்பவர் பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராஜா. தமிழ் உணர்வாலும், கலை இலக்கிய செயற்பாடுகளாலும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்பவர் அவர். அவருடைய நூல்கள் தமிழறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றவை. சான்றோர்களின் பாராட்டையும் விருதுகளையும் நிறையவே பெற்றிருப்பவர் அவர்.

ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கி அவர்களின் படைப்புகளையும் வெளிக் கொணர்வதில் கரிசனை செலுத்துகின்ற இலக்கிய நெஞ்சமாக அவர் மதிக்கப்படுகின்றார்.

தமிழ்மகன் பாடும்மீன் ஸ்ரீஸ்கந்தராஜாவின் பணிகளுக்காக அவரை வாழ்த்துவதோடு அவரின் இலக்கிய முயற்சிகள் இன்னும் மெருகு பெறப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழன் பத்திரிகை
***06.11.2022***

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அபிமானம் வென்ற கலைஞர்

## மஹ்தி ஹஸன் இப்றாஹீம்

*0771288466*



இலங்கையின் கலை ,இலக்கிய வளர்ச்சியில் இலங்கை வானொலியின் பங்களிப்பு குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும். தேசிய சேவை,வர்த்தக சேவை என்று இருபெரும் பகுதிகளாகவும் முஸ்லிம் சேவை போன்ற சமயம் சார்ந்த பகுதிகளாகவும் நடத்தப்பட்ட அதன் ஒலிபரப்பு, கலைக்கோலம்,இசையும் கதையும், கவிஞர் மன்றம், வாலிப வட்டம்,இளைஞர் மன்றம்,இசைமாலை, இலக்கிய மஞ்சரி,நாடகம்,சிறுவர் மலர்,கிராமிய சஞ்சிகை, பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி ,மாதர்மஜ்லிஸ் ,உரைச்சித்திரம், மருதமலர்,முதுசொம்,அகல் விளக்கு, தேர்ந்த இசை, பாட்டும் பதமும்,பொதிகைத் தென்றல், இன்றைய நேயர் போன்ற தரம் வாய்ந்த கலை கலாச்சார இலக்கிய நிகழ்ச்சிகளை நோக்கியும் வியாபித்திருந்தது.

அவ்வாறு, இலங்கை வானொலி அமைத்திருந்த நிகழ்ச்சிகளில் பங்கு பற்றித் தங்களை வளர்த்துக் கொண்ட பலர், இன்று இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியா மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் புகழ்பெற்றிருப்பதனை கலை இலக்கிய உலகம் நன்கு அறியும். அறிவிப்பு,இசை,நாடகம்,நடிப்பு,பேச்சு,கவிதை,பாடல் என்று பல் துறையிலும் புகழ் பெற்று, நேயர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்திருக்கின்ற அத்தகைய கலைஞர்களின் வரிசையில் முன்னிலை வகிப்பவர்களில் ஒருவர் மஹ்தி ஹஸன் இப்றாகீம்.

பிரதி ஆசிரியராக,நாடகாசிரியராக, பகுதிநேர அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக,நடிகராக என்று பல தளங்களில் விரிந்த கலைப்பணி அவருடையது.,எழுத்து ஒலிபரப்புத் துறையில் 50 ஆண்டுகால அனுபவமும் ,தேர்ச்சியும் வாய்க்கப் பெற்றவர் அவர்.

மஹ்தி ஹஸனின் கலைப்பயணம் 1969ல் இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் இசைமாலை நிகழ்ச்சிக்குப் பிரதியாக்கம் செய்ததோடு ஆரம்பமாகிற்று. அறிவிப்பாளர் எஸ்.கே.பரராஜசிங்கத்தின் குரலில் ஒலிபரப்பான தனது இசைமாலை எழுத்துப்பிரதி தந்த மலர்ச்சியில் தொடர்ந்து வானொலிக்கு எழுதியவர் மஹ்தி. தேர்ந்த இசை,பொதிகைத் தென்றல்,ஒலிமஞ்சரி,இன்றைய நேயர் போன்ற நிகழ்ச்சிகளில் அவை இடம் பெற்றன. இன்றைய நேயர் ஆரம்பிக்கப்பட்டு முதல் ஒரு மாதத்திற்குள் எழுதிய முஸ்லிம் நேயர் என்ற பெருமை அவருக்கு உண்டு .வானொலியில் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தில் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரிக்குக் கூட பெண் பெயரில் எழுதி தன் எழுத்தாற்றலை வளர்த்துக் கொண்டவர் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இள வயதில் இருந்தே வானொலியின் மீது அவருக்கிருந்த கவர்ச்சியும் ,காதலும் வானொலி அறிவிப்பாளனாக வரும் எண்ணத்தை அவர் உள்ளத்தில் விதைத்தன. விண்ணப்பித்து,1971ல்பகுதி நேர அறிவிப்பாளர் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய போதும் நிராகரிக்கப்பட்டார். எத்தனை எழுத்துப் பிரதிகளைத் தந்த போதிலும், நேரடியாகக் கலந்து கொண்டு வானொலிக்கான குரல் வளத்தையும், ஆற்றலையும் நிரூபித்தால்தான் பகுதி நேர அறிவிப்பாளராக வரமுடியுமென மூத்த அறிவிப்பாளரான இராஜேஸ்வரி சண்முகம் அறிவுரை கூறியதோடு அவரின் தயாரிப்பில் மலர்ந்த "அகல் விளக்கு" நிகழ்ச்சியில் நேரடியாகக் கலந்து கொள்ளவும் வாய்ப்பளித்தார்..அன்றுதான்(30-11-1971-) தன் குரல் வானொலியில் ஒலித்த முதல் நாள் எனப் புளகாங்கிதம் அடைபவர் மஹ்தி ஹஸன். இதன் பின்னர் ஜோர்ஜ் சந்திர சேகரன் தயாரித்த இளைஞர் மன்றம், விமல் சொக்க நாதன் தயாரித்த வாலிப வட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் அவரின் குரல் தொடர்ந்து ஒலிக்கத் தொடங்கிற்று.

தயாரிப்பாளர் எம்.எம். இர்பான் முஸ்லிம் சேவையில் தயாரித்த முதுசொம்,மருதமலர் போன்ற நிகழ்ச்சிகளிலும் வாராவாரம் பங்கு பற்றி தனது ஆற்றலை வளர்த்துக் கொண்டவர் அவர். மஹ்தி ஹசனின் கலைப்பயணத்தின் விகசிப்புக் காலமாக 1972 ஐ குறிப்பிடலாம். இப்பகுதியில் முஸ்லிம் நிகழ்ச்சியின் உரைச்சித்திரத் தேர்விலும்,பின்னர் நாடகத் தேர்விலும் தேர்வுபெற்ற பின், பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது.

சன்மானம் பெறும் கலைஞராகவும் அவர் உயர்த்தப்பட்டார். சுவைக் கதம்பம் என்ற பெயரில் (அப் பெயர் வைத்தவரே மஹ்தி ஹசன்தான்) ஜனரஞ்சக நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தியதும், விகட விருந்து என்ற 15நிமிட நகைச்சுவையை நடத்தியதும், குறுக்கு வழி என்ற நகைச்சுவை நாடகத்தை அந் நிகழ்ச்சியில் நடித்ததும், வர்த்தக சேவைக்கு தொடர்ந்து விளம்பர நாடகங்கள் எழுதிப் புகழ்பெற்றதும் 1972 காலப்பகுதியில்தான்.

மஹ்தி ஹசனின் நாடகங்களுக்கு நேயர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பிருந்தது. 1979-1990 காலப்பகுதியில்,வானொலியில் நகைச்சுவை நாடகங்கள் என்றாலே அது மஹ்தி ஹசனுடையதுதான் என்று சொல்லுமளவில் பெயரும் செல்வாக்கும் அவருக்கிருந்தது.

கரையைத் தொடாத அலைகள்,கல்யாணக் கைதிகள்,இருதுருவம்,மீண்டும் கோமாளிகள், விண்வெளியில் கோமாளிகள்,13ம் நம்பர் கட்டில், என்று பல நகைச்சுவை நாடகங்கள் மலர்ந்தன.இலங்கை வானொலி மேடை நாடக விழாக்களில் அவரின், நம் பஸ் வரும் வரை, மனத்திரை போன்ற நாடகங்கள் அரங்கேறின. "அலாவுதீனின் அற்புத விளக்கு" என்ற அவரின் மேடை நாடகம் இரசிகர்கள் மத்தியில் பெரிதும் பாராட்டைப்பெற்றது. மஹ்தி ஹசன் 1979ல் வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராக நியமனமும் பெற்றுக் கொண்டார். வர்த்தக சேவையில் நகைச்சுவைப் பூங்கா,கொஞ்சம் சிரிங்க,ஒருபடப்பாட்டு ஒலிச்சித்திரம் போன்ற நிகழ்சிகளைத் தொகுத்து வழங்கிப் பெயர் பெற்றார் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1983-1986* கலவர காலத்தில் தமிழ் ஒலிபரப்பு இடம்பெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அறிவிப்பாளன் என்ற வகையிலும், நோன்பு காலத்தில் மாதம் முழுவதும் ஷஹர் நிகழ்ச்சியைத் தனித்திருந்து செய்தவர் என்ற வகையிலும் நேயர்களின் கூடுதல் அபிமானத்தைப் பெற்றிருப்பவர் அவர்.

அவருடைய கலை உலகப் பயணத்தில் வெளிக்கள ஒலிப்பதிவு உத்திகளைப் புரிந்துகொள்ளவும், நிகழ்ச்சிகளை ஜனரஞ்சகப் படுத்தவும் பலமூத்த கலைஞர்கள் உதவியிருப்பதை நன்றியோடு நினைவு கூர்கிறார் மஹ்தி. வி.என்.மதியழகன், பீ.எச் அப்துல்ஹமீத், ரஷீத் எம் ஹபீல் என்று மூத்த அறிவிப்பாளர்கள் அவர் நினைவில் வந்து நிறைகின்றனர்.

மஹ்தி ஹஸன் தனது கலைத்துறைப் பயணத்தில் கௌரவங்கள்,பரிசுகள்,விருதுகள் என நிறையவே பெற்றுள்ளார்.

1. உலகப்புகழ் பெற்ற அறிவிப்பாளர் பி.எச் அப்துல் ஹமீத் நடத்திய பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சிக்கு நடுவராகச் செயற்பட்டுப் பெற்ற கௌரவம்,
2. உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கிடைத்த மூத்த கலைஞருக்கான கௌரவம்,(2002)
3. ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் கௌரவிப்பும் ,பொற்கிழியும்(2004)
4. ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் கௌரவிப்பும் பொற்கிழியும்(2007)
5. கலாபூஷண விருது(2012)என்பன அவற்றுள் சில.

இலங்கை கலாசார அமைச்சின் சிறுவர் நாடக விழா, அரசநாடக விழாக்களின் தேர்வுக் குழு உறுப்பினராகவும், அரச வானொலி ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டு சேவை புரிவதன் மூலமும் கண்ணியம் சேர்த்திருப்பவர் மஹ்தி ஹஸன் இப்றாகீம்.

கொழும்பில்1952ல் பிறந்தவர் அவர். தந்தை- பூகொட குமரிமுல்ல முஸ்லிம் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய ஹனிபா முஹம்மத் இப்றாஹீம். தாய்- ஹலீமதுஸ் ஸஹ்தியா. மனைவி, இவரின் வானொலி இரசிகையாக விருந்த பண்டாரவளையைச் சேர்ந்த காலஞ் சென்ற நஜிமுன்னிஸா. நில அளவைத் திணைக்களத்தில் அலுவலராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர் கலாபூஷணம் மஹ்தி ஹஸன் இப்றாஹீம்.

தேகநலத்தோடு அவர் வாழவேண்டும். புதிய நாடகக் கலைஞர்கள் உற்சாகம் பெறும் வகையில் பிரபலம் பெற்ற அவரின் நாடகங்கள், மீளுருவாக்கம் செய்யப்பட்டு மேடையேற்றப்படவேண்டும் என்பவையே நமது வேண்டுதலும் பிரார்த்தனை யாகவும் இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
23.07.2023

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமான படைப்புக்களால் முற்போக்கு
சிந்தனைகளை விதைக்கும்

# முல்லை வீரக்குட்டி

*0755406706*



ஈழத்தின் நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகளாக மஹாகவி,முருகையன்,நீலாவணன் ஆகியோரை இலக்கிய உலகம் குறிப்பிடும். அவர்களில் ஒருவரான கல்முனைப் பிரதேசத்தைத் சேர்ந்த நீலாவணனைக் கவிதை வழிகாட்டியாகக் கொண்டு கல்முனைப் பிரதேசத்தின் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் தடம் பதித்தவர்கள் பலர்.பாண்டியூரன், சடாட்சரன், ஜீவா ஜிவரத்தினம்,மருதூர்க்கொத்தன்,நுஃமான், சண்முகம் சிவலிங்கம், மருதூர்க் கனி அன்புமுகையதீன் ,பஸீல் காரியப்பர் என்று அக்கவிஞர் வரிசை நீண்டு செல்லும்.நீலாவணனின் கவிதைகளின் ஆகர்ஷிப்பிலும், நுஃமான், சண்முகம் சிவலிங்கம் போன்றோர் எழுதிக் காட்டிய "பேச்சோசைப் பண்பு"க் கவிதைகளால் கவரப்பட்டும் கல்முனைப் பிரதேசத்தில், எழுபதுகளில் இன்னும் சிலர் கவிதை உலகில் பிரவேசித்தனர்.

அவ்வாறு பிரவேசம் பெற்றவர்களில், தமிழக வானம்பாடிக் கவிஞர்களின் அருட்டுணர்வில் புதிய பறவைகள் கவிதாமண்டலத்தை உருவாக்கிச் செயற்பட்ட கவிஞர்களில் ஒருவராக (ஏனையவர்கள் கல்முனைப்பூபால்,பாலமுனை பாறூக், அன்புடீன்,பாண்டியூர் தட்சணா) முக்கியத்துவம் பெற்றிருப்பவர் முல்லை வீரக் குட்டி.

இடது சாரிச் சிந்தனைகளை விதைத்த முற்போக்கு அணியினரோடு இலக்கிய, அரசியல் உலகில் இணைந்திருந்த முல்லை வீரக்குட்டி சுரண்டலுக்கு எதிராகவும் சமத்துவ சமதர்ம உலகை நாடியும் நிறையவே எழுதினார். அவரின் படைப்புகளுக்கு மல்லிகை, குமரன், ஜீவநதி,மகுடம் போன்ற சஞ்சிகைகளும், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி,தினகரன் போன்ற பத்திரிகைகளும் இடம் தந்தன. எழுத்து,இலக்கியம் என்று வாழ்ந்த முல்லை வீரக்குட்டி.. "நமக்குத் தொழில் கவிதை நாட்டுக் குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்ற பாரதியின் வரிகளில் தோய்ந்து இலக்கிய விமர்சனம்,கவிதை, சிறுகதை யெனத் தொடர்ந்து எழுதினார்.. எழுத்தையே ஜீவனோபாயத் தொழிலாகவும் கொண்டு ஒப்புநோக்காளராகவும்,பிரதி திருத்துனராகவும் பத்திரிகைத் துறையில் பணிபுரிந்தவர் வீரக்குட்டி.

பாடசாலைக் காலத்தில் இருந்தே கலைத்துறையில் ஈடுபாடு காட்டிய அவரின் "உணர்வுகள்" என்ற முதற் சிறுகதை சிந்தாமணி வாரமஞ்சரியில் 1968 ல் வெளியாகியது. அக்கதைக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 15/- சன்மானத்தை இப்பொழுதும் நெஞ்சம் நெகிழ நினைவு கூர்கிறார் முல்லை. அவருடைய முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையும் "காவியம் பாடுகிறேன்" என்ற தலைப்பில் சிந்தாமணி வார மஞ்சரியிலேயே இடம் பெற்றது. இன்றும் பாடிக் கொண்டே இருக்கும் முல்லை வீரக்குட்டி, ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான எழுத்தூழியத்தில் நிறையவே ஆக்கங்களைத் தந்திருந்த போதிலும் அவை அனைத்தும் நூலாக்கம் பெறவில்லை.

1998ல் "இன்னும் விடியவில்லை" என்று ஒரு கவிதைத் தொகுதி, குறிஞ்சிவாணன், தம்பிலுவில் ஜெகா,முல்லை வீரக்குட்டி ஆகியோரின் கவிதைகளை உள்ளடக்கியதாக வெளிவந்தது. 2014,ல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.. "மண்ணில் புதைந்த வரலாறு" என்ற முல்லை வீரக்குட்டியின் கவிதைத் தொகுப்பை அச்சிட்டு வெளியீடு செய்து கௌரவித்தது.

ஈழத்தின் இலக்கியப் பரப்பில் நன்கு அறியப்பட்டவராகவும்,இலக்கிய விமர்சகர்களால் குறித்துரைக்கப்படுபவராகவும் திகழ்பவர் முல்லை வீரக்குட்டி. வாழ்வியலை, நிலையாமையை,போரியல் அவலங்களை,இன ,மதவாத எதிர்ப்புணர்வை வித்தியாசமான படைப்புகளினூடாகத் தருபவர் அவர்.

"ஆடு நனைகிறதாம்
அழுகின்றன ஓநாய்கள்..
எலிக்கு மரணம்
விளையாட்டோ பூனைக்கு..?
தீப்பற்றி எரிகின்றன வயிறுகள்
பிடில் வாசிக்கிறார்கள் நீரோக்கள்...

தரமழிக்கப் பட்டு தாழ்வுற்ற ஒரு இனத்தின் வரலாறு இந்த மண்ணில் புதைக்கப் பட்டுள்ளது." என்றும் அதனையொத்த பொருட் பரப்பிலும் அவரின் கவிதைகள் பேசும்.

ஈழத்தின் சமகால அரசியல் நிகழ்வுகள் பற்றிய கண்டன விமர்சனங்களாக அவரின் கவிதைகள் அமைந்து வருவதையும்,உள்ளார்ந்த ஓசைப்பண்பு கொண்டவையாக, அழகியலோடு அவை நிமிர்வதையும் பேராசிரியர் செ. யோகராசா எடுத்துக் காட்டுவார்.

முல்லை வீரக்குட்டி தனது இலக்கியப் பணிக்காகவும் படைப்புக்களுக்காகவும் பரிசுகள், பட்டங்கள் விருதுகள் பலவற்றைப் பெற்றவர்.

- அரசின் கலை இலக்கிய உயர் விருதான கலாபூஷணம்(2012),
- கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கும் முதலமைச்சர் விருது 2012 ( வித்தகர் விருது),
- கிழக்குமாகாண, பண்பாட்டலுவல்கள் திணைக் களம் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு(2011), விமர்சனப் போட்டியில் முதல் பரிசு(2012) ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிழக்கு மாகாண பண்பாடலுவல்கள் திணைக்களம் நடத்திய மாகாண சாஹித்ய விழாவில் சிறந்த கவிதை நூலுக்கான விருது(2014)
- புதிய சிறகுகள் அமைப்பு நாடு தழுவிய ரீதியில் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு(2011)
- காத்தான்குடி நவகலாமன்றம் நாடு தழுவிய ரீதியில் நடத்திய இஸ்லாமிய கவிதைப் போட்டியில் ஆறுதல்பரிசு (2012),
- ஞானம் சஞ்சிகை எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவாக நடத்திய சிறு கதைப் போட்டியில் ஆறுதல் பரிசு,(2011),
- திருக்கோவில் பிரதேச செயலகம் மூத்த கலை இலக்கியவாதியாக கௌரவித்து வழங்கிய பொன்னாடைக் கௌரவம்(1996)
- இலங்கை கலாசார திணைக்களம் வழங்கிய சுவத விருது (2021)

என்பன அவற்றுட் சில.

முல்லை வீரக்குட்டி திருமலையில் முன்னோடிகள் நடத்திய இலக்கிய மாநாட்டில் கல்முனைப் புதிய பறவைகளின் பிரதிநிதியாக மாநாட்டு அமைப்புப் பணிகளில் முன்னின்றவர். வகவம் ,தலைநகரில் மாதாந்தம் நடத்தும் கவியரங்கில், அரங் கொன்றிற்கு தலைமை தாங்கியவர். தற்போதும்,திருக்கோவில் பிரதேச கலை இலக்கிய முயற்சிகளில் முன்னிலை வகித்துத் துடிப்போடு செயற்படுபவர்.

கிழக்கு மாகாணத்தின், அம்பாரை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவிலில் தம்பியப்பா காசிநாதன்- வீரக்குட்டி சுந்தரம்மா தம்பதியின் மகனாக 1949ல் பிறந்த அவர்,... தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்திலும், கல்முனை பற்றிமா கல்லூரியிலும் கல்வி கற்றவர்.. தம்பிலுவில். சுப்பிரமணியம் திலகராணி என்பவரை மணந்தவர். நான்கு பிள்ளைகளின் தந்தை. முல்லை வீரக் குட்டியின் பெற்றோர் தமிழ் மொழிப் பற்றுடையவர்களாகவும், புலமை மிக்கவர்களாகவும் தம்பிலுவில் மண்ணில் புகழ் பெற்றிருந்தார்கள். தந்தை காசிநாதன் பக்திக் கவிதைகள் எழுதிப் படிப்பவராகப் பெயர் பெற்றிருந்தார். “வீரபத்திர மாகாளி உற்பத்திக் காவியம் ”என்ற நூலை எழுதி 1955ல் அச்சிட்டு வெளியிட்டவர் அவர். தாய் சுந்தரம்மா பழந்தமிழ் இலக்கிய நூல்களைத் “திண்ணைப் பள்ளி“ மூலம் கற்று மனனம் செய்திருந்தார்.

பெற்றோர்கள் வழியில் தமிழ்த் தொண்டு புரிபவராகவும்,கோயில்களில் அறநெறி உரைகள் நிகழ்த்துபவராகவும் தனது பணியை விசாலித்திருக்கின்ற முல்லை வீரக்குட்டி, இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகம் பயன்பெறும் நல்ல பணிகளைத் தொடர்ந்திட வேண்டும், தொகுத்து வைக்கப் பட்டுள்ள “தரணி எங்கள் தாயகம்“என்ற அவரின் நூல் விரைவில் வெளிவரவேண்டும் என்பவையே எங்கள் எதிர்பார்ப்பும், பிரார்த்தனையுமாக உள்ளன.

தமிழன் பத்திரிகை
21.05.2023

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக்கொண்டவர்

## கவிஞர் அன்புடீன்

0778624255



இலங்கையின் எழுத்துலகம் பற்றி ஆய்வு மேற்கொள்பவர்கள் ஐம்பதுகள், அறுபதுகள், எழுபதுகள் எண்பதுகள் ...என்று கால இடைவெளி வைத்துப் பிரித்துப் பார்த்து எழுத்தாளர்களை ஆய்வுக்குட்படுத்துவர். இலக்கிய சஞ்சிகைகள் பத்திரிகைகளோடு தொடர்புபடுத்தியும் எழுத்தாளர்களை அடையாளப்படுத்துவதுண்டு. கலைச் செல்வி காலம், மரகதக் காலம், இன்ஸான் காலம், மல்லிகைக் காலம், குமரன் காலம் என்றவாறு வகைப் படுத்தல்கள் அமையும்.

அவ்வாறு, நோக்குகின்ற போது, குமரன் கால எழுத்தாளராக அடையாளம் பெறுபவர் அன்புடீன். எழுபதுகளில் இலக்கிய ஏடுகளில் ஆதிக்கம் செலுத்திய முற்போக்கு கலை, இலக்கியக் கோட்பாடுகளோடு இணைந்திருந்து படைப்புகளைத் தந்தவர். அன்றைய காலத்தில் வெளிவந்த குயிலோசை, வெற்றிமணி என்பவற்றில் எழுத ஆரம்பித்து, குமரன், மல்லிகையில் தொடர்ந்து தினபதி தந்த ஆதரவில் வளர்ந்தவர்.

கலை இலக்கியம் வெறுமனே பொழுது போக்குக்கானது என்ற எண்ணக் கருத்தை நிராகரிப்பவர் . கலை இலக்கியம் மக்களுக்கானது. மக்களின் வாழ்வியலை எண்ணங்களைப் படித்தரத்தை மேம்படுத்தும் உயரிய பணியை கலை இலக்கியம் செய்ய வேண்டுமென்ற கருத்தோடு உடன்படுபவர்.

அவரின் கலையுலகப் பிரவேசம் **1968**ல் நிகழ்ந்தது. பாடசாலை நாடகத்தில் நடிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டு திக்குவாய் என்ற காரணத்தால் பிரதான பாத்திரம் வழங்கப்படாமல் ஒதுக்கப்பட்டதனால், மனம்வருந்திய அவர், திக்கு வாயை நீக்குவதற்காக, ஆசிரியரின் ஆலோசனைப்படி, கவிதை நூல்களை வாய்விட்டுப் படிக்கத் தொடங்கினார். அவருடைய அந்த வாசிப்பே அவரைக் கலை இலக்கியத் துறைக்குள் இழுத்து வந்ததாகவும் கவிஞராக்கியதாகவும் கவிஞர் அன்புடீன் குறிப்பிடுவார்.

நாடகம், நடிப்பு, சிறுகதை, கவிதை என்று கலை இலக்கியத் துறையில் ஈடுபட்ட அன்புடீன், ஐம்பது வருடங்களாக கலை, இலக்கியப்பணி புரிந்து பொன்விழாவையும் கண்டு மகிழ்ந்தார். "சிற்பம் செதுக்கிய சிற்பி" என்ற பெயரில் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.

முகங்கள், சாமரையில் மொழிகலந்து, ஐந்து தூண்கள், தொப்புள் கொடியும் தலைப் பாகையும், என்ற கவிதை நூல்களையும், நெருப்பு வாசல் என்ற சிறுகதை நூலையும் இலக்கிய உலகிற்குத் தந்தவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் காலத்தில்,நாடகத்தில் பாத்திரம் வழங்க மறுக்கப்பட்ட அன்புடீன், தனது தளராத உறுதியினாலும் தொடர்ந்தேர்ச்சியான முயற்சியினாலும் பிரதான பாத்திரங்களில் நடிக்கக் கூடிய தேர்ச்சிபெற்ற நடிகராகவும்,நாடகாசிரியராகவும் விளங்கினார்.

பாலமுனை முற்போக்கு கலாமன்றத்தின் மூலம் **1968** ல் ஐந்துக்கு மேற்பட்ட அவரின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. "அளவுக்கு மிஞ்சினால்" என்ற, குடும்பக் கட்டுப்பாட்டை தொனிப் பொருளாக கொண்ட அவரின் நகைச்சுவை நாடகம் பல அரங்குகள் கண்டதாகும். கிராமிய மண் வளச் சொற்களைக் கொண்டமையும் அன்புடீனின் நகைச்சுவை நாடகங்களுக்கு இப்பிரதேசத்தில் வரவேற்பிருந்தது. பாலமுனைப் பூஞ்சோலை எழுத்தாளர் மன்றம், தென்கிழக்கு கலாசார பேரவை,கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டலம் என்பவற்றில் முக்கிய பதவிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இலக்கியப் பணிபுரிந்தவர் அன்புடீன். "பூமாலை"கையெழுத்து ஏடு அன்றிருந்த அவரின் இலக்கிய ஆர்வத்தைக் கோடிட்டுக் காட்டப் போதுமானதாகும்.

கலை,இலக்கியப்பணிக்காக பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றிருப்பவர் அன்புடீன். அவற்றில்,கலாபூசண விருது, கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கிய முதலமைச்சர் விருது, நூலுக்காகப் பெற்றுக் கொண்ட அரச சாஹித்ய விருது, கொடகே சாஹித்ய விருது , புகவம் வழங்கிய ஆசுகவி பட்டம் என்பன முக்கியமானவைகளாகும். பாலமுனையில் பக்கீர் முகையதீன்-ஆசியாஉம்மா தம்பதியின் புதல்வராகப் பிறந்த கலந்தர்லெவ்வை என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் அன்புடீன், அட்டாளைச் சேனைப் பிரதேசத்தின் இலக்கிய முயற்சிகளோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். இப் பிரதேசத்தில் இடம் பெற்ற நிலவிலே பேசுவோம், நூலக வார கலை கலாசார விழா,தேசிய மீலாது விழா போன்ற நிகழ்ச்சிகளில் அவருடைய பங்களிப்பு குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும்.

பல்துறை ஈடுபாடு இருந்த போதும் கவிஞர் என்ற அவரின் அடையாளமே மேலெழுந்த தாகும். ஒத்திசைப்பு பெற்ற இலகு மொழிக் கவிதைகளை எழுதிப் புகழ் பெற்றிருந்த ஆசுகவி,தமிழ் ஒலி அன்புடீன் ஜனரஞ்சக பாணியிலான,வசன கவிதைப் போக்கை பின்னர் தனது இலக்கிய வடிவமாக வரித்துக் கொண்டார். அண்மையில் 72 அகவையை நிறைவு செய்திருக்கின்ற ஆசுகவியின் இலக்கிய முயற்சிகள், அவரின் தேகநலக் குறைவு காரணமாக சற்றுத் தடைப்பட்டுள்ளன. அவர் பூரண நலம் பெற வேண்டுமென்பதும் இன்னுமின்னும் இலக்கியப் படைப்புகளைத் தரவேண்டு மென்பதும் இலக்கிய நெஞ்சங்களின் வேண்டுதலும் பிரார்த்த னையுமாகும்.

*தமிழன் பத்திரிகை*
***06.10.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓசை" மூலமாகவும் பேசப்படும் மூத்த இலக்கிய ஆளுமை

## மூதூர் முகைதீன்

0774203500



ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்ப் பிரதேச கலை இலக்கிய வாதிகளின் பங்களிப்பு குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். மூதூரின் முன்னணி எழுத்தாளர் வ.அ. இராசரத்தினம் ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவராகக் கணிப்புப் பெற்றிருப்பவர். அவரைப் பின் தொடர்ந்து , ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் நாவல், சிறுகதை, கவிதை என்ற படைப்புக்களினூடாகப் பங்களிப்புச் செய்து, மூதூர் மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்கள் பலர். அவர்களில் ஒருவராக ,மூதூரின் நாமத்தை உலகறியச் செய்தவராக மதிப்புப் பெற்றிருப்பவர் மூதூர் முகைதீன். ஊரின் பெயரைத் தன் இயற்பெயரோடு சேர்த்துக் கொண்டு, இலக்கிய உலகில் கவிதை,கட்டுரை, சிறு கதை, மெல்லிசைப் பாடல்கள் மூலம் பெயர் பதித்து வருபவர்.

மக்கள் கலைஞராக, மானிட நேசராக தனது படைப்புக்களைத் தருபவர் அவர் என்பதை அவரின் படைப்புக்கள் பறைசாற்றும். வாழ்வியல் பிரச்சினைகளை, முரண்பாடுகளை,பாமரரும் புரிந்து கொள்ளும் மொழியில் தரும் படைப்பாளியாக அடையாளம் பெற்றிருப்பவர். போர்ச் சூழல், கொரோனா,இனவாத அரசியல், அறியாமை பற்றியெல்லாம் அவருடைய சிருஷ்டிகள் பேசும். கற்பனை உலகில் அதிகம் சஞ்சரிக்காத, யதார்த்த இலக்கியவாதியாக அடையாளம் பெற்றிருப்பவர் அவர்.

தினபதி நாளிதழின் தினம் ஒரு சிறுகதைத் திட்டம் வழங்கிய வாய்ப்பில் 1970 ல் "தியாகிகள் வரிசையில்" என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு வந்தவர் மூதூர் முகைதீன். ஆயினும், பிற்காலத்தில் கவிதையே அவரை அதிகம் அரவணைத்துக் கொண்டது. மரபுக்கவிதை,புதுக்கவிதை, பாடல்கள் என்று அவரின் படைப்புக்கள் விரிந்தன.

பொருள் வடிவம், வெளிப்பாட்டு முறை என்பவற்றால் உயர்ந்து நிற்பவை அவரின் கவிதைகள்.

"சித்தாற்றி லிருக்கின்ற சிறாஜூத் தீனும்
சிரிபாலா மாமாவும் சேர்ந்து ஒன்றாய்
புத்தாண்டாம் சித்திரையில் புதிதாய்ச் செய்த
பொங்கலினைப் புசிப்பதற்கு வந்தால் எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரர்க்குப் புத்தாடை பரிசாய்த் தந்து
புன்னகையில் விடைபெறுவார் யாவும் இன்று
சித்திரமாய் நெஞ்சினிலே நிலைத்த காட்சி
சத்தியமாய் நம்பிடுவீர் நானோர் சாட்சி."
( இழந்து விட்ட இன்பங்கள்-2003)

"நோன்புக் கஞ்சியை
விரும்பிச் சுவைத்திட
மாலைப் பொழுதில்
வீட்டுக்கு வந்து
உரிமையுடன்
உம்மாவிடம் கேட்டு வாங்கி
உறிஞ்சிக் குடிக்கும் விஜயன்,விமலன்..
நட்பு மலர்கள்
தினமும் மணக்கும்
பிள்ளையார் கோவிலில்
சிவராத்திரிக்கு
சின்னராசாவின் பக்கத்தில் அன்வர் இருந்து
மோதகம் உண்பான்
ஐயா வந்து
சிரித்தபடியே
அவித்த கடலையையும்
அள்ளிக் கொடுப்பார்"
(பிட்டும் தேங்காய்ப்பூவும்-1997)

அடிபட்டும் வெடிபட்டும்
அழிகின்ற உடல்விட்டு
வழிந்தோடும் குருதியினால்
அருவிகளும் சிவந்ததுவோ?

உவர்க்கின்ற கடல் நீராய்
உதிக்கின்ற கண்ணீரும்
உருண்டோடி ஒரு கடலாய்
உருவாகி வருகிறதே!
( இழந்து விட்ட இன்பங்கள்- 2003)

என்று இன சௌஜன்யம்,யுத்த அவலம் என்பன குறித்தும் அவர் பாடிய கவிதைகள் அவரின் கவிதை விலாசத்தின் எடுத்துக் காட்டாய்த் திகழ்வன.

ஐம்பது வருடத்திற்கும் மேலான இலக்கிய அனுபவத்தில், பத்து நூல்களை அவர் நமக்குத் தந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முத்து (1976) கவிதை
- பிட்டும் தேங்காய்ப் பூவும்(1997) கவிதை
- இழந்து விட்ட இன்பங்கள் (2003) கவிதை
- ஆசிரியர்பணியை அழகுறச் செய்வோம் (2005) கவிதை
- ஒரு காலம் இருந்தது (2010) கவிதை
- அபோதம் (2016) உருவகக் கதை
- ஒரு வானில் இரு நிலவுகள்(2017) கவிதை
- கனாக் கண்டேன் (2019) மெல்லிசைப் பாடல்
- சங்கமம் (2021) கவிதைத் தொகுப்பு
- கடலோரப் பாதை (2021 )சிறுகதை.

என்பன அவரின் நூல்கள். இவை தவிர மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினூடாக "ஓசை" என்ற கவிதை இதழை வெளியிட்டு இளம் கவிஞர்களுக்குக் களம் அமைத்தவர் அவர். காலாண்டிதழாக(2005-2015 )வெளிவந்த இச்சஞ்சிகை 28 இதழ்களை விரித்தது. "ஓசை" இதழில் கவிதை படைத்த 100 கவிஞர்களின் 100 கவிதைகளைத் தொகுத்து(சங்கமம் 2021) நூல் வெளியிட்டதன் மூலம் இலக்கிய உலகுக்கு புதிய,ஆரோக்கியமான கவிஞர்களை அறிமுகப்படுத்திய பணியையும் செய்திருப்பவர் மூதூர் முகைதீன்.

மாவலி மைந்தன், தொன்மையூர்க் கவிராயர் என்ற புனை பெயர்களிலும் எழுதியிருக்கும் மூதூர் முகைதீன் விருதுகளையும் பரிசுகளையும் இலக்கியப் பணிக்காகப் பெற்றிருப்பவர். மல்லிகை(2011 நவம்பர் ) இவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தது.

- கலாபூஷண விருது(2007)
- தேசகீர்த்தி விருது(2008)
- சாமஸ்ரீ காவியஜோதி விருது(2008)
- கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது(2011)
- காவிய சுவர்ண விருது(2012)

என்பன அவர் பெற்ற விருதுகளில் சில.

கல்விப் பணிக்காக 2006ல் தேசிய சமாதானப் பேரவை, "வித்தியா கீர்த்தி"விருது வழங்கி அவரைக் கௌரவித்தது. .

- 1991 ஈரான் தூதுவராலயம் நடத்திய கட்டுரைப் போட்டியில் சிறப்புப் பரிசு.
- 1992 தேசிய மீலாத் விழாக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு
- 1996 "விபவி" சுதந்திர இலக்கிய விழா கவிதைப் போட்டியில் முதற் பரிசு
- 1996வடக்கு கிழக்கு மாகாண கவிதைப் போட்டியில் முதற் பரிசு
- 1997 அகதி சஞ்சிகை நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு.
- 1998 பேராதனைப் பல்கலைக் கழக சங்கீத நாட்டியச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *1999* புதிய உலகம் வெரிடாஸ் வானொலி நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு
- *2002* அஷ்ரப் ஞாபகார்த்த கவிதைப் போட்டியில் முதற் பரிசு.
- *2005* கலாசார் அமைச்சு நடத்திய அரச ஊழியர்களுக்கான கவிதைப் போட்டியில் முதற் பரிசு.

என்று, தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டுக்கும் குறைந்தது ஒருமுதற் பரிசு அல்லது ஒரு சிறப்புப் பரிசை *2013* வரை தொடர்ந்து பெற்று வந்திருப்பவர் அவர்.

மூதூரில் *1951*ல் அபுசாலிஹூ- றாவியா உம்மா தம்பதியின் மகனாகப் பிறந்தவர் முகைதீன். ஆரம்பக் கல்வியை மூதூர் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை திருகோணமலை இந்துக்கல்லூரியிலும் கற்றவர். பலாலி ஆசிரியர் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில்,பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா கற்றுத் தேர்ந்தவர். ஆசிரியராக, அதிபராக நாற்பது வருடங்கள் கல்விப் பணிபுரிந்து *2011*ல் ஓய்வு பெற்றவர்.

மூதூர்ப் பிரதேசத்தின் மூத்த இலக்கிய ஆளுமையாகவும், நல்லாசானாகவும் மதிப்புப் பெற்றிருக்கும் மூதூர் முகைதீன் இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும். அவரின் இலக்கியச் செயற்பாடுகள் மேலும் தொடரவேண்டும் என்பதே நமது அவாவாகும்.

தமிழன் பத்திரிகை
*12.02.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைத் துறையில் தடம் பதித்த

## ஈழத்து நூன் எனும் இலக்கியப் படைப்பாளி

0777703994



ஈழத்து இலக்கிய உலகில் கவிஞராக, சிறுகதையாசிரியராக நன்கு அறியப்பட்டிருந்த பெயர் ஈழத்து நூன்.

எழுபதுகளில் புதுக் கவிதை ஏடுகளிலும் தொகுப்புக்களிலும் ஈழத்து நூனுக்கு என்றோர் தனிப்பட்ட இடம் இருந்தது. பின்னர்,ஈழத்துநூன் என்ற புனை பெயரில் எழுதிய படைப்பாளி எம். ஏ .எம்.நிலாம் பத்திரிகையாளனாகவும் தன்னை வளர்த்துக் கொண்டார்.

1977ல் அவருடைய ஊடகத்துறைப் பயணம் ஆரம்பிக்கிறது.கொழும்பு தினகரன் நிருபராக,குருநாகல் மாவட்ட வீரகேசரி நிருபராக, 1983 கலவர காலத்தில் வீரகேசரி அலுவலக நிருபராக,உண்மைச் செய்தியாளனாக, சிரேஷ்ட ஊடகவியலாளராக அவருடைய பத்திரிகைத்துறைப் பயணம் நீடித்தது. 1990ல் தினக்குரல் பத்திரிகையின் உதவியாசிரியராக அவரின் பணி விரிவடைந்தது. சிறந்த பத்திரிகையாசிரியராக கல்முனைப் பிரதேச தினக்குரல் அலுவலகத்தில் அவர் கடமையாற்றிய காலம் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது. இப்பகுதி எழுத்தாளர்களோடும் வாசகர்களோடும் நட்புறவு வைந்திருந்து பத்திரிகைத் துறை வளர்ச்சிக்கு உதவியவர் அவர்.

2015ல் தினகரன் - லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் ஆலோசகராக ஐந்து வருடங்கள் பிரகாசித்தார். 2002ல் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்களோடு ஊடகவியலாளராகச் சென்று அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் கால்பதித்த முதல் தமிழ்ப் பத்திரிகையாளர் என்ற பெருமை இவருக்கு உண்டு.

இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், நேபாளம், பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகளுக்கு ஊடகப் பயணம் மேற்கொண்டு சிறப்புச் சேர்த்த சிரேஷ்ட பத்திரிகையாளர் அவர். அகில இலங்கை ரீதியாக ஊடக சங்கங்களில் பல முக்கிய பதவிகளைப் பெற்றிருந்த நிலாம் அவர்கள் கலை கலாசார பத்திரிகைத்துறைப் பங்களிப்புக்காகப் பல விருதுகளைப் பெற்றவர்.

2009ல் அரச உயர்விருதான கலாபூஷண விருது. 2015ல் இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது என்பவற்றோடு,மூத்த, சிரேஷ்ட ஊடகவியலாளருக்கான உள் நாட்டு வெளிநாட்டு விருதுகளும் இவரைத் தேடி வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் ஈழத்து நூன் என்ற எம்.ஏ.எம் நிலாம் தேசிய ,சர்வதேச இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்தவர் என்பதும் பத்திரிகைத் துறையில் மேலெழுந்த போதும், கவிதைத் துறைப் பங்களிப்பை அடையாளப்படுத்தி "தட்டுத் தாவாரம்" என்ற கவிதை நூலைத் தந்தவர் என்பதும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய தகவல்.

தற்போது தனது ஓய்வு காலத்தில் சமூக சேவை,மார்க்கப் பணியென்பவற்றில் கூடுதல் ஈடுபாடு காட்டிவரும் நிலாம் அவர்கள் ஊரோடும் மக்களோடும் நெருக்கத்தைப் பேணுபவர். வெளிநாட்டு அறிஞர்கள், பாடகர்களை இங்கு அழைத்து வந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தி வருபவர்.

*1946ல் மினுவாங்கொடை கல்லொழுவையில் முஹம்மது ஆரிப்,ஹாஜியானி ஹபீஸா உம்மா தம்பதியினரின் இரண்டாவது புத்திரனாகப் பிறந்தவர் எம்.ஏ.எம். நிலாம். ஆரம்பக் கல்வியை நீர் கொழும்பு போலவத்தை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் பெற்ற அவர்,உயர் கல்வியை மினுவாங்கொடை கல் லொழுவ அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும்(தற்போதைய அமான் முஸ்லிம் மத்திய கல்லூரியில்) பட்டக் கற்கையை* Dip in journalism *சவூதி அரேபியா* Imam Bin Mohaamed Islamic University *லும் கற்றார்.*

சென்ற ஆண்டு தனது பவளவிழாவை ஊர்மக்களின் ஏகோபித்த ஆதரவோடு மினுவாங்கொடையில் கொண்டாடிய பத்திரிகைத்துறைச் செம்மல், கலாபூசணம் எம். ஏ.எம். நிலாம் அவர்கள் இம்மாதம் 22ம் திகதி தனது 77 வது அகவையில் கால் பதிக்கிறார். மக்கள் பணியிலும்,மார்க்கப் பணியிலும் இலக்கியத் துறையிலும் இன்னும் தொடர்ந்து பயணிக்க இறைவன் அவருக்கு தேக நலத்தை வழங்கிடு வானாக!

*தமிழன் பத்திரிகை*
*25.09.2022*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஸ்லிம் சமூக வரலாற்றை ஆவணப்படுத்த முன்னிற்கும்

## பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்

0773494889

எழுத்தாளர்,விமர்சகர்,சமூக சிந்தனையாளர்,ஆய்வாளர், ஆவணவியலாளர்,நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்று எழுத்துலகில் பிரபல்யம் பெற்றிருப்பவர். தான் சார்ந்த முஸ்லீம் சமூகத்தின் இருப்பு, வரலாறு, கலை இலக்கியம் பண்பாடு குறித்து அக்கறையோடு தேடும் ஆய்வறிஞராகப் பார்க்கப்படுபவர்-

ஒரு இயக்கமாக, நிறுவன ரீதியாகச் செய்யப்பட வேண்டிய முஸ்லிம் வரலாறு தொடர்பான ஆய்வுகளில் தனிமனிதனாக நின்று தொடர்ந்து செயற்படுபவர். சர்வதேச மெங்கும் ஆய்வரங்க மேடைகளில் கட்டுரை சமர்ப்பிப்பவர். தன் வாழ்நாளில் பெரும் பங்கை அதற்காகவே செலவிடுபவர். அறிஞர் சித்திலெவ்வை, ஏ.எம் ஏ. அஸீஸ் போன்ற பெரியார்கள் குறித்தும் அவர்கள் சமூகத்துக்காற்றிய பணி குறித்தும் தொடர்ந்து ஆய்வு செய்வதோடு அவர்கள் பெயர்களில் அரங்குகள் செய்வதிலும் முன்னிற்பவர்-

கிஸ்ஸா, முனாஜாத்து, மஸ்அலா படைப்போர், நாமா போன்ற இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள், ஆன்மீக ஞான சித்தாந்தங்கள்,சிந்தனைக் கருவூலங்கள், மெய்யியல் தத்துவங்கள் என்பன குறித்துப் பேசியும் எழுதியும் வருபவர். கஸீதா,கஸல் போன்ற அரபு இசை மரபு தொடர்பாக ஆழமான பார்வையுடையவராக மதிப்புப் பெற்றிருப்பவர். முஸ்லிம் நாட்டரியல்,நுண்கலை போன்ற விடயப் பரப்பிலும் தேடுதல் செய்பவர். இலங்கை தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றிய விரிவான, இற்றைப்படுத்திய தகவல்களைத் தொகுத்துத் தருவதில் கவனஞ் செலுத்துபவர். நூற்றுக் கணக்கான இலங்கை இந்திய நூல்களுக்கு அணிந்துரை, மதிப்புரைகள் வழங்கிப் பெறுமதி சேர்ப்பவர்-

- தற்கால இஸ்லாமிய சிந்தனை
- இஸ்லாத்தின் தோற்றம் - ஒரு சமூகப் பண்பாட்டு ஆய்வு
- மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை
- முஸ்லிம் நாட்டாரியல்: தேடலும் தேவையும்
- நுண்கலை
- அரபு இசை
- மெய்யியல் பிரச்சினைகள் ஓர் அறிமுகம்
- புத்தளம் முஸ்லிம்கள் : வரலாறும் வாழ்வியலும்
- ஈரானிய சினிமா: சமயவாதங்களும், திரைப்படங்களும்
- இஸ்லாமும் அறிவியலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏ.எம்.ஏ.அஸீஸ்: கல்விக் கொள்கையும், நவீனத்துவ சிந்தனைகளும்
- இலங்கையில் இஸ்லாம்
- எதிர்ப்பு அரசியலின் புரட்சி நாயகன்: ஜமாலுதீன் ஆப்கானி என்ற நூல்களை எழுதியும்
- இலங்கையில் இஸ்லாம் ஏ.எம்.ஏ. அஸீஸ்
- காரவான் கீதங்கள் : அல்லாமா இக்பால் கவிதைகள் (தமிழில் பண்ணாமத்து கவியரசர்)
- புலவராற்றுப்படை என்ற சில நூல்களைப் பதிப்பித்தும்

இற்றைவரை 25 க்கும் மேற்பட்ட நூல்களை தந்திருப்பவர்-

பல்கலைக் கழக மெய்யியல், உளவியல் துறை விரிவுரையாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராக பேராசிரியராக,துறைத்தலைவராக நீண்ட கால அனுபவம் பெற்றிருப்பவர். ஆற்றல் மிக்க கல்விப் புலமையாளராகக் கண்ணியம் பெற்றிருப்பவர். முஸ்லிம் சமூகத்தின் சொத்தாகவும்,வரலாற்றுப் பெட்டகமாகவும் நோக்கப்படுபவர் பேராசிரியர் எம்.எஸ்.எம் அனஸ்.

புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பள்ளிவாசல் துறை எனும் கிராமத்தில், விதானையாராகக் (Village HeadMan) கடமையாற்றிய முஹம்மது சாலிஹூ மற்றும் சம்சுன் நிஸா முஹம்மதலி மரைக்கார் தம்பதியினரின் மூத்த புதல்வராக 1949ல் பிறந்தவர் அவர், 1976ல் சித்திமுப்லியாவை திருமணம் செய்தவர். அன்பாஸ், அன்ஹினா என்ற இரு பிள்ளைகளின் தந்தை. அவர், தரம் 01 முதல் 05 வரையான ஆரம்பக்கல்வியை பள்ளிவாசல்துறை முஸ்லிம் கலவன் பாடசாலையிலும், தரம் 06 முதல் கல்விப் பொதுத்தராதரம் வரையில் கற்பிட்டி அல் அக்ஷா முஸ்லிம் மகா வித்தியாலத்திலும் (தற்போதைய கற்பிட்டி தேசிய பாடசாலை), உயர்தரக் கல்வியை கொழும்பு சாஹிறாக் கல்லூரியிலும் கற்றவர்.மெய்யியல் துறையில் கொழும்பு,பேராதனைப் பல்கலைக் கழகங்களில் கற்றுச் சிறப்புப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். 1974 முதல் பல்கலைக் கழக விரிவுரையாளர் சேவைக்குள் இணைந்து கொண்ட அவர், பேராதனை, களனி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் கடமையாற்றிப் புகழ் பூத்தவர்.

முதுமாணி, கலாநிதி பட்டப் படிப்புக்களைப் பூர்த்தி செய்து மெய்யியல் துறையின் பேராசிரியராக 2014இல் பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றியதன் மூலம் இலங்கைக் கல்விச் சமூகத்தின் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றிருப்பவர்.

வாசிப்பு,தேடல் முயற்சிகளில் சிறு வயதிலிருந்தே ஆர்வத்தோடு ஈடுபட்டவர். வரலாற்றுச் சம்பவங்களைத் தேடித் தொகுப்பது , ஆவணப்படுத்துவது போன்ற விடயங்களில் பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருந்த 1970களில் இருந்தே கரிசனை செலுத்தத் தொடங்கியவர்.அவருடைய சிந்தனை,எழுத்து, ஆய்வு என்பவை தனது கல்வி முன்னேற்றம்,பெயர் புகழ் என்பவற்றுக்கப்பால்,சமூக நலன் சார்ந்ததாகவும், தூரநோக்குடையதாகவும் அமைந்திருப்பதை சமூகவியலாளர்களும் ஆய்வாளர்களும் எடுத்துக் காட்டுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்பிறந்த புத்தளம் மாவட்டத்தின் வரலாற்றைப் பதிவு செய்யும் நோக்கோடு, எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்போடு செயற்பட்டவர் புத்தளம் மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு,கலை பண்பாடு அரசியல் தொடர்பில் அரிய பல தகவல்களைச் சேகரித்து அவர் வழங்கிய "புத்தளம் முஸ்லிம்கள் வரலாறும் வாழ்வியலும்" என்ற நூல் அம்மாவட்ட மக்களின் மிக முக்கியமான வரலாற்றுப் பேழையாக கவன ஈர்ப்புப் பெற்றிருப்பதை அதுதொடர்பில் தேடலுள்ளவர்கள குறித்துரைப்பர். பத்திரிகைகளில் தொடர்ந்து பல வாரங்கள் கட்டுரைகள் வரைந்தவர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ்.கருத்துச் செறிவுள்ளவையாகவும் ,எதிர்காலத் தேவையுடைய னவாகவும், சாதாரணரும் வாசித்துப் பயன்பெறத் தக்கவையாகவும் அவை அமையப் பெற்றிருந்ததால் இலங்கையின் பல பாகங்களிலும் அவருக்கு வாசகர்கள் இருந்தனர்.

உண்மையைக் கண்டறிவதுதான் எழுத்தின் இலட்சியம் என்று அவர் நம்பினார். அதனால், முன்னேற்றம், சமாதானம், நல்லிணக்கம், எதிர்காலம், பண்டைய வரலாறு, மனித உரிமை, சர்வதேச சட்டம்,சமூக நீதி, என்று பல்வேறு பொருட்பரப்பிலும் , வாசகர்கள் உண்மைகளைக் கண்டறிய உதவும் வகையில் கட்டுரைகளைப் படைத்தளித்தார் பேராசிரியர் அனஸ்.

பல்வேறு துறையிலும் அவர் எழுதியுள்ள நூல்கள் அவரின் ஆளுமை,ஆய்வுத் திறன், பொருட் பரப்பில் அவருக்கிருக்கும் ஆழ்புலமை, தேடல் என்பனவற்றைப் பறை சாற்றுவனவாக அமைந்திருப்பதாகவும் அவை சமூகம் பயன்பெறும் நல்ல சிந்தனைகளைக் கொண்டிருப்பவை என்றும் நூல்கள் பற்றிச் சொல்ல வருபவர்கள் குறித்துரைப்பர்.

"மெய்யியலின் பெருங்கனவு சோக்ரடீஸ்" என்ற எம்.எஸ் .எம். அனஸின் நூலுக்கு ஏப்ரல் 2023 இதழில் அறிமுகக் குறிப்பெழுதிச் சிறப்பித்துள்ளது கணையாழி சஞ்சிகை. "சோக்ரடீஸின் மரண தண்டனையை பின்னணியாக வைத்துக் கொண்டு, தத்துவம் பேசும் நாகரீகம்,வாதக்கலை, பகுத்தறிவு வாதம், ஒழுக்கவியல், விமர்சனப் பாதை, மெய்யியல் கிளர்ச்சி, ஆன்மாவின் ரகசியம், வாழ்க்கையின் அர்த்தம் என்பவை பற்றியெல்லாம் அந்த நூல் விமர்சிப்பதாக விதந்துரைக்கின்றது கணையாழி. பேராசிரியரின் பரந்துபட்ட அறிவுக்கும் ஆற்றலுக்கும் கிடைத்த நற்சான்றாகவே எழுத்துலகம் அதனைக் குறிப்பிடும்.

ஈழத்தின் ஆய்வாளர்கள் வரிசையில் முன்னணியில் நின்று செயற்படுபவர் பேராசிரியர் அனஸ். முஸ்லீம் சமூக வரலாறு,அடையாளம் தொடர்பில் ஆர்வத்தோடு இயங்குபவர். தேக நலத்தோடு அவர் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும் அவரின் பணி தொடர வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.

*தமிழன் பத்திரிகை*
***23.04.2023***

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியச் செயற்பாடுகளில் தடம் பதிக்கும்

# தலைநகர்க் கவிஞர் நஜ்முல் ஹுசைன்

*0714929642*



தொலைக் காட்சி,வானொலிக் கவியரங்குகளில் தொடர்ந்து பங்கேற்கும் புதுமைக் கவிஞன்,மேடைப் பேச்சுக்கள்,பட்டி மன்றங்கள், கவியரங்குகளில் பிரகாசித்துப் புகழ்சேர்த்த கலைஞன், இலக்கிய மாநாடுகள் விழாக்களில் பெயர் பதித்த மூத்த ஆளுமை. தலைநகரில் இலக்கிய முயற்சிகளில் - தமிழ் இலக்கிய மன்றங்களின் மூலம் களம் அமைக்கும் அனுபவம் மிக்க இலக்கியச் செயற் பாட்டாளன் கவிமணி நஜ்முல் ஹுசைன்.

1967ல் "சுஜாதா" என்ற தமிழ், சிங்கள கையெழுத்து ஏட்டின் தமிழ்ப்பகுதி ஆசிரியராக இலக்கியப் பிரவேசம் பெற்றவர் நஜ்முல் ஹுசைன். அவருடைய முதல் ஆக்கம் 1968ல் தென்னிந்தியாவில் இருந்து வெளி வந்த "குமுதம்" இதழில் பிரசுரம் பெற்றது.

இலக்கிய உலகில் சுறுசுறுப்பாக இயங்கும் முக்கிய படைப்பாளர்களில் ஒருவராக அவரின் இலக்கியப் பயணம், ஐம்பது வருடத்திற்கும் மேலான அனுபவத்தோடு இப்போதும் தொடர்கின்றது. சஞ்சிகைகள், வார வெளியீடுகளில் அவரின் சிறுகதைகள் வெளிவருகின்றன. மெல்லிசைப் பாடல்கள் பிரபலம் பெறுகின்றன. வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறார்.நேர்காணல் தருகிறார். அவரின் பயணங்கள் முகநூல் தொலைக் காட்சிகளில் பயண இலக்கியமாக சுவைபட ஒளிபரப்பாகின்றன..

இலங்கையில் கவியரங்குகளில் வசனகவிதையினை மிக நுட்பமாகக் கையாளும் கவிஞராக நஜ்முல் ஹுசைன் திகழ்கிறார். , சொல்லாட்சி கைவரப்பெற்றவராக இரசிக வரவேற்பைப் பெறுபவர்- நஜ்முல் ஹுசைன்.

"தமிழ் இனி
மெல்லச் சாகும் என்றார்கள்
சாவது என்ன விழுவதற்கே விடமாட்டோம்
நாம் இருக்கும் வரை

தமிழ் விழா(து)
என்று மார்தட்டி
தமிழ் விழா எடுத்திருக்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே
இங்கு வாழும் முஸ்லிம்கள்
உனக்கு விழா எடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள்

ஏனெனில்
"லாஇலாஹ இல்லல்லாஹ்" என்று அரபு சொன்னபோது "வணக்கத்திற்குரிய
நாயன் யாருமில்லை
அல்லாஹ்வைத் தவிர
என்று சொல்லித் தந்தது
தமிழே நீயல்லவா !"

என்று கொழும்பு ஸாகிறாக் கல்லூரியின் தமிழ் விழா அரங்கில்,கவிக்கோ அப்துல் ரகுமான் முன்னிலையில் "இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி" (2004) என்ற தலைப்பில் அவர் பாடிய கவிதை வரிகள் இன்றும் கவிநேசர்களின் நினைவில் நிற்கும் வரிகளாக உள்ளன..

கவியரங்குகளில் வசனகவிதையில் பிரகாசிக்கும் நஜ்முல் ஹுசைன், சொற் கோலமிட்டு, சுவைஞர்களைத் தன்பால் கவர்ந்து கொள்பவர் .

"சிம்மாசனம் போட்டுள்ளதால் தானே
உலகையே ஆண்டு கொண்டிருக்கிறது கைபேசி.

Sim ஆசனம் போட்டுள்ளதால் தானே
உலகையே ஆண்டு கொண்டிருக்கிறது கைபேசி"

என்றெல்லாம் அவர் கவிசொல்வார்.

உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு(2011 ) மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்றபோது கலந்து கொண்டு கவிக்கோ அப்துல் றகுமான் தலைமையில் கவிதை பாடியவர், கொழும்பு கம்பன் கழகத்தின் கம்பன்விழாவில் ( 2017) தொடக்கவுரை செய்தவர் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் "இளைஞர் இதயம்" என்ற நிகழ்ச்சியை நடத்திப் பெயர் பெற்றவர்.

"வண்ணத் தமிழெடுப்போம் வானமெங்கும் சிறகடிப்போம்"என்ற தலைப்பில் அண்மையில் கத்தார் நாட்டில் இடம்பெற்ற இலங்கை இந்தியக் கவிஞர்கள் பங்கு கொண்ட கவியரங்கிற்கு தலைமை வகித்துச் சிறப்பித்தவர். கொழும்பில் இலங்கைக் கவிஞர்களின் களமாக அமைந்த வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவராகச் (2013ன் பின்) செயற்பட்டு 83 கவியரங்குகளையும் 3 ஷூம்வழி இணையக் கவியரங்கு களையும் இற்றைவரை ஏற்பாடு செய்து நடத்தியிருப்பவர். அதில் தொடர்ந்து இயங்கிவருபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிசைப் பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள் என்பவற்றாலும் புகழ்பூத்திருப்பவர் நஜ்முல் ஹுசைன். அவரின் இஸ்லாமிய கீதங்கள் பிரபல பாடகர்களால் பாடப்பட்டுள்ளன.

டோனி ஹஸன்,அமீர்கான்,மொயினா மொஹிதீன் பேக், ஷமீரா டோனி ஹஸன்,முஹம்மத் இர்பான்,டாக்டர் ஜெமீல்.,மர்யம் மிர்சாப் போன்ற சிறந்த பாடகர்களின் குரலில் ரசிகர்களை ஈர்த்தவை அவரின் பாடல்கள் .
இசைக் கோகிலம் நூர்ஜஹான் மர்சூக் பாடிய,

"அமல் விளக்கேற்றி
அகமே மலரும் ரமழான் மாதமே"
அருள் தன்னைச் சுமந்து
அழகாய் ஒலிக்கும் குர்ஆன் நாதமே..."

என்று தொடங்கும் அவரின் பாடல் கலையன்பன் ரபீக் நடத்திய "சங்கமம்"என்ற துபாய் நாட்டுத் தொலைக் காட்சியில் நோன்பு காலம் முழுவதும் முதல் பாடலாக ஒளிபரப்பப்பட்டுப் புகழ்சேர்த்தது.

- பனித்தீ (1992)
- இனிவரும் நாட்களெல்லாம்(2018)
- நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்(2018) (இவரின் மனைவி தொகுத்த நூல்), என்பன இலக்கிய உலகுக்கு அவர் தந்த படைப்புக்கள். அரசு வழங்கும் உயர் விருதான "கலாபூஷண விருது", உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்ட "படைப்பாளர் விருது", அகில இன நல்லுறவு மன்றம் வழங்கிய "கவிமணிவிருது", ஸ்ரீலங்கா முஸ்லிம்" கலைஞர் ஒன்றியம் வழங்கிய "கவிமாமணி விருது "என்பன இலக்கியப் பணிக்காக அவர்பெற்ற விருதுகளில் குறிப்பிடத்தக்கவை.

கொழும்பில் கே.கே.எம். மொஹிதீன்- சித்தி சௌதா உம்மா தம்பதியின் மகனாக 1953ல் பிறந்தவர் நஜ்முல் ஹுசைன். ஹமீத் அல் ஹுசைனி கல்லூரியில் கற்றவர். இல்லற வாழ்வில் நூறுல் ஐன் (முன்னாள் அரச தகவல் திணைக்கள அதிகாரி, பத்திரிகையாளர், மின்னும் தாரகைகள் ஆசிரியர்) அவர்களோடு இணைந்து கொண்டு ஏக புதல்வியாக சட்டத்தரணி நூருஸ் ஷப்னா சிராஜுத்தீனைப் (இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவின் சட்ட அதிகாரி)பெற்றிருப்பவர்.

கவிமணி நஜ்முல் ஹுசைனின் குடும்ப வாழ்வும்,இலக்கிய வாழ்வும் இன்னும் சிறக்க வேண்டும், தயார் நிலையிலுள்ள அவரின் "வேறாகா வேர்கள்" சிறுகதை நூல் விரைவில் வெளிவர வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
**05.02.2023**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கரைப்பற்று மாநகரம் தந்த மற்றுமொரு
படைப்புலக ஆளுமை

# அருட்கவி அக்கரையூர் அப்துல் குத்தூஸ்

*0772040919*



நாவல், சிறுகதை, திறனாய்வு, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகள் என்று எழுதிப் புகழ்பெற்றிருந்த இலக்கிய மாமணி அ.ஸ. அப்துஸ்ஸமது, நாட்டாரியல், தொன்மம், ஊர் வரலாறு, என்பவற்றில் இலங்கிய கவிஞர் ஏ.ஆர். எம் .சலீம், மரபு, புதுமைக் கவிதைகள் என்பவற்றின் மூலம் கவிதைத் துறையில் தடம் பதித்திருந்த கலாபூஷணம் ஏ.இக்பால், சிறுகதைத் துறையில் காத்திரமான கனதியான பங்களிப்பைச் செய்து அத் துறையில் மிளிர்ந்த வேதாந்தி ஷெய்ஹூ இஸ்ஸத்தீன் போன்ற முக்கிய ஆளுமைகளை ஈழத்து கலை,இலக்கிய உலகுக்குத் தந்த அக்கரைப்பற்று மாநகரம்,அவ் வரிசையில் தந்திருக்கின்ற மற்றுமொரு படைப்புலக ஆளுமை அருட்கவி அக்கரையூர் அப்துல்குத்தூஸ். நாடகம்,நடிப்பு,சிறுகதை,கவிதை, என்று பல்துறைகளில் அக்கறை செலுத்திப் புகழ் பெற்ற கலைஞராக அவர் அறியப்பட்ட போதிலும் மெல்லிசைப் பாடல் துறையில் அகிலம் முழுவதிலும் அறியப்பட்டவராக அவர் போற்றப்படுகின்றார்.

நூற்றுக்கணக்கான அவரின் பாடல்கள் இலங்கையின் சிறந்த இசை அமைப்பாளர் களால் இசை அமைக்கப்பட்டு,பாடப் பட்டுள்ளன. அவரின் பாடல்களுக்கு இசை அமைக்காத இசை அமைப்பாளர்களோ,பாடாத பாடகர்களோ இல்லை யென்று சொல்லுமளவில் இலங்கையில் பெரும்பாலான இசைக் கலைஞர்கள் இவரின் பாடல்களை விரும்பி ஏற்றுப் பாடி வருகின்றனர். சந்த அமைதியும், அழகும் பொருளும் வாய்ந்த சிறந்த வரிகள் கொண்டவை அவரின் பாடல்கள். அதற்கு எடுத்துக் காட்டாக வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பாகி பிரபலம் பெற்றிருக்கும் பயாஸ் ரட்ணம் இசை அமைத்து, அமுதன் அண்ணாமலை பாடிய

“உச்சி வெயில் சாயும் நேரம்
பச்ச வயல் காட்டோரம்
வச்ச விழி வாங்காமலே-என்
இச்சக் கிளி ஏங்குவா
அடடா அன்னக் கிளி
சிரிச்சா கன்னக் குழி” என்று தொடங்கும் பாடல் சொல்லப்படும்.

வானொலியில் மாத்திரமல்லாது பல்வேறு ஊடகங்களிலும் மேடைகளிலும் அறுநூற்றுக்கும் அதிகமான அவரின் பாடல்கள் அரங்கேறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்,அன்புள்ள அவள்,
முதல் வார்த்தை,
மலரே மௌனமா

போன்ற உள்ளூர்த் திரைப்படங்களில் இடம் பெற்ற அவரின் பாடல்கள் மக்கள் மனங்களில் பதிந்து அவர்களின் அபிமானத்தைப் பெற்றவைகளாக இலங்குகின்றன. அக்கரையூர் அப்துல் குத்தூஸ் தனது பாடசாலைக் காலத்தில் 1965ல்,நாடகத்தில் நடித்ததன் மூலம் கலையுலகில் காலடிவைத்தவர். பாடசாலைக் காலத்தில் இருந்து பல்கலைக் கழகம் வரை தொடர்ந்த அவரின் நடிப்பு முயற்சி இன்றும் நீடிக்கிறது.

பாடசாலைக் காலத்தில் அவர் நடித்த "கலை சொட்டும் கண்ணீர் ," 90ல் நடித்த "நிரந்தரமானவன்" நாடகங்கள் பல அரங்குகள் கண்டவை. நாடகங்கள் நடிப்பதோடு நின்று விடாமல் வானொலி நாடகங்களையும் எழுதிப் பிரபல்யமடைந்தவர் அக்கரையூர் அப்துல்குத்தூஸ். பாரம், முரண்பாடு, ஏமாற்றம், துரோகங்கள் என்ற தலைப்புகளில் அவர் எழுதியிருந்த நாடகங்கள் பலராலும் பாராட்டப்பட்டவை.

1970ல் "அக்கரை ஆரம்" என்ற கையழுத்துச் சஞ்சிகையை நடத்திய அப்துல் குத்தூஸின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் இலங்கையின் வெளியான பல பத்திரிகைகளில் தொடர்ந்து பிரசுரம் பெற்றன. தேசிய வானொலியின் இலக்கிய அரங்க நிழ்ச்சிகளில் களம் கண்டன. சிறப்புமலர்களில் இடம் பிடித்தன. பல இளம் படைப்பாளர்களின் நூல்கள், அவரின் அணிந்துரைகளைத் தாங்கி வந்தன. ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட கலை,இலக்கிய அனுபவமுடைய அப்துல் குத்தூஸ் நூற்றுக்கணக்கான கவியரங்குகளில் பங்கேற்றிருக்கின்றார். பல கவியரங்குகளுக்கு தலைமை ஏற்று நடத்தியிருக்கின்றார்.இந்தியாவில் சென்னையை தலைமையகமாகக் கொண்டியங்கும் தமிழ்ப்பட்டறையின் கவியரங்கிற்கும் தலைமை வகித்த பெருமை இவருக்குண்டு.

"அருட்கவி" என்ற பட்டத்திற்குப் பொருத்தமாக ஓசை ததும்பும் அழகான கவிதைகளை அள்ளித்தருபவர் அவர்.வாழ்வின் நெழிவு சுழிவுகளைச் சித்திரிக்கும் சிறந்த கதைகளைத் தந்திருப்பவர்.

- ஸ்ருதி தேடும் சந்தங்கள் 1999
  (மெட்டோடு எழுதப்பட்ட இசையமைக்கப்படாத பாடல்கள்)
- சம்மதமில்லாத மௌனம் 2000 (கவிதைகள்)
- தேறாத தேர்வு நாடி 2001 (கவிதைகள்)
- வெற்றுக்கண் - 2016 (கவிதைகள்)
- சிறகு முளைத்த சிந்துகள் 2017
  (இசையமைத்து இலங்கை வானொலி ,ரூபவாஹினியில் ஒலி ஒளிபரப்பான மெல்லிசைப் பாடல்கள்)
- பேனா - 2018 (கவிதைகள்)
- எதுவாயிருப்பினும் - 2020 (கவிதைகள்)
- மற்றுமொரு மாபியா 2021 - (கவிதைகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *வாழ்வின் மீதான வாசிப்பு - **2022** (கவிதைகள்) அச்சில்*
  *என்பன அவரின் நூல்கள்.*

*சிறகு முளைத்த சிந்துகள் அரச சாஹித்ய விருது பெற்ற நூல். இதனோடு, சேர்த்து இன்னும்பல விருதுகளைப் பட்டங்களை தனது எழுத்தூழியத்திற்காகப் பெற்றிருப்பவர் அருட்கவி. அவற்றில்,*

- *பிரதேச மட்டத்திலான சாகித்ய விருதும் கௌரவமும் (அக்கரைப்பற்று பிரதேச செயலகம் - **2008**)*
- *அம்பாரை மாவட்ட திகாமடுல்ல சாகித்ய விருது **-2007***
- *கிழக்கு மாகாண வித்தகர் **-2017***
- *கலாபூஷணம், **- 2017***
- *உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வகத்தின் பாராட்டும் விருதும் **-2002***
- *தேசிய கலைலைஞர் பேரவையின் விருதும் "அருட்கவி"பட்டமும்**- 1995***
- *கருங்கொடிவிருது **-2003***
- *அடையாளம் தந்த ஆளுமைகள் விருது **-2018***
- *வெற்றுக்கண் நூலுக்கான சிறப்பு சான்றிதழ் (காத்தான்குடி கலை கலாசாரப் பேரவை)*

கல்வி உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழிதினப் போட்டிகளில் பாடுவதற்காக அவரின பாடலும் தேர்வுசெய்யப்பட்டு **1999** ம் ஆண்டின் சுற்று நிரூபத்தில் இடம் பெற்றுக் கிடைத்த கௌரவம். அதேபோல் **2000**மாம் ஆண்டு சுற்று நிரூபத்தில்**10** பிரபலகவிஞர்கள் பட்டியலில் அவரின் பெயரும் இடம் பெற்றுக் கிடைத்த கௌரவம் என்பன குறிப்பிடத்தக்கவை. அக்கரைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையின் செயலாளராக, அக்கரைப்பற்று தேசிய கலைஞர் பேரவையின் ஆலோசகராக, சென்னை தமிழ்ப் பட்டறையின் ஒருங்கிணைப் பாளராக,சென்னை தமிழால் இணைவோம் அமைப்பின் உறுப்பினராக இவரின் கலைப்பயணம் தொடர்கின்றது.

ஹாமீதுலெவ்வை அப்துல் குத்தூஸ் என்ற இயற் பெயரைக் கொண்ட அருட்கவி அக்கரையூர் அப்துல் குத்தூஸ், க.அ. ஹாமீது லெவ்வை- மு.அ. மரியம்வீவீ தம்பதியின் புதல்வராக **1956**ல் அக்கரைப்பற்றில் பிறந்தவர். அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி என்பவற்றின் பழைய மாணவர். கொழும்பு பல்கலைக் கழக புவியியல் சிறப்பு கலைப் பட்டதாரி. நுகர்வோர் விவகார உதவிப் பணிப்பாளராக கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பதவி வகித்து ஓய்வு பெற்றவர். முகநூலிலும் தொடர்ந்து துடிப்போடு இயங்கி இலக்கியப் பணிபுரியும் ஆளுமையை அடையாளப்படுத்தி வாழ்த்தி மகிழ்கிறோம்.

*தமிழன் பத்திரிகை*
***27.11.2022***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வரிசைப் பிரதிநிதியாக முக்கியத்துவம் பெறும்



## மேமன்கவி

0778684464

ஈழத்தின் கவிதைப் போக்கில் புதிய அலை தோன்றிய காலமாக 1970 ஐ சொல்வார்கள், தமிழக எழுத்து, தீபம், நடை ,வானம்பாடி போன்ற சஞ்சிகைகளின் செல்வாக்கு, தமிழகக் கவிஞர்களின் இலகு நடைக் கவிதைகளில் ஏற்பட்ட கவர்ச்சி, "இலக்கணச் செங்கோல், யாப்பு சிம்மாசனம்,எதுகைத் தேர் மோனைப் பல்லக்கு என்பன களைந்த புதுக்கவிதைக்கு மு.மேத்தா போன்றவர்கள் அளித்த ஆதரவு, அவர்களின் ஜனரஞ்சகக் கவிதைகள் தந்த உற்சாகம் என்பவை ஈழத்திலும் ஒரு புதிய கவிதைப் போக்கை உருவாக்கிற்று.

யாப்பை மீறிய இலகுநடைக் கவிதைக் காரர்களாகப் பலர் எழுந்து வந்தனர். வசனகவிதை, கட்டற்ற கவிதை, சுதந்திரக் கவிதை என்ற பல நாமங்களில் புதுக்கவிதை ஈழத்திலும் இடம் பிடிக்கத் தொடங்கிற்று. புதுக்கவிதை பற்றிய காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றதும் எழுபதுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் தான். ஈழத்தின் மூத்த முக்கிய கவிஞர்களில் ஒருவராக இலக்கிய உலகில் தடம்பதித்திருந்த கவிஞர் முருகையன் புதுக் கவிதையின் வரவை வன்மையாக எதிர்த்தார்.

எனினும், முற்போக்கு சிந்தனைகளை, மனித நேயக் கருத்துகளை சொல்வதற்கான புதிய வடிவமாக புதுக்கவிதையை இளைஞர்கள் கையேற்றுக் கொண்டு தொடர்ந்தனர். அச்சு ஊடகங்கள் வரவேற்பளித்தன. நூல்களும் வெளிவந்தன.

முருகையன் போன்ற மூத்த கவிஞர்களும் "சரிசரி இனியென்ன" என்று கூறி "விலகி வழிவிட்டனர்". இவ்வாறு,வளர்ந்துவந்த ஈழத்தின் புதுக்கவிதை வளர்ச்சியில் தனக்கென ஒரு தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டு தொடர்ந்தவர் மேமன்கவி. அவருடைய கவிதைகள் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. தலைநகரில் வானொலி தொலைக் காட்சி என்பவற்றிலும் இடம் கிடைத்தது.

புதுக் கவிதை இதழ்கள் வெளிவரத் தொடங்கின. "அக்னி" என்ற புதுக்கவிதை இதழ், ஈழவாணனை ஆசிரியராகக் கொண்டு மலர்ந்தது. அதன் உதவியாசிரியராகவும் மேமன் கவி திகழ்ந்தார். ஈழத்தின் கலை இலக்கிய முற்போக்கு சஞ்சிகையாக மிளிர்ந்த மல்லிகை இதழோடும் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவோடும் இலக்கிய உறவை வளர்த்துக் கொண்டு,கவிதை உலகில் பிரகாசித்தார் மேமன் கவி. ஈழத்தின் புதுக்கவிதை உலகின் முன்வரிசைப் பிரதிநிதியாக அடையாளம் பெற்றிருக்கும் அவர், தமிழில் புதுக்கவிதை நூலுக்காக அரச சாஹித்ய விருது பெற்ற முதலாமவர் என்ற பெருமைக்குரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்குபவராக மதிப்புப் பெற்றிருப்பவர் மேமன்கவி. தமிழ் இலக்கிய நூல்களை வெளியிடுகின்ற- எழுத்தாளர்களுக்கு பரிசு விருது கொடுத்து உற்சாகம் வழங்குகின்ற கொடகே ,துரைவி போன்ற நிறுவனங்களோடு இணைந்திருந்து செயற்படுபவர். வகவம் (ஸ்தாபகக் குழு) மூலமாக கவிதைப் போட்டிகள் நடத்தவும், இணைய வழியே கவிதா நிகழ்வுகளை நடத்தவும், கருத்தரங்குகள் நூல்வெளியீடுகள் செய்யவும் முன்னிற்பவர்.

புதுக்கவிதை மட்டுமல்லாது பத்தி எழுத்து ,விமர்சனம்,கட்டுரை என்று பல துறையிலும் நூல்களைத் தந்திருப்பவர் அவர்.

- யுகராகங்கள்(1976 எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம்)கவிதை
- ஹிரோசிமாவின் ஹீரோக்கள் (1982, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு) கவிதை
- இயந்திர சூரியன் (1984, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு)கவிதை
- நாளையை நோக்கிய இன்றில் (1990, நர்மதா பதிப்பகம், தமிழ் நாடு)கவிதை
- மீண்டும் வசிப்பதற்காக (1999, மல்லிகைப் பந்தல்) (2005, துரைவி வெளியீடு)கவிதை
- ஒரு வாசகனின் பிரதிகள் -கட்டுரைத் தொகுப்பு (2010, கொடகே வெளியீடு)
- மொழி வேலி கடந்து.. -கட்டுரைத் தொகுப்பு (2013, கொடகே வெளியீடு)
- ஆதிகளின் புதைகுழிகளிலிருந்து....கவிதைத் தொகுப்பு (2017, கொடகே வெளியீடு)
- பிரதிகள் பற்றிய பிரதிகள் (2019, கொடகே வெளியீடு
- பின்காலனியம்- கலை இலக்கியமும், கோட்பாடும் (அச்சில்)
- டொமினிக் ஜீவாவும் நானும் (அச்சில்)என்பன அவரின் நூல்கள்.

கலை இலக்கியப் பணிகளுக்காக மேமன்கவி நிறையவே பரிசுகள்,விருதுகளைப் பெற்றிருப்பவர். அவற்றில்,

- 1990 ல் , "நாளைய நோக்கிய இன்றில்", என்ற அவரது புதுக் கவிதை நூலுக்கு கிடைத்த இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு,
- 2005 ல், "உனக்கு எதிரான வன்முறை" பெற்ற, யாழ். இலக்கிய வட்டத்தின் இணைப்புச் சங்கமான இலங்கை இலக்கியப் பேரவையின் சிறப்பு விருது,
- 2020ல் கலாபூஷண விருது,
- மல்லிகை சஞ்சிகை அளித்த "அட்டைப்பட அதிதி" கௌரவம்

என்பன குறிப்பிடப்பட வேண்டியவை.,

சாஹித்ய மண்டலப்பரிசு பெற்ற இளைஞர் மேமன்கவியைப் பாராட்டி,1992ல் இந்து இளைஞர் மன்றம் கொழும்பில் நடத்திய பிரம்மாண்டமான விழாவும் அங்கு வெளியிடப்பட்ட இலங்கை இந்திய எழுத்தாளர்களின் வாழ்த்துரைகள் குறிப்புக்களடங்கிய மலரும் அவரின் இலக்கிய வாழ்வின் வெற்றிச் சான்றுகளாகப் பார்க்கப்படுபவை. 2017ல் மேமன் கவியின் மணிவிழா கொண்டாடப்பட்டதும் அங்கு வெளியிடப்பட் ட மலரும் அதனோடு சேர்த்து ஈண்டு எடுத்துரைக்கத்தக்கவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குத்தியானா, ஜூனாகட்,
பாட்வா ஆகிய
பாரத கிராமத்து தத்துவங்களைப்
பத்திரமாய்க் காத்தவர்களின்-
மேமன்
புத்திரன் நான்!
சத்தியமாய்ப் பண்டிதன் அல்லன்
வித்துவமாய் எண்ணியதை- கவி
சித்திரங்களாக்கி விடப்
புறப்பட்டுள்ளேன் "என்பார் மேமன்கவி.

அப்துல் ரசாக் என்ற இயற்பெயரைக் கொண்ட மேமன்கவி (1957.04.29 - ) கொழும்பு, மட்டக்குளியைச் சேர்ந்த படைப்பாளி, அவரது தந்தை அப்துல் கரீம்., வட இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இருந்து இலங்கையில் குடியேறிய மேமன் சமூகத்தைச் சேர்ந்தவர். தனது சமூகத்தின் அடையாளமாக மேமன்கவி என்ற புனைபெயரை தனதாக்கிக் கொண்டார் அவர். மேமன் மொழி எழுத்துருவமற்றிருந்த காரணத்தால் தமிழில் கல்வியைப் பயின்ற மேமன்கவி, எட்டாம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து கொண்டார். ஆயினும் வாசிப்பு, தொடர்ச்சியான தேடல் என்பவற்றின் மூலம் இலக்கிய உலகில் நிமிர்ந்து கொண்டவர் அவர். தனது விடா முயற்சியினால் திறந்த பல்கலைக்கழகத்தில், பத்திரிகைத்துறையிலும், சமூகவிஞ்ஞானத் துறையிலும் டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக்கொண்டவர் மேமன்கவி.

1974ல் "தமிழே என் மூச்சு" என்ற கவிதையை சுதந்திரன் பத்திரிகையில் எழுதி இலக்கிய உலகுக்குள் பிரவேசித்த மேமன் கவி அரை நூற்றாண்டு காலமாக இலக்கிய உலகில் தடம் பதித்து வருபவர். முற்போக்கு அணியினருடன் இணைந்திருந்து செயற்படுபவர். அவரின் கவிதைகளிற் பல ஆங்கிலம்,சிங்களம், ரஷ்ய மொழிகளில் மொழிமாற்றம் பெற்று பிரசுரம் பெற்றுள்ளன. இலங்கைத் தேசிய கல்வி நிறுவகம் அதன் ஆசிரியர் பயிற்சிக் கையேட்டில் மேமன் கவியின் கவிதையைப் பிரசுரித்துள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் மேமன் கவியின் இலக்கியப் பணிகளை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் ஊடகங்களோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு,உற்சாகத்தோடு தொடர்நது இயங்கி வருபவர் மேமன்கவி. "பிம்பங்களின் வழியே", "மற்றமை" போன்ற அவரின் முகநூல் நிகழ்வுகளினூடாக இலக்கியக் கருத்தரங்குகள், கவிதாநிழ்வுகள், மின்னூல் வெளியீடுகள் என்பவற்றை செய்து வருகின்றார். உலகெங்கிலும் பல்லாயிரக் கணக்கான நல்லபிமானிகளின் நேசத்தைப் பெற்றிருக்கும் மேமன்கவி,இன்னும் பல்லாண்டு தேகநலத்துடன் வாழ்ந்து இலக்கியப் பணியைத் தொடர்ந்திட வாழ்த்துகின்றோம்.

தமிழன் பத்திரிகை
*30.04.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பத்திரிகையாளர், முன்னணி உரைபெயர்ப்பாளர்
சமூக நலன்விரும்பி

# அல்ஹாஜ். என்.எம். அமீன்

*0772612288*



ஈழத்தில் பத்திரிகைத் துறையில் தடம் பதித்தவர்களில் முக்கியமானவராகவும், முன்னணி வகிப்பவராகவும் மேலெழுபவர் அல்ஹாஜ் என்.எம். அமீன். **1976**ல் பயிற்சிச் செய்தியாளராகச் சேர்ந்து, பாராளுமன்றச் செய்தியாளராக, செய்தி ஆசிரியராக, தமிழ்ப் பிரசுரங்களின் முகாமையாளராக லேக் ஹவுஸ் பத்திரிகையான தினகரன் தேசியப் பத்திரிகையில் புகழ் பூத்திருந்தவர், நவமணி என்ற பத்திரிகையின் ஆசிரியராக, எம். பி.எம். அஸ்ஹரின் மறைவுக்குப் பின் செயற்பட்ட தோடு அதனை முஸ்லிம்களின் தேசிய நாளிதழாகக் கொண்டு வருவதிலும் மிகுந்த முனைப்புக் காட்டியவர் . பத்திரிகைத் துறையில் ஐந்து தசாப்த கால அனுபவமும், ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர்.பத்திரிகைத் துறையிலும், முஸ்லிம் சமூக இயக்கங்கள் மத்தியிலும் அவருக்கு மிகுந்த மரியாதையும் மதிப்பும் இருந்ததனைப் பலரும் அறிவர்.

பத்திரிகைத் துறையில் மாத்திரமல்லாது,சமூக இயக்கங்களில் அவர் காட்டிய அக்கறையாலும்,அன்பினாலும் அவரை விட வயது அதிகரித்தவர்களாலும் "அமீன் நானா" என இன்றும் பாசத்தோடு அழைக்கப்படுபவர் அவர். நாட்டின் பல பாகங்களிலும் போற்றப்படும் ஊடகவியலாளர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர், தங்களின் ஊடக ஆசானாக பத்திரிகையாளர் என்.எம் அமீனைக் குறிப்பிடுவர்.

மும்மொழித் தேர்ச்சி பெற்றிருந்த அல்ஹாஜ் என் .எம் .அமீன், தினகரன் ஆசிரியர் கலாசூரி ஆர். சிவகுருநாதனால் பாராளுமன்றச் செய்தியாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர். பல்வேறு பிரதேசப் பிரமுகர்களின் அறிமுகத்தையும், பல்துறை அனுபவத்தையும் வழங்கிய அப் பணியில் நீண்ட காலம் கடமையாற்றியவர். செய்தி ஆசிரியராகப் பதவி உயர்வு பெறும்வரை **24** ஆண்டுகள்(முன்பு, மறைந்த எம்.பி.எம். அஸ்ஹர் **27** ஆண்டுகள் பாராளுமன்ற செய்தியாளராகப் பணியாற்றி வரலாறு படைத்தவர்) மனத் திருப்தியோடு அப்பணியில் நீடித்தவர்.

பாராளுமன்றச் செய்தியாளராக மட்டுமல்லாமல்,பாராளுமன்றக் குழு உரை பெயர்ப்பாளர்,சமகால மொழிபெயர்ப்பாளர் போன்ற பணிகளிலும் இலங்கியவர். மேல்மாகாண சபையின் உரை பெயர்ப்பாளராகவும் அவர் திகழ்ந்தார். இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக அரசாட்சி புரிந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனா,ஆர். பிரேமதாஸா, சந்திரிகா பண்டாரநாயக்கா ஆகியோரின் உரைகளைச் சிறப்பாக மொழிபெயர்ப்புச் செய்து பாராட்டுப் பெற்றவர் .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடொன்றில், முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர்,மறைந்த அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் மேடைப் பேச்சை முழுமையாக, உரைபெயர்த்தும் பெயர் பதித்தவர் அல்ஹாஜ் அமீன்.

தமிழ்ப் பத்திரிகைகளோடு அவர் தன் பத்திரிகைப் பணியை நிறைவு செய்து கொள்ளவில்லை. "தினமின "என்ற சிங்கள மொழிப் பத்திரிகையின் அரசியல் விமர்சகராகவும் பணிபுரிந்து சிங்கள வாசகர்களின் அபிமானத்தையும் அவர் பெற்றிருந்தார். ஆயிரக் கணக்கான சிங்கள மொழிக் கட்டுரைகளைத் தமிழ் மொழிக்குத் தந்திருப்பவராகவும்,சிறுசிறு மொழிமாற்று நூல்களைத் தந்திருப்பவராகவும் கீர்த்தி பெற்றிருப்பவர் அவர்.

முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களின் சிங்கள நூலொன்றை "இதயம் பேசுகின்றது" என்ற தலைப்பில் தமிழ்மொழிக்கு மொழிமாற்றம் செய்திருப்பவராகவும்,சுவிற்சலாந்து பற்றிய சிங்கள மொழிநூலைத் தமிழுக்குத் தந்திருப்பவராகவும், இரண்டு சிறு தமிழ் நூல்களை வெளியிட்டிருப்பவராகவும் நூலாக்கத் துறையில் பெயர் சேர்த்திருப்பவர் அல்ஹாஜ் என்.எம். அமீன்.

பத்திரிகைத் துறையில் அமைப்பு ரீதியாகவும் பல்வேறு எல்லைகளைத் தொட்டவர். Sri Lanka Media alliance என்ற அமைப்பை உருவாக்கி, அதன் செயலாளராகச் செயற்பட்டவர். இலங்கை முஸ்லிம்களின் குரலாக அமைந்த Sri Lanka Muslim Media Forum என்ற அமைப்பினை ஆரம்பித்து,அதன் செயலாளராகவும் பின்னர் அதன் தலைவராகவும் நீண்ட காலம் சேவையாற்றியவர். பிரித்தானிய முஸ்லிம் கவுன்சிலுக்குச் சமாந்தரமாக முஸ்லிம்களின் அபிலாசைகளை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லும் நோக்கில், Muslim Council of SriLanka என்ற அமைப்பை நிறுவி, அதன் தலைவராக இருந்து செயற்படுபவர் .

தமிழீழ விடுதலைப் புலிகளோடு சமாதானப் பேச்சு வார்த்தை ஆரம்பமான போது ஒரு பத்திரிகையாளனாக அப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றவர். அதன் பொருட்டு யப்பான் போன்ற நாடுகளுக்கும் சென்றவர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்,முன்னணி உறுப்பினர்களைக் கண்டு முஸ்லிம்கள் தொடர்பாகவும் கருத்துரைத்தவர்.

லாகூரில் தலைமைச் செயலகத்தைப் கொண்டிருந்த South Asian Free Media Assocoiation(SAFMA) என்ற அமைப்பின் இலங்கை இணைப்பாளராக நியமிக்கப் பட்டதனால், பல மட்டத்திலும் நடைபெற்ற மாநாடுகளில் பங்கு கொள்வதற்காக பூட்டான், பாகிஸ்தான்,இந்தியா,மாலைதீவு போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தவர். ஒரு செய்தியாளனாக இரு தடவைகள் ஐ.நா. சபை சென்ற பெருமை அல்ஹாஜ் என்.எம். அமீனுக்கு உண்டு. மாண்புமிகு ரணில் விக்ரமசிங்க அவர்கள் பிரதம மந்திரியாக இருந்தபோது அவரோடும், மாண்புமிகு மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போது அவரோடும் ஐ.நா சபைக்குச் சென்றிருக்கின்றார் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளராக மட்டும் தனது பணியைச் சுருக்கிக் கொள்ளாமல், வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டவர் அல்ஹாஜ் அமீன். வானொலியில் நேர்காணல்கள், முஸ்லிம் கிராமங்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி, வளரும் மதரஸாக்கள் என்று முஸ்லிம்களின் மார்க்கக் கல்வி தொடர்பான நிகழ்ச்சி, என்பவற்றைச் செய்தவர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசனைச் சபை அங்கத்தவராகச் சேவை புரிந்தவர். இலங்கை ரூப வாஹினியில், பத்திரிகைக் கண்ணோட்டம் நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்.

பத்திரிகை, வானொலி, மற்றும் இயக்கங்கள் அனைத்தையுமே தனது சமூகத்தின் உயர்ச்சிக்காக, எழுச்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டவர். முன்னாள் சபாநாயகர் அல்ஹாஜ் எம்.ஏ. பாக்கீர்மாக்கார் முன்னாள் அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் ஆகியோரோடு இணைந்திருந்து செயற்பட்டவர். முன்னாள் போக்குவரத்து அமைச்சர் யூ.எல்.எம். பாரூக் அவர்களின் இணைப்புச் செயலாளராக இருந்து பொதுப் பணி புரிந்தவர்.

இராஜாங்க அமைச்சர் ஏ.எச்எம். அஸ்வர், இம்தியாஸ் பாகீர் மாக்கார் ஆகியோரின் நட்போடு சமூகநல நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்.அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணியில் தொண்டராக இணைந்து,அதன் தேசியத் தலைவராகவும் இருந்து பலவருடங்கள் தொண்டாற்றியவர்.

பாமிஸ் இயக்கத்தின் உப தலைவர்,தலைவர் பதவிகளை அலங்கரித்தவர்.மூதூர் அகதிகளுக்கான நிவாரண நிலையம் அமைத்து அதன் செயலாளராக இருந்து (தலைவர் Sir AWM அமீர்) செயற்பட்டவர். இவ்வமைப்புக்களின் மூலம் இன ஒற்றுமைக் காகவும்,அகதிகளின் புனர்வாழ்வுக்காகவும், சமூகங்களின் புரிந்துணர் வுக்காகவும், சகோதர சக வாழ்வுக்காகவும் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காகவும் பெரிதும் பாடுபட்டவர் அல்ஹாஜ் என். எம் அமீன்.

“இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தேசிய விடயங்களைக் கையாள்வதிலே அமீன் அவர்கள் இன்று முக்கிய பங்கு வகிக்கிறார்.அரசியல் வாதிகளை விட மக்கள் சக்தியினை ஒன்றிணைப்பதில் அவருக்கு அதிக பங்கிருக்கிறது. மக்கள் இயக்கத்தைக் கூட்டிணைப்பவராக நம் எல்லோருக்கும் நம்பிக்கை தரும் சக்தியாக “அமீன் நானா” திகழ்கிறார்” என்று அவரின் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்துரைப்பார் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ்.

அல்ஹாஜ் என் எம் அமீன், பரம்பரை வைத்தியர் நிஸாமுத்தீன் உடையார்- மரியம் வீவீ தம்பதியின் மகனாக **1952** ல் பிறந்தவர். தல்கஸ் பிட்டி அரனாயக்க அவரின் சொந்த ஊர். தல்கஸ்பிட்டி முஸ்லிம் பாடசாலை,ஹெம்மாதகம அல்-அஸ்ஹர் வித்தியாலயம், மாவனல்லை ஸாஹிறாக் கல்லூரி என்பவற்றில் கற்றவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உயர்தரத்தை தமிழ்மொழி மூலம் கற்றிருந்த போதும், பத்திரிகைத் துறையில் நுழைவதையே தனது இலக்காகக் கொண்டிருந்தமையால், களனிப் பல்கலைக்கழகத்தில் நூலகமும் தொடர்பாடலும் என்ற துறையை தேர்ந்து கொண்டு சிங்கள மொழிமூலம் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்.

பல்கலைக் கழகத்தில் முஸ்லிம் மஜ்லிஸ், தமிழ்ச்சங்கம் என்பவற்றை ஸ்தாபிப்பதில் முன்னின்றவர். முஸ்லிம் மஜ்லிஸின் செயலாளராக இருந்த போது, இன்ஸான் என்ற மஜ்லிஸின் முதலாவது சஞ்சிகையை வெளியிடுவதில் முன்னின்றவர். (பங்கர கம்மன என்ற ஊரில் போர்த்துக்கீசரால் வெட்டிக் கொல்லப் பட்ட பெண்ணின் படத்தை அட்டைப்படமாக கொண்டு வெளிவந்த அச் சஞ்சிகை முஸ்லிம்களின் வரலாற்று ஆவண மாக அமையப் பெற்றிருந்தது.)

பல்கலைக் கழக மாணவர் சங்க உறுப்பினராகத் தேர்தலில் வென்று தெரிவானவர். சிறிது காலம் தலைவராகவும் பதவி வகித்தவர். அழுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய வியாங்கல்லையைச் சேர்ந்த ஹாஜியானி நஸ்லிமா என்பவரைத் திருமணம் செய்து வாழ்பவர். மூன்று பிள்ளைகளின் தந்தை.

அல்ஹாஜ் அமீன் அவர்களின் பணிகளை வியந்து பாராட்டி "அமீன் அருங்காவியம்" என்ற பெயரில் காவிய நூல் படைத்துள்ளார் கவிஞர் மூதூர் எம்எம்.ஏ அனஸ். மூத்த பத்திரிகையாளராக,முன்னணிச் செய்தியாளராக, முஸ்லிம் சமூகத்தின் குரலாக இயங்கியவர் அல்ஹாஜ் அமீன். தேக நலத்தோடு அவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும். அவரின் பணி தொடரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாக இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
*06.08.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியா மண்ணுக்குப் பெருமை சேர்த்த
இன்னுமொரு அழகியற்

# கவிஞர் அம்பலவாணர் கௌரி தாஸன்

*0752025786*



ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகுக்கு சிறந்த படைப்பாளர்களை அளித்த பெருமை கிண்ணியா மண்ணுக்குண்டு. **1945**ல் கவிஞராக முகிழ்த்த, "காதல் கவிதைகளில் மன்னர்" எனப் போற்றப்பட்ட அண்ணல் எம். எஸ். எம். சாலிஹூ அவர்களை முதல் வராகக் கொண்ட ஒரு படைப்பாளர் வரிசை கிண்ணியா மண்ணுக்குப் புகழ்சேர்க்கும். M.K. அப்துல் கஹ்ஹார், தாமரைத்தீவான், ஏ.எம்.எம். அலி, கிண்ணியா அமீர் அலி என்று நீண்டு செல்கின்ற அப்படைப்பாளர் வரிசையில் இடம்பிடித்து, தனது மேடைப் பேச்சாலும் மரபுக் கவிதைகளாலும் மேடை அறிவிப்புக்களாலும் மக்கள் மனங்களை வென்றிருப்பவர் அம்பலவாணர் கௌரிதாஸன்.

கௌரிதாசனின் எழுத்துலகப் பிரவேசம் **1979**ல் சுடர் சஞ்சிகையில் பற்றுக்கள் என்ற கவிதை எழுதியதோடு ஆரம்பிக்கிறது. ஈழத்தில் இருந்து வெளிவரும் தேசியப் பத்திரிகைகளின் வார இதழ்கள் கௌரிதாஸனின் கவிதைகளை விரும்பிப் பிரசுரித்தன. அப்போது வெளிவந்த தினபதியிலும் அதன் வார வெளியீடான சிந்தாமணியிலும் கௌரிதாஸனின் கவிதைகள் தொடர்ந்து இடம் பெற்றன. மரபுக் கவிதைகளில் மானுட நேயக் கருத்துகளை, சமூக சீர்திருத்த சிந்தனையை, காதலை,அன்பைப் பிரதிபலித்து அவர் எழுதிய கவிதைகள் கவித்துவ வீச்சும்,வீரியமும் கொண்டதாக ஆய்வாளர்களால் எடுத்துக்.காட்டப்பட்டன. சொற் பஞ்சமில்லாத,ஓசை நயம் மிக்க அழகிய கவிதைகளின் சொந்தக் காரராகக் கௌரி வரவேற்புப் பெற்றார். விருத்தப்பா அவருக்குக் கை வரப்பெற்ற பாவடிவமாக இருந்தது. இதனால் சந்தக் கவிதைகளி னூடாக மேடைக் கவியரங்குகளிலும் அவர் பிரகாசித்தார்.

கௌரிதாஸன், அம்பலவாணர் - இரத்தினம்மா தம்பதியின் புதல்வராக கிண்ணியா ஆலங்கேணியில் **1959**ல் பிறந்தவர். தந்தை வழியில் புலவர் பரம்பரையைச் சேர்ந்தவர். அவருடைய தந்தை,தந்தையின் தந்தை ஆகியோர் புலவர்களாக இப்பிரதேசத்தில் மதிப்புப் பெற்றிருந்தனர். திருவாளர் அம்பலவாணர் கோயில் நிகழ்ச்சிகள் கதாப்பிரசங்கங்கள், கலாசார நிழ்ச்சிகளில் உரைநிழ்த்துபவராக, கவிதை இசைப்பவராக மிளிர்ந்தார். இதனால், இயல்பாகவே எடுத்தவுடன் கவிதை சொல்லும் ஆற்றல் கௌரிக்கும் வாய்த்திருந்தது. கோயில் நிகழ்ச்சிகள்,கலாசார பண்பாட்டு நிகழ்ச்சிகள் என்பவற்றில் முக்கிய இடம் இவருக்கும் கிடைத்தது.

நான்கு தசாப்த காலத்தைக் கடந்து இலக்கியப் பயணம் மேற்கொள்கின்ற கௌரிதாஸன் புனை பெயர்களில் புகுந்து கொண்டும் தடையின்றி எழுத்துப் பணிபுரிபவர். கௌவன்னா, தாமரை தாஸன்,மோகனா மணாளன்,ஆயிலியன் என்பன அவரின் புனை பெயர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி தாஸன் கவிதைகள், ஆலையூர்ப் பதிகம்,
மழலைப்பா,
கௌரிதாஸன் காதல் பாஷைகள்,
என்பாடல்,
ஒரு கவிதை எழுதிட,,
என் உயிரில் நீ பாதி என்பன கவிஞரின் கவிதை விலாசத்தை எடுத்துக் காட்டவல்ல
அவரின் கவிதை நூல்கள்.

தேடல் விருதுகள் கவிதைத் தொகுப்பின் தொகுப்பாசிரியரும் இவரே.

கொடகே தேசிய சாஹித்ய விருதினை தனது "ஒரு கவிதை எழுதிட" நூலுக்குப் பெற்றிருப்ப தோடு, பல பட்டங்களையும் போட்டிகளில் பரிசுகளையும் வென்றிருப்பவர் கௌரிதாஸன். அவற்றில், தமிழருவி, கவிப்பரிதி, கவிமணி போன்ற பட்டங்களும், புலவர் மணி ஆ மு ஷரிபுத்தீன் நினைவு விருதும் முக்கியமானவை.

காத்தான்குடியி ல் 2014ம் ஆண்டு, தமிழக வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கவிமாமணி முனைவர் பிஎம் அப்துல்காதர் அவர்கள் தலைமையில் "நதியே நீ பாடிக் கொண்டிரு" என்ற தலைப்பில் இடம் பெற்ற ஈழத்தின் மரபுக் கவிஞர்களைப் பாராட்டும் நிகழ்வில், முக்கிய 10 கவிஞர்களில் ஒருவராக கௌரிதாஸனும் இடம் பெற்றிருந்தார்.

ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தில் உயர்தரம் வரை கல்வி கற்ற கௌரிதாஸன் உப அஞ்சல் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.கலை இலக்கியப் பணிகளோடு சமூக நல நடவடிக்கைகளிலும் முன்னிற்பவர்.

ஆலங்கேணி விநாயகர் பரிபாலன சபையின் செயலாளராக,கிண்ணியா பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளராக,சமாதான நீதிபதியாக இவரின் நற்பணி தொடர்கிறது. ஈழத்துக் கலை இலக்கியப் பரப்பில் பல்லாண்டு கால கலை அனுபவத்தோடு,ஓசைநயம்மிக்க கவிதைகளைத் தரும் கிண்ணியா மண்ணின் மைந்தன் அம்பலவாணர் கௌரிதாஸனின் கலை இலக்கிய, சமூகப் பணி தொடர்ந் திடவும் சிறந்திடவும் நமது வாழ்த்துகள்!.

தமிழன் பத்திரிகை
20.11.2022

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசமெங்கும் புகழ்பரப்பும் ஈழத்துக் கவிஞர்

## கோவிலூர் செல்வராஜன்

+447466852936



அரை நூற்றாண்டுகளாக இலக்கிய உலகிலும், பத்திரிகைத் துறையிலும் ஒலிபரப்புத் துறையிலும், இசைத்துறையிலும்,நாடகத் துறையிலும் அறிவிப்புத் துறையிலும் தடம் பதித்து, சர்வதேச மெங்கும் புகழ்பரப்பி வருகின்ற ஈழத்துக் கலைஞர் கோவிலூர் செல்வராஜன்.

தாயகத்திலும், ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் தனது பல் துறை ஆளுமையால் ஆயிரக் கணக்கான இரசிகர்களைத் தன்பால் ஈர்த்து வைத்துக் கொண்டிருக்கின்ற செல்வராஜன்,ஈழத்துக் கிழக்கு மண்ணில், அம்பாரை மாவட்டத்திலுள்ள திருக்கோவிலில் பிறந்தவர். இராசையா செல்வராஜன் என்பது அவரின் இயற்பெயர். புலம்பெயர்ந்து இலண்டன் ஐக்கிய ராச்சியத்தில் வாழ்ந்து வரும் அவர், முழுநேரக் கலைஞராக உலக மெல்லாம் வலம்வருபவர்.

நாவல்கள், சிறுகதைகள்,கவிதைகள் எனப் 14 நூல்களை இலக்கிய உலகுக்குத் தந்திருப்பவர். அவருடைய நாவல்கள் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. அவை,

படகுத்துறை (1975)
லாவண்யா ஒரு முற்றுப் புள்ளி (1976)
இளமைக் கோவில் ஒன்று (1977) என்பனவாகும்.

பாடலாசிரியராகவும், பாடகராகவும்,இசையமைப்பாளராகவும் இலங்கை வானொலி, தொலைக் காட்சி என்பவற்றில் பிரகாசித்தவர். நூற்றுக்கும் மேற்பட்ட அவரின் பாடல்கள் வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் ஒலி/ ஒளி பரப்பாகியுள்ளன. இலங்கையில் தனிப்பட்ட கோவிலொன்றுக்கு பத்து இசைப்பாடல்களைப் பாடி அல்பம் வெளியிட்ட பெருமை அவருக்குண்டு. அவரோடு அந்த அல்பத்தில் பாடகி ராணி ஜோஸப், பாடகர் எஸ்.கணேஸ்வரன் ஆகியோரும் சேர்ந்து பாடிச் சிறப்புச் சேர்த்திருந்தனர். திருமதி இராஜேஸ்வரி சண்முகம் உகந்தை மலை முருகன் பற்றிய வரலாற்றுச் சிறப்பை அந்த அல்பத்தில் தனது குரலில் பதிவு செய்திருந்தார்.

மெய்கண்டான் நிறுவனம் 1973ல் கொழும்பில் வெளியிட்ட "கலாவல்லி," "நட்சத்திர மாமா" ஆகிய சஞ்சிகைகளின் உதவியாசிரியராகச் செயற்பட்டவர் கோவிலூர் செல்வராஜன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் மூலமாக ஈழத்து இலக்கியப் பரப்பில் தனித்துவமிக்கவராக மிளிர்பவர் கோவிலூர் செல்வராஜன். மண்ணையும் மக்களையும் நேசித்த செல்வராஜன் மக்கள் மனங்களில் பதிந்திருப்பவர்.

கொத்து ரொட்டி,
ஊருக்குத் திரும்பணும்,
விடியாத இரவுகள்
நல்லது நடக்கும்

என்ற அவரின் சிறுகதை நூல்கள் சாதாரண மனிதர்களின் வாழ்வியலைப் படம் பிடிப்பவையாகவும், மண்வாசனை நிரம்பியவையாகவும் விமர்சகர்களால் குறிப்பிட்டுக் கூறப்படுபவை. மறைந்த இலக்கிய ஆளுமைகளை அடையாளம் கண்டு 2023ல் வெளியிட்ட நூல் திறனாய்வாளர்களால் ஆவண நூலாக விதந்துரைகப் பட்டது.

இல்லாமற் போன இன்பங்கள் என்ற இலக்கியக் கட்டுரைகள் ,கால ஓட்டத்தில் நாம் தொலைத்து விட்ட பல சந்தோஷங்களை மீள அசை போடச் செய்வதாய் சுவைதருபவை.

கோவிலூர் செல்வராஜன் பிற கலைஞர்களையும் மதித்துக் கௌரவிப்பவர். கலைஞர்கள் பலரோடும் நட்புறவைப் பேணிவருபவர். எனது ஐம்பதுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, காணொளியாக்கித் தந்து மகிழ்வித்தவர். இதனால்,எனது பாவேந்தல் பாடல்கள் நூல் அவருக்கே சமர்ப்பணமாக்கப்பட்டிருக்கின்றது என்ற தகவலையும் இங்கு தருவது பொருத்தமானதே.

இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரியான செல்வராஜன், 1977ல் இலங்கை வானொலியில் நிகழ்ச்சி உதவியாளராக் கடமையேற்று கலைத்துறையின் பல் துறையிலும் தன்னைப் புடம் போட்டுக் கொண்டார். மக்கள் அபிமானம் பெற்ற பிரபலமான கலைஞராக அவர் அடையாளம் பெற வானொலி அவருக்கு வழிசமைத்தது. இலங்கை வானொலியில் இடம்பெற்ற பல நாடகங்களில் பங்கேற்று தனது நடிப்புத் திறமையை வெளிக் காட்டியவர் அவர்.

1983ஜூலைக் கலவரத்தின் போது 11நாட்கள் வானொலியில் அறிவிப்புச் செய்த நால்வரில் ஒருவர் என்ற பெருமைக் குரியவர் செல்வராஜன். “பொப் இசை” பிரபலம் பெற்றிருந்த அந்தக் காலத்தில் பிரபல அறிவிப்பாளர் கே.எஸ். ராஜா அவர்களோடு சேர்ந்து அதனை மேடைகளில் அறிவிப்புச் செய்தவர் அவர். “பைலட் பிரேமநாத்“ திரைப் படத்துக்காக இலங்கை வந்திருந்த இந்திய நடிகர்களை நேர்காணல் செய்து பத்திரிகை சஞ்சிகைகளில் பிரசுரித்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலைத்துறைப் பயணத்தில் இவருக்குக் கிடைத்த பட்டங்கள் பரிசுகள் அநேகம்.*

- *ஜெர்மனி தமிழ் மன்றத்தின் "மென்னிசைக் கவிஞர்" விருது (1994)*
- *உலகத் தமிழர் பேரவையின்"தந்தை செல்வா விருது" (1996)*
- *தமிழ்நாடு கோயம்புத்தூர் " லில்லி "தேவசிகாமணி " விருது(1997)*
- *நோர்வே தமிழ் இணைவுக்கூட த்தின்" வெள்ளி "விழாக் கவிஞர் விருது"(1998)*
- *இலண்டன் தமிழினியின் "முத்தமிழ்க் காவலர் விருது" (2008)*
- *"பன்முகக் கலைஞர்" விருது(2017)*
- *கனடா,கிழக்கிலங்கை தமிழரின் "வாழ்நாள் சாதனையாளர் விருது"(2018)*
- *அவுஸ்திரேலியா,அக்கினிக் குஞ்சுவின் "வாழ்நாள் சாதனையாளர் விருது" (2019)*
- *கனடா உதயன் சர்வதேச சிறப்பு விருது - பல்துறைக் கலைஞர்*

*தமிழ்நாடு ,கலைகள் வளர்ச்சி மற்றும் நல அமைப்பு அறக் கட்டளையின் சர்வதேச கிராமியக் கலை விருதாக" வாழ்நாள் சாதனையாளர் விருது( 2022) என்பன அவை.*

தமிழுக்கும் தான் பிறந்த ஈழ மண்ணுக்கும் புகழ்தேடித்தரும் சிறப்புமிக்க கலைஞர் கோவிலூர் செல்வராஜனுக்கு அண்மையில் இலக்கியப் பொன்விழா தாய்நாட்டில் மட்டக்களப்பு, திருக்கோவில்,கொழும்பு போன்ற இடங்களிலும்,லண்டன் நோர்வே,அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், ஜேர்மனி, சுவிட்சலாந்து போன்ற நாடுகளிலும் கொண்டாடப்பட்டன.

தேக நலத்தோடு இன்னும் பல்லாண்டு அவர் வாழவேண்டும். அவருடைய கலை, இலக்கிய முயற்சிகள் எடுத்துரைக்கப்பட வேண்டும் அதன் மூலம் புதிய தலைமுறை எழுத்தாளர்களும் பயன் பெற வேண்டும்.என்பதே நமது பிரார்த்தனையாகும். அவருக்கு நமது வாழ்த்துகள்.

தமிழன் பத்திரிகை
***18.09.2022***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இஸ்லாமிய தமிழ் இலக்கிய முயற்சிகளில் இயங்கும்

## மௌலவி காத்தான்குடி பௌஸ்

0771434265



"இஸ்லாம் எங்கள் வழி. இன்பத் தமிழ் எங்கள் மொழி. இலக்கியம் எங்கள் விழி"என்ற மன உறுதியோடு இலக்கியம் படைத்து வரும் முஸ்லிம் இலக்கியவாதிகள் தமிழ்மொழிக்கு புதிய இலக்கிய வடிவங்களை கொண்டு வந்து சேர்த்திருக்கின்றனர். கிஸ்ஸா, முனாஜாத்து, மஸ்அலா, படைப்போர், கஸீதா ,கஸல் ,மாலை, தாலாட்டு, நாமா போன்றவை இஸ்லாமிய இலக்கிய வடிவங்களாக தமிழில் மெருகு பெறுகின்றன. அரபு, பாரசீக மொழிகளிலிருந்த சிந்தனைக் கருவூலங்கள், தத்துவங்கள், ஆன்மீக ஞான சித்தாந்தங்கள், கவிதைகள் என்பன மொழிமாற்று இலக்கியமாகத் தமிழை அலங்கரிக்கின்றன.

இலங்கையிலும் தமிழகத்திலும் இவ்வாறு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளில் பங்களிப்பவர்கள் வரிசையில் மார்க்கத்தைக் கற்றறிந்த ஆலிம்களும்,மௌலவிகளும், அறிஞர்களும் அங்கம் வகிக்கின்றனர். இலக்கியத் தேடல்கள் தொடர்கின்றன..ஆய்வு முயற்சிகள் நடைபெறுகின்றன. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் இடம் பெறுகின்றன.

இவ்வகையான கலை இலக்கிய ஆய்வுத் தேடல்களில் தொடர்ந்து இயங்கிவரும் ஆலீம்கள் மௌலவிகள் வரிசையில் குறிப்பிடத் தக்க ஒருவராக அடையாளப் படுத்தப்படுபவர் மௌலவி காத்தான்குடி பௌஸ். ஊக்கம் தரும் உரைகள், வானொலி உரையாடல்கள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், கவியரங்குகள் , நாடக மேடைகள், மெல்லிசைப் பாடல்கள்,வில்லுப்பாட்டு,ஆய்வரங்குகள் என்பவற்றின் மூலம் கலை இலக்கிய உலகில் கண்ணியம் பெற்றிருப்பவர் அவர்.

1974ல் நூறுல் பலாஹ் ஆண்டு மலரில் எழுதியதன் வாயிலாக எழுத்துலகப் பிரவேசம் பெற்ற அவர்,ஐம்பது ஆண்டுகளாக கலை இலக்கிய உலகில் பிரகாசித்து வருகிறார் . நாவன்மை மிக்க ஆலிமாக,சிறந்த கவிஞராக நாடக ஆசிரியராக மக்கள் மனங்களில் இடம் பிடித்துள்ளவர் அவர்.

மீலாது விழாக்கள் விசேட நிகழ்ச்சிகளின் போது பிரதம பேச்சாளராக வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அவரை அழைத்து வருகின்றன. இலங்கை இந்தியா மலேசியா போன்ற நாடுகளில் இடம்பெறும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கிறார். கவியரங்குகளில் ஜொலிக்கிறார். பன்னூல் ஆசிரியராகவும் அவர் விளங்குகிறார். ஆய்வு,கவிதைகள், மொழி பெயர்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவரின் 22 நூல்கள் தமிழ் இலக்கிய உலகுக் குக் கிடைத்திருக்கின்றன.

1. மார்க்கத்தின் மனக் கதவு(கட்டுரை2006)
2. காதிகோட்(கவிதை 2006)
3. போதனைப் பொக்கிஷம்(கட்டுரை 2006)
4. முஅத்தினின் முறைப்பாடு (கவிதை 2006)
5. வைகறை வாசம் (கவிதை2006)
6. நிறை மார்க்கத்தின் நிலா முற்றம்(கட்டுரை2007)
7. காத்திருந்த கண்கள்(சிறு கதை2007)
8. ஊடகத்தில் உதித்த உபதேசங்கள் (கட்டுரை2007)
9. விடியலை நோக்கிய விசுவாசிகள் ( கட்டுரை 2007)
10. சின்னச் சின்னப் பூக்கள்(சிறுவர் பாடல்கள்)
11. பாரெங்கும் பலஸ்தீன்(கவிதைஅரபுமொழி பெயர்ப்பு)
12. ரமழானின் அமல்கள்(கட்டுரை 2009)
13. பேனைக்குள் பெருக்கெடுத்த பெரியவர்கள்(ஆய்வு 2011)
14. எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசை ஞானம் (ஆய்வு 2011)யாழ் இலக்கியப் பேரவையின்சான்றிதழ் பெற்ற நூல்)
15. அல்குர்ஆன் ஓர் ஆய்வு கூடம்(ஆய்வு 2012)யாழ் இலக்கியப் பேரவையின் 1வது சிறந்த ஆய்வு நூல் என தேர்ந்தெடுக்கப் பட்டது
16. ஈராயிரம் நூல்களை ஆய்ந்த பேராசிரியர் அல்லாமா உவைஸ் (காவியம்2014)
17. விடியலுக்கான விலாசங்கள் (போர்காலக் கவிதைகள்2014)
18. பன்னீராகும் கண்ணீர்(கட்டுரை 2014)
19. நபிகள் நாயகமே (கவிதை 2014)
20. மார்க்கத்தின் மணித்துளிகள் (கட்டுரை2014)
21. மாண்புறு ஜும்ஆவின் மகத்துவங்கள் (தெளிவு விளக்கம் 2009)
22. பாசம் சென்ற பாதையிலே (கவிதை- பதிப்பித்த நூல்)

என்பன இற்றைவரை அவர் தந்த நூல்களாக இலக்கிய உலகில் விரிகின்றன.

அவரின் "எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசை ஞானம்", ஈராயிரம் நூல்களை ஆய்ந்த பேராசிரியர் அல்லாமா உவைஸ்" போன்ற நூல்கள் இன்றும் ஆய்வாளர்களால் எடுத்தாளப் படுபவையாகத் திகழ்கின்றன. தொடர் ஆக்கங்களாக எழுச்சி மிகு கட்டுரைகள் கவிதைகளை பத்திரிகைகளில் எழுதி வந்திருப்பவர் காத்தான்குடி பௌஸ். அவற்றில்,

"தூக்கம் தரும் குத்பாக்கள் ஊக்கம் தரல் வேண்டும்"
"ரமழான் கவிதைகள்"
"முதல் நீரிழிவு ஒரு சீரழிவு"
"கேள்வி- பதில்கள்"
"காதி கோட்"
"பலஸ்தீனக் கவிதைகள்"
"மக்காவின் மார்க்கத் தீர்ப்பு"
"மு அத்தீனின் முறைப்பாடு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தொடர்ந்த எட்டுக்கு மேற்பட்ட ஆக்கங்கள் குறிப்பிடத் தக்கவை. தினகரன், ஜும்ஆ, நவமணி, மித்திரன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்து மக்கள் வரவேற்புப் பெற்ற படைப்புகள் அவை.

1. *மீலாத் விழா உரைகள் (2000) பாகம்1, பாகம்2*
2. *சுனாமி ஒரு சோதனையா? படிப்பினையா? (2005)*
3. *மீடியாக்களின் போக்கில் சிக்கிய இளைஞர் யுவதிகள் (2013)என்பன அவரின் உரைகளடங்கிய இறுவெட்டுக்களாக மிளிர்பவை.*

மௌலவி பௌஸ், பாவலர் பண்ணை வெளியீடாக அமைந்த "பா" (1980) இதழின் பிரதம ஆசிரியராகச் செயற்பட்டு ,புதியவர்களின் வருகைக்கு துணை நின்ற பாவளம் மிக்க கவிஞராகப் போற்றப்படுபவர். கலை இலக்கிய, மார்க்கப் பணிகளை முழுநேரப் பணியாக அர்ப்பணிப்போடு செய்பவர். சமூக,சமய நல்லிணக்கத்திற்காக தனது மார்க்க அறிவையும் கலை இலக்கிய ஆற்றலையும் சிறப்பாகப் பயன்படுத்திய பேராளராகக் கீர்த்தி பெற்றிருப்பவர். அவரின் சிறப்பான செயற்பாடுகளுக்காகப் பல பட்டங்கள் விருதுகள் பரிசுகள்,சான்றிதழ்கள் அவரை நாடி வந்தன.

- *கலாபூஷண விருது(2019),*
- *உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்ட கலைஞர் விருது(2002),*
- *தத்துவ வித்தகர் விருது(2003) - பாணந்துறை மறுமலர்ச்சி மன்றம்,*
- *நாவேந்தர் விருது(2005)-பலப்பிட்டி நலன்புரிச் சங்கம்,*
- *பத்ருல் மில்லத்(2005)- முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம்,*
- *ஆய்வுத் திலகம்(2013)- பாணந்துறை அஹதியா இயக்கம்,*
- *கவிச்சுடர்(2006)- பாவலர் பண்ணை காத்தான்குடி,*
- *இலக்கியஜோதி(2007)-காத்தான்குடி பிரதேச செயலக சாஹித்ய விழா,*
- *மார்க்க மணிச்சுடர்(2009) அகில இலங்கை இளைஞர் மன்றம்,*
- *ரத்ன தீப விருது (2012) மலையக கலை கலாசார சங்கம்,*
- *முஸ்லிம். சமய கலாசார அமைச்சு நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு (2005),*
- *யாழ்இலக்கியப் பேரவை நடத்திய நூல் தேர்வில் பரிசு(2011,2012),*
- *இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில்(இஸ்லாமிய இலக்கியக் கழகம்,சென்னை) சான்றிதழ் (2007),*
- *மலேசிய பல்கலைக் கழகம் வழங்கிய, இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு மாநாட்டுச் சான்றிதழ்(2011),*
- *இந்திய காயல்பட்டண 15வது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் ஆய்வரங்கிலும் ,கவியரங்கிலும் பங்கு கொண்டமைக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் (2011),*

என்பன அவர் பெற்ற விருதுகள், பரிசுகள், சான்றிதழ்களிற் சில.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலவி பௌஸ், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி மண்ணில் உதுமாலெவ்வை- ஹஸீனா உம்மா தம்பதியின் மகனாக1959ல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை காத்தான்குடி அல்- ஹிறா வித்தியாலயத்திலும், க.பொ.த சா/த வரை காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றவர். மார்க்கக் கல்வியை காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அரபுக் கல்லூரியிலும், கிழக்கிலங்கை ஷர்க்கியா (அட்டாளைச்சேனை) அரபுக் கல்லூரியிலும் கற்று மௌலவி, அல்ஆலீம் பரீட்சைகளில் சித்தி பெற்றவர். ஐனுல் றிபாயா நூர்தீனை மணந்தவர். முஹம்மத் ஸைனி பௌஸ் அவரின் மகனாவார்.

பலப்பிட்டிய ஜும்ஆ பள்ளிவாசலில், *09* வருடங்களும், பாணந்துறை ஹேனமுல்லை அல் முபாறக் ஜும்ஆ பள்ளிவாசலில் *26* வருடங்களும் பேஷ் இமாமாகவும், மார்க்கப் போதகராகவும் கடமையாற்றி அப்பிரதேச மக்களின் பேரன்பையும் மதிப்பையும் பெற்றிருக்கும் கலாபூஷணம் பௌஸ், தற்போது பிறந்த மண்ணுக்கு வந்து, அங்கும் தனது மார்க்க, இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து வருகிறார்.

இலங்கையில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய முயற்சிகளிலும், சமூக நல்லிணக்க செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருபவர் மௌலவி காத்தான்குடி பௌஸ். அவரின் தேகநலத்திற்காகப் பிரார்த்தனைகள். இலக்கிய, சமூக முயற்சிகள் தொடரவும் வெற்றிபெறவும் வாழ்த்துகள்.

தமிழன் பத்திரிகை
*05.03.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னும் தாரகையாக மிளிரும்
மூத்த பெண் எழுத்தாளுமை

## நூறுல் அயின் நஜ்முல் ஹுசைன்

0714929642



இலங்கையில் எழுத்து,பத்திரிகை இலக்கியம்,ஒலிபரப்பு என்று பல துறைகளில் "மின்னும் தாரகை"யாக விளங்கும் மூத்த பெண் ஆளுமை நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்.

ஊடகத்துறையில் பெண்களின் -குறிப்பாக முஸ்லிம் பெண்களின் பிரவேசம் மிகக் குறைவாக இருந்த 1975ல் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி மூலம் வானொலியில் பிரவேசம் பெற்றவர் அவர். ஒலிபரப்புத் துறையில் மாதர் மஜ்லிஸ் பிரதித் தயாரிப்பாளராகவும் குரல் கொடுப்பவராகவும் திகழ்பவர். வானொலியில் தமிழ்ச் சேவையிலும், முஸ்லிம் சேவையிலும் பூவும் பொட்டும், வீட்டுக்கு வீடு,இலக்கிய மஞ்சரி,கவியரங்கு சிறுகதை போன்ற நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்பவர்.தொலைக் காட்சிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றிப் பிரகாசிப்பவர்.

எழுத்துத் துறையிலும்,பத்திரிகைத் துறையிலும் அவரின் பங்களிப்பைப் பலரும் பாராட்டுவர்.அன்றைய இறுக்கமான கிராமச்சூழலில் எழுத்து, பத்திரிகைத்துறையில் முனைப்புக் காட்டியவர் அவர். அவரின் முதலாவது கவிதை "பாவிநான் என்ன செய்வேன்" என்ற தலைப்பில் மூத்த எழுத்தாளர் பன்னூலாசிரியர் மானா மக்கீன் பிரதம ஆசிரியராக இருந்த "உதயம்",பத்திரிகையில் வெளியானது.

பத்திரிகைத் துறையில் நிருபராக, உதவியாசிரியராகத் தன்னை வளர்த்துக் கொண்டவராக அவர் பார்க்கப்பட்டார். சுயாதீனப் பத்திரிகை சமாஜத்தின், தினபதி சிந்தாமணிப் பத்திரிகைகளில் 1980 முதல் 1990 வரை ஆசிரிய பீடத்தில் கடமையாற்றிய திருமதி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் பத்திரிகைத்துறை ஜாம்பவான் எஸ்.டீ. சிவநாயகத்தால் புடம்போடப்பட்டவர்.

"சமுதாயப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு அழகான கட்டுரைகளாக எழுதி விடுவார் நூருல் அயின். எழுத்து நடையும் மிக மிக இலகுவானது. தெளிவான அமைப்பு, தினபதி- சிந்தாமணியின் எளிமையான வசன நடை, இவரது எழுத்துக்களில் ஒளிவீசும் அதனால் இவர் எழுதுவதை படிப்பதும் மனதில் இருத்திக் கொள்வதும் வாசகருக்கு பஞ்சு மிட்டாய் சாப்பிடுவது போன்ற ஒரு சுவையையும் திருப்தியையும் ஏற்படுத்தும். பிரமுகர்களைப் பேட்டி காண்பதிலும் அவற்றை சுவைபட எழுதுவதிலும் நூருல் அயினுக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. குடும்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கான பேட்டிகளை அவர் சுவாரஸ்யம் குன்றாமல் எழுதுவார். இந்த வகையில் அவருக்கு சிங்கள மொழி அறிவும் தமிழ் ஞானமும் நன்கு பயன்படுகின்றன." என்று அவர்பற்றி விதந்து கூறுவார் பத்திரிகை உலகம் மதிக்கும் மேதை எஸ்டீ. சிவநாயகம். நூருல் அயின், "ஜனனி" என்ற பத்திரிகையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். அப்பத்திரிகையின் "அரிவையர் அரங்கம்" என்ற மாதர் பகுதியைப் பல வருடங்கள் தொடர்ந்து நெறிப்படுத்திப் புகழ் பெற்றவர்.

இதழ்கள் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் அவர் திறம்பட இயங்கியவர். அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார உதவியாளராக நியமனம் பெற்றிருந்த அவர், அத்திணைக்களத்தின் "திங்கள்" என்ற மாதாந்த சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் "புத்தொளி" என்ற "மாதாந்த" பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் செயற்பட்டார். திணைக்களத்தின் "தெசதிய" என்ற சிங்கள சஞ்சிகையின் சிறப்புக் கட்டுரை எழுத்தாளராகவும் அவரின் எழுத்துப் பணி விரிந்தது. அச்சஞ்சிகையில் அவர் அரசியல் தலைவர்களை நேர் கண்டு எழுதிய நேர்காணல் பெரும் வரவேற்பைப் பெற்றதோடு, அரச கரும மொழித்திணைக்களத்தின் "இன ஐக்கியத்துக்கான ஊடகப் பங்களிப்பு க்குரிய விருதையும் பொற்கிழியையும் பெற்றுக் கொடுத்தது. "ஒளி அரசி" என்ற மாதாந்த மாதர் சஞ்சிகையின் ஆசிரியர் பீட ஆலோசகராகவும் அதன் சிரேஷ்ட எழுத்தாளராகவும் அவர் மிளிர்ந்தார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதே.

கொழும்பு புவத் சிங்கள மொழிமூல காலாண்டுப் பத்திரிகை(கொழும்புச் செய்திகள்) அவர் அரசாங்க தகவல் திணைக்களத்தில் மாவட்ட தகவல் அதிகாரியாக இருந்த போது வெளியிட்ட பத்திரிகை. கொழும்பு மாவட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளை உள்ளடக்கியதாக வெளிவந்த அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியையாக இருந்து தொடர்ச்சியாக பல இதழ்களை வெளியிட்ட திருமதி நூருல் அயினின் பத்திரிகைப் பணி உயர் அதிகாரிகளினால் மட்டுமன்றி அன்றைய பொதுநிர்வாக அமைச்சரினாலும் பாராட்டபட்டமை அவரின் பத்திரிகைத்துறை ஆற்றலுக்குக் கிடைத்த உயர் கௌரவமாகும்.

தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ செய்தி இணையத்தளமான www.news.lk என்ற இணையத்தளத்தின் தமிழ்ப் பிரிவில் தகவல் அதிகாரியாக (Information Officer) கடமையாற்றிய அனுபவத்தோடு பத்திரிகை, எழுத்து,இலக்கியத் துறையில் ஐந்து தசாப்தங்களாக இயங்கி வருபவர் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் இலக்கியத்துறையில் ஈடுபாட்டோடு இயங்குபவராகவும்,பெண்கள் முன்னேற்றம்,விழிப்பு உயர்ச்சி என்பவற்றுக்காக இலக்கியம் படைப்பவராகவும் பெண் எழுத்தாளர்களை அடையாளப்படுத்துவதில் முன்னிற்பவராகவும் எழுத்துலகில் மதிக்கப்படும் அவர்,

- பண்பாடும் பெண்- கட்டுரை(1995),
- மின்னும் தாரகைகள்-(2018 )
- இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் (140)பற்றிய ஆய்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள் (2017) தொகுப்பாசிரியர்.
- பூஞ்செண்டு கவிதைத் தொகுப்பு (2018)
- திதுலன தாரக்கா (மின்னும் தாரகைகளை சிங்களத்திலும் வெளிச்சமிட்ட நூல்). என்னும் நூல்களைத் தந்திருக்கின்றார்.

"எய்ட்ஸ் நோயும் பெண்களும்"
இலங்கை முஸ்லிம் பெண்களின் ஊடகப் பங்களிப்பு""

என்பவை விரைவில் வெளிவர விருக்கும் அவரின் ஆய்வு நூல்கள்.

அவருடைய மின்னும் தாரகைகள், பூஞ்செண்டு நூல்கள் இலக்கிய உலகில் மதிக்கப்படுபவை. 140 பெண் ஆளுமைகளை அவர் காய்தல் உவத்தலின்றி அடையாளப்படுத்தி ஆற்றிய பணியும், மூத்த இலக்கிய ஆளுமைகளை மதித்து பூஞ்செண்டில் வாழ்த்துகள் கூறுகின்ற அவரின் இலக்கியச் செயற்பாடும் , கலை இலக்கிய வாதிகளின் அவதானிப்பையும் அபிமானத்தையும் பெற்றிருக்கின்றன.

உடுதெனிச் செல்வி, பின்த் ரஷீத், பின்த் ஸல்மா, கண்ணொளி என்ற புனை பெயர்களிலும் எழுதிய ரஷீத் நூருல் அயின் (திருமணத்தின் பின் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்) தனது ஊடக, எழுத்துப் பணிகளுக்காக விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருக்கின்றார்.

- 2006 -இலங்கை கலாசார திணைக்களம் வழங்கிய கலாபூஷண விருது
- 2009ம் ஆண்டு மகளிர் விவகார அமைச்சின் சர்வதேச மகளிர் தின கௌரவம் இலங்கையின் அப்போதைய முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது
- அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் இலக்கியத் தாரகை - தகவல் ஜோதி
- முஸ்லிம் கலைஞர் முன்னணியினால் ஊடகத் தாரகை
- மலையக கலை கலாசாரப் பேரவையினால் இரத்னதீபம் விருது
- அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் , படைப்பாளர் விருது
- சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தினால் மாக்கான் மாக்கார் விருது
- மத்திய மாகாண கல்வி அமைச்சினால் சிறந்த எழுத்தாளர் விருது
- கொழும்பு கலை வட்டத்தினால் மகளிர் தின விருது
- சாய்ந்தமருது தடாகம், சிந்தனை வட்டத்தினால் சிறப்பு விருது
- இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் சிறப்பு விருது
- இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தின் மகளிர் தின சேவை நல விருது
- மலர் எப் எம். வானொலியினால் மகளிர் தின விருது
- கலைநிலா உவைஸ் ஷெரீபின் விழாவின் போது கௌரவம்
- ஈழத்து இசை முரசு கலைக்கமலின் கீத் ராத் நிகழ்ச்சியில் கௌரவம்
- கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி தமிழ் தின விழாவின் போது கௌரவ விருது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிருஷ்ண கலாலயத்தினால் கௌரவ விருது
- டென்மார்க் சிவமீரா அறக்கட்டளை நிறுவனமும் தமிழ்நாடு வளரி சஞ்சிகையும் இணைந்து நடத்திய சர்வதேச கவிதைப்போட்டியில் முதலாம் இடம்
- சிவமீரா ஞாபகர்த்த விருதும் பொற்கிழியும். என்பன அவர் பெற்ற விருதுகளில் சில.

வெளிநாடுகளுக்கும் கலைப்பயணம் செய்துள்ளார் கலாபூஷணம் நூருல் அயின். மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிலும். தாய்லாந்தின தலைநகரான பெங்கொக்கிலும், மற்றும் இந்தியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற கலை இலக்கிய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்புச் சேர்த்தவர் அவர்.

மலையகத்தைச் சேர்ந்த ஹேவாஹெட்ட தேர்தல் தொகுதியிலுள்ள உடுதெனியவில் பிறந்தவர் நூருல் அயின், காலஞ்சென்ற அல்ஹாஜ் எம்.எம். ரஷீத், அல்ஹாஜா உம்மு ஸல்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி. கவிமணி நஜ்முல் ஹுஸைனின் மனைவி. சட்டத்தரணி நூருஸ் ஷப்னா சிராஜுதீனின் தாய்.

உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம், மடவளை மதீனா தேசிய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவி. கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் பொதுசனத் தொடர்புத்துறை சான்றிதழும், தொலைக்கல்வி நிறுவனத்தின் பொதுசனத்துறை டிப்ளோமா பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டமும் பெற்றவர். கணணித் துறையிலும் பயிற்சிகள். சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

இளம் மாதர்களின் முஸ்லிம் சங்கத்தின் ஊடக இணைப்பாளர் -உப தலைவி, அகில இலங்கை சமாதான நீதவான். கொழும்பு உயர் நீதிமன்ற ஜூரர் சபை உறுப்பினர். நீதி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட அரச மொழிபெயர்ப்பாளர் என்று பல கௌரவமான பதவிகளை வகித்துக் கொண்டு பணி புரிந்துவரும் கலாபூசணம் நூருல்அயின் அவர்களின் தேக நலத்திற்காகப் பிரார்த்திக்கின்றோம்.கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டு இலக்கியம், பத்திரிகை, சமூக நலப் பணிகளை ஆற்றிவரும் அவர் பொன்விழா, பவள விழா, அமுத விழா என்பவை கண்டு தொடரவேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாக இருக்கின்றது.

*தமிழன் பத்திரிகை*
*02.07.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டார் இலக்கியத்திலும் நாட்டஞ் செலுத்திப் புகழடைந்தவர்

## கவிஞர் பீ.ரீ. அஸீஸ்

0772902042



ஈழத்து இலக்கியப் பரப்பில் சிறுகதை, கவிதை, ஆய்வு, நாட்டாரியல் என்று பல்துறைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு ஐந்து தசாப்தங்களாக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருபவர் கவிஞர் பி.ரீ. அஸீஸ்.

அரச உயர் கலை இலக்கிய விருதான "கலாபூஷணம்" விருது பெற்றிருக்கின்ற பி.ரீ அஸீஸ்,அண்மையில் அரச ஓய்வூதியர்களுக்காக நடத்தப்பட்ட சிறுகதை,கவிதைப் போட்டிகளில் அரச சாஹித்திய விருதினைப் பெற்றவர். பிரதேச,மாவட்ட ,கலை இலக்கியப் போட்டிகளில் பல பரிசுகளும் விருதுகளும் வென்றுள்ள கவிஞர் , தனது ஆய்வு நூலொன்றுக்காகவும் ***17-11-2022***ல் அரச சாஹித்ய விருதினைப் பெற்றுக் கொண்டார்.

"கிராமியக் கல்வி" எனும் பொதுத் தலைப்பில்,"விவசாயத்தோடு பிணைந்துள்ள கிராமியம்" என்ற அவரது ஆய்வுநூலுக்குக் கிடைத்த விருதை தனது எழுத்துலக வாழ்வில் மறக்க முடியாததாக கருதும் அவர், ஒரு நாட்டாரியல் கலைஞராகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதில் உயர்வு காண்பவர்.

கிண்ணியா மண்ணில், நாட்டுப் புறவியலில் அதிகம் கவனஞ் செலுத்தி,நாட்டார் பாடல்களை தேடியெடுத்துத் தொகுத்து நூலாக்கித் தருகின்றவராக, மேடைகளில் நாட்டார் பாடல்களைத் தேடி யெடுத்து அழகுறப் பாடக் கூடிய கலைஞராக,பி.ரீ. அஸீஸ் விளங்குகின்றார்.

சுட்ட பழமே சுவையமுதே,
ஆரைவிட்டுத் தேடுவதோ? ,கிராமிய சுகந்தம்,
தாலாட்டுப் பாடல்கள்,
மஞ்சள் குருவி,
நாட்டார் பாடல்கள்,
நாட்டார், கிராமியப் பாடல்கள்,
தென்றலே வீசி வா,
செவ்வானச் சித்திரம்,
சின்னப் பாப்பா,
மாண்புறும் மாநபி,
துணிந்து நில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகள் நாயகம்,
மனசெல்லாம் மகிழ்கிறது,
உணர்வூட்டும் முத்துக்கள்,
எழுத்துரு கிராமியக் கவிகளின் முக்கியத்துவமும் அதன் தேவைப்பாடும்

முதுமையில் விளைந்த புதுமைகள். என்று..தொடர்கின்றது அவர் வெளியிட்ட நூற்களின் பட்டியல். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருப்பவர் பி.ரீ அஸீஸ்.இவற்றில் அவரால் தொகுக்கப்பட்ட நாட்டார் பாடல் நூற்கள், ,அவரால் எழுதப்பட்ட அரைநிலை நாட்டார்பாடல் ( வெகுசனப் பாடல்கள்) நூற்கள் என்பவை பிரபல மானவை.

சிறுவர்களின் உளப்பாங்கினைப் புரிந்து கொண்டு அவர்களின் தரத்திற்கு இறங்கி வந்து, அவர்களுக்குப் பரிச்சயமான சொற்களில்,சிறுவர் மொழியில் பாடல்களைத் தருவதிலும் முன்னிற்பவர் கவிஞர் அஸீஸ்.

இவரின் நூல்கள், "நூலகங்களுக்குப் பொருத்தமான நூற்கள்" என்ற தரச் சான்றிதழை இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையிடமிருந்தும் பெற்றிருக்கின்றன.

கவிஞர் பீ.ரீ. அஸீஸின் இன்னுமொரு முக்கிய இலக்கியச் சேவையாகக் கருதப்படுவது, பிற படைப்பாளர்களையும் மதித்து, அவர்களின் படைப்புக்களையும் திறனாய்வு செய்து தொடர்ந்து பத்திரிகைகளில் வெளியிட்டு , அவர் வழங்கிவரும் நலனாய்வுச் செயற்பாடாகும். இதனால் படைப்பாளர்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றுள்ள கலைஞராகப் பீ.ரீ. அஸீஸ் மதிக்கப்படுகின்றார்.

கிண்ணியாவில், பிச்சைத் தம்பி-ஹாஜரா உம்மா தம்பதியின் மகனாக(**1951**)பிறந்த இவர், கிண்ணியா ஆண்கள் பாடசாலை( மத்திய கல்லூரி)யில் கல்வி கற்று,சுகாதார சேவை வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

**1974**ல் இலக்கியப் பிரவேசம் பெற்ற, கலை இலக்கிய ஆர்வமும், தேடலும் நிறைந்த ஆளுமை பீ.ரீ . அஸீல் அவர்களின் கலை இலக்கிய முயற்சிகள் இன்னும் பிரகாசம் பெற்றிட நமது வாழ்த்துகள்.

தமிழன் பத்திரிகை
***11.12.2022***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்க பூர்வமான எழுத்து முயற்சியில்

## ஆர்வத்தோடு ஈடுபடும் - உ. நிசார்

*0771361819*



*ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் ஐந்து தசாப்தங்களாக இடையறாது தொடர்ந்து இயங்கி வருபவர். ஆக்கபூர்வமான பணிகளில் ஆர்வத்தோடு ஈடுபடும் பல்துறை எழுத்தாளராக இலக்கிய உலகில் மதிப்புப் பெற்றிருப்பவர்-*

*சிறுகதை,கவிதை,நாவல், சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள் என்று எழுத்துப் பணிபுரிபவர்- உ.நிசார்.*

*1979ல் "உலக சாதனை" என்ற ஆக்கத்தைத் தினகரன் வாரமஞ்சரியில் எழுதியதன் மூலம் இலக்கியப் பயணத்தை ஆரம்பித்த அவர், இற்றை வரை 32 நூல்களை தமிழ் இலக்கிய உலகுக்குத் தந்திருக்கின்றார்.*

*கவிதை*

| | | |
|---|---|---|
| **01.** | கனவுப் பூக்கள் | **2005** |
| **02.** | ஓயாத அலைகள் | **2007** |
| **03.** | திராட்சை ரசம். | **2009** |
| **04.** | ஒரே பூமியில் நானும் நீயும் | **2015** |

*சிறுகதை*

| | | |
|---|---|---|
| **01.** | உயிர்வலி | **2009** |
| **02.** | பச்சை மனிதன். | **2013** |
| **03.** | பூவிதழும் புனிதமும் | **2016** |
| **04.** | தாய்மை. | **2019** |
| **05.** | காலசர்ப்பம். | **2021** |

*நாவல்*

| | | |
|---|---|---|
| **01.** | கோதுமைக்கனி. | **2018** |

*சிறுவர் பாடல்கள்*

| | | |
|---|---|---|
| **01.** | நட்சத்திரப் பூக்கள். | **2006** |
| **02.** | வெண்ணிலா. | **2007** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **03.** | மலரும் மொட்டுக்கள். | **2007** |
| **04.** | சிறகு விரி. | **2008** |
| **05.** | பாவிருந்து. | **2009** |
| **06.** | இளைய நிலா. | **2009** |
| **07.** | நல்ல தங்காள். | **2010** |
| **08.** | கோமாதா. | **2014** |
| **09.** | தங்க நிலா. | **2007** |
| **10.** | சின்ன ரயில். | **2020** |
| **11.** | வெருளி மாமா. | **2021** |

சிறுவர் கதைகள்

| | | |
|---|---|---|
| **01.** | முத்துக்கணையாழி | **2010** |
| **02.** | யானையும் பானையும் | **2011** |
| **03.** | முத்துக் கணையாழி | **2011** |
| **04.** | காடும் கதை சொல்லும் | **2013** |
| **05.** | பாணியில் மிதந்த தோணி | **2015** |
| **06.** | முத்துக் கணையாழி | **2017** |
| **07.** | செல்லக்கோழி சேரா | **2018** |
| **08.** | பிணை மீண்ட மான் | **2018** |
| **09.** | பூவைக் கேட்டுப் பார் | **2019** |
| **10.** | உறவுப்பாலம். | **2020** |
| **11.** | நல்லிணக்க நகர் | **2022** |

பல்துறை எழுத்தாளராக மிளிர்ந்த போதும் ஈழத்தில் சிறுவர் இலக்கிய முயற்சிகளில் அக்கறை செலுத்தியவர்களில் முக்கியமானவராக அடையாளம் பெற்றிருப்பவர் அவர். 22 சிறுவர்கதை மற்றும்,சிறுவர் பாடல் நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். ஈழத்தில் சிறுவர் இலக்கியத்தைப் பற்றிச் சொல்லமுனையும் எவரும் உ.நிசாரை விட்டு விட்டு தனது கருத்தை- ஆய்வை நிறைவு செய்ய முடியாதவாறு, சிறுவர் இலக்கியத்தைப் புரிந்து கொண்டு, இலகுவான மொழியில் - சிறுவர்களுக்குப் பரிச்சயமான சொற்களில் அவர்களின் மனோநிலைக்கு இறங்கி வந்து படைப்புகளை வழங்கிக் கொண்டிருப்பவர் அவர்.

பளபளக்கும் அட்டைகள்,
பெரிய எழுத்து,
சின்னச் சின்ன வரிகள்,
சிறுவர்களின் மனநிலையோடு ஒன்றித்துப்
போய் ஆக்கங்களைத் தரும் பாங்கு

என்பன சிறுவர் இலக்கியத்தில் அவருக்கு இருக்கும் அனுபவத்தையும் ஆற்றலையும் புலப்படுத்தும். ஈழத்தில் சிறுவர்களுக்காக அதிக நூல்களைத் தந்திருப்பவராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்துபவராகவும், அவர்களின் மனங்களில் நல் விதைகளை விதைப்பவராகவும் ஆய்வாளர்களால் நோக்கப்படுபவர் உ.நிசார். சிறுகதை,கவிதை, நாவல் இலக்கியத் துறைகளில் அவருடைய அக்கறை குறித்தும் இலக்கிய விமர்சகர்கள் விதந்துரைப்பர்.

"முற்போக்கான பார்வையும்,சமுதாய விமர்சனமும், அவரது சிறுகதைகளுக்குப் பெரும் பலத்தைத் தருகின்றன. அவரது சிறுகதைகளில் பாத்திரங்கள் சிறப்பாக வார்க்கப்பட்டுள்ளன.அவை இயல்பாக இயங்குகின்றன. இயல்பாகப் பேசுகின்றன.எவ்விதமான செயற்கைத் தன்மையும் அவற்றில் இல்லை.இது அவரது சிறுகதைகளின் பெரும் பலம் என்பேன்" என்று அவரது சிறுகதைகள் தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி துரைமனோகரனும்,

"உ.நிசாரின் எழுத்துப் பிரவேசம் கவிதையினூடாகவே நிகழ்ந்தது.அவரிடம் அதீதமான கருத்துகளும்,சமூக அக்கறைகளும்,அழகியல் உணர்வும் உள்ளன.அவை புறப்பாட்டு முறையில் நேர்த்தி பெறும் போது அவர் இன்னோர் பரிமாணத்தில் உயர்ந்து நிற்றல் கூடும்." என்று அவரது கவிதைகள் குறித்துப் பேராதனைப் பல்கலைக் கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரனும்,

"தமிழ் இலக்கியப் பரப்பில் முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்களைப் பதிவு செய்வதில் உ.நிசார் முக்கியமானவராகத் திகழ்கின்றார். அந்த வகையில் "கோதுமைக் கனி" என்ற அவரின் நாவல் முஸ்லிம்களின் மார்க்கம் சம்பந்தப்பட்ட விடய மொன்றைக் கருவாகக் கொண்டிருக்கின்றது. அந்த நம்பிக்கைகள் மீறப்படும்போது ஏற்படும் விபரீதங்கள் நாவலின் பரப்பெங்கும் ஊடுபாவாக விரிகின்றது. உ.நிசாரின் வெற்றிப் படைப்புகளில் இந்நாவலும் ஒன்றாகிறது." என்று அவரின் நாவல் ஆக்கம் குறித்து ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரனும் குறிப்பிடுவர்.

உ.நிசார் தனது இலக்கியப் பயணத்தில் பல பரிசுகளையும்,பட்டங்களையும் விருகளையும் பெற்றவர். அவற்றில்...

- கலா பூஷணம் - 2008
- பிரத்திபா பிரணாமம்- 2015 (சப்ரகமுவ மாகாண கலைஞர்களுக்கான விருது)

என்பன முக்கியமானவை.

தென் கிழக்கு பல்கலைக் கழக மாணவி ஒருவர், கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டத்திற்காக உ.நிசாரின் ஐந்து சிறுகதைத் தொகுதிகளையும்,"கோதுமைக் கனி" என்ற அவரின் நாவலையும் ஆய்வு செய்து, "உ. நிசார் புனைகதைகள்-ஒரு விமர்சனப் பார்வை" என்ற தலைப்பில் அறிக்கை சமர்ப்பித்துள்ளமை, அவரின் புனைவு முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாகப் பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ . நிசார் என்ற புனைபெயரில் எழுதிவருகின்ற உடுநுவர நிசார். எச் எல்.எம். நிசார் என்ற இயற்பெயரைக் கொண்டவர்.கண்டி மாவட்ட உடுநுவரை பிரதேசத்தில் இருக்கும் முறுத்தகஹமுல கிராமத்தில்1948 ல் பிறந்தவர்.

தந்தை - ஹாமிது லெப்பை
மத்திசம்
தாய். - ஹவ்வா உம்மா

உடுநுவரை டீ .பி .விஜயதுங்க தேசிய பாடசாலை, கம்பளை ஸாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை விக்ரமபாஹூ தேசிய பாடசாலை, என்பவற்றில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்றவர்.

நன்மதிப்புப் பெற்ற கணித ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது மாவனல்லையில் வாழ்ந்து வரும் அவர்,தேக நலத்தோடு பல்லாண்டு காலம் வாழ்ந்து இன்னும் பல நூல்களை இலக்கிய உலகுக்குத் தரவேண்டும் என்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
02.04.2023

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்துறை எழுத்தாளர்

## பன்னூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன்

*0777303818*

"ஓட்டமாவடி அஷ்ரஃப்" என்ற பெயரில் , 1970 களின் பிற்பகுதியில், தினபதி கவிதா மண்டலம் தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, மரபுக்கவிஞராக இலங்கை இலக்கியப் பரப்பில் அறிமுகம் பெற்றவர் அஷ்ரஃப் சிஹாப்தீன்.

ஐந்து தசாப்த கால எழுத்தனுபவத்தோடு பல்வேறு தளங்களினூடாகவும் இன்று, முன்னிலைப் படைப்பாளராக அடையாளம் பெற்று மிளிரும் அவர், காத்திரமான கவிஞர், கதைஞர், என்பதோடு மட்டுமல்லாமல், வானொலி அறிவிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், செய்தி வாசிப்பாளர், இலக்கிய சஞ்சிகை ஆசிரியர், தொலைக் காட்சி அறிவிப்பாளர், மொழிபெயர்ப்பாளர், பத்தி எழுத்தாளர், பயண இலக்கிய காரர், நாடகாசிரியர் என்று பல்துறையிலும் புகழ் பூத்திருப்பவர்.

இலக்கியப் பெறுமானம் மிக்க மனித நேயப் படைப்பாளியாக இலக்கிய விமர்சகர்கள் அவரைக் குறிப்பிடுவர். அடக்குமுறை, இன ஒடுக்கு முறை என்பவற்றை எதிர்த்துக் குரலெழுப்புகின்ற பல படைப்புகளை அவர் தந்திருப்பதை அவரின் படைப்புகளை ஆய்வுசெய்பவர்கள் எடுத்துக் காட்டுவர்.

1985ல் நாடு பயங்கரவாதச் சூழலில் நெருங்குண்டிருந்த போது மக்கள் எதிர் கொண்ட நெருக்கடிகள், இனரீதியான கடத்தல்கள், வன்புணர்வு என்பவற்றைப் படம் பிடிப்பதாக அவர் எழுதியிருந்த ஸெய்த்தூன் என்ற கவிதை, அக்காலத்தில் பலராலும் பேசப்பட்டது. கலவரங்களின் போது காணாமல் போன சகோதரிகள் நினைவாக எழுதப்பட்டிருந்த அக்கவிதை, கவிதை உலகில் வளம் மிக்க கவிஞராக அவரை இனம் காட்டியது.

"துப்பாக்கிகள் உரத்துப் பேசிய
ஓர் அந்திக் கருக்கலில்
அவளை நாங்கள் இழந்திருந்தோம்!

பதினாறு வயதான
எங்கள் ஸெய்த்தூன்!
.......
நாட்படாத கோழிக் குஞ்சைப்
பருந்து தூக்கியது போல்
அவர்கள் தூக்கிச் சென்ற போது
யாருக்கும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் எல்லையை சற்றுத் தாண்டும்வரை
சேலை இருந்தது
மேல் சட்டை இருந்தது
ஸெய்த்தூன் இருக்கவில்லை
இனிமேல் ஸெய்த்தூன் திரும்ப வரமாட்டாள்

இளைஞர்கள் எனக்குச் சொன்னார்கள்
துவக்கு வெடித்த இரவின் மீது
இரத்தம் உறைந்த பூமியின் மீது
சத்தியம் பண்ணியதாக
இனிமேல்
எந்த ஸெய்த்தூனையும் இழப்பதில்லை யென்று..!"

இலங்கை இந்தியப் பத்திரிகைகளில்- சஞ்சிகைகளில் பல முறை மீள்பிரசுரம் பெற்ற அக்கவிதையின் சில வரிகள் அவை.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் ஒருவராக மேலெழுந்த அஷ்ரஃப் சிஹாப்தீன், பல்துறை எழுத்தாளராகவும், பன்னூலாசிரியராகவும் புகழ்பெற்றார். கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம் ,பத்தி எழுத்து,பயண இலக்கியம் எனப் பல்துறைகளிலும் அவரின் நூல்கள் வெளிவந்துள்ளன.

கவிதை

01. காணாமல் போனவர்கள் - 1999
02. என்னைத் தீயில் எறிந்தவள் - 2008
(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)
03. தேவதைகள் போகும் தெரு - 2018

சிறுகதை

04. விரல்களற்றவனின் பிரார்த்தனை - 2013

மொழிபெயர்ப்பு

05. உன்னை வாசிக்கும் எழுத்து (கவிதை) - 2007
06. ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள் - 2011
(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)
07. பட்டாம்பூச்சிக் கனவுகள் (சிறுகதை) - 2015
(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)
08. யாரும் மற்றொருவர் போல் இல்லை (கவிதை) - 2017
09. வெய்யில் மனிதர்கள் (நாவல்) - 2019
(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)
10. நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன் - 2021
(முஸ்லிம் பெண் ஆளுமைகளின் உரைகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி எழுத்து

11. தீர்க்க வர்ணம் - 2009
(பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு)
12. எனக்குள் நகரும் நதி - 2019
(பத்திரிகைப் பத்திகளின் தொகுப்பு)

சிறுவர் இலக்கியம்

13. புள்ளி - 2007
14. கறுக்கு மொறுக்கு - முறுக்கு - 2009
15. புல்லுக்கு அலைந்த மில்லா - 2009

ஏனையவை

16. ஸ்ரீலங்காவிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணம் வரை - 2009 (பயண அனுபவங்கள்)
17. ஒரு குடம் கண்ணீர் - 2010 ( உண்மைக் கதைகள் )

இலக்கிய உலகின் வரவேற்பைப் பெற்றிருந்த அவரின் நூல்கள் பல விருதுகளைப் பெற்றவை. இலங்கை அரச சாஹித்ய விருதினை அவை பலமுறை வென்றிருக்கின்றன. இலக்கியச் செயற்பாடுகள், தொகுப்பு நூல்கள்,சஞ்சிகை வெளியீடு, வானொலி இலக்கிய நிகழ்ச்சிகள் என்பவற்றினூடாக அவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வழங்கியுள்ள பங்களிப்பு சிலாகிக்கத் தக்கதாகும்.

“நபிவழி நம்வழி,நற்றமிழ் எம்மொழி” என்ற கோட்பாட்டோடு செயல்பட்ட இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் செயலாளராக இருந்து ,உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளை 2002 லும் 2016 லும் இலங்கையில் நடத்திய தோடு, இலங்கை-இந்திய இலக்கிய நட்புறவுப் பாலமாகவும் அமைந்து, இந்திய மாநாடுகளில் இலங்கை எழுத்தாளர்களின் பிரசன்னத்திற்கும் வழிவகுத்து ஒத்துழைப்பு நல்கியவர் அஷ்ரஃப் சிஹாப்தீன். அம்மாநாடுகளில் வெளியிடப்பட்ட தொகுப்பு நூல்களின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் அவர் செயல்பட்டார்.

01. மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள் -
2002 இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு வெளியீடு.

( உள்நாட்டுப் போரில் பெரும்பான்மை சமூகங்களால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிரான குரல்கள் )

02. இலக்கிய மாநாடு 2002, 2016,
மலர்கள், ஆய்வரங்கக் கோவைகள்
மற்றும் சர்வதேச எழுத்தாளர் மாநாடு - 2011
மலர்கள், கட்டுரைத் தொகுப்புகளின் தொகுப்பாளர்களில் ஒருவர் அவர்.

யாத்ரா என்ற கவிதைச் சஞ்சிகையைஆரம்பித்து அதன் ஆசிரியராக இருந்து 22 இதழ்களை வெளியிட்டவர் அவர்.கவிதையோடு மட்டும் நின்றுவிடாமல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலவோட்டத்தில் இலக்கியத்தின் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஈழத்தின் சிறந்த இலக்கியச் சிற்றிதழாக அது மலர்ந்தது.

இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகக் கடமையாற்றிய அஷ்ரஃப் சிஹாப்தீன், அறிவுக் களஞ்சியம் என்ற கல்வி நிகழ்ச்சியை திறம்பட நடத்தி மாணவ சமூகத்தின் மதிப்பினைப் பெற்றிருந்தார். இலக்கிய மஞ்சரி என்ற நிகழ்ச்சியை நடத்தி மூத்த, இளைய தலைமுறை எழுத்தாளர்களைக் கவர்ந்திருந்தவர் அவர். இப்போதும் முஸ்லிம் சேவையில் கவிதா நதி என்ற நிகழ்ச்சியை நடத்துவதன் மூலம் இலக்கியப் படைப்பாளர்களையும் நேயர்களையும் ஈர்த்து வருகின்றார்.

அஷ்ரஃப் சிஹாப்தீன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் 10 வருடங்களுக்கும் மேலாக செய்தி அறிவிப்பாளராகப் பணி புரிந்தவர். உலகத் தமிழ்ச் சிற்றிதழ்ச் சங்க இலங்கைக்கிளையின் உபதைவராகப் பணியாற்றி வரும் அவர்,சிறீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உபதலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

அஷ்ரஃப் சிஹாப்தீன்,அவரின் நூல்களுக்குக் கிடைத்த சாஹித்ய விருதுகளோடு இன்னும் பல முக்கிய விருதுகளையும், பரிசில்களையும் தனது இலக்கியப் பணிக்காகப் பெற்றிருப்பவர்.

- தமிழியல் விருது (என்னைத் தீயில் எறிந்தவள் நூலுக்காக)
- தமிழ் மாமணி விருது (2011 ல் காயல்பட்டணத்தில் நடந்த இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்டது)
- மகரந்தச் சிறகு விருது - (கம்பன் கழகம் 2020)
- கலாபூஷணம் விருது- என்பன அவற்றில் சில.

1960ல், மௌலவி சிஹாப்தீன் தம்பதியின் மகனாக மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடியில் பிறந்தவர் அஷ்ரஃப் சிஹாப்தீன். ஓட்டமாவடி மத்திய கல்லூரி, வந்தாறுமூலை மத்திய கல்லூரி, ஜாமிஆ நளீமியா (3 வருடங்கள்) என்பவற்றில் கல்வி கற்றவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராகச் சேவை புரிந்தவர். குடிவரவு குடியகல்வு அதிகாரி, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் என்ற பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

அஷ்ரஃப் சிஹாப்தீன் புதியவர்களையும் இனம்கண்டு உற்சாகம் வழங்கும் முன்னிலைப் படைப்பாளி. அவரின் இலக்கியப் பணி தொடரவேண்டும். அவர் இன்னும் பல நூல்களை இலக்கிய உலகுக்குத் தரவேண்டும். யாத்ரா என்ற சஞ்சிகையை மீளத் தந்து இளந் தலைமுறை படைப்பாளர்களுக்கு இன்னுமின்னும் ஊக்குவிப்பு நல்க வேண்டும் என்பதே தமிழ் இலக்கிய நெஞ்சங்களின் பெரு விருப்பாகவும், பிரார்த்தனையாகவும் இருக்கின்றது.

தமிழன் பத்திரிகை
**03.09.2023**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பணி புரிந்து மனங்களை வென்ற தம்பிலுவில்

## ஜெகதீஸ்வரி நாதன்

0773688586



கல்முனைப் பிரதேச கலை இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு பற்றி ஆய்வு செய்பவர்கள் தம்பிலுவில் ஜெகா என்ற புனை பெயரில் எழுதிய ஜெகதீஸ்வரி நாதனைக் குறிப்பிடத் தவறுவதில்லை.

மாணவப் பருவத்தில் இருந்தே கலை இலக்கிய ஈடுபாடு கொண்டிருந்த அவர், தமிழ் ஆசிரியையாகவும் இருந்து கலை இலக்கியப் பணியைச் சிறப்பாக மேற் கொண்டவர். தமிழ்த் தினப் போட்டிகள்,கலை நிகழ்ச்சிகள், மாகாண, பிரதேச மட்ட இலக்கிய விழாக்கள் எங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் ஜெகதீஸ்வரியைக் காண முடியும். தான் பயிற்சி கொடுத்த மாணவர்களோடு கலந்து கொண்டு வெற்றி வாகை சூடுபவராக அவர் இருப்பார் அல்லது கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்பவராக, அல்லது நடுவராக இப்பிரதேச நிகழ்ச்சிகளில் அவரின் பிரசன்னம் இருக்கும்.

தமிழ் இலக்கிப் பணிகளில் ஐந்து தசாப்தங்களாக ஈடுபட்டுவரும் ஜெகதீஸவரியின் இலக்கியப் பிரவேசம் 1972ல் 12,வதுவயதில் "அன்னை" என்ற கவிதையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிறுவர் மலரில் எழுதியதன் மூலம் நிகழ்ந்தது.

தினகரன், வீரகேசரி,சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும், மல்லிகை, செங்கதிர், பெண், குங்குமம், கதிரவன், கோகிலம் ,காற்று, இதய சங்கமம், நிறைமதி, நீங்களு,ம் எழுதலாம் போன்ற சஞ்சிகைகளிலும் கவிதை,சிறுகதை,கட்டுரை, ஆய்வு என்று தொடர்ந்து எழுதியவர் ஜெகதீஸ்வரி. பாடசாலை மலர்கள், இலக்கிய விழா மலர்கள் என்பவற்றிலும் ஜெகதீஸ்வரியின் முக்கிய கட்டுரைகள் ,ஆய்வுகள் வெளிவந்தன..

- பாரதியார் கவிதைகளில் பெண்களின் நிலை,(கலைக் கோலம்)
- தொழில் புரியும் பெண்களின் சவால்கள் (பெண் சஞ்சிகை)
- திருக்கோவில் பிரதேச பெண் எழுத்தாளர்கள் (கலசம் சஞ்சிகை)
- கிழக்கிலங்கை சஞ்சிகைகளில் பெண் கவிஞர்களின் பங்களிப்பு (வீரகேசரி)
- கண்ணகை அம்மன் ஆலய வழிபாடு (கூடல்)

என்பன அவர் எழுதிய கட்டுரைகள், ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்றவை.

ஜெகதீஸ்வரி, குறிஞ்சி வாணன்,முல்லை வீரக்குட்டி என்பவர்களோடு சேர்ந்து "இன்னும் விடியவில்லை" என்ற ஒரு கவிதை நூலையும், தனது கவிதைகளின் தொகுப்பாக மட்டுமே அமைந்த "விடை தேடி என்ற ஒருகவிதை நூலையும் இலக்கிய உலகுக்குத் தந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கவிதைகள் ஆணாதிக்க எதிர்ப்பு, காதல், அரசியல், சிறுவர் துஷ்பிரயோகம், வன்னிப் பெண்களின் அவலம் என்பன பற்றிப் பேசுவதைத் திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டுவர்.

"இந்நூலில் உள்ள சில கவிதைகள் சமூக மாற்றத்தின் குறியீடாக அமைந்துள்ளன. விடை தேடி எனும் கவிதை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் மன உணர்வைப் பேசுகின்றது. இதில் காணாமல் போன கணவனை எண்ணி ஏங்கும் பெண்ணின் துயரம் எமக்குள்ளும் எழுந்து எம்மையும் சிந்திக்கச் செய்கின்றது" என்று விடைதேடி என்ற ஜெகதீஸ்வரியின் நூல்பற்றிய குறிப்பில் பேராசிரியர் எம் ஏ. நுஃமான் குறிப்பிடுவதை இங்கு எடுத்துக் காட்டுவது ஜெகதீஸ்வரியின் கவிதைச் செல்நெறியைத் தெளிவுபடுத்துவதற்குத் துணை புரியும்.

தம்பிலுவில் ஜெகதீஸ்வரி தனது கலை ,இலக்கியப் பணிகளுக்காகப் பல பரிசுகளையும்,பட்டங்களையும்,விருதுகளையும் பெற்றுள்ளார். மேனாள் மாண்புமிகு ஜனாதிபதி ஜேஆர் ஜெயவர்த்தனா அவர்களால் வழங்கப்பட்ட "கலைக்கோகிலம்" பட்டம் (**1993** )

திருக்கோவில் பிரதேச சாகித்திய விழாவில், கவிதைத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்காக வழங்கப்பட்ட கௌரவிப்பும்,சான்றிதழும்( **1996** ) உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட திறனாக்கல் போட்டியில் வெற்றி பெற்றமைக்காக கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண.பிரான்சிஸ் ஜோசப் அவர்களால் வழங்கப்பட்ட கௌரவிப்புச் சான்றிதழ் (**2002** )

தேசிய கலை இலக்கிய மகோற்சவத்தின் நிமித்தம் இலங்கை கலாசாரத் திணைக்களம் நடத்திய பாடல் ஆக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட பரிசும் சான்றிதழும்( **2011** ) கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் விடை தேடி என்ற நூல் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட விருது (**2016** ) தேசிய இலக்கிய விழாவில் பரிசு எனும் சிறுகதைக்கு கிடைத்த முதல் பரிசும் சான்றிதழும் (**2020**) இலங்கை கலாசாரத் திணைக்களம் வழங்கும் அரச உயர் கலை இலக்கிய விருதான கலாபூஷணம்(**2021**) என்பவை அவற்றுள் சில.

ஜெகதீஸ்வரி, சிறுவர்மலர், பூவும்பொட்டும், வாலிப வட்டம், ஒலிமஞ்சரி, இளைஞர் மன்றம்' போன்ற வானொலி நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்றவர். கமலம், முத்தாரம், செந்தாமரை கோகிலம் போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து சஞ்சிகை வெளியீட்டுத் துறையிலும் கவனஞ் செலுத்தியவர். இன்றும், வானொலி, மேடைக் கவியரங்குகளில் பிரகாசிப்பவர்.

திருக்கோவில் பிரதேச மகேசாஞ்சலி நர்த்தனாலயத்தின் அங்கத்தவராகவும் அவரின் தமிழ்ப்பணி விரிந்தது. அந்நர்த்தனாலயத்திற்கு தெம்மாங்கு மெட்டிலான பாடல்களையும், கும்மிப் பாடல்களையும் எழுதி வழங்குபவராகவும்.வரலாற்றுப் பதிவுகளை நாட்டிய நாடகமாக்கித் தருபவராகவும் அவர் விளங்குகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலைச் சேர்ந்தவர் கலாபூஷணம் ஜெகதீஸ்வரி நாதன் தந்தை- சபாரத்தினம் .தாய் -நாகமணி.கணவர் -கவிஞர் எஸ்பீ.நாதன்.

மணற்காடு அ.தக. பாடசாலை, தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம் என்பவற்றில் ஆரம்ப,இடைநிலைக் கல்வியினைக் கற்ற அவர்,பேராதனைப் பல்கலைக் கழக கலைமாணிப் பட்டதாரி.

கலை,இலக்கிய உலகில் ஐந்து தசாப்தங்களாக இயங்கிவரும் அவர், ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் மாணவர்களின் கலை இலக்கிய மேம்பாட்டிற்காக உழைத்து வருபவர்.மாணவர்கள் மனங்களில் இலக்கிய முன்மாதிரியாகப் பதிவு பெற்றிருப்பவர்.

கலைக் கோகிலம் ஜெக தீஸ்வரி நாதன் இன்னும் பல்லாண்டு காலம் தேக நலத்தோடு வாழ்ந்து, கலை இலக்கியப் பணிபுரியவேண்டு மென்பதே எமது விருப்பமும் பிரார்த்தனையுமாகும்.

*தமிழன் பத்திரிகை*
*09.07.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வாசனைப் படைப்புக்களால் மக்களை ஈர்த்த

## தீரன். ஆர்.எம். நௌசாத்

0774781250



"பேரண்டத்தை வாசிக்கச் செல்லும்
ஒரு பறவை
பெரு வனத்தில் எங்கோ வீழும்
ஒருசிறு சருகு

அந்தப் பறவைக்கும்
ஒரு பாடல் இருக்கும்
அந்தச் சருகும்
ஒரு சரித்திரம் சொல்லும்"

(முத்திரையிடப்பட்ட மது -2021)

இலக்கிய வானில் இறக்கை விரித்துப் பறக்கும் பறவை-ஆர்.எம். நௌசாத், பாடும் கவிதை அது. ஆர் எம் நௌசாத், ஆரப்பட்டமில்லாமல் அமைதியாக இருந்து கனதியான ஆக்கங்களைத் தரும் படைப்பாளி, படிமச்சிறப்போடு, சித்திரச் சிறைப்பிடிப்பாய் உள்மனதைச் செப்பனிடும் உணர்வூற்றாய்க் கவிபடைக்கும் கவிஜோதி, மண்வாசனை ததும்பும் புனைவிலக்கியங்களை, கலைத்துவ நேர்த்தியோடு தரும் கலைச்சிற்பி.

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் கல்முனைப் பிரதேச இலக்கியவாதிகளில் குறிப்பிடத்தக்க ஒருவராக நாவல், சிறுகதை, கவிதை ,பத்தி எழுத்து,சஞ்சிகை வெளியீடு என்பவற்றில் தடம் பதித்து வரும் முக்கிய எழுத்தாளன்.

கல்முனைப் பிரதேசத்திலிருந்து 1970-1980 காலப் பகுதிக்குள் எழுத்துலகிற்கு வந்தவர்களில்,ஒவ்வொன்றும் வித்தியாசமான கதைப் போக்கில் நாவல்கள் மூன்றைத் தந்திருப்பவராக இலக்கிய உலகில் அடையாளம் பெற்றிருப்பவர்,தனது படைப்புகளுக்காக நாடு கடந்தும் பலபரிசுகளை வென்றவராகப் பெயர் பதித்திருப்பவர், கவிதைச் சிற்றிதழொன்றைப் புகவம் வெளியீடாக தந்ததன் மூலம் குறும்பா ,ஹைக்கூ போன்ற கவிதையின் புது வடிவங்களை எண்பதுகளில் இருந்தே இளைய தலைமுறைப் படைப்பாளர்களுக்கு அறிமுகப் படுத்தியவர் என்று ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்படுபவர் ஆர்எம். நௌசாத்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீரன் என்ற புனை பெயரிலும் இயங்கும் அவர், புகவம் (புதுமைக் கவிஞர் வட்டம்) என்ற அமைப்பின் செயலாளராகவும், அபாபீல்கள் கவிதை வட்டத்தின் செயற்பாட்டு முதல்வராகவும் கலை இலக்கியப் பணிபுரிபவர். அவருடைய படைப்புக்கள் வாசகர்களாலும் விமர்சகர்களாலும் விதந்துரைக்கப் பட்டிருக்கின்றன.

"கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பேச்சு வழக்கைக் கையாள்வதில் ஆசிரியர் மிகுந்த கவனம் செலுத்தி யிருக்கிறார். நாவலுக்கு இந்த மொழி ஒரு புதிய வலுவைக் கொடுக்கிறது. சமூகக் கட்டமைப்பு பற்றிய ஆழ்ந்த பார்வையைத் தராவிட்டாலும் ஒரு புதிய வாழ்க்கைப் புலத்தை தமிழ் நாவலுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம் தன்முக்கியத்துவத்தை இந் நாவல் நிலை நாட்டிக் கொள்கிறது" என்று "நட்டுமை" என்ற நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் பேராசிரியர் எம். ஏ. நுஃமானும் "வெளிப்பாட்டுத் திறன் மிக்க கதைஞர். கலைத்துவம் கொண்டவர். கதைகளின் கலாசாரப் பின்புலத்தை நன்கு கொண்டுவருபவர்" என்று ஈழத்தின் பிரபலம் பெற்ற கதை சொல்லி திக்குவல்லைக் கமாலும், "தமிழ் இலக்கியவெளியில் தமிழ் முஸ்லிம்களின் வாழ்வியலை ஆழ்ந்த புனைவுத் தன்மையுடன் வெளிப்படுத்தும் ஈழத்தின் ஒரே கதைசொல்லி தீரன் ஆர்.எம். நௌஷாத். தோப்பில் முகம்மது மீரான், கீரனூர் ஜாகிர்ராஜா போன்ற படைப்பாளிகளின் வரிசையில் இடம்பெறக்கூடியவர். தமிழின் பல விருதுகளும், பரிசுகளும் இவருக்குக் கிடைத்துள்ளன. தமிழகத்திலுள்ள பல படைப்பாளிகளை விஞ்சி நிற்பவர்" என்று இலக்கியத் திறனாய்வாளர் ஜிப்ரி ஹாசனும், "தீரன் நௌசாத் நமது சிறுகதையை உயிர்ப்பான திசைக்கு மாற்றிய வல்லவர். அவரை வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன். காலச்சுவடு மூலம் தமிழக வாசகர் மத்தியில் பரவலாக அறியப்பட்ட ஒரே படைப்பாளி அவரே!" என்று நம் மண்ணின் செய்நேர்த்தி மிக்க கதைஞர் எஸ் எல் எம் ஹனிபாவும்,

"தமிழுக்குக் கிட்டியதோர் செல்வமே தீரன்
அமிழ்தினிய ஆக்கங்கள் செய்வான் - உமிகடைந்த
நெல்லுக் குவப்பாகும் நற்றமிழின் தேறல்கள்
வல்லவன் வாழிபல் லாண்டு!"

என்று காப்பியக் கோ ஜின்னா ஷரிபுத்தீனும் ,

"தீரன் எம்மிடையே வாழும் தீராத கதைசொல்லி. அநாயாசமாய் கதைசொல்லும் தீரனின் கதைகளில் உள்ளுறையாய் ஒளிந்திருக்கும் அங்கதம் நம்மை வாழ்வின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் இழுத்துச் செல்லும்". என்று விரிவுரையளர் எம் அப்துல் றசாக்கும் குறிப்பிடுவர்.

இலக்கிய உலகில் வரவேற்புப் பெற்ற சிறந்த நூல்களையும், சஞ்சிகைகளையும், இறுவெட்டுக்களையும் வெளியீடு செய்திருப்பவர் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தூது- கவியேடு - 1983 கையடக்கக் கவிதைச் சிற்றேடு 16 இதழ்கள்.
கல்முனைப் புகவம் வெளியீடு
2. வல்லமை தாராயோ - சிறுகதைத் தொகுதி - 2000
கல்முனை புகவம் வெளியீடு
3. நட்டுமை - நாவல் - 2009
காலச்சுவடு வெளியீடு
4. வெள்ளிவிரல் - சிறுகதைத் தொகுதி-
காலச்சுவடு வெளியீடு
5. கொல்வதெழுதுதல் 90 - நாவல் - 2013
(2013க்கான தமிழ்நாடு அரசின் 1000 பிரதிகளுக்கான நூலக ஆணை பெற்றது.)
காலச்சுவடு வெளியீடு
6. அபாயா என் கறுப்பு வானம் - கவிதைகள் - மின்நூல் - 2015.
பிரதிலிபி வெளியீடு
7. ஆழித்தாயே அழித்தாயே - சுனாமி காவியம் - 2017
அபாபீல்கள் கவிதா வட்ட வெளியீடு
8. குறு நெல் - குறும்பாக்கள் - 2017
பாவலர் பண்ணை வெளியீடு
9. தீரதம் - சிறுகதைத் தொகுதி - 2017
ஜீவநதி வெளியீடு
10. வக்காத்துக்குளம் - குறுநாவல் - 2021
ஏறாவூர் சுசல் பதிப்பக வெளியீடு.
11. முத்திரையிடப்பட்ட மது - கவிதைகள் - 2021 -
அபாபீல்கள் கவிதா வட்ட வெளியீடு.

பத்தித் தொடர்கள்

- வானவில்லே ஒரு கவிதை கேளு - குறுநாவல் - 2005 - ஈழநாதம் - வார இதழ்
- ஒரு சிற்றெறும்புக்கும் நிழல் இருக்கிறது - பாவலர் பஸீல் காரியப்பரின் படைப்புலகில் சஞ்சரித்தல் - 2009 - விடிவெள்ளி வார இதழ்.
- விழித்திரையில் விரியும் வெண்திரை-ஆங்கிலத் திரைப்படப் பார்வை - 2009 நல்லுறவு.

இறுவெட்டு

காகித உறவுகள்.

இலங்கை வானொலி முஸ்லீம் சேவையில் ஒலிபரப்பான 12 வானொலி நாடகங்களின் (1987-1989)தொகுப்பு. (பிரான்ஸ் தமிழ் ஒலிபரப்பு நிறுவனமும் தினக்குரல் பத்திரிகையும் இணைந்து நடத்திய அகில உலக வானொலி நாடகப் போட்டியில் 3ஆவது பரிசுபெற்ற காகித உறவுகள் என்னும் நாடகமும் முஸ்லீம் சேவையில் சுமார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*25 தடவைகள் ஒலிபரப்பப்பட்ட ஒரு கிராமத்தின் கவிதை என்ற நாடகமும் உள்ளடங்கியது.)*

இலக்கியப் பணிக்காக தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றிருப்பவர் அவர்.

- *"தீண்டத்தகாத கரங்கள்." என்ற முதல் சிறுகதை, 1977 இல் மித்திரன் வாரமலர் நடத்திய பாரதி நினைவு சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றது*
- *"நல்லதொரு துரோகம்" என்ற சிறுகதை பேராதனைப் பல்கலைக் கழக சங்கீத நாட்டிய சங்கத்தின் முதற் பரிசாக தங்கப் பதக்கம் பெற்றது.*
- *"நட்டுமை" நாவல் 2009 இல் தமிழ்நாடு காலச்சுவடு சுந்தர ராமசாமி 75 பவளவிழா இலக்கியப்போட்டியில் முதற் பரிசு பெற்றது. 2009*
- *"வக்காத்துக் குளம்" நாவல் அக்கினிக் குஞ்சு இணையம் நடத்திய எஸ்.பொ. நினைவு குறுநாவல் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது. 2014*
- *"வெள்ளிவிரல்" சிறுகதைத் தொகுதி 2011ல் இலங்கை அரசின் தேசிய அரச சாகித்திய விருதும் கிழக்கு மாகாண சாகித்திய விருதும் பெற்றது.*
- *"சாகும் தலம்" சிறுகதை எழுத்தாளர் சுஜாதா அறக்கட்டளை நிறுவனம் நடத்திய அறிவியல் புனைகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றது.*
- *"தாய் மொழி" சிறுகதை ஞானம் மாசிகை நடத்திய புலோலியூர் க. சதாசிவம் நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.*

அம்பாறை மாவட்டம், சாய்ந்த மருதூரில் ரஸாக் காரியப்பர்- ஹாஜறா தம்பதியின் மகனாக 1960ல் பிறந்தவர் ஆர். எம்.நௌசாத். பாத்திமா றிபாயா அவரின் மனைவி. மூன்று பிள்ளைகளின் தந்தை. அஞ்சல் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

இலக்கிய வாழ்வில் உற்சாகத்தோடு இயங்கி வருபவர் ஆர்.எம். நௌசாத். அவருடைய பல படைப்புக்கள் இந்தியப் பதிப்புக்களாக வெளிவந்துள்ளன. அவை மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு பரவலாக்கப்படவேண்டும். தேகநலத்தோடு இன்னும் பல்லாண்டு காலம் அவர் வாழ்ந்து இலக்கியப் பொன்விழா,பவள விழா என்று தொடர்ந்து விழாக்கள் பல கண்டு, அவர் மகிழ வேண்டுமென்பதே தமது அவாவாகும்.

*தமிழன் பத்திரிகை*
***26.02.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித நேயப் படைப்புகள் தரும்

**மருதூர் ஜமால்தீன்**

*0775590611*

முல்லை யரும்புபோல் முத்துச் சிரிப்பிலே
மோகத்தி லாழ்த்திடுவாள்- வாட்டும்
சோகமே போக்கிடுவாள்
அல்லல் ஒழித்திட ஆறுதல் மொழிகளை
அள்ளி வழங்கிடுவாள்- நெஞ்சில்
அமைதியைத் தந்திடுவாள்!

அன்பு கலந்திட அடிமையாகி யென்
ஆசையைத் தீர்த்திடுவாள்- உள
ஆவலைப் போக்கிடுவாள்
பண்பில் பிள்ளையாய்ப் பரிவில் அன்னையாய்
பாசத்தை ஊட்டிடுவாள்- வாழ்வில்
பகையினைப் போக்கிடுவாள்!

பாடும் புலமையிற் பாவலனாய் எனைப்
பாரினில் ஆக்கி வைத்தாள்- கவி
பாடிட விதி சமைத்தாள்
ஓடும் சிந்தையி லுயர்வு படைத்திடும்
உண்மையைக் கூறி வைத்தாள் - எந்தன்
உள்ளத்தில் ஊறி நின்றாள்

( தமிழ்க்காதலி- வாழும் மனிதம்)

தமிழைக் காதலித்து, கரம்பிடித்து அள்ளி,அரவணத்து நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக மொழி உணர்வோடும் உள மகிழ்வோடும் உறவாடி வருபவர் கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன். ஈழத்து இலக்கியப் பரப்பில் பேசப்படுகின்ற அவர், தேசியப் பத்திரிகைகளிலும்,சஞ்சிகைகளிலும்கவிதை, சிறுகதை, கட்டுரைகள், நாட்டார் பாடல்கள் எழுதிப் பிரகாசிப்பவர். ஸலவாத்து மாலை, இஸ்லாமிய கீதம், வெள்ளக் காவியம் தாலாட்டு என்று எழுதி இஸ்லாமிய இலக்கியத்திலும் பங்களிப்பவர். பேச்சு, அரங்கக் கவிதைகள் என்பவற்றால் மனங்களை வெல்பவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக அக்கறையோடு படைப்புகளைத் தருபவரான அவர், மானுட நேயச் சிந்தனைகளை,அறநெறிக் கருத்துகளை விதைப்பவர். மரபு, புதிது, சிந்து, குறும்பா, ஹைக்கூ என்று கவிதையின் பல்வேறு வடிவங்களிலும் முயல்பவர்.

அவருடைய எழுத்துக்கள் கையெழுத்துச் சஞ்சிகைகளில் ஆரம்பித்து,றோணியோ இதழ்களில் தொடர்ந்து தேசியப் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் பிரசுரமாகின. பத்திரிகைத் துறையிலும், அல்ஹூதா பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், மருதம், அஷ் ஷிபா பத்திரிகைகளின் ஆசிரியராகவும் அவர் செயற்பட்டார்.

1. தடயங்கள் கவிதை-2018 (புரவலர் புத்தகம் பூங்கா)
2. ரமழான் ஸலவாத் -2010
3. கிழக்கின் பெருவெள்ளக் காவியம்-2010
4. முகம்மது (ஸல்) புகழ் மாலை-2011
5. இஸ்லாமிய கீதங்கள்-2012
6. தாலாட்டு- 2015
7. பத்ர் யுத்தம் - ஸலவாத் மாலை-2015
8. வலிகள் சுமந்த தேசம்-2017
9. தீ நிலம்-2018
10. வல்லூறின் வானம் 2019
11. மனிதம் வாழும்- 2019.
    ( கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்)

என்பன அவர் தந்திருக்கின்ற நூல்கள். விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையைப் படம் பிடிக்கும் பல நல்ல சிறுகதைகளை அவர் எழுதியிருந்த போதும் அவை இற்றை வரை நூலாக்கம் பெறாமற் போனது நமது துர் அதிஷ்டம்.

கவிஞர் மருதூர் ஜமால்தீன் பல விருதுகளையும் சான்றுகளையும் தனது எழுத்தூழியத்திற்காகப் பெற்றிருப்பவர்.

- கலாசார அமைச்சின் கலாபூஷண விருது-2022,
- கலைஞர் சுவதம் விருது-2019,
- உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்ட கலைஞர் கௌரவம்-2016,
- ஷம்சுல் உம்மா விருது 2016,
- காவிய பிரதீப் கவிச்சுடர் விருது-2013,
- இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் வழங்கிய கலைவேந்தர் விருது,2013
- ஏறாவூர் பிரதேச செயலக கலை இலக்கிய விருது- 2019,
- மாவட்ட இலக்கிய விழாவில் வழங்கப்பட்ட கலைச் செம்மல் விருது- 2019,
- ஹிஸ்புல்லா பவுண்டேசன் வழங்கிய கலைத் தீபம் விருதும் பொற்கிழியும் (2020) என்பன அவற்றுட் சிலவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதூர் ஜமால்தீன் கலை இலக்கிய மார்க்கப் பணிகளுக்காக மேலும் பல்வேறு சஞ்சிகைகளாலும் ஆவணத் திரட்டல்களாலும், நிறுவனங்களாலும் கௌரவம் பெற்றவர். தென்றல் சஞ்சிகை அட்டைப்பட அதிதியாக அவரைக் கௌரவித்துள்ளது.

- *அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் வரலாறு(1987),*
- *சாய்ந்தமருது வரலாறு(2009),*
- *ஏறாவூர் வரலாறு(2005),*
- *பெயர்பதிக்கும் தகைகள் விபரத் திரட்டு (2022,)*

அறுவடைகள் திறனாய்வுத் தொகுதி என்பவை அவர் பற்றிய குறிப்புக்களையும் தகவல்களையும் தந்து ஆய்வு செய்துள்ளன.

ஏறாவூர் வாசிப்பு வட்டம்,ஏறாவூர் பிரதேச செயலக கலாசார மத்திய நிலையம், ஹனீமூன் இலக்கிய அமைப்பு என்பவற்றின் உறுப்பினராக துடிப்போடு செற்படுபவர். ஏறாவூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளியிடப்பட்ட "இனசமதி" இதழ் அப்பிரதேசத்தின் கலை,இலக்கிய,வரலாற்றுப் பொக்கிஷமாக வெளிவந்தது. இனசமதிவெளியீட்டுக் குழுவின் உறுப்பினராகவும் மருதூர் ஜமால்தீன் செயற்பட்டார்.

கவிஞர்,கதைஞர் என்பதற்கப்பால் ஒருசிறந்த பேச்சாளராக, பிரதேச மக்கள் மனங்களில் இடம்பிடித்திருப்பவர் அவர். மார்க்கக் கல்வி, மௌலவிப் பட்டம், அமைதியான சுபாவம் ஆற்றல் என்பன அவருக்கு அந்த நன்மதிப்பினைப் பெற்றுத் தந்துள்ளன. ஏறாவூர் வாளியப்பா ஜும்ஆ பள்ளிவாசலில் பிரதம கதீபாக பல வருடங்களாகக் கடமையாற்றி வரும் ஜமால்தீன் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிபதியாகவும் பொதுப்பணி புரிபவர்.

சாய்ந்தமருதூரில் அப்துர் ரஹ்மான் மீரா முஹைதீன்-இஸ்மாலெவ்வை உம்மு குல்தூம் தம்பதியின் மகனாக 1960 ல் பிறந்த ஜமால்தீன் ஆரம்பக் கல்வியை சாய்ந்த மருது றியாழுள் ஜன்னா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை கல்முனை சாஹிறாக் கல்லூரியிலும் கற்றவர். தர்காநகர் மு அய்யிதுல் இஸ்லாம் அரபுக் கலாசாலையில் மார்க்கக் கல்வி பயின்று மௌலவிப் பட்டமும் பெற்றிருப்பவர். ஏறாவூரில் மணம் புரிந்து வாழ்ந்து வருபவர். கலாபூஷணம் மருதூர் ஜமால்தீனின் கலை இலக்கியப் பணிகள் மேலும் சிறப்படையவும் அவருடைய வெளிவரக் காத்திருக்கும்,

1. ஒரு கிராமத்தின் குரல் (நாட்டார் பாடல்)
2. திருப்பம் (சிறு கதை)
3. நெறி தவறாதே (சிறுவர் பாடல்)
4. கொரோனா (குறுங்காவியம்)

என்ற நூல்கள் இவ்வாண்டு வெளிவந்து மகிழ்ச்சி தரவும் நமது வாழ்த்துகள்.

*தமிழன் பத்திரிகை*
***12.03.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தை ஈர்த்து வரும்

## கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ

*0064212043386*



இலங்கை முஸ்லிம் பெண்களின் எழுத்து முயற்சி 1940 ன் பிற்பகுதியிலேயே தொடங்குவதை அது தொடர்பில் ஆய்வு செய்பவர்கள் எடுத்துக்காட்டுவர். பெண்ணியச் சிந்தனைகள் அதிகம் பேசப்படாத காலத்தில் -1947 களில் எழுத்து முயற்சியில் ஈடுப்பட்டவராகப் பேராதனை ஷர்புன்னிஷாவையும்,1960 களில் சிறுகதைகளினூடாக எழுத்து முயற்சியில் பங்களித்தவராக நயீமா சித்தீக்கையும் குறிப்பிட்டு, அவர்களை முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய முன்னணி முஸ்லிம் பெண் எழுத்தாளர்களாக அடையாளப்படுத்துவார் திறனாய்வாளர் பேராசிரியர் எம்.எஸ்.எம் . அனஸ்.

அப்பெண் எழுத்தாளர்களைப் பின் தொடர்ந்தவர்களாக பெண்விடுதலை, ஆணாதிக்க எதிர்ப்பு, மூடநம்பிக்கைக்கு எதிரான எழுச்சி,அரசியல், மனித நேயம், பாலின சமத்துவம், போன்ற மையப் பொருட்களில் எழுதிவருகின்ற இன்னும் சில முஸ்லிம் பெண் படைப்பாளர்கள் இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பில் தடம் பதித்து வருவதனை இலக்கிய உலகம் பேசும்.

கல்வி, வாசிப்பு, மொழியாற்றல் என்பவற்றினூடாகப் பிரகாசம் பெற்றிருக்கின்ற அவ்வாறான முன்னிலைப் படைப்பாளர்களில் ஒருவராக இலக்கிய உலகில் பெயர் பெற்றிருப்பவர் கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி. நாடகம், நடிப்பு, கவிதை, சிறுகதை, அறிவிப்பு, பயண இலக்கியம், மொழி பெயர்ப்பு என்று பல துறைகளில் அவருடைய கலை இலக்கியப் பயணம் தொடர்கிறது.

1980 களில் தினகரன் சிறுவர் உலகம் மூலம் எழுத்துத்துறையில் பிரவேசித்த அவர், தினகரன், சிந்தாமணி, நவமணி, மித்திரன், வீரகேசரி போன்ற தேசிய பத்திரிகை களிலும், மற்றும் பல்வேறு உள்நாட்டு - வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் மின்னிதழ் களிலும் தொடர்ந்து எழுதிவருகின்றார்.முகநூலில் அவர் "அரகல "ஆர்ப்பாட்ட காலத்தில் எழுதியிருந்த கவிதை, பலராலும் வியந்து பார்க்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு,பொதுவெளியில் முன்னின்றவரை, பெண் என்ற காரணத்தினால், ஆணாதிக்கவாதிகள் அங்க ஆபாச அஸ்திரமிட்டுக் கொச்சைப் படுத்தியபோது, அதனை எதிர்த்து மரீனா எழுப்பிய கலகக் குரல் இலக்கிய நெஞ்சங்களின் அவதானத்தை ஈர்த்ததாகும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடுப்பங்கரையில் எரிந்து போ...
ஆர்ப்பாட்டக்களத்துக்கு
ஏன் வருகிறாய்... ?
கட்டிலில் எனக்காக
காலை விரித்து வைத்துக் காத்திரு ...!
கட்டுப்பாடுகளை உடைத்துவிட்டு
கடல் அலைபோல் பொங்கியெழ
காலம் அனுமதித்தாலும்
நாங்கள் ஆமோதிப்போம்
என்று நினைத்தாயோ ...?

கூண்டிலிருந்து வெளியே விட்டாலும்
கத்தரித்துத்தானே வைத்திருக்கிறோம்
உன் இறக்கைகளை...
எப்படி நீ
பறக்க எத்தனிக்கிறாய் ...?!

குரல்வளை நசுக்கப்பட்ட பின்பும்
சுதந்திரம் பேச மேடைக்கு வருகிறாயா...?
வந்து பார்...!

பாலியல் வன்முறை என்ற
பரம்பரை ஆயுதம்
எம் கையிலிருப்பதை
மறந்து விட்டாயா நீ?

போர்க்களத்திலும்
உன் மார்பகங்களை பேசுபொருளாக்கி உன்னைக் கொச்சைப் படுத்த
ஒரு கூட்டமே காத்திருக்கிறது ...

அதனால்
பொத்திக்கொண்டு வீட்டில் இரு...
உன் பிணத்தைக் கூட நிர்வாணமாக்கி
பிழைப்பு நடாத்த
எங்களுக்குத் தெரியும்"

மரீனா இல்யாஸ் ஷாபி இலக்கிய உலகுக்கு
குமுறுகின்ற எரிமலைகள்-சிறுகதை-(1998)
தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள் - ஓர் ஆய்வு(1998)
இரவைக் காக்கும் இமைகள் -கவிதை (2020)
என் சிறகில் சிக்கிய வானம் -பயணக் கட்டுரை (2023)
ஆகிய நூல்களை வழங்கியிருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பெண்விடுதலை பற்றிய வேட்கையும் அது தொடர்பான செயற்பாடுகளும், முனைப்புப் பெற்றுவரும் இற்றை நாளில், அவற்றுக்கு மேலும் உரமூட்டுவனவாக அமைவன மரீனாவின் கதைகள்” என்று அவரின் சிறுகதைகள், ஆய்வுநூல் என்பன தொடர்பாகக் கருத்துரைத்த பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி அருணாசலம் கூறுவார். அது போலவே, வாழ்க்கைக் கோலங்களை பல்வேறு கோணங்களில் படம்பிடிப்பவையாக, சமூக மேம்பாடு நோக்கிய உணர்வு பூர்வமான இலகு மொழிக் கவிதைகளாக அவரின் கவிதைகள் அமைந்திருப்பதாக அதனை ஆய்வு செய்பவர்கள் சுட்டிக் காட்டுவர்.

அவருடைய பயணக் கட்டுரைகள் சென்ற, பார்த்த இடங்களை அதன் அழகை வெறுமனே விபரிப்பனவாக அமைந்துவிடாமல், ஆத்மீக உணர்வுகளை மேலோங்கச் செய்வனவாக அமைந்திருப்பதை அதனை வாசித்தவர்கள் எடுத்துரைப்பர். “கண்களுக்கு விருந்து படைக்கும் பயணங்களை விட ஆத்மாவுக்குத் தீனி போடும் பயணங்கள் பெறுமதியானவை” என்ற உறுதிப்பாட்டோடு பயணக்கட்டுரைகளை எழுதிவருபவர் அவர்.

மரீனா இல்யாஸின் எழுத்து முயற்சியில் அவரின் வானொலிப் பங்களிப்பு தனித்து நோக்கப்பட வேண்டியதாகும். அவரின் 25- 30 நாடகங்கள் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி உள்ளன. “பாறையில் பூத்த மலர் ” என்ற தொடர் நாடகமும் வானொலியில் ஒலிபரப்பாகி நேயர்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கின்றது.

அவுஸ்திரேலியாவில் இருந்து ஒலிபரப்பாகும் “வளர்பிறை ” வானொலி நிகழ்ச்சியில் ஓர் அறிவிப்பாளராகவும் , நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார் மரீனா. “சந்திப்பு” என்ற நிகழ்ச்சியின் மூலம் வளர்ந்த ,வளரத் துடிக்கின்ற கலைஞர்களை, சமூக சேவையாளர்களை அடையாளப்படுத்தி வருவதோடு ஹஜ்ஜுப் பெருநாள் , நோன்புப் பெருநாள் கவியரங்குகளையும் தலைமை தாங்கி நடாத்தி வருகின்றார்.

வானொலி நாடகங்களில் பல பாத்திரங்களை ஏற்று நடித்திருப்பவர் அவர். . அவர் எழுதிய “இலையுதிர் காலம் ”என்ற நாடகத்தில் , கணவன் - மனைவி , சிறுமி , வயதான தாய், பக்கத்து வீட்டுப் பெண் என்று எல்லாப் பாத்திரங்களிலும் அவரே நடித்துப் புகழ் பெற்றார்.

ஆங்கில மொழியில் முதுமாணி பட்டம் பெற்றுள்ள மரீனா, பயனுள்ள ஆங்கில ஆக்கங்களையும் தமிழில் மொழி பெயர்த்து இலக்கிய நெஞ்சங்களை ஈர்த்து வருவதோடு, சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்து வருகின்றார்.

இலக்கியப் பணிகளுக்காக கௌரவங்களும் பல விருதுகளும் அவருக்குக் கிடைத்திருக்கின்றன. 1999 இல் மத்திய மாகாண முஸ்லிம் கலைஞர் கௌரவிப்பில் “கலைச்சுடர்” பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2023ல் பிரான்ஸில் பாரிஸ் நகரில் இடம்பெற்ற வென்மேரி அறக்கட்டளையின் தமிழ் ஆளுமைகளுக்கான உயர் விருது வழங்கப்பட்ட நிகழ்வுகளின் போது , கலாநிதி ம . மு . உவைஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது . துணிந்தெழு, பூங்காவனம், முத்தமிழ்க்கலசம் போன்ற சஞ்சிகைகள் அவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தன. சமூக நலப் பணிகளிலும் அவரின் பங்களிப்புகள் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியவையே.

உளவியல் ஆலோசனைகள் வழங்குதல், இன மத நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுதல் , அகதிகளின் மறுவாழ்வு, கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது, இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடாத்துவது என்று பல்வேறுபட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் மரீனா ஊக்கமூட்டும் பேச்சாளராகவும் கண்ணியம் பெற்றிருக்கின்றார்.

மரீனா இல்யாஸ் ஷாபி கண்டி மாவட்டம், தெஹிதெனிய மடிகேயில் பிறந்தவர்.

பெற்றோர் :
மஸ்தூரா - இல்யாஸ்,
கணவர் - எம். வை. எஸ். ஷாபீ (இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமை புரிந்தவர்), தெஹி தெனிய முஸ்லிம் மஹா வித்தியாலயம், ஸஹிராக் கல்லூரி மாவனல்லை என்பவற்றில் கல்விகற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகம், மலேசியா சர்வேதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம், நியூஸிலாந்து விக்டோரியா பல்கலைக்கழகம், ஆக்லாந்து பல்கலைக்கழகம் நியூஸிலாந்து என்பவற்றில் உயர் கல்வி கற்று ஆங்கில முதுமாணி, மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். புலம்பெயர்ந்து நியூசிலாந்து செல்லும் வரை பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமை யாற்றியவர் கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ.

சுற்றிவர சிங்கள மொழிச் சூழலில் இருந்து கொண்டு தமிழ் இலக்கிய முயற்சிகளில் உற்சாகத்தோடு ஈடுபட்டவர் அவர். நியூஸிலாந்துக்குப் புலம் பெயர்ந்த பின்னரும் தமிழ் இலக்கிய ப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் அவரின் பணி தொடர்கின்றது. தமிழ் இலக்கிய நெஞ்சங்களின் சார்பில் அவருக்கு நமது வாழ்த்துகள்.

தமிழன் பத்திரிகை
*10.09.2023*

•••


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாவல் வளர்ச்சியில் தடம்பதித்து வரும்

# ஜரீனா முஸ்தபா

*0752267474*



ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும். கவிதை, சிறுகதை, நாவல், இதழியல் , கட்டுரை, நாடகம் என்று பல் துறை சார்ந்ததாக அவர்களின் ஈடுபாடு இருந்து வருவதனை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவர்.

அவர்களில் ஒருவராக, நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், வானொலி நிகழ்ச்சிகள், முஸ்லிம் நிகழ்ச்சிகள் என்பவற்றினூடாக இலக்கிய உலகில் இடம்பிடித்திருப்பவர் ஜரீனா முஸ்தபா. பல்வேறு இலக்கியத் துறைகளில் காலூன்றி இருந்த போதிலும் பரவலாக வாசகர்கள் மத்தியில் ஜரீனா முஸ்தபா அறியப்பட்டிருப்பது அவருடைய நாவல்களின் மூலமாகவே என்பதனைத் திறனாய்வாளர்களின் ஆய்வுகள் எடுத்துக் காட்டும்.

ஈழத்தின் நாவல் இலக்கிய வளர்ச்சியில், முதல் நாவலைத் தந்தவராக 1885ல் "அசன்பேயின் கதை" என்ற நாவலை எழுதிய அறிஞர் சித்திலெவ்வை குறிப்பிடப்படுவார். பெண்களில் முதல் நாவலைத் தந்தவராக 1914ல் "நொருங்குண்ட இருதயம்" என்ற நாவலை எழுதிய மங்களநாயகம் தம்பையாவும், இரண்டாவது நாவலைத் தந்தவராக 1924ல் "இராசதுதுரை" என்ற நாவலைத் தந்த செ. செல்லம்மாளும், மூன்றாவது நாவலைத் தந்தவராக1929ல் "சரஸ்வதி" அல்லது "காணாமற் போன பெண்மணி" நாவலைத் தந்த அ. இராசம்மாளும் அறியப்படு கின்றனர். ஈழத்தின் தமிழ் நாவல் இலக்கியத்தில் பெண்எழுத்தாளர்களின் பங்களிப்பும் நாட்டமும் அறுபதுகளுக்குப் பின்னர் நீட்சி பெற்றது. சிறுகதை எழுத்தாளர்களில் சிலர் நாவல் எழுதுவதிலும் கவனஞ் செலுத்தினர். வாழ்க்கைப் போராட்டம், குடும்பச் சிக்கல்கள், சீதனக் கொடுமை, ஆணாதிக்க எதிர்ப்பு, சாதி, வர்க்க முரண்பாடுகள், மலையக வாழ்வியல், சுரண்டல்கள், இனமுரண்பாடு, போரியல், புலம்பெயர் மக்களின் அவல வாழ்வு, என்பவற்றைக் கருப் பொருளாகக் கொண்ட பல நாவல்கள் ஈழத்து இலக்கிய உலகுக்குக் கிடைத்தன.

பூரணி, நயீமா சித்தீக், யாழ்நங்கை, மண்டூர் அசோகா, ந. பாலேஸ்வரி, சிவம் பொன்னையா, கவிதா, அன்னலட்சுமி ராஜதுரை, கோகிலம் சுப்பையா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், கோகிலா மகேந்திரன், தமிழ்நதி , சாந்தி, பர்ஸானா றியாஸ், என்று சில பெண் படைப்பாளர்கள் நாவலாசிரியர்களாகவும் முன்னிலை பெற்றனர். ஈழத்தில் ஜனரஞ்சகத் தன்மையில் குடும்பப் பாங்கான அதிக நாவல்களைத் தந்தவராக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.பாலேஸ்வரியையும், முதல் சரித்திர நாவலாசிரியையாக "அடிமையின் காதலி" என்ற நாவல் மூலம் திக்கம் சிவயோகமலரையும் ஈழத்து இலக்கிய உலகம் குறிப்பிடும். அந்த வரிசையில் ஈழத்தில் அதிக நாவல்களைத் தந்த முதல் முஸ்லிம் பெண் படைப்பாளியாக அடையாளம் பெற்றிருப்பவர் ஜரீனா முஸ்தபா.

சிங்கள மொழி மூலம் கற்று, சிங்களமொழி பேசும் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜரீனா முஸ்தபா தமிழ்நாவல் இலக்கியத்துறைக்கு ஆறு நாவல்களைத் தந்துள்ளார்.

1. ஓர்அபலையின் டயரி (2008, 2009,2010,2013 2016,2020)
2. 37ம் நம்பர் வீடு 2011,2017,2020
3. இது ஒரு ராட்சசியின் கதை
4. அவளுக்குத்தெரியாத ரகசியம் 2014
5. மர்ம கீதங்கள்
6. நடுநிசி நரிகள்.

என்பன அவர் தந்த நாவல்கள். வாசகரின் அபிமானம் பெற்றவையாக ஜனரஞ்சகத் தன்மை பெற்றவையாக , அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளை- யதார்த்தத்திற்கு நெருக்கமாக விபரிப்பனவாக அவரின் பெரும்பாலான நாவல்கள் அமையும். அரைநிலைக் கற்பனை நாவல்கள் அவை. அவரின், "ஓர் அபலையின் டயரி" ஆறு பதிப்புக்களையும், "37ம்நம்பர்வீடு" மூன்று பதிப்புக்களையும் பெற்றவை. அவரின் நாவல்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சபை யின்அங்கீகாரம் பெற்றவை. "இது ஒரு இராட்சஷியின் கதை", டாக்டர் ஹிமானா செய்யத்தின் "மல்லாரி" பதிப்பகமும், மாதர் இதழான "நர்கிஸூம்"இணைந்து, இந்தியாவில் நடத்திய சர்வதேச நாவல் போட்டியில் பரிசு பெற்ற நாவலாகும். அவற்றோடு,

1. இரு தீபங்கள்
2. யதார்த்தங்கள்
3. மீண்டும் ஒரு வசந்தம்

என்று மூன்று சிறுகதைத் தொகுதிகளையும்,

1. சமூகமே பதில் சொல்
2. அனுபவமே பேசு என்ற இரண்டு உளவியல் சார் கட்டுரை நூல்களையும்,

1. மல்லிகை ,
2. ரோஜாக் கூட்டம் என்று இரண்டு சிறுவர் சிறு கதை நூல்களையும்,

1. பொக்கிஷம்

என்ற கவிதைத் தொகுதியையும் இலக்கிய உலகிற்குத் தந்திருப்பவர் ஜரீனா முஸ்தபா.. படைப்பிலக்கிய ஆளுமையாலும், கதை பின்னும் ஆற்றலாலும் மூத்த இலக்கிய வாதிகளின் நன்மதிப்பைப் பெற்றிருப்பவர் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜரீனா நாவல் படைக்கும் ஆற்றல் கைவரப் பெற்றவர்.விறு விறுப்புச் சற்றும் குறையாமல் நாவலை நகர்த்திச் செல்லும் உத்தி வாய்க்கப் பெற்றவர்.காட்சிகளை அங்கம் அங்கமாக ஓர் ஒழுங்கின் பிரகாரம் வகைப்படுத்திக் கதை சொல்பவர். அவருடைய நாவலில் வரும் உரையாடல்கள் சுவை குன்றாதவை" என்று ஈழத்தின் மூத்த இலக்கியவாதி பல்துறைப் படைப்பாளி கலைவாதி கலீல் குறிப்பிடுவார். "வெளிப்பாட்டு முறையில் வெளிப்படைத் தன்மையைப் பேணுபவர். இலகு மொழியில் , நன்னெறிக் கருத்துக்களை விதைப்பவர்". என்று ஜரீனாவின் கவிதைகள் பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். .

- 1980 ல் எழுத்துலகப் பிரவேசம் பெற்ற ஜரீனா,Human rights அமைப்பின் சார்பாக "தேச கீர்த்தி" (2012)விருதினையும்,
- தடாகம் அமைப்பின் "ராஜேஸ்வரி சண்முகம்" (2012) விருதினையும்,
- இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வு நிறுவகத்தின் இலக்கியப் பணிக்கான கௌரவ விருதினையும்(2016)
- மன்னார் முற்போக்கு மன்றமும்,இலங்கைக் கலைஞர் முன்னணியும் இணைந்து நடத்திய விழாவில் "நாவல் அரசி" பட்டத்தையும், விருதினையும் (2017), இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நடத்திய மகளிர் தின சிறுகதைப் போட்டியில் முதல் பரிசையும்(2022) பெற்றவர்.
- தினபதியில் ஆன்மீகக் கட்டுரைகள் எழுதத் தொடங்கிய ஜரீனா,பின்னர் இலங்கையின் ஏனைய தேசிய நாளிதழ்களில் தொடர்கதைகளை எழுதி வாசகர் பரப்பை அகலித்துக் கொண்டவர். மதுகரம்,வெண்ணிலா என்னும் சஞ்சிகைகளின் இணை ஆசிரியராகவும் அவர் செயற்பட்டார்..
- ஜரீனா, ஜயவர்த்தனபுரபிட்ட கோட்டயில் அப்துல் கரீம் - பாத்திமுத்து ஜொகரா தம்பதியின் மகளாக 1967 ல் பிறந்தவர். கொழும்பு மாவட்டத்தின்,கடுவல வெளிவிட்ட என்ற ஊருக்கு 1972ல் குடும்பத்தோடு குடிபெயர்ந்து வாழ்ந்தவர். வெளிவிட்ட சென்மேரிஸ் தேசிய கல்லூரியில் சிங்கள மொழி மூலம் கல்விகற்றவர்.ஆரியாகமம் தும்மலசூரியவைச் சேர்ந்த ஏ.எம்.முகம்மது முஸ்தபா என்பவரை 1987ல் மணம் புரிந்தவர்.

A to Z Communication and Fancy House &textiles உரிமையாளராகவும் பணிப்பாளராகவும் பணிபுரிந்தவர். அப்பிரதேசத்தில் இயங்கும் மத்ரசத்துல் ஜன்னாஹ் கல்வி நிறுவனத்தின் முன்னாள் அதிபராகவும் அவர் கடமை புரிந்தார். கணவரின் இழப்பிற்குப் பின்னர் சொந்தப் பணிகளிலும் பொது மற்றும் இலக்கியப் பணிகளிலும் சற்றுத் தளரச்சி அடைந்துள்ள அவர் மீளெழ வேண்டும் . அவரின் சகல பணிகளிலும் எழுச்சி பெறவேண்டும். கையிருப்பில் உள்ள தோழியின் கதையும்(நாவல்) நந்தவனப் பூக்களும்( சிறுவர் சிறுகதைகள்) விரைவில் வெளிவரவேண்டும் என்பனவே நமது பிரார்த்தனையாக இருக்கின்றது.

*தமிழன் பத்திரிகை*
***26.03.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அபிமானம் வென்ற

## கிராமியக் கலைஞன் - எழுகவி ஜெலீல்

*0770058909*



*கிராமிய மணங் கமழும் சிறந்த பாடல்களை, சுவை குன்றாமல் எழுதிப் பாடி வருகின்ற தனித்துவமான கலை இலக்கியச் செயற்பாட்டாளர், ஈழத்தில், குறிப்பாக தென்கிழக்கின் பெரும்பாலான மேடைகளை, தன் நிகழ்ச்சிகளால் அலங்கரித்து, மக்கள் அபிமானத்தைப் பெற்றிருக்கும் கிராமியக் கவிஞர், நாட்டார் மொழியில் பாடல்கள் இயற்றிப் பாடும் வெகுசனப் பாடகராக ,கிராமியக் கவிகளின் தொகுப்பாளராக, கவிஞராக, சுவரோவியங்கள் வரைவதில் தேர்ச்சி பெற்ற சித்திரக் காரராக, கைப்பணிப் பொருட்கள் செய்பவராக, கை வைத்தியராக கிழக்கு மண்ணில் மேலெழுந்து வரும் பல்துறைக் கலைஞர் எழுகவி ஜெலீல்.*

*கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு பின்னிப் பிணைந்திருந்த முஸ்லிம் நாட்டார் பாடல்கள் புறந்தள்ளப்பட்டு வருவதை ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். வாய்மொழி இலக்கியமான நாட்டார் பாடல்களை அதன் இராகத்தோடு பாடி வந்தவர்கள் மறைந்து வருவதும், கிராமங்கள் அழிந்து போவதும், வேளாண்மை போன்ற தொழில்களில் ஏற்பட்ட இயந்திரமயமாக்கலும் நாட்டார் பாடல்களின் பின்னடைவுக்குப் பிரதான காரணங்களென்றும் அவர்கள் எடுத்துரைப்பர். .*

*எனினும், இப்போது, தென்கிழக்கில், நாட்டார் பாடல்களைப் பாடி அதன் மீளெழுச்சிக்கு உதவுபவராக ஆய்வாளர்களால் பாராட்டப் படுபவர் எழுகவி ஜெலீல்.*

*ஆசிரியர் யாரென்று தெரியாத, மண்வளச் சொற்கள் நிரம்பிய,கிராமியக் கவிகளை தேடித் தொகுத்து மேடைகளில் பாடிவருபவராக மட்டுமல்லாமல், தென்கிழக்கில் "கவிகட்டிப்" பாடுபவராகவும் அவர் பிரபல்யம் பெற்றிருக்கின்றார். அவருடைய பாடல்கள் அரை நிலை நாட்டார் பாடல்களாக, வெகுசனப் பாடல்களாக ஆய்வாளர்களால் எடுத்துரைக்கப்படுகின்றன.*

*"ஆக்கின சோத்துக்கு கறியக்காணோம்*
*ஆருட்ட செல்வேன்ரி சின்னத்தங்கம்*
*பீக்கங்கொடியில பூவயும் காணோம்*
*பெய்யும் மழை எப்ப சின்னத்தங்கம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் ஒண்டுக்கு எண்பது ரூபாவாம்
தேடித்திரியிறன் சின்னத்தங்கம்
தேஞ்ச செப்பலி முன்னூறு ரூபாவாம்
தேவயாடி இது சின்னத்தங்கம்

பொட்டியா மீனும் வட்டமடுவுல
பொலிஞ்சி கெடக்காம் சின்னத்தங்கம்
பொத்துவிலூரில கடும் வெலயாம்
போயிற்று வந்தேன்ரி சின்னத்தங்கம்

மட்டக்களப்புல கட்டாக்கருவாடு
மலிவு வெலயாம் சின்னத்தங்கம்
கிட்ட நெருங்கொண்ணா அறவே காயல்ல
கிறுகி வந்தேன்ரி சின்னத்தங்கம்

காத்தான்குடியில ஈச்சமரத்த நான்
பாத்துக்கு வந்தேன்ரி சின்னத்தங்கம்
காக்கிறத்துக்கு என்னமோ கட்டுனம்
காரணம் என்னடி சின்னத்தங்கம்

மருதமுனைக்க சாறனொண்டுதான்
எடுக்கப் போனேண்டி சின்னத்தங்கம்
மதுரையிருந்து வரவழைக்கலாம்
போலிரிக்கென்ன சின்னத்தங்கம்

கல்முனையூரில கத்தரிக்காய்க்கி
வெலயக் கேட்டேன் சின்னத்தங்கம்
காக்கிலோக் காய்க்கி நூறு ரூபாயாம்
காச்சல் வந்திற்று சின்னத்தங்கம்

சாஞ்சமருதுல கடந்த மாட்டுக்கு
சட்டிறக் அடிச்சான் சின்னத்தங்கம்
தேச்ச டயர்ர சத்தத்துல நானும்
திரும்பி ஓடினேன் சின்னத்தங்கம்

சம்மாந்துறைக்கி போவமெண்டு
சந்தியில் நிண்டேன்ரி சின்னத்தங்கம்
சனியன் புடிப்பான் ஏத்தயுமில்ல
சலிச்சி வாறேன்ரி சின்னத்தங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூரால வந்த சவுப்புல
நிமிந்து பாத்தேன்ரி சின்னத்தங்கம்
சந்தையடியில பந்தலுமில்ல
சரியான வெயில் சின்னத்தங்கம்

அட்டப்பளத்துல முட்டையக் கண்டு
அத விசாரிச்சன் சின்னத்தங்கம்
கொட்டப்பாக்குப் போல அது இருந்திச்சி
சட்டப்படி வெல சின்னத்தங்கம்

ஒலுவில் தாண்டக்க தாகமெடுத்திச்சி
ஓடி வந்தேன்ரி சின்னத்தங்கம்
சர்வத்துக்கட மூடிக்கெடந்திச்சி
சள்ளுப் பட்டேன்ரி சின்னத்தங்கம்

பாலமெனயில பாக்கு வெத்தில
வெலயக் கேட்டா சின்னத்தங்கம்
பல்லுக்கடுப்பே தெரியாம போச்சிது
பாரேன்ரி செப்பத்த சின்னத்தங்கம்

அட்டாளச்சேனைக்க முண்டக்கண் பாரைக்கி
அறுநூறு ரூபாயாம் சின்னத்தங்கம்
ஹறாம் செல்லிற்று அப்புடியே வந்தேன்
அணைய இல்லடி சின்னத்தங்கம்

எறக்காமத்துல எரச்சலாமெண்டு
என்னெண்டு கேட்டன்ரி சின்னத்தங்கம்
இருட்டுப்பட்டா செல வளருதாம்
என்ன புதினன்ரி சின்னத்தங்கம்

வல்லான்ர பொண்டிக்கி கடலபோடுறான்
வரக்க கண்டேன்ரி சின்னத்தங்கம்
வழியால போறத வாவெணடு கூப்புர்றான்
வளிசக் கொரங்கு சின்னத்தங்கம்

அக்கரப்பத்துல நித்திரை முழிச்சி
சக்கர தேடினேன் சின்னத்தங்கம்
பத்தர மணிக்கு கடைய மூடினாம்
பாஞ்சியுமுந்தாண்டி சின்னத்தங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாங்கணிக்கட்டு வெலயுமேறி
போச்சுதடி இப்ப சின்னத்தங்கம்
பொல்லாத ஆட்சிய நல்லாட்சி எங்கினம்
பொறுக்குதில்லடி சின்னத் தங்கம்!"

என்று 2017ல் அவர்பாடிய வெகுசனப் பாடல் இப்பிரதேசத்தில் இன்றும் சிறுவர்களும் கூட ஞாபகத்தில் வைத்துப் பாடும் பாடலாகப் புகழ் பெற்றிருக்கின்றது.

"அக்கரைப்பற்றில் கிராமிய இலக்கியப் பரப்பை வளப்படுத்துகின்ற கிராமியப் புலவர்களில் நண்பர் ஜெலீல் முக்கியமானவர். உடனுக்குடன் கவிகளைக் கட்டுவதில் வல்லவர். கவியின் ஓசை நயம் கெடாது, ஒன்றுக்கு மேற்பட்ட இராக நுணுக்கங் களுடன் பாடவல்லவர். தனது கவிகளை பல்வேறு மேடைகளிலும் இசைத்துக் காட்டிப் பாராட்டைப் பெற்றவர்" என்று கிராமியப் பாடல்கள் ஆய்வாளர், கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறை விரிவுரையாளர் சி. சந்திர சேகரம், ஜெலீலின் கிராமியப் பாடல் வல்லமையை எடுத்துக் காட்டுவார்.

நாட்டார் பாடல்களோடு தொடர்புடைய இரண்டு நூல்களை எழுகவி நமக்குத் தந்திருக்கின்றார்.

- தண்ணீருக்கு வந்த தாகம்-2013
  (கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள வெளியீடு.)
- புழுதி மண்ணு-2016 என்பன அவை.

கிழக்கில் நாட்டார் பாடல்கள் தொடர்பாக நடைபெறும் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு பரிசுகளைக் குவித்துள்ள அவர், கலை இலக்கியப் பணிகளுக்காக பிரதேச, மாவட்ட மாகாண விருதுகள் மற்றும் பட்டங்கள் பலவற்றைப் பெற்று ள்ளார். அவற்றுள்,

- எழுகவி - 2011
- கலைமாமணி - 2015
- இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் "சுவதம்" விருது - 2019
  என்பவை குறிப்பிடத்தக்கன.
- நாட்டாரியல் வித்தகர் விருது-2021,
  கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

கருத்தாழம் மிக்க சுவரோவியங்கள், கிராமியப் பண்பாட்டுக் கோலங்களாக மிளிரும் கவிதைகள் என்பவற்றாலும் பல்துறைக் கலைஞராக மக்கள் மனங்களில் இடம் பிடித்திருப்பவர் எழுகவி. வானொலி, தொலைக்காட்சி மற்றும் முகநூல் தொலைக் காட்சிகள் நடத்தும் கவியரங்குகளில் தொடர்ந்து பங்குபற்றியும் அவர் தன்னை அடையாளப்படுத்தி வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் நடைபெறும் பயிற்சிப் பட்டறைகளில் வளவாளராகக் கலந்து கொண்டு, கிராமியப் பாடல்களில் மாணவர்களுக்கு ஆர்வமூட்டுகின்றார் .

எழுகவி ஜெலீல், அக்கரைப்பற்றில் முகம்மது இப்றாஹீம் - பாத்தும்மா தம்பதியின் மகனாக**1967** ல் பிறந்தவர். அக்/ தைக்காநகர் GMMS. வித்தியாலயத்திலும் அக்கரைப்பற்று மத்திய கல்லூரியிலும் (தேசிய பாடசாலை) கற்றவர். வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தராக (Security Officer) கடமையாற்றுபவர்.

நாட்டார் இலக்கியத் துறையில அதிக ஈடுபாடு கொண்டிருந்த இலங்கையின் புகழ்பூத்த எழுத்தாளர் ஏ.ஆர்.எம். சலீம் என்பவர் வகுப்பாசிரியராக வாய்க்கப் பெற்றதனால், அவரின் தூண்டுதலில் **1980** ல் தனது **13**வது வயதில் கலைத்துறைப் பிரவேசம் பெற்றவர் எழுகவி ஜெலீல்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கலை இலக்கிய உலகில் பிரகாசித்து வரும் அவர், தேக நலத்தோடு தொடர்ந்து இயங்கவேண்டும் கைவசமுள்ள அவரின் கவிதைகள் நூலாக்கப்பட வேண்டும், அவர் பாடிய மேடைப்பாடல்கள் காணொளியாக்கப்பட வேண்டும். அவை விரைவில் வெளிவர வேண்டும் என்பனவே நமது விருப்பமும் வேண்டுதலுமாகும்.

தமிழன் பத்திரிகை
***07.05.2023***

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுறைக் கெதிராக எழுத்துச்
சமர் புரியும் உன்னத படைப்பாளி

## அலெக்ஸ் பரந்தாமன்

0771443062



நான்கு தசாப்தங்களாக ஈழத்துப் பத்திரிகைகளில் பெயர் பதித்து, பத்தி எழுத்தாளராக, சிறுகதையாளராக, கவிஞராகத் தொடர்ந்து இயங்கி, பல புனை பெயர்களில் மக்கள் மனங்களில் இடம் பிடித்திருக்கின்ற எழுத்தாளன். அரசியல், சமூக விடயங்களை தினமுரசு தினசரியில் சுடச் சுடச் சுவைபட எழுதிய "சின்னக்குட்டி சின்னச்சாமி," யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த எதிரொலி பத்திரிகையில் பத்தி எழுத்தில் பல்சுவை தந்த "நவீன சவாரித் தம்பர்", ஈழநாதம் பத்திரிகை வன்னியில் இயங்கியபோது, அதன் வாராந்தப் பத்திரிகையான வெள்ளிநாதத்தில் பத்தி எழுதி தன்எழுத்து வல்லமையால் மக்களை ஈர்த்த "ஆஞ்சநேயன்", வன்னிப்போர் அவல அனுபவங்களை, அங்கு வாழ்ந்து அனுபவித்து "அவலம் சுமந்த அகதிகள் " எனும் தலைப்பில் 11 மாதங்கள் தினமுரசு இதழில் தொடர்ந்து எழுதிக் கண்ணீர்க் காவியமாக்கிய "அத்திமுகத்தோன்",

உதயன் பத்திரிகையில் பத்தி யெழுத்தால் வாசகர்களைக் கட்டி வைத்திருந்த "அப்புச்சி",
காலைக் கதிர் பத்திரிகையில் "செப்புகிறார் சின்னப்பு" என்ற தலைப்பில்
பத்தி எழுத்தில் பலதும் செப்பிய
"சின்னப்பு",

அவர்....? யாழ்ப்பாணம் அச்சு வேலியில் பிறந்து, முல்லைத்தீவு புதுக் குடியிருப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் இராசு தங்கவேல். அவரின் இயற்பெயர் அது. ஆயின், சிறுகதை, கவிதைகள் மூலம் இலக்கிய வாதிகளுக்குப் பரிச்சயமான அவர் பெயர் - அலெக்ஸ் பரந்தாமன்.

"எழுத்து என் தொழிலல்ல.எழுத்துக்களை நான் மிகவும் நேசிக்கிறேன். எழுத்து என் வயிற்றுக்குச் சோறு தருவதில்லை. ஆயினும் எழுதிக் கொண்டே இருக்க விரும்புகின்றேன்" என்று குறிப்பிடும் அலெக்ஸ் பரந்தாமன் மண்ணையும், மக்களையும் நேசிப்பவர். மக்கள் துன்ப துயரங்களை,கண்டு,கேட்டு எழுதியவையல்ல அவரின் படைப்புகள். அவர்களோடு வாழ்ந்து அனுபவித்து எழுதியவை. 2014 ம் ஆண்டிலிருந்து நூல்களைத் தரும் அவர் இதுவரை 4 சிறுகதை நூல்களையும் ஒரு கவிதை நூலையும் இலக்கிய உலகத்திற்கு தந்திருக்கின்றார். ஈழத்தில் எண்பதுக்குப் பிந்திய படைப்பிலக்கியவாதிகளில் முக்கிய சிறுகதையாளராகவும், கவிஞராகவும், முன்னணி எழுத்தாளர்களால் அடையாளப்படுத்தப்படுபவர் அவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருபிடி அரிசி"

என்ற அவரின் சிறுகதை நூல் இரண்டுபதிப்புக்களைக் கண்டதாகும்.

01. அழுகைகள் நிரந்தரமில்லை
(சிறுகதைத்தொகுப்பு) - வெளியீடு : ஜீவநதி - 2014.

02. மரணவலிகள்
(கவிதைத்தொகுப்பு) - வெளியீடு : ஜீவநதி - 2014.

03. தோற்றுப்போனவளின் வாக்குமூலம்
(சிறுகதைத் தொகுப்பு) - வெளியீடு : ஜீவநதி - 2016.

04. ஒருபிடி அரிசி
(சிறுகதைத் தொகுப்பு - முதற்பதிப்பு)
வெளியீடு : சிந்தன் புக்ஸ் - தமிழ்நாடு 2021.
இரண்டாம்பதிப்பு - மகுடம் வெளியீடு - 2022.

05. பறையொலி
(சிறுகதைத் தொகுப்பு) - வெளியீடு : இலக்சுமி பிரசுராலயம்.

என்பன அவரின் நூல்கள்.

"இவரது புனைவுலகம் தன்னைச்சுற்றி வாழும் எளிமையான மக்களைப் பற்றியதாகவே இருந்திருக்கிறது. இவரது எழுத்துக்களைத் தொடர்ந்து படிப்பவர்களுக்கு, அதில் இருக்கும் யதார்த்தத்தையும் ,வெளிப்படும் வேதனைகளையும் புரிந்து கொள்ள முடியும். போர்க்கால வாழ்வு, இடப்பெயர்வு, உறவுகளின் உயிர் இழப்பு என்று எல்லா நெருக்கடிகளையும் அனுபவித்தவர். இவர் பயணித்த வாழ்வும் அதன் துயரமும்தான் இவரது எழுத்துகள்." என்பார் "ஒருபிடி அரிசி"சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை யெழுதிய தாமரைச் செல்வி.

"இந்தப் பேனாப்போராளியின் மனதிலிருந்து எரிமலையாய் வீறிட்டு எழும் எழுத்துக் கங்குகள், சிறுமைக்குண மாந்தரைச் சுட்டெரிப்பவை. சமூகத்தின் இழிவுகளை இடித்துரைப்பவை. அதன் அக அழுக்குகளை அம்பலப்படுத்துபவை. மையக்கோட்டு மானிடரின் மகத்தான குரலை மேல்தட்டு மனிதர்கள் மத்தியில் ஓர்மையுடன் உரக்கச் சொல்பவை. அதுமட்டுமன்றி, எந்தவொரு இடத்திலும் தன்னை முதன்மைப்படுத்த, விளம்பரம் தேடவிரும்பாத ஒரு மூத்த படைப்பாளி இவர்."என்று குறிப்பிடுவார் நாவலாசிரியரும் கவிஞருமான தீரன் ஆர்.எம். நௌசாத்.

போர், அதன் கொடுமைகள், போருக்குப் பிந்திய அவல வாழ்க்கை என்பவற்றைக் கவிதையில் பதிவு செய்தவர்களில் பிரதானமானவராகவும் அலெக்ஸ் பரந்தாமன் பார்க்கப்படுவார். நிஜங்களின் தரிசனங்களாக அவை அமைகின்றன. மரபு,புதுக் கவிதைகளில் அவருடைய ஈடுபாட்டையும்,ஓசைப்பாங்கான கவிதைகளில் அவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயத்தையும் பறை சாற்றுவன அவர் தரும் கவிதைகள்.

“இன்னல்கள் எத்தனை கண்டாச்சு- வாழ்வில்
இடப் பெயர்வுகள் பலவாச்சு.
வண்ணக் கனவுகள் சிதைஞ்சாச்சு- பெற்ற
வளங்கள் அனைத்தும் இழந்தாச்சு!

ஊரின் முகங்கண்டு நாளாச்சு-போரில்
ஒடுங்கிய வாழ்வும் இருளாச்சு.
ஏரிவயல் வளம் அழிந்தாச்சு-எந்தன்
இல்ல முற்றமெல்லாம் என்னாச்சு?”

என்று போர் ஏற்படுத்திய அவலத்தை,மரணவலியாக கவிதையில் பதிவிடுவார் அலெக்ஸ் பரந்தாமன். “கவிஞர் சுதந்திர முனைப்போடு முன்னையநாட்களில் எழுதிய கவிதைகள், படைப்புகள் யாவுமே அவரை ஏளனம் செய்வதாக உணரும்வகையில், சூழ்ந்து கொள்ளும் நினைவுகளும் நிகழ்வுகளும் அவரை உறுத்துகின்றன. வலிகள் பலவிதம். அதனோடு விளையும் மரணங்களும் பலவிதம். போர்விரித்த துயரங்களால் பட்டவை எவை? பட்டுத்தெளிந்தவை எவை? என்ற வினாக்களுக்கான விடைகளைத்தேடும் வகைபொலிந்த வார்த்தைகளாக அவரின் கவிதைகள் உள்ளன. இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும்,சமூக அடக்குமுறைக் கெதிராகவும் கவிதை தரும் உன்னத படைப்பாளி கவிஞர் அலெக்ஸ் பரந்தாமன்” என்பார் மரணவலி என்ற அவரின் கவிதைநூல் பற்றி எழுதிய நெடுந்தீவு மகேஷ்.

இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் “கலைஞர் சுவதம்” முல்லைத்தீவு கலாசாரப் பேரவை அதன் மாவட்ட கலாசார விழாவில் வழங்கிய “முல்லைக் கலைக்கோ- 2022” என்பன அலெக்ஸ் பரந்தாமன் தனது இலக்கியப் பணிகளுக்காகப் பெற்றுக் கொண்ட விருதுகளாகும். வேலுப்பிள்ளை இராசு-இராசு சின்னம்மா தம்பதியின் மகனாகப் பிறந்த அவர், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். தினமுரசு,உதயன், காலைக் கதிர்,ஈழநாதம் பத்திரிகைகளில் நீண்ட காலம் ஒப்புநோக்குநராகப் பணியாற்றியவர். ஈழநாதம் பத்திரிகையில் சில காலம் உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். எழுத்து,இலக்கியம் ஊடகம் என்றே வாழ்பவர் அலெக்ஸ் பரந்தாமன். அவர் தேக நலத்தோடு பல்லாண்டு காலம் வாழவேண்டும். விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலைப் படம்பிடிக்கும சிறந்த படைப்புகளைத் தருகின்ற அவர் பணி தொடர வேண்டுமென்பதே இலக்கிய நெஞ்சங்களின் பிரார்த்தனையாகும்.

தமிழன் பத்திரிகை
*09.04.2023*

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாவேந்தல் பாலமுனை பாறூக்

பொன்விழாக் கண்ட கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களின் மற்றுமொரு மடைமாற்றமாக "50 எழுத்து ஆளுமைகள்" நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. தமிழ்க் கவிதையின் வடிவ முகங்களை மரபுக் கவிதை, நவீன கவிதை, குறும்பாக்கள் ஹைக்கூக்கள், இசைப் பாடல்கள், காவியத் தொடர்கள் என்றெல்லாம் உணர்ச்சி, ரச பேதம் காட்டி எழுதித் தீர்த்தவர் பாலமுனை பாறூக்.

தனது படைப்புக்களில் மிகுந்திருக்கும் சமூக நோக்கிற்காகவும் அவற்றின் வடிவ பிரக்ஞைக்காகவும் பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகங்கள் வரை இவரின் படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு வரும் காலகட்டத்தில் அறிவார்ந்த ஆய்வுத் தளத்தில் நின்று கொண்டு ஈழத்து இலக்கியப் புலத்தில் கோலோச்சிய ஐம்பது பேரை இந்நூல் வழியே பாலமுனை பாறூக் ஆவணப்படுத்தியிருக்கிறார்.

"தமிழன்" தேசிய தினசரிப் பத்திரிகையின் ஞாயிறு இணைப்பிதழாக வெளிவரும் "தமிழ் முரசு" வில் வாராவாரம் இவ்வாளுமைகள் பற்றிய குறிப்புகளை எழுதும்போதே பாலமுனை பாறூக் வெகுவான கவனயீர்ப்பை பெற்றிருந்தார். மூத்த எழுத்தாளர்கள் மாத்திரமன்றி கலைஞர்களையும் ஊடகவியலாளர்களையும் ஆளுமைகளாக இனம் கண்டு அவர்கள் வாழும்போதே அவர் தம் பங்களிப்புக்களை பதிவு செய்யும் கடின பணியை ஏற்றிருந்தார்.

ஈழத்து கலை இலக்கிய ஆளுமைகளின் பணிகளை நூலுருவாக்கி ஆவணப்படுத்தும் முயற்சிகள் இதற்கு முன்னரும் பலரால் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்தத் தொடர்ச்சியில் பாலமுனை பாறூக் அவர்களின் "ஐம்பது எழுத்து ஆளுமைகள்" நூலும் இணைந்து கொள்வது காலப் பணி மாத்திரமன்றி போற்றத்தக்கதொரு வரலாற்றுக் கைம்மாறுமாகும்.

எம்.அப்துல் றஸாக்,
விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக் கழகம்.

ISBN : 978-955-99311-7-1

விலை: ரூபா 1650/-

NSOP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org